OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
MADRAS

உ
சிவமயம்

௨௨௨௭

# திருவதிட்டகுடி சிவஸ்தல புராணம்.

மூலமும் உரையும்

——o——

இயற்றியவர் :-

யஜுர்வேதி சீநிவாச அய்யரவர்கள்

*

திருத்தஞ் செய்தவர் :-

சிதம்பரம், சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர்
சபா. சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள்

*

அச்சுக்கூடம் :

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் சென்னை, வித்தியாநுபாலன
..., விருத்தாசலம் முருகன் அச்சியந்திரசாலை.

...லியுகாதி ௫0௫௫ கர ஆண்டு

TNSDA
02227

விலை ரூ. 1

விழுப்புரம் திரிச்சிராப்பள்ளி இருப்புப்பாதையில் பெண்ணுகடம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ளது திட்டக்குடி.

# முன்னுரை.

அருவமும் உருவாருபம் ஆனதுமன்றி நின்ற—உருவமும் மூன்றும் உள்ள ஒப்பற்ற முதல்வன், உணர்ந்த உணருந் தன்மையுள்ள உயிர், ஆணவ மலம் நீங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டும், ஆசிரியரும் மாணவருமாக உபதேசம் பெற்று பரம்பரையில் வழங்கிவரும் பொருட்டும், அருளுருக்கொண்டு அனந்தர், சிகண்டர், நந்தியெம்பெருமான் முறையில் வைத்து ஆரணம் ஆகமங்களை அருளிச்செய்தார். அவைகள் பின் வந்துள்ள முனிவர்களாலும், தேவர்களாலும் அவரவர்கள் அறிவுக்குத் தக்கவாறு பலபல நூல்களாக செய்யப்பெற்று ஸ்மிருதி, புராணம் இதிகாசங்கள் முதலியனவாகவும் பெயர் பெற்றன. அப்புராணங்கள் 18. அவற்றுள் கந்தபுராணத்திலே சனற்குமார சங்கிதையிலே வைதிக காண்டத்திலே பலப்பல திருப்பதிகளின் பழைய வரலாறுகள் சொல்லப்பெற்றுள்ளன. அவை பின் வந்துள்ளோரால் ஸ்தலபுராணங்களாகச் செய்யப் பட்டு அச்சிட்டு வழங்கிவருகின்றன. அத்திருப்பதிகளில் ஒன்று திட்டகுடி என வழங்குகிற வதிட்டபுரி. இவ்வதிட்ட குடிக்கு சீனிவாச அய்யரவர்களால் புராணம் செய்யப்பெற்று ஓர் அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதியைக்கொண்டு அச்சிடப் பட்டது இப்புத்தகம். இதில் வசிஷ்டர் தவஞ்செய்த விடமாதல் பற்றி வதிட்டகுடியெனப் பெயர் பெற்றதென்றும் அவ் வசிஷ்டர் கட்டளைப்படி மனு என்பவனால் ஆலயங்கட்டப் பெற்று நித்திய நியமம் முதலியன நியமிக்கப் பெற்றுள என்றும் 20 தீர்த்தங்கள் உள்ளன என்றும் ஏழு துறைகளில் இது ஒன்றென்றும் முக்கியமான 50 தலங்களுள் இஃதொன் றென்றும், யாரும் பிறர் நலங்கருதி ஒன்றைச் செய்தல் வேண்டு மென்றும், சிவபூசையில் தவறிழைத்தால் வரும் கேடுகளும் மல சல மோசன விதிகளும் சிவலிங்கத்தின் இலக்கணங்களும் வேண்டுவார் வேண்டுவதை தரும்பதியென்றும் இன்னோரன் னவை கூறியிருக்கின்றன. இன்னும் திருக்கோயில் அமைப் பைப் பார்த்தால் திருஞான சம்பந்தர் முதலியோரால் பாடப் பெற்ற பதியென எண்ணுவதற் கிடந்தருகிறது. அநேக கல் வெட்டுகள் காணப்பட்டு அச்சிடப்பெற்றிருக்கிறது. இதில் பல திருவுருவங்கள் நிலைநாட்டப்பெற்றிருக்கின்றன. இந்த தலம் தீர்த்தம்மூர்த்திகளை தரிசித்தோர் ஆயுள்செல்வம் புத்திரப் பேறு முதலியவெல்லாம் எய்தப்பெற்று நீடுவாழ்வார். என் பதை யுணர்த்த வேண்டி பலர் முயன்று அச்சிட்டுதவிய இத் தலபுராணத்தை யாவரும் வாங்கி வாசித்து சிவப்பேற்றை அடைவாராக.

இங்ஙனம்,

**சபா. சிவப்பிரகாசம் பிள்ளை,**
அத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர்,
**சிதம்பரம்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை.

திரிச்சிராப்பள்ளி ஜில்லா பிரம்பலூர் தாலூகா கீரனூர் கிராமம் பிரம்மஸ்ரீ வெங்கட்ட ராமய்யர் அவர்களின் பௌத்திரர் வைத்தியநாத அய்யர் அவர்களிடம் பனை ஏட்டில் எழுதப் பெற்றிருந்த இந்த திருவதிட்டகுடி சிவஸ்தல புராணத்தை திட்டகுடி ஜமீன் திருவாளர் வைத்தியநாத துரைசாமிப் பிள்ளை அவர்களும் இந்த புராணத்தில் சொல்லப்பட்ட நானூற்றொரு வர் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்தவரான பிரம்மஸ்ரீ பஞ்சாபகேசய்யரவர்களும் இறைறைக்கு சற்றேறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன் வாங்கிப்பார்த்து காகிதத்தில் எழுதி வைத்திருந்ததை சிதம்பரம் கஸ்பா பட்டா மணியம் வேலை பார்த்த வீரசோழகன் திருவாளர் மாயகிருஷ்ணம்பிள்ளை அவர்கள் கேட்டு வாங்கி தன் தமையனும் எனது ஆசிரியருமான சிதம்பரம் சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியராகிய உயர்திருவாளர் சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களிடம் கொடுத்தனர். அந்தப் பெரியார் அவர்கள் டி பிரதியிலுள்ள பிழைதிருத்தத்தைச் செய்து உதவினர். அன்னார் அவர் களுக்கும் இந்த வதிட்டகுடி புராணத்தை அச்சிடப் பொருள் உதவி செய்தவர்களுக்கும் பிரதி கொடுத்தவர்களுக்கும் இந்தத் தமிழ்நாடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுடையதாகும்.

சிதம்பரம்
25-11-51

இங்ஙனம்

**ஆடூர். சு. கணபதிப் பிள்ளை,**

திருமுறைச் செல்வர்,

தில்லைத்திருமுறைக் கழகத் தலைவர்,

௨௨௨௭

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வதிட்டகுடி.

# அசனாம்பிகை பதிகம்.

மேகத்தை யொத்திருள்படர்ந்து சூல் கொண்டகிற
மெனுமட் டுகந்த குழலி
மின்னற் றதும்புகதி ரின்பிரபை மறைக்கின்ற
மேன்மையா ரத்ன சுட்டியும்
ஏகத்தை யொத்தொளிர்மதி யின்குறை நுதலி
ஷிடுசிந் துரத்தி னழகும்
இன்புசேர் அன்பர்க்கு நண்புற்ற கருணைகொண்
டிணைக்கயல் விழியி னழகும்
பூகத்தை யொத்திடும் கந்தரத்தினி லையர்
பூட்டுமங் கிலிய அழகும்
புவிமனு தவமுனிவர் அவரவர்தம் முழக்குமுடன்
புகுசெவி ஒலை யழகும்
விகத்தி லுற்றமால் தங்கையுன் னழகென்ன
விதமென என்னால் முடியுமா?
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர்வல்லியே 1

சந்திர னொடொன்றிவரு செங்கதிரவன் பிரபை
தகைந்திடு நிகழ்ந்த துதிரா
சம்பு மிக உம்பர்கள் பயந்துடல் நடுங்கவெழில்
சம்புவின் நகங்கள் குறைய
அந்தமிகு தொந்தமறை முந்திவரு சங்கரியும்
அங்கவர் தலங்க ளகலா
ஐங்கரனும் நன்குழக னும்பதற வண்டுரக
நறுமுடிய பிண்டுநெளிய
தொந்தகுர தந்திகுட செந்தரிகு திந்திமி
தொந்திமதி யென்றிசை பெறத்
துங்கமகி டன்சிரசில் நின்றுநட னம்புரியும்
சுமங்கலி சௌந்தரி யெனும்

விந்தை வளர் சந்த்ரவத னம்பெருகுசௌந்தரிய
விலாசகை லாச வாசி
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர்வல்லியே 2

என் மனதி லெண்ணும் படிக்கருள் செய்வதற்
கின்னம் வெகு நாட்செல்லுமோ
இதுவென்ன பாரமா என்னுடைய நேரமா
இலையென்று சிறு பிள்ளையா
நன்மை சற்றில்லா வஞ்சகக் கொடுரியா
நன்னெறி யுரு வீர்மியா
நயமில்லா மலடியா பேசா மடந்தையா
நஞ்சுண்டவர் சொன்னதா
உன்மனது வச்ரமா, பின்னென்ன கருங்கலோ
உருகாத வட்டுருக்கோ
ஓகோ பிறைச்சடைப் பித்தனை யடுத்ததாய்
உனையலது வேறு கூதியா
மென் மேலும் வற்றாத பாக்கியம் தந்தருள்
வேண்டுமிது சமய மம்மா
மீன் குலவு விழிவல்லி தேன்குலவு மொழி வல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 3

கற்பாவை யைச்செய்து பேசவும் செய்யலாம்
கடுவை யமுதாய்ச் செய்யலாம்
கடலிற் சலத்தைநற் சலமெனச் செய்யலாம்
கனலைமலர் போல் செய்யலாம்
நற்கியான வித்தையால் ஆயுளை வளர்க்கலாம்
நரையை மறையச் செய்யலாம்
நலமில்லா வேம்பதனை கரும்பெனச் செய்யலாம்
நற்பெண்ணை ஆண் செய்யலாம்
அற்பக் குலாமப் பிசாசெனும் கருவத்
தாழ்ந்திடுந் பரம லுத்தர்
அவர்மன திரங்கும் படிக்கு நீ சொல்லவென்
றாலும்இது வெகு தொல்லையா
வெற்பிற் பிறந்த குணமோ வறியேனுன்
விமலையே மனது ஒத்திருந்தாய்
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 4

மாயப் பகட்டிலே நேயத் திடத்திலே
மதுரமொழி வசனத்திலே
மங்கை பிலுக்கிலே கொங்கை குலுக்கிலே
மருவுமண வாசத்திலே
ஞாயத்தின் எத்திலே உபாயக் குணத்திலே
லலிதசுப வஹுதத்திலே
நயகுண விதத்திலே மயல்மிகு மணத்திலே
நற்கல்வி மார்க்கத்திலே
பேயைப் பிடித்தாட்டி வைத்திடும் விதம்போல்
பிதற்றும் விலை மாதர்பால்
பின்னிக் கிடந்துயிர் சுழன்றலை யுலுத்தரைப்
பேணாம லேநியருளுவாய்
வேயொத்த தோளுற்ற சங்கரி கிருபாகரி
விதட்சணி கல்யாணி நீலி
மின்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 5

அன்னாளில் சிறுத்தொண்ட னறுத்துண்ண
வைத் தவனை
அருமை யுருதந்தழைத் தாய்
அறிவு சற்றில்லாத வானையைக் கரும்பொன்று
அருந்திடக் கண் காட்டினாய்
நன்னாவலர்க் கருளும் ஒரு பொருளை நலமாக்க
நரியினைப் பரியாய்ச் செய்தாய்
நாரண னுறங்குபாற் கடலைப்புலிக்குட்டி
நட்பினுக்கே கொடுத்தாய்
தன்னன்மை (மிகுந்துள மார்க்) கண்டனுக்காக வெமன்
தன்னை மார்பினி லுதைத்தாய்
தந்தையென் றெண்ணாமல் அன்று தக்கன்றன்
தலையை மிகவும் தவிர்த்தாய்
மின்னொத்த இடையுற்ற அம்மையே எனதுகலி
விலக்க உன்னாலில்லையா
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வன வளர் வல்லியே 6

கல்லென்ற தெய்வ மெலாந்தொழு திறைஞ்சியென்
கைகள் மிகவும் சலித்துக்
கவலையெனு மொருபயிர் படர்ந்து வதிலுள்ளம்
கலங்கி நான்மிக மயங்கி

அல்லென்ற தாரித்திர வஞ்சமாம் கடல்தனில்
ஆழ்ந்து முகம்வாடி நல்ல
அறிவுறு முழுமூடர் தம்மைப் புகழ்ந்தியான்
அவர்களைக் குல தெய்வமாய்ப்
புல்லென்ற கற்பனைப் புஞ்சமாய்த் தமிழதைப்
புகன்று மனமிக வலுத்துப்
புணர்ந்தவர்கள் பாலில் நடந்திடா துனதருளில்
பொருந்திடவு மேயருள் செய்வாய்
வில்லென்ற நுதலுற்ற வல்லென்ற தனமுற்ற
வீரி கௌமாரி குமரி
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 7

ஆனாலும் உந்தனுடை வஞ்சமே வஞ்சமதை
அடிமையான் உனது சொல்வேன்
அற்பர்க்கு வாழ்வைக் கொடுப்பதும் விற்பன்னரை
அவர்கள் வசமாய்ச் செய்வதும்
ஈனமிகு நீசர்க்கு யோகம் கொடுப்பதுவும்
இன்புள அறிவிலோர்க்கும்
ஈரற்ற கலியைக் கொடுப்பதுன் சிந்தை
இதுவுநற் சிந்தை யம்மா
வானுலவு பிறைகொண்ட வேணியரிடத்தெனது
வார்த்தை எள்ளள வுரைத்தால்
வைரவி குணாலி உன்செல்வத்தி லென்ன குறை
வாய்முத்தி லென்ன சிந்துமா
மீனவனின் மகளென்னவும் வந்து செங்கோல் புரியும்
வீக்ஷணி கடாக்ஷி தேவி
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 8

ஒரு நூறு யோசனை பெருந்தூரம் பார்த்தே
உலகினின் றுனது கோவில்
உயர்மணிக் கோபுரச் சிகரமதனைக்கண்
டுகந்துகை கூப்பி நின்றால்
வருவினைகள் வாரா கொடுமதிகள் தோன்றா
வறுமை பவம் மிகவாராது
வஞ்சனைகள் வாரா சஞ்சலமும் வாரா
மருவலர்த மிடர் வாராது

திருமகளின் விலாசமுடன் ஆயுள் நன் வளர்ச்சியும்
செல்வமும் மிகு பெருமையும்
சிந்தையில் விவேகமும் புத்ர சந்தானமும்
சீர்பெறும் பெரிய வாழ்வும்
விருதரசர் நேசமும் அவரவர் மனத்திலே
வேண்டிய தெலா மெய்துமே
மீன்குலவு விழிவல்லி தேன்குலவு மொழிவல்லி
வேங்கை வனம் வளர் வல்லியே 9

சீதமதி முகவல்லி விஜயகுங்கும வல்லி
திரிபுரானந்த வல்லி
சிங்கவா கனவல்லி மங்கைமோ கனவல்லி
தேவியபி ராமவல்லி
ஆதிசுந்தரவல்லி நீதி நெஞ்சக வல்லி
அழகுதிகழ் ரூபவல்லி
ஆனந்த வல்லி சர்வேச்வர க்ருபாவல்லி
அருள்பரவு கருணை வல்லி

வாது மகிடன் சிரசின் மீது நடமிடு வல்லி
வளர் வாலை திரிபுர வல்லி
பால சுந்தர தாசன் எண்ணும் படிக்கருள்
பார்வதி அபிஷேக வல்லி
வேதநிதி தேடும் வசிட்டபுரி ஈசரிட
மேவுசுப லலித வல்லி
மீன் குலவு விழிவல்லி தேன் குலவு மொழிவல்லி
வேங்கை வன வளர் வல்லியே 10

வெண்பா.

நீயே அலது கதிநிலத்தில் யாருமிலை
தாயே பராபரியே சங்கரியே — தூயபுகழ்
நாரணியே வேங்கைவன நாயகியே மூவர்க்கும்
காரணியே நீதினமும் கார் 1

மணியே வசிட்டபுர வாழ்வே பிறவிப்
பிணிதீர் அசனும் பிகையே — பணிபூண்ட
தற்பரவைத்தியனுதன் வலத்த மர்ந்த
கற்பகமே நீயே கதி 2

மாங்குயில் குலாவும் வனப்பொழிலும் பைம்பண்ணும்
தேங்குலவு மாட மணிமனை சூழ் — வேங்கைவனம்
நம்பினேன் வைத்திய நாதரருள் கூட்டு விப்பாய்
அம்மா அசனும் பிகை 3

நின்னருள் பணிவேன் நிதியும் பெருவாழ்வும்
பொன்னு வளமும் புகட்டுவாய் — மின்னனென்ன
ஏத்துமிடைச் சுந்தரியே ஏர்வேங்கை மாவனத்துள்
வாழ்த்துமச னும்பிகையே வந்து. 4

கலித்துறை.

தாயே வினைப்பயனாலே பிறவி தானெடுத்து
ஓயாத மாயப்பிரபஞ்ச வாழ்க்கையி லுழன்று பலவா
நோயரல் மெலிந்து சீயாற் குலைந்து நொந்தலுத்து
நாயேனுனைச்சர ணென்றருள் அசனும் பிகை நாயகியே

அம்மானை

திசைபுகழும் வேங்கை வனச் செல்வர் வைத்தீச்வரனார்
அசனும்பிகை மருவு மத்தர்கா ணம்மானே
அசனும்பிகை மருவும் அத்தரே யாமாகில்
வசையாகு மையமுற்று வாழ்வ தென்னோ அம்மானே
வாழாரோ பெரு வயிரோன் மகனை லம்மானே

பந்தடி.

வெள்ளிநிலவு பொழியும் அமுதவிதுவைப்பழித்த நெற்றியாள்
வேண்டுமவருக் கிரங்கி ஊழின் வினையை அறுத்த வெற்றி
கள்ள மனதை உடைய மாந்தர் காணற் கரிய கழலினாள் [யாள்
கறுத்த மேகக் குலத்தைப் போலே காட்டு மாலைக்
[குழலினாள்
தெள்ளமுதமும் பாலும் நாணத் தித்தித்திருக்கும் மொழியினாள்
சிறைவண் டினத்தைக் கணையைப் பிணையை சேலைப்
[பொருதும் விழியினாள்
வள்ளல் வைத்ய னாதருளத்தில் மகிழ்ச்சி மிகவும் பெருகவே
வசிட்ட புரத்துக் கதிர்ஷ்டந் தழைக்க மணிப்பந் தெடுத்
தாடவே

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீ வல்லபைமணாளன்றுணை.

# திருவதிட்டகுடி சிவஸ்தலபுராணம்.

வெண்பா.

பரிதியொளி மௌலிப் பரமசிவத் தீசர்
கருதிமுகன் குருவு வசிட்டன்—பெருமையால்
வந்தவுன்றன் மாண்புவட மொழியைத் தென்மொழியால்
தந்தருள்க தந்திமுகன் காப்பு.

வேறு.

அரிய வயித்திய நாதனைச் சம்பிகை
திருவதிட்டைப் புராணமுன் செய்திட
மருவுஞ் சொற்பொருள் வண்மை வளந்தர
பெருகு மைங்கரப் பிள்ளையைப் பேசுவாம்.

வெண்பா.

வெள்ளை விடையானும் வெண்டலையின் பள்ளானும்
கள்ளவிழுங் கஞ்சத் தனத்தானும்—உள்ளிருந்தும்
வெள்ளப் பெருக்குமத வெண்கோட்டுக் கையானைக்
கொள்ளவருள் கூடுங்கை கூர்ந்து.

வினையறும் இன்பநல்கும் வேகமாம் வாசியேறி
முனைவழி விளக்கஞ்செய்யும் மூலவாதார நோக்கும்
மனமறு வாயகண்ட மாகூட ரொளியைச்சேர்க்கும்
புனன்மதிச்சடையோன்றந்த பிள்ளையைப்போற்றினோர்க்கே.

இதன்பொருள். பிறவிப்பிணியாகிய தீவினைகளையறுக்கும். இன்பமாகிய போகபோக்கியங்களைக் கொடுக்கும். பலவித பொருள்களைச் சேர்விக்கும். அழியாப் பதமாகிய மோட்சத்தைக் கொடுக்கும். பின்னும் இடை பிங்கலையை மாற்றி சுழுமுனை வழியை விளக்கஞ் செய்யும். முத்தியாகிய சந்திர சூரியாக்கினிப் பிரகாசம் சித்திக்கும். அதுவுமல்லாமல் மனமறுவாகி, அறிவு அகண்டாகார ஜோதி வடிவமாகும். கங்கையையும் சந்திரனையும் ஜடாபாரத்திலே தரிக்கின்ற பரமசிவன் பிள்ளையாகிய விக்னேஸ்வரனைப் போற்றினோர்கட்கு. என்றவாறு.

---

* சிவப்பிரகாசம்பிள்ளை பாடல்.

# பாயிரம்.

ஆதியா யகண்டமாகி யண்டமா யதின்வானுகி
நீதிகால் வன்னியாகி நீரதாய்ப் புவிகல்லாகிச்
சோதியா யெழுபதத்தின் றேற்றமாய் விடயமாகிச்
சாதியாய்த் தான்றானுகுஞ் சதுர்மறை முடிதுதிப்பாம்.

இ - ள். ஆதியாகி யகண்டாகாரமாகிப் பின்பு அண்டமாகி அதி னுள்ளே ஆகாசமாகி அதில் வியாப்பியமாகிய வாயுவாகி அக்கினியாகி சத்தசமுத்திர முதலிய அப்புவாகி தீவுமலை முதலிய மண்ணுமாகிப் பின்னுந் தேவர்கள் மானிடர்கள் விலங்கினங்கள் பறவைகள் ஊர்வன நீர்வாழினங்கள் தாவரங்கள் இப்படி எழுவகைத் தோற்றமுமாகி அவை கட்கு சத்தமுதலிய விடயங்களுமாகி அதில் சாதிபேதங்களுமாகி தானேதானாய் விளங்குகின்ற நான்மறை முடிவாகிய சோதிப்பிரகாசத் தைத் துதித்துப் போற்றுவாம். எ - று. (க)

பராபர மொன்றேயாகிப் பலபல யோனியோடு
சராசர மனேககோடி தானண்டம் வெகுவாயாகி
நிராமய நிஷ்களங்க நிர்ம்மல நிருவிகற்ப
தராதர மனைத்துந்தானாய்த் தரிக்குமக் கடவுள்காப்பாம்.

இ - ள். அப்படிச் சோதிப்பிரகாசமாகிய பராபரமொன்றேயாகி பலவித யோனியாகிய அண்டசம், சுவேதசம், சராயுசம், உற்பிச்சம் என்னும் நால்வகையிலும் பிறக்கின்ற சராசரமாகிய அசைந்து நடக் கின்ற பிராணிகளும், அசையாமல் நிலைத்திருக்கின்ற பிராணிகளும் கோடாகோடிகளுடனே சூழ்ந்திருக்கின்ற அண்டங்கள் வெகு கோடியு மாகி அங்கங்கு நிராமய நிஷ்களங்க நிர்மல நிருவிகற்பமாகி பூமியாகாச மற்றெங்குந் தானேதானாய் நிறைந்திருக்கின்ற கடவுளை காத்து இரட் சிக்கும்படி துதிப்பாம். எ - று. (உ)

---

## கடவுள் வாழ்த்து.

மாசில பூதி ருத்திராக்கந் தரிப்பான் வெள்ளி வடவரையிற்
றேசுமுக மைந்திலங் கயன்மால் தேவர்கோவே டெண்டிக்கெலாம்
பூசுராக்ள் பணிந்தேத்தப் புடைசூழக் கணங்கள்கந் துருவாகி
மூசுமொழு முரசொலிக்க மதியருக்கன் வலமுற்றிட விருப்பார்.

இ - ள். அப்படி நிறைந்திருக்கின்ற கடவுளாகிய பரமசிவன் சுத்த தாவள்ளியமான விபூதியுமணிந்துகொண்டு உருத்திராக்கமுந் தரித்து பிரகாசம்பொருந்திய ஐந்து முகத்தோடு வெள்ளிமலையாகிய கைலாச

ரிஷிலே பிரமதேவன் மகாவிஷ்ணு தேவேந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானியன் இவர்களாகிய அட்ட திக்குப்பாலர்களும் மற்றத் தேவர்களும் பணிந்தேத்தவும் அநேக கோடி கணங்கள் புடைசூழவும் கந்தருவர்கள் ஏழிசையோடு மிசைந்து அநேக வாத்தியங்கள் ஒலிக்கவும் சந்திரசூரியர் வலமாகச் சுழன்று சுழன்று வரவும் வீற்றிருப்பார் எ - று. (௩)

முப்புர மெரியக்குஞ்சி முறுவல்செய் திட்டான்மாரன்
விற்பொர வவனீறுக விழித்திட்டான் மார்க்கண்டற்குச்
செப்பிய மறலியுந்தி கலங்கிட வுதைத்திட்டான்றன்
பற்பமே செலுத்திசைவ பரமதத்தரி துதிப்பாம்.

இ - ள். அப்படி கைலாசத்திலே எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனுடைய பெருமை எப்படியென்னில்? தன்னை எண்ணாத முப்புராதிகளை எரித்திடும்படி புன்சிரிப்புக் கொண்டவன். உமையவளுக்காக மன்மதராசன் சண்டை பண்ணும்படி புட்பபாணங்கள் எய்யும்போது அவனை எரித்திடும்படி அக்கினிக் கண்களைத் திறந்தவன். பின்னும் மார்க்கண்டமுனிக்குக் கொடுத்த வரமழியாமலிருக்கும்படி இயமனைக் காலாலுதைத்து உந்திகலங்கச் செய்தவன். தன்னுடைய மதமே குற்றமற்ற விபூதியினாலே சைவமதமென்றும் விளங்கச்செய்த பரசமய கோளரியாகிய பரமசிவனைத் துதிப்பாம். எ - று. (௪)

சந்திரர் சூரியர்தாளம் பணிவடமறைப்பத் திருமாலாம்
உந்தியில்வந்தவன் மிருதங்க மொலித்திட வோரேழிசைபாடக்
கந்தருவிந்திரர்கருடகந்தருவர் கனவட வரையாட
சுந்தரராடிடு செங்கழ லொலியென் சிந்தையுளாடிடவே.

இ - ள். அப்படி சைவமதமென்றும் எங்கும் பரவிப் பிரகாசித்தருளிய பரமசிவன் பூலோக கைலாசமென்னுஞ் சிதம்பரத்திலே தாண்டவம் செய்த பெருமை எப்படியென்னில்? சந்திர சூரியர் தாளமாகவும் ஆதிசேடனே கயிறாகவும், பிடித்து அடிக்கும்படி மகாவிஷ்ணுவும் மத்தளந் தொனிக்கும்படி பிரமதேவனும், தேவேந்திரன் புல்லாங்குழலூதவும், தும்புரு கருடகாந்தருவர்கள் சுரங்களிசைக்கவுஞ் செய்து, மகமேரு முதலாகிய சத்தகுல பருவதங்களுந் திக்குப்பாலர்களும் அண்டசராசரங்களும் ஆடிடும்படி நிருத்த தாண்டவஞ்செய்த சிதம்பரேசுவரருடைய பாதச்சிலம்பினோசை எனது சிந்தையுள்ளே தழைத்தாடும்படி துதிப்பாம். எ - று. (௫)

கங்கையு மதிபுஞ்சூடிக் கரத்தின்மா மழுதரித்து
மங்கையை வலத்துள்வைத்து மதுமலர் வேங்கைக் காவுள்
பங்கய னருள்வசிஷ்டர் பணியச்சற் குருவாய்வந்த
கங்கையன் வைத்திசன்றாள் காத்திட வாழ்த்துசெய்வாம்.

இ-ள். கங்காநதியையுஞ் சந்திரனையுஞ் சடாபாரத்திலே தாங்கிக்கொண்டு மானையு மழுவையுங் கையிலே தரித்து மங்கையாகிய அசனாம்பிகையை வலதுபாகத்திலே வைத்து மதுக்களோடுங் கூடிய புஷ்பங்கள் சூழ்ந்த வேங்கை வனத்திலுள்ளோ பிரமதேவன் குமாரனாகிய வசிஷ்டமாமுனி பூசிக்கும்படி குருமூர்த்தமாய் எழுந்தருளிய கபாலத்தைக் கையில் தாங்குகின்ற வைத்தியனாத சுவாமியினுடைய பாதாரவிந்தங்களை காக்கும்படி வாழ்த்தி வணங்குவாம். எ-று. (௬)

மாமதிக் குழலினாளை மதுமலர் முகத்தினாளைக்
காமவிற் புருவத்தாளைக் கணைபிதழ் விழியினாளை
வாம திட்டகுடியாளை வாரணி முலையினாளை
வாமமெய் யாளைவேங்கை வனத்தாளைப் போற்றிசெய்வாம்.

இ-ள். இளம்பிறையாகிய சந்திரனை கூந்தலிலே தரிக்கின்றவளை மதுக்களோடுங் கூடிய தாமரச புஷ்பத்தைப்போலொத்த முகமுடையவளை மன்மதனுடைய தனுசையொத்த புருவமுடையவளை புஷ்பபாணங்களாகிய குவளையுந் தாமரையிதழ்களுமொத்த நேத்திரமுடையவளை அழகுபொருந்திய திட்டகுடி நகரிலே யிருக்கின்றவளை வாராகிய கச்சுக்களை தனபாரங்களிலிறுக்கி இருக்கின்றவளை பரமசிவனுடைய இடதுபாகம்பெற்றவளை தமிழ்நடையிலே வேங்கைவனத்துள்ள அசனாம்பாளைப் போற்றிசெய்வாம். எ-று. (௭)

வேறு.

வரையினுச்சி வடவால்கீழ் மாசில்வெண்ணீற் றொளியிலங்க, குருவாய்ச் சனகர்க் கருள்ஞானங் கொடுத்தான் மலர்த்தாளிணை போற்றி, அரியோ டயன்செய் பொருகளத்தி லழலாயெழுந்தோன் பதம்போற்றி, பரிதிமுதலா நவக்கோளின் பதங்கள் வாழ்த்திப் பரவுவாம்.

இ-ள். கைலாசகிரியி னுச்சியில் வடவாலவிருக்ஷத்தி னிழலிலே குற்றமற்ற விபூதியின் பிரகாசத்தோடு குருமூர்த்தமா யெழுந்தருளி சனகாதிமுனிகட்கு ஞான உபதேசம்செய்த தட்சிணாமூர்த்தி இரண்டு பாதத்தையும் போற்றி மகாவிஷ்ணுவுடனே பிரமதேவன் அகங்காரங்கொண்டு யுத்தம் செய்யும்போது அண்டசராசரங்களையெல்லாம் இரட்சிக்கும்படி அக்கினிமலையாய் எழுந்தருளிய திருவண்ணாமலையாருடைய பாதத்தையும் போற்றி உலகத்தை விளக்குகின்ற சூரியாதி முதலான நவக்கிரகங்களையும் வாழ்த்திப் போற்றிசெய்வாம். எ-று. (௮)

வேறு.

அகரமாதி யக்கரத்தா லறுபானன்கு கலைகளெல்லாம்
பகரும்வாணி தனைப்போற்றி பதத்தால்மயிடன் றலைமிதித்தாள்
யுகளமலரைப் போற்றிசெய்தே யோதுமறைநான் முகத்தோனை
யகமேமகிழ்ந்து போற்றியமு தளித்தோன்பதம் போற்றிடுவாம்.

இ - ள். அகரமுதலிய அக்ஷரங்களிலுலே அறுபத்துநாலு கலைக்கியானங்களெல்லாம் ஆராய்ந்தறிந்து சொல்கின்ற சகலகலைவல்லியைப்போற்றி நான்கு வேதங்களும் நாலுமுகத்திலேயும் விளங்குகின்ற பிரமதேவனுடைய பாதத்தையும் போற்றி தேவர்கட்கெல்லாம் தேவரைப் எழுந்தருளி திருப்பாற்கடலைக் கடைந்தமுது சாதித்த மகாவிஷ்ணுவைப் போற்றி, தேவர்கள் முனிகளுக்கு இடுக்கண் செய்த மகிடாசுரனை தலையையறுத்துக் காலினுலே மிதித்திருக்கின்ற ஆர்க்காபரமேஸ்வரியுடைய இரண்டு பாதத்தையும் போற்றுவாம். எ - று. (௯)

## ஆசிரியம்.

இமையவர் விஞ்சைய ரெண்டிசையதிபரிறைஞ்சித் தொழுதிடவுஞ்
சமய மனைத்து முனைத்தொழு தேயிரு சரணத் தடைவார்கள்
மைபுய வல்லபை யல்குற்றும்பிகை யடையச் செய்தவனும்
உமையவ டந்திடு தென்முக வைங்கா ரொருபதம் வாழ்த்திடுவாம்.

இ - ள். இமையவராகிய தேவர்களுங் கருடகாந்தர்வர்களு மெண்டிசையதிபராகிய திக்குப்பாலர்களும் பணிந்து போற்றவும் பின்னும் அறுசமயமாகிய வாமம் சைவம் வைஷ்ணவம் புத்தம் அருகம் இவை முதலான புறச்சமயத்தார்களும் உன்னைப் பூசித்து சாயுச்சிய பதவியை யடைவார்கள். தேவர்கட் கிடுக்கண் தீரும்படி பச்சை மூங்கிலையொத்த தோளையுடைய வல்லபை சத்தி யோனியிலே தும்பிக்கையை வைத்தடைத்தவனை உமையவள் பெற்ற பாலகனாகிய தென்முகமாய் எழுந்தருளிய மகா கணபதியினுடைய பாதத்தை வாழ்த்துதல் செய்வாம். எ - று. (௧0)

அயன்வினையைத் தான்செய்து மரன்றனக் குபர்ச்சியாயும்
புயமிகு வவுணர்சேனைப் பொடிபடக் குந்தந்தாங்கிச்
செயம்பெறக் கிரவுஞ்சமாற்றித் தேவர்கட் டுயரந்தீர்த்துக்
குயங்கரிக் கொண்டமாவென் குடமுகன் றன்னைப்போற்றி.

இ - ள். சகலமுஞ் சிருஷ்டிக்கின்ற பிர்மதேவனுடைய தொழிலைத் தான் செய்து குருமூர்த்தமா யெழுந்தருளிய பரமசிவனுக்கு மேன்மையாகியும் புசபலம்பொருந்திய அசுரசேனைகள் பொடிபடும்படியாக வேலாயுதத்தைத்தாங்கி செயம் பெறும்படி கிரவுஞ்சகிரியை உடைத்து தேவர்கட்கு இடுக்கண் தீர்த்து தெய்வயானையை மணம்புணர்ந்து மேற்கு முகமா யெழுந்தருளிய சுப்பிரமணிய சுவாமியைப் போற்றி செய்வாம். எ - று. (௧௧)

இடையிழை யொத்தவல்லி யிளமுலை யமுதம்யத்
தடையறக் கொண்டனுர் சம்பந்தன் றன்னைப்போற்றி
கட்டறவி லுருட்டத்தெப்பங் கல்லிவிட் டானைப்போற்றி
மடல்சடைப் பரவைதன்பால வரச்செய்தான் றன்னைப்போற்றி.

இ - ள். நூலிழையையொத்த விடையாளாகிய உமையவள் இளமுலைப்பால் கொடுக்கப் பிறவிப்பிணி தீரும்படி அருள்கொண்ட ஞானசம்பந்தமூர்த்தி பாதத்தைப் போற்றி, பரசமயத்தார்கள் கல்லைக்கட்டி சமுத்திரத்தி லுருட்டிவிடத் தெப்பமாக மிதந்துவந்த அப்பருடைய பாதத்தைப் போற்றி, புஷ்பங்களைத் தரிக்கின்ற சடையுடைய பாவையிடத்துக்குப் பரமசிவனைத் தூதுசெய்த சுந்தரருடைய பாதத்தைப் போற்றி செய்வாம். எ - று. (௧௨)

அலைபுனல் பெருகவைகை யாக்கினு னடியைப்போற்றித்
தலைப்பதிக் கயத்தணின்று சாதித்தான் றன்னைப்போற்றி
கொலைசெய்தே வழிபாப்பேறு கொண்டசண் டியையும்போற்றி
கலைமதி சடையிற்சூடுங் காலபை ரவனைப்போற்றி.

இ - ள். வைகையாற்றை அலைகளோடும் புனல்பெருகி வரும்படியாக்கிய மாணிக்கவாசகருடைய இரண்டு பாதத்தைப்போற்றி, திருத்தலையூர் என்னுந் தலத்திலே அகோராக்கினி தீர்த்தத்தணின்று ருத்ரமோதிப் பேறுபெற்ற ருத்திரபசுபதியாருடைய பாதத்தைப் போற்றி தந்தையை விழுந்திடும்படி காலை வெட்டி அழியாப்பதம்பெற்ற சண்டிகேசுவரனுடைய பாதத்தையும் போற்றி கலைமதியாகிய சந்திரனை அக்கினிச்சடையிலே தரித்திருக்கின்ற காலபைரவனையும் போற்றி செய்வாம் எ - று. (௧௩)

கைலைவெண்வரைக் கடவுளைப் பணிந்திட வரியோ
டயனு மண்டர்கோ வமரர்கண் முனிவர்விஞ்சையர்கள்
வியன்முடிமௌலி விலகவே துகளுறப் புடைத்து
செயல்பி ரம்புகைச் சூரிகோ ணந்திதாள் சேர்ப்பாம்.

இ - ள். வெள்ளிபங்கிரியாகிய கைலாசத்துக்கதிபரான பரமசிவனைக் கண்டு பூசிக்க அரியாகிய மஹாவிஷ்ணுவும் பிரமதேவனும் தேவேந்திரனும் தேவர்களும் கருடகாந்தருவர்களும் முனிவர்களுங்கூடிய உயர்ச்சியாகிய மகுடமுடி நெருக்கத்தை விலக்கிட வடித்த ரத்தினப் பொடிகள் மலைமலையாகக் குவியும்படி காவல் செய்கின்ற கையிலே பிரம்புஞ் சுரிகையுந்தரித்த நந்திகேசுவரனுடைய பாதாரவிந்தத்தை மனதில் சேர்ப்பாம். எ - று. (௧௪)

எமநாமநீமோ டாசனத்தினி லிருந்துநாடியை யெழுப்பியே [ன்
சோமமுண்டு பானிஷ்டனுயச் செவியில் சூரிய காந்தி யணிதண்டட
ஓமவஹி தாவுகந்த கமண்டலமோது கற்புடைப் பெண்ணொடு
நாமமுற்றிடு வதிஷ்டனன்முனிவைய நாடியேபதந் தேடுவாம்.

இ - ள். இயமநியமங்கள் செய்துகொண்டு சுகாசனத்திலிருக்கும் மூலநாடியை எழுப்பி அமுததாரை துளிக்கும்படி பரிஷ்டனு யிரண்டு காதிலேயுஞ் சூரியப்பிரகாசமான கவசகுண்டலங்கள் விளங்க இடது கையிலே தண்டும் தேவர்கட்கு அவிர்ப்பாகம் அக்கினிமுகத்திலே

கொடுக்கின்ற வலது கையிலே நிறைந்திருக்கின்ற கமண்டலமும் பக்கத்திலே சுற்புடையவளாகிய அருந்ததியோடு மஹா தபச பெருமை பெற்றவராகிய வசிஷ்டமாமுனியைத் தோத்திரம் செய்வாம். எ - று. (௬)

உவணமதைப் பழித்தெழும்பி யுயர்ந்தமச கம்போலுஞ்
சுவையமுதக் கடலெல்லாம் சுவறவருந் துவனெனக்கே
அவையெறும்பு லூர்ந்ததுபோல் அருந்தமிழின் கடறனையே
நவையிலதாய் நீந்திசைத்து நவிலுமொழி யீதாமால்.

இ - ள். ஆகாசத்திலுயர்ந்தெழும்பிப் பறக்கின்ற கருடன்முன்னே உயிர்த்து பறந்துவருவேனென்ற மசகத்தைப்போலும். இனிப்பாகிய திருப்பாற்கடலை வற்றிப்போம்படி குடித்துப் போடுவேனென்று சிற்றெறும்பானது கூட்டங்களுடனே ஊர்ந்ததுபோலும். யான் தமிழ்க் கடலை நீந்தி குற்றமற்றதாய பெரியோர்கட்கு முன்பாடியது. எ - று. ()

மலர்மது துளிபொழின் மலிமாமுநி வசிஷ்டதல
வளத்தின்தென் றமிழ்தனை யிலக்கண் றாலோர்
நலங்கொளக் கொள்ளுவர் புழுவைவேட் டுவெனனவே
புலஞ்சிறை செயும்பூ மட்டைமது செயும்போல்.

இ - ள். புஷ்பத்தின் மதுரசங்கள் துளிக்கின்ற சோலைகள் நெருங்கிய மகா தவமுனி வசிஷ்டதலத்தின் பெருமையாகிய தென்தமிழைக் குற்றமகற்றி நலங்கொளக் கொள்வார்கள் எழுத்து சொற்பொருள் யாப்பு அலங்காரமென்னும் பஞ்சலக்ஷணை கவியறிந்த பெரியோர்கள் அதெப்படியென்னில்? புழுவைக்கொணர்ந்து வேட்டுவனென்கிய குளவியானது தன்னைப்போல அழகுபொருந்திய சிறகுகளுடனே ஆக்குவது போலும் புஷ்பத்தின் கள்ளுகளையீக் குலங்கள் கொணர்ந்தது கல்ல மதுகளாக்குவதுபோலவாம். எ - று. (௬எ)

---

## இவை அடைக்கலம் கூறியது.

### நூல்வழி ஆசிரியம்.

நாற்பொருள்பயக்குங் காந்தபுராண நவில்சநத்குமார சங்கிதையு, ளேற்புடைத்தான வைதிககாண்டத் தியம்புபசு ஞரண்யவனமே, சாற்றிடுஞ்சூதன் தவமுநிகட்கு சதுமறை வடமொழியதனைத், தேற்றிய இரண்டா மறையுணர்ந்துள்ள சீநிவாசன் தமிழுரைத்ததுவே.

இ - ள். நாற்பொருளாகிய தர்மம் அர்த்தம் காமியம் மோக்ஷமென்னும் இதனாலே இருக்கிற சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதவிகளும் வருகிறதை விளக்கிச் சொல்கின்ற காந்தபுராணத்திலே சனத்குமார சங்கிதையினில் வைதிககாண்டத்தானே அசாரண்ணிய மகத்துவங்களை சூதமாமுனி நைமிசாரண்ணியத்து ரிஷிகளுக்குச் சொன்ன

வேதவாக்கியமாகிய கீர்த்த வாக்கியங்களை ஆராய்ந்தறிந்து இரண்டா மன்றுமாகிய யசுர்வேத மூணார்கின்ற வைதீக சீனிவாசய்யன் தமிழுரைத்தது. எ - று. (௧௧)

பாயிர நாடு நகர்தலமும் பதுமன் வசிஷ்டன் புனலும்
பாரின் மன்னன் உருத்திரன் முனிவரில் லத்திமணமெழினம்
மாயனுதய மகிலமான் பூசை அரசனமர் வாழ்நாளுறு
தூயமுனிமால்புபல சருக்கமிருபான் செய்யுட்டொகைஐஞ்ஞூறே.

இ - ள். அப்படிக்குரைத்த தமிழின் சருக்கம் எப்படியென்னில்? பாயிரம், நாடு, நகரம், தலம், பிரமதேவன், வசிஷ்டன், தீர்த்தம், மனுச் சக்கரவர்த்தி, உருத்திரன், ரிஷியாச்சிரமம், அத்திரிக்கம், விவாகம், அல்லனம், பெருமான் பிரசன்னம், பூமிதேவி, காமதேனு, விசுவாமித்திர புத்தம், காணுற்றொருவன், வசிஷ்டன் பெருமை, பல்லோர் முத்தி இப்படிக்காகிய சருக்கங்கள் இருபதும் அதற்குக் கூடிய கவிகள் ஐஞ்ஞூறும் பாடிய ஸ்தலபுராணம். எ - று. (௧௨)

பாயிரம் முற்றிற்று.

---

# நாட்டுச் சிறப்பு.

ஆழிசூழ்புவியு ளுமையவட் கடுத்தபாகர் தந்தருளிய வரு
ணை, பாழிதென்றிக்கிற் பொன்மணிகொழித்துப் பாவுமா பொன்
னிநன்னாட்டில், எழில்வேய் வெண்முத்துகுக்கும் வெள்ளாற்றி
னிடைமாதீரத்தில் முனிவன், சூழிமாளிகைசெய்தந்தணர்க் களிக்
குஞ்சொல் வசிஷ்டபுரி யோர்தலமே.

இ - ள். ஆழியென்னுஞ் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்திலே உமை யவளுக்கு அர்த்தபாகங் கொடுக்க வந்தெழுந்தருளிய பரமசிவனது அண்ணாமலையென்னுந் தலத்துக்குத் தென்றிக்கிலே பசும்பொன்னையும் நவரத்தினமணிகளையுங் கொழித்துக்கொண்டு பரவி வருகிற தீர்த்த முள்ள காவிரி நாட்டிலே தாமரைகள் சொரிகின்ற முத்துகளும் வேயென்னும் மூங்கில்களின் முத்துகளும் வெண்மை பொருந்திய சங்கினங்களின் முத்துகளுங் குவிந்தொதுங்கி வருகிற வெடிதாகிய அலைகளோடுங்கூடிய சுவேதநதிதீரத்திலே தவமுனியாகிய வசிஷ்டமகாரிஷி தீர்த்த வாவிகளுந் திருமாளிகைகளுஞ் செய்து அயோனிசதர்களாகிய பிராமணர்களுக்கும் பரமசிவனுக்குந் தானங்கொடுத்துப் பேறுபெற்ற தலமாகிய வசிஷ்டபுரியென்னும் ஒருதலம் உளது. எ - று. (௧)

அந்தமாபதி யந்தணர் மகப்புகைபோ லந்தரம் விரிவிசும்பலை
மேய்ந்து, தந்தமன் னமர்வேல் வாளென பின்னிச் சங்கரன்முர
கபோலிடித்து, எந்தையை வெள்ளி வரையிலிந்திர னேற்றிரைக்-

கடனீரெனவீந்து, மந்தரகிரியி னிருந்துபொன் கொடைபோன் மழைபொழிந் திடுவதுமாமே.

இ - ள். அப்படிக்காகிய அப்பட்டணத்தினுடைய பெருமைகள் எப்படியென்னில்? அதிலிருக்கின்ற வேதப்பிராமணர்களுடைய யாகாதி வேள்விகளிலெழும்பிய புகைகள்போல மேகங்கள் ஆகாசத்திற் பரவி விரிந்து அலைகளோடு கூடிய சமுத்திரங்களிலே மேய்ந்து கறுத்து அதினுக்குள்ளே அந்த ராசாவின் சத்துருக்களைச் செயிக்கின்ற கைவாளின் பிரகாசத்தைப்போல மின்னல்கள் மின்னி அதிலே பின்னும் அந்தப் பதியிலெழுந்தருளிய பரமசிவன் கோயிலில் ஒலிக்கின்ற பேரி வாத்தியம் போல இடிகளிடித்து எந்தையாகிய பரமசிவனுக்கு கைலாசத்திலே ஆதிகாலத்தில் தேவேந்திரன் சப்த சமுத்திர ஜலங்களை புதவ வருஷங் களினாலேகொண்டு திருமஞ்சனம் செய்தது போலவும், பின்னுஞ் சுவர்ன மலையாகிய மந்தரகிரியிலிருந்துகொண்டு தியாகங்கள் கொடுப்பதுபோல வும் மலைநிலங்கள் முதலான மற்றெல்விடங்களிலும் மழை பொழிந்தது. எ - று. (உ)

அலைகடல்வெண்டுகிலுடுத்தபுவிமடந்தைமுலையினுயாரம்போல மலைவெண்ணருவியெனமணியொடுநித்திலம்வரன்றிவழியுமறல் பலகனியுமதுவெறிந்துதடஞ்சாடிக்கடுகிகுறைகடலிற்பாய மலர்வடமென்றவடனக்காய்வந்தடுதனச்சுவேதநதிமணிமுத்தாறே

இ - ள். அப்படிப் பொழிய பெருகிவருகிற சுவேதநதியின் பெருமை எப்படியென்னில்? அலைகளோடுங்கூடிய சமுத்திர ஜலத்தை வெண்மை பொருந்திய மேகலாவஸ்திரங்களாய்த் தரித்திருக்கின்ற பூமிதேவியி னுடைய தனபாரத்தின் நுனியிலே தொங்கிய முத்துமாலைகள்போல சுவேதகிரியென்னும் பருவதத்தின் நுனியிலே யருவிகளானவை நவரத்தினங்களையும் முத்துக்களையும் அரித்துக்கொண்டு வழிந்து பெருகிய ஜலம் பல கனிகளையுந் தேன்கூடுகளையுந் தள்ளிக் கணைகளி லெறிந்து வாவி தடாகங்களை நிறைத்து நிரப்பிக்கொண்டோடி சத்தத் தோடுங்கூடிய சமுத்திர ஜலத்திலே சேர்ந்திட்ட தெப்படியென்னில்? புஷ்பமாலையென்று பூமிதேவிக்காக வந்ததுபோல இருந்தது சுவேத நதியும் மணிமுத்தாறும். எ - று. (௩)

வான்பொழிவெள்ளங்கரைவரைபுரைசூழ்மலர்மலிக்குளம்பல நிரம்பி, மீன்குதித்தெழும்விண்வெண்டிரைப்புனல்கள்விரிகடலமுத மாமென்னில், மேன்குலத்தவர்கட்கிழியர் கைப்பொருளே மேவி மேன்மையானதுபோல், கான்றடமருத வேலியுண்மிகுந்து கலக்க வப்புனனதிபுரஞம்.

இ - ள். பின்னும் வருஷித்து வருகின்ற வெள்ளமானது பருவதங் களைப்போலச் சூழ்ந்த கரைகட்டுகளுடனே இருக்கின்ற ஏரிகளும்,

புஷ்பங்கள் நெருங்கிய குளங்களும் நிறைந்து அதிலே மீன்குலங்களோடு ஆகாசத்திலெழும்பி விழுகின்ற அலைகளுடனே கூடிய ஜலங்கள் உவர் கெட்டு அமுதமானது எப்படியென்னில்? ஈனஜாதியார்களுடைய கைப் பொருளை மேன்மையாகிய பெரியோர்களுக்குக் கொடுத்திட மேன்மை யாவதுபோலவுமாகி தோப்புகள் சூழ்ந்த கழனிகட்டுகளிலே அந்த ஜலங்களும் நதியின் ஜலங்களுங் கலந்து மிகுந்து பாய்ந்தது. எ - று. (௪)

வெண்குடவளை குழுவொடு தொனிடமணையுள் விரவுநீர்க்கெதிர்கொ
ண்டேயகத்தூங், திண்ணுழவர் களிமேழைதையோ டலரின்றேறல்
கொள்வரிமிஞிறொலையுஞ்சேல், கண்ணுழத்தியர் தம்வினையொலியும்
வான்கரைந்திடு மோதையு மெழும்பி, விண்ணுல கதிர்ந்திடவதுவ
தெனவேங்கி இந்திரனமுதயாய்ப் பொழிந்த.

இ - ள். வெண்மைபொருந்திய சங்கினங்கள் குஞ்சுகளுடனேகூடித் தொனிக்கின்ற வயல்களினுள்ளே ஓடிவருகிற தண்ணீர்க்கெதிர்கொண்டு மண்டை கட்டுகிற இடம்பொருந்திய பள்ளர்களுடைய இரைச்சல்களும் விருட்சங்களிலுங் கழனிகளிலும் நெருங்கிய புஷ்பங்களின் மதுவைப் புசிக்க வருகிற வண்டுகளின் இரைச்சல்களும் மீன்போல் விழியினை யுடைய பள்ளத்திகள் நண்டு, நத்தைகளை பிடிக்கிற இரைச்சல்களும் அடிக்கடி மேகங்கள் சூழ்ந்து பொழிகிற மழைகளின் இரைச்சல் களும் எழும்பி விண்ணுலகாகிய தேவலோகத்தி லதிர்ந்திடக் கண்டு அஞ்சித் தேவேந்திரன் அமுதமாரியாய்ப் பொழிந்திட. எ - று. (௫)

முளைக்கொழு வணிந்த கலப்பையிற் பகட்டைப்பூட்டியேர்மள்
ளர்களோட்ட, புனற்கருஞ்சேற்றி னிடைப்புவியுதிரம் பொன்மணி
யொழுகிடவித்து, தனித்திட வாங்கவள் மயிர்க்கூச்சொன்று தரு
வனபோன் முளைநாற்றஞ், சினைத்தெழும் பிடவந் நென்முடி தூக்கி
சேற்றிடை நாற்றிடுவளமே.

இ - ள். அப்படிப் பொழிந்திடுகின்ற நிலங்களிலே கூர்மை பொருந்திய கொழுக்களணிந்த கலப்பைகளிலே கடாக்களைக் கட்டி யேர்பூட்டி பள்ளர்கள் ஓட்டும்போது தண்ணீரோடுங்கூடிய கருஞ்சேற்றினடியிற் படைச் சால்களிலே இரத்தினங்கள் சிந்துகிறது பூமிதேவிக்கு காயங்கள்பட்டு உதிரங்கள் ஒழுகுவதுபோலும் அந்தச் சேற்றிலே நெல்வித்துக்களைத் தெளித்திடும்போது முளைத்தெழும்பிய நாற்றுகள் பின்னும் பூமிதேவிக்கு மயிர்க்கூச்செறிந்ததுபோலவும் அந்த நாற்றுகள் கிளைத்தெழும்பி இருக்கின்றதைப் பிடுங்கி முடிகொண்டு மறுசேற்றிடை யிலே தண்ணீர்விட்டு நாற்றிடுவது பின்னும் பூமிதேவிக்கு மகுடாபி ஷேகஞ் செய்து நென்முடி சூட்டுவதுபோலும். எ - று. (௬)

வட்டமென்முலையுழத்தியர்பழனப் வன்களைபறண்டவள்ளிமிழ்நீழ்
திட்டிடக்கயலெனமென்புருவநீழலில்லெனவஞ்சிக்கடுகி

வட்டலரானமுகத்தினிலளிதாவச் செண்பகமலரெனமூக்கைத்[லே.
தொட்டிடாமலேயஞ்சிமீன்யோடத் தோகையர்மருதஞ்செய்தொழி

இ - ள். அப்படியிருக்கின்ற வயல்களிலே வட்டமாம் மெதுவே டிருக்கின்ற மூலைகளோடுங்கூடிய பள்ளத்திகள் வலிமை பொருந்திய களைகளைப் பறிக்கும்போது எப்படியிருந்ததென்னில்? அவள் கண்ணிழலை மீனினங்கள் தன்னினமென்று கிட்டும். புருவத்திழலை வில்லென்று பயந்தோடும் பின்னும் அவர்களுடைய முகங்களைத் தாமரைப்புஷ்பமென்று வண்டினங்கள் நெருங்கி வரும். மூக்கைக் கண்டு சண்பகமலரெனப் பயந்தோடும். இப்படிக்காக அவர்கள். தொழில் செய்வதாகும். எ - று. (எ)

பின்னெடும்பழனத் தழுத்தியர்காலைப் பெருவராலெனப்பிடித்
திட்டு, மன்னவள்புறங்கா லாமையென்றசைத்து மத்தொழில்மன்
னர்கள்வேட்குங், கன்னலின்வாளை தெங்கடிபிடிக்கக் கமழ்குலைக்
கனிகள்கொட்டிடவுஞ், சொன்னடன்மேவும் மேதிதன்மடிப்
பால் சொரிந்திட வாளைமுட்டிடுமே.

இ - ள். பின்னும் தண்ணீர் நிரம்பிய பெரிதாகிய வயல்களிலே வேலை செய்கின்ற பள்ளத்திகளுடைய கால்களை வராலென்று பிடித்து வெட்கியும், அவர்கள் புறங்கால்களை ஆமைகளென்று பிடித்து வெட்கியும், பள்ளர்கள் சஞ்சரிப்பார்கள். அதுவுமல்லாமல் நெருங்கிய கரும்புகளிலிருக்கின்ற வாளைகளோடித் தென்னமரத்தி னடிகளிலே இடித்திட அதின் குலைக்கனிகள் கொட்டிடப் பின்னும் வயலின் பக்கங்களிலிருக்கின்ற மடுவுகளிலே எருமைகளுழல அதன் மடிகளை வாளை முட்டிடத் தன் கன்றெனப் பால்களைச் சொரிந்திடும். எ - று. (அ)

தேன்றுளிப் பொழிளகர் வயித்தியர்முடிப்பிற் செய்தபால் மது
கனிச்சாறுங், கான்சுளைக் கனிச்சா றுடன்விரிந் திட்ட கதலியின்
மென்கனிச்சாறும், வான்சினைத் தெழுமாங் கனியினின்சாறும் வார்
கமழ் குளஞ்சியின்சாறும், வேன்மருதத்தி னுறுபாய்ந்திடவே
வியனுற வளர்ந்தனசெந்நெல்.

இ - ள். பின்னும் எப்படியென்னில் தேன்கள் துளித்திருக்கின்ற தோப்புகள் நெருங்கிய திட்டகுடியென்னும் நகரின் வயித்தியமாதர்களா மிக்கு அபிஷேகஞ் செய்கின்ற பால்களும், தேன்களும் கனிகளின் ரசங்களும் கானகிய தோப்புகளில் சுளைகளோடு கூடிய பலாக்கனிகள் விழுந்தொழுகின்ற ரசங்களுந் தலைவிரிந்தோங்கிய வாழைத்தாறுகளின் மெதுவாகிய பழரசங்களும பின்னும் ஆகாசத்திலெழும்பிய மாவின் கனிகள் தருகின்ற ரசங்களும், நீளமாகிய கரும்பின் ரசங்களும் இன்பமாகிய குளஞ்சியின் ரசங்களும் மிகுந்து ஆறுயப்பெருகி மருதநிலமாகிய வயல்களிலே பாய்ந்திடநெற்பயிர்கள் உயர்ந்து வளர்ந்தன. எ - று. (கூ)

பைங்கிளிச்சிறைபோற் சூலுளைந்தோங்கிப் பண்புளசாலிகள் கழையாத், துங்கவக்கழைகள் கமுகெனக்கமுகு சூழ்குலைத் தெங்கெனத்தெங்கும், மங்குலைத்தாங்க மென்மடல்விரிந்து வளர்ந்தன வான்சினைமருத, மங்கமழ்சாலிக் கதிரெலாமரிசிக் கதிர்களாய் வளர்ந்தனமாதோ.

இ-ள். அப்படி வளர்கிற தெப்படியிருந்ததென்னில்? பச்சைக் கிளிகளுடைய சிறகுகள்போலும் மடல்விரிந்த சூலாகியும் பாளைவிரிந்தும் பருத்திருக்கின்ற சாலிகளானவை கரும்புகளைப்போலவும் ஓங்கியெழும்பிய கரும்புகளானவை கமுகுகளைப்போலவும்,குலைகள் நெருங்கிய கமுகுகளானவை தென்னமரங்களைப்போலவுஞ் சோலைகள் விரிந்திருக்கின்ற தென்னமரங்களானவை ஆகாசத்திலே சூழ்ந்திருக்கின்ற கார்மேகங்களைத் தாங்குவதுபோலவும் இவைகளையெல்லாஞ் சூழ்ந்துகொண்டதுபோல மருதமரங்களானவை ஆகாசத்திலெழும்பிய கிளைகளோடுமிருக்கின்றன. பின்னும் அழகோடுங்கூடிய நெற்பயிர்களெல்லாம் அரிசிக் கதிர்களாய்விளைந்து வளர்ந்தன. எ-று. (௧0)

மருதவின்னிசைபோ லொலித்தளிசேர்ந்த மலர்மதுச் சொரிவதுசெங், குரும்பைப்மென்முலைச்சி முகம்விழியதற்குக் குலைந்தமென் றழுவபோற்குவளை, குருகுபாய்மடுவின் மரைமலிந்தன்னங் குடவளர் முட்டையென்றெடுக்கக், கருவுடைக்கழைப்பால் காய்ச்சியதூமம் கண்டமாங் குயின்மயில்களிப்பு.

இ-ள். மருதவின்னிசையாகிய ஆயர்வேயின் குழலூதுவதுபோல வண்டினங்கள் சத்திக்கொண்டு சேர்ந்திருக்கின்ற புஷ்பங்களின் தேன்சொரிகியது செவ்விளநீரைப்போலவும் இருக்கின்றன. மெதுவாகிய ஸ்தனங்களையுடைய பள்ளத்திகள் முகத்திலிருக்குங் கண்களுக்குக் குலைந்தோமென்று தாமரையுங் கருங்குவளையும் வண்டுகளோடு சொல்லி அழுவதுபோலவும், பின்னும் நாரைக்குலங்கள் பாய்ந்தோடுகின்ற தடாகங்களிலே நெருங்கிய தாமரைகளிலிருக்கின்ற அன்னங்கள் தன் முட்டைகளென்று சங்கினங்களை எடுக்கவும், அதுவுமல்லாமல் சுதிர்கள் பூட்டிய ஆலைவாய்க் கருப்பஞ்சாறுகளைக் காய்ச்சுகின்ற புகைகளெழும்பியதைக்கண்ட குயில்களுந் தளிர்மாமரங்களிலிருந்து தொனிக்கவும், மயில்கள் சிறகுகளைவிரித்தாடுவதுமாம். எ-று. (௧௧)

இஞ்சிமஞ்சளு மற்றெடுப்பது முழவரெடுத்தங்க வாள்வினை வறுத்தும், இஞ்சல்கட்டரி சும்மையிலெடுத்தும் விண்கதிர்ப் புரவி போற்பகட்டை, புஞ்சமிட்டமெந்தர கிரிபுரைபோர் நென்முத்துகள் வழங்கியுமெடுத்து, மெஞ்சலர்தநெற் பண்டியிற்றெருக்து மீய்ந்திடுமறையவ ரிமையவர்க்கே.

இ-ள். நிலப்பொருளாகிய மஞ்சள் இஞ்சி உள்ளி முதலான கிழங்குகளை வெட்டியெடுப்பதும், பின்னும் உழவர்கள் அரிவாள் கைக்

கொண்டு விளைச்சல்கள் பதம்பார்த்து அறுப்பதும், விஞ்சிலென்னு மிகுதியாகிய அரிகளை யெடுத்துக் கட்டுவதும், கட்டுகளை யெடுத்துக் களத்திற் சேர்ப்பதும் அடிப்பதும், மற்றும் ஆகாசத்திலே சூரியன் நடத்துகின்ற பச்சைக் குதிரையைப்போல வலிமைபொருந்திய கடாக் களைப் பிணைத்துக் கடாவ்டி விடுவதுந் தான்களை மந்தரகிரி பருவதம் போல போர்கள் செய்வதும், பொலிதிரட்டிய நெல்லுகளையும் முத்துக் களையும் எடுப்பதும் செலவழிப்பதும் எடுக்கக் குறையாத நெல்லுகளைக் களஞ்சியங்களிலே பேர்டுவதும், பின்னும் அந்த நெல்லுகளை வேதப் பிராமணர்கள் அக்கினி முன்பாகத் தேவதைகளுக்கு அவிர்ப்பாகங்கள் கொடுப்பதுவுமாம். எ - று. (௧௨)

மாசின்மங்கையாளோ டில்லறம்புரியும் வசிஷ்டமாநாட்டினிற் கொடுவந், தேசினெறக்களைய டகற்றிவெண்முல்லை திரண்ட மொக்குள்புரைமுர, நேசசெஞ்சடை வைத்தியர்க்கீந்து செய் தவர் வேதியர்க்களித்து, நேசமோடறச் சாலைகள்வைத்து நீள் சுவை விருந்தொடு புசிப்பார்.

இ - ள். குற்றமற்ற மங்கையாகிய அருந்ததியுடனே கூடி வாழ்க்கை செய்கின்ற வசிஷ்டமாமுனிநாட்டிலே விளைந்து கொணர்ந்த சுத்தமாகிய நெல்லுகளை ஓடு நீக்கி வெண்மைபொருந்திய முல்லைக் குமிழ்களின் திரட்சிகளைப்போல அன்னங்கள் செய்து பிரகாசம்பொருந்திய சிவந்த சடையுடைய வயித்தியநாத சுவாமிக்குப் பூசை செய்து தபசுகள் செய் கின்ற பெரியோர்களுக்கும் பிராமணர்களுக்குங் கொடுத்து மிகுந்ததை பத்தியுடனே தருமசாலைகள் சத்திரங்கள் வைத்து அறுசுவைகளுடனே விருந்துகளோடு தாமும் புசிப்பார்கள். எ - று. (௧௩)

பாசிழையிடையார் தாங்கியவணிபூப் பலமணித்திவலை சிந்திய வத், தேசுமுன்றினி னீள்முலைமேதிச் சென்றுலைத்தடிதளர்ந் தொதுங்கு, மூசல்வெண்டயிரைக் கரஞ்சிவக்கவரி முழக்குமேபோல் வயின்றெறுமவர்க, ளோசைகொள் மதனத் திவலைபுங் கமழவோ டியாழ்கடற்புக வுவர்போம்.

இ - ள். அப்படியிருக்கின்ற நாட்டிலே பசுமைபொருந்திய இழையை யொத்த இடையுடைய மாதர்களணிந்து கொண்டிருக்கிற ஆபரணத்தின் நவரத்தினங்களானவை சிதறி முற்றங்களிலே விழுந்து பிரகாசிப்பதும், அதிலே நீண்டு குவிந்திருக்கின்ற முலைப்புடைய எருமைகள் சஞ்சரிக் கும்போது அதினுடைய கால்களிலுறுத்தித் தளர்ந்து ஒதுங்குவதும், பின்னும் ஆடைகள் மூடிக்கொண்டிருக்கிற அதினுடைய தயிர்களைப் புலிகள் சீறுவதுபோல ஓசைக்கெழும்ப வீடுகள்தோறுங் கைகள் சிவக் கடைப்படி கடைவதும் அப்படி கடைகின்ற திமிரங்கள் அவர்களுடைய வாசனைக் கனபரீருடனே சேர்ந்தோடி ஆறு பாய்ந்து ஆழமாகிய சமுத் திர ஜலத்திலேகூட அதினுடைய உவர்ப்புகள் நீங்கும். எ - று. (௧௪)

பான்மதிமுத்தமொளி மணிபொன்னும் பரவுசாந் திபங்குநா டதற்கு, வான்மதிதவழு மலைவளம்பெரிதோ வலைகடல் வளம்பெரி தோபின், கான்படுபொருளுங் கடல்படுமமுதுங் கனிவரை யைந்து மண்ணைந்தும், மேன்மயக்குவதா லையமுதொன்றே விருந்திடும் விண்ணுலகொவ்வா.

இ - ள். பின்னும் எப்படியென்னில் பால் மதியாகிய பூரண சந்திரனைப்போல பிரகாசிக்கின்ற முத்துக்களுடனே நவரத்தினங்களுஞ் சுவர்ணங்களும் பரவி புன்னிர் குங்குமக்களபச் சாந்துகளினாலே பிரகாசிக்கின்ற நாட்டுக்கு சந்திரன் தவழும்படி உயர்ந்து ஆகாசத்திலே எழும்பி இருக்கின்ற மலைகளின் வளமை பெரிதாமோ? பின்னும் அலைகளோடுங் கூடிய சமுத்திரத்தின் வளமை பெரிதாமோ? அதற்குயர்ந்த நாடென்றறிவதுமல்லாமல் பின்னும் கான் திரவியங்களாகிய அரக்கு, தேன், கவுரிமயிர், புழுகு, மயிலிறகு. கடல் திரவியங்களாகிய முத்து, பவளம், சங்கினங்கள், நவரத்தினங்கள், உப்பு. மலைபடு திரவியங்களாகிய சந்தனம், அகில், குங்குமம், மிளகு, யானை. நிலமீதாகிய செந்நெல், சிறுபயறு, செங்கழுநீர், வாழை, கரும்பு. இந்த வகைகளெல்லாம் ஒன்றோடொன்று மிகுந்து மயங்குவதனாலே கடல்முதொன்றேயாகிய கற்பகத்தரு காமதேனு, சிந்தாமணி, ஊர்வசி, வெள்ளையானை என்னும் இவ்வொரு பொருளே இருக்கிற பொன்னுடோ இந்நாட்டுக்கு இணையாவதென்று சந்தேகமுற்று இந்நாடே பெரிதென்றெண்ணிபது. எ - று. ()

நலனுயுகுமா ரியாவரும்பகலை நல்விருந்தோ டமுதுண்டும், பல்கலையுணர்ந்து நீக்கமென்முலைபார் பரிமளமலர் மணந்திமிர்ந்து, புலவியுளிருத்தி யின்புறவிருட்டைப் போக்குவர் வேற்கணார்கணவர், கலவியாலெல்லும் பகலுந்தோன்றுது கடந்தவ ரொளியினுற்கழிப்பர்.

இ - ள். அப்படியிருக்கின்ற நாட்டிலே நலமுடனே இருக்கின்ற புருஷர்கள் யாவர்களும் நன்மையாகிய விருந்துகளுடனே அறுசுவையன்னமுமுண்டும், பலகலை சாஸ்திரக் கேள்விகளுணர்ந்தும், பகற்காலத்தைப் போக்குவார்கள். பின்பு மெதுவாகிய முலைகளோடுங் கூடிய பெண்கள் புஷ்ப பரிமள கந்தங்கள்பூசி மதனலீலைகள் செய்து மிகவும் இன்பத்துடனே புணர்ந்திடும்படி இராத்திரிகாலத்தைப் போக்குவார்கள். பின்னும் வேல்போன்ற விழியினையுடைய ஸ்திரீ சனங்கள் தங்கள் புருஷர்களாலே செய்கின்ற லீலையால் இராப்பகல் தோன்றுமல் அலங்கரித்திருப்பார்கள். மற்றுங் கடந்தவராகிய பெரியோர்கள் பேரின்பமாகிய சோதிப்பிரகாசத்தினுலேயே பொழுதுகளைச் செலுத்தி வாழ்வார்கள். எ - று. (கக)

நாட்டுச் சிறப்பு முற்றிற்று.

# நகரச் சிறப்பு.

வால்வளை யொலிக்குமாழ மடுவில்வா னகர்காட்டும்பொற்
பாலெயில் சூழ்வசிட்ட பதிமேற்க துடுத்தசோலை
போலக ழிதனுள்ளாகப் புகுந்துள்ள கரிவன்கையா
லாலமுற் றவரைப்பற்றி யாட்டுந்தா மரைத்தாளன்றே.

இ - ள். அப்படியிருக்கின்ற நாட்டிலே கோட்டைகள் சூழ்ந்த அகழியின் பெருமை எப்படியென்னில்? வெள்ளிய சங்கினங்கள்சூழ்ந்து ஒலித்துக்கொண்டிருக்கின்ற ஆழமாகிய மடுவின் நீரிலே தோற்றுகிற நிழலானது பக்கத்திலே கோட்டைகள் சூழ்ந்திருக்கின்ற வசிட்டபுரமென்னும் பட்டணத்தைக் காட்டியது தேவலோகத்தைக் காட்டுவது போலவும், அந்தப் பட்டணத்தைச் சூழ்ந்திருக்கின்ற அகழியானது பூமிதேவியானவளுக்கு மேகலாவஸ்திரந் தரித்திருப்பது போலவும், பின்னும் அந்த அகழியினுள்ளே புகுந்திருக்கின்ற நீலநிறம்போன்ற யானைக்கூட்டங்கள் தன்னுடைய வலிமைபொருந்திய துதிக்கைகளினாலே தாமரைத்தாள்களென்று நாகலோகத்தி லிருக்கின்ற உரகர்களைப்பற்றிச் சுழற்றி யாட்டிப் பிடுங்கி யெறிவதுமாகும். எ - று. (க)

இருவினை யகற்றும் வயித்தியபதி சனார் முன்னிலங்கு
முருவுயர் கோபுரத்தை ஒருவமாட் டாதவெய்யோன்
ஒருநிலை யுள்ளிலோட உலகுதித் திருந்துபின்னர்
வருமதி பணிக்குமாறி வருவபோன் மேலேசெல்க.

இ - ள். பின்னும் அந்தப் பட்டணத்திலிருக்கின்ற பரமசிவனுடைய கோபுரத்தின் பெருமை எப்படியென்னில்? இருவினையாகிய புண்ணிய பாவங்களை யறுத்து ஜெனன மரணங்களையறுத்து, சாயுச்சியபதவியைக் கொடுக்கின்ற அவுடதமாகிய வைத்தியநாதசுவாமியினுடைய கோயிலின் வாசலின் முன்னே விளங்கிய அநேக அவதாரபுருஷர்களுடனே எழும்பியிருக்கின்ற உயர்ந்த கோபுரத்தை சூரியன் தாண்டமாட்டாமல் அடிநிலை வாயினுள்ளாலே யோடிடவும், அப்போது உலகத்தில் உதையமாகிய சூரியன் பின்பு அஸ்தமனமாகி மறுபடியும் பிரகாசித்து உதித்ததுபோலவும், பின்னும் அத்தினமே உயர்ந்து வருகின்ற சந்திரன் மற்றொரு மேல்நிலையினுள்ளே புகுந்து புறப்படுவது உதையமான சந்திரன் இராகு கேதுக்களுக்குப் பயந்து ஒளித்திருந்து பின்பு புறப்பட்டதுபோலவு மாகும். எ - று. (உ)

வீடருள் வேங்கைவல்லி விமானத்திற் றொத்தும்பச்சை
யாட்டு நாட்டுக்கற்பகத் தடியின்கீ ழாமாபுல்லென்
றேடியக் காந்தநீரி லுறையுமம ரத்தின்வல்லி
நாடிய கொம்புபோல நாற்றிய கொடிகள்மின்னும்.

இ - ள். பின்னும் அந்த உமையவளுடைய விமானத்தின் பெருமை எப்படியென்னில்? வீடென்னும் ஆயிரத்தெட்டிதழிலே வாசமாகிய பிரகாசத்தைக் கொடுக்கின்ற அசனாம்பிகையாளுடைய விமானத்திலே தொத்திய பச்சைகளை பொன் னாட்டினில் அருந்தருவினிழலிலே இருக்கின்ற காமதேனுக்கள் பசும்புல்லென்று கிட்டியோடுவதும் அதில் பதித்திருக்கின்ற சந்திரகாந்தங்களிலே வழிக்தொழுகிய ஜலங்களிலே படிந்து நாடுவதுமதல்லாமல் நெடிதாகிய கொடிச்சீலைகள் கட்டி மின்னுவதிலே கற்பகவிருட்சத்தின்மேல் ஓடிப் படர்கின்ற வல்லிசாதகக்கொடிகள் தாவிப் பாய்வதுமாகும். எ - று. (௩)

இருந்தமா துய்யவிஞ்சி யுறுப்புநீள் கழுத்தின்மஞ்சு
பொருந்துதன் னஞ்சுண்டாரைப் போலகிற் புகையெழும்பி
விருந்தென மஞ்சோடும் விழாக்கொடி விண்ணடந்து
மருணன்தேர்ப் பரிபுடைத்தவன் றெழிற் சிறிதகற்றும்.

இ - ள். உமையவளுக்கு வலதுபுறத்திலே வீற்றிருக்கின்ற மகாவிஷ்ணுவினுடைய கோயிலின் பெருமை எப்படியென்னில்? சுப்பிரமாகிய வெண்மைபொருந்திய வெள்ளி மதில்களிலே பொருந்தியிருக்கின்ற பிரதிமைகளின் நீண்ட கழுத்திலே நீலமேகங்கள் சூழ்ந்திருப்பது திருப்பாற்கடலிலே ஆலகாலவிஷத்தை புசித்திருக்கின்ற நீலகண்டரைப் போலவும் மடைப்பள்ளிகளிலே எழும்பிய அகில் புகை விருந்தினர்போல மேகங்களுடனே கலந்துகொள்ளும். அதுவுமல்லாமல் ஆகாசத்திலே நடத்துகின்ற சாரதியான அருணனுக்கு சற்றே கையாற்றுவதுபோல் சூரிய ரதத்திற் கட்டிய பச்சைக் குதிரைகளைப் புடைத்தோட்டும்படி திருவிழாக் கொடிச்சீலைகள் வீசும். எ - று. (௪)

ஆடகவிசித்திரச் சேலைகளணிந்து பைங்குலைகள் கட்டி
கோடக விண்ணிவூர் கொண்டதேருமை வைத்தியர்க்கு
ஏடகப் பூங்கொத்துக ளிசையுவெண் கவரிபோல
மாடக முயர்ந்தவீ தி வந்தவ ரருள்கொடுப்பார்.

இ - ள். ஆடகமாகிய பசும்பொன் பிரகாசம்போன்ற விசித்திரச் சேலைகளினால் அலங்கரித்து பசுங்குலைகள் நெருங்கக் கட்டி ஆகாசத்திலெழும்பி யோடப்பெற்ற குதிரைகளை இசைத்து ஓட்டுகின்ற ரதத்தின் பேரிலே அசனாம்பிகை சமேதரான வைத்தியநாத சுவாமி எழுந்தருளி நடத்திவருகின்ற தெப்படியிருந்ததென்னில்? பக்கங்களிலே உயர்ந்தெழும்பிய மாடங்கள் சூழ்ந்த தேரோடு வீதிகளின் அடியார்களுக்கு அழியாப்பதம் கொடுத்தருள வந்ததுபோலவும் அப்போது அவருக்கு இருபுறமும் வெண்மையாகிய கவரிக்கொத்துகள் வீசுவதுபோலவுந் தென்னமரங் கமுக்மரங்களின் பாளைகள் விரிந்திருக்கின்றன. எ - று. (௫)

இருள்கற் றிடும்வெண்டிங்க ளென்றெடும் பித்திமாடந்
தருவுஷ்கதையிழிந்து சாத்திவெண்ணகைத் தல்போதுந்

குருமணி யிலகுமேடை கொடுங்கதி ரெனவின்னுட்டை
முருகிலென் றுதடுநீவி மூடிடாக் கனிவாய்போலும்

இ - ள். அப்படியிருக்கின்ற வீதிகளின் மாடியின் பெருமை எப்படி யென்னில்? சுத்தமாவழியமான செடிதாகிய சுவர்களெழும்பிய மாடிகள் இருட்டைப் போக்கும்படி வெண்பிரகாசம்போன்ற பூர்ண சந்திரனைப் போலவும் கற்பகவிருட்சத்தோடி யிருக்கின்ற பொன்னாட்டைத் தாழ்வு சொல்லி வெண்மையாகிய பல்லுகளைத் திறந்து சிரித்ததுபோலவும் பின்னும் உயர்ந்த ரத்தினங்கள் பதித்திருக்கின்ற உப்பரிகை மேடைகள் சிவந்த சூரியப்பிரகாசம்போலவும், தேவலோகத்தைத் தாழ்வு சொல்லி சிவந்த உதட்டை நீவி மூடிடாத கொவ்வைக் கனிவாயைப்போலவும் உள்ளன. எ - று. (௬)

தெள்ளுநீர்க் குலைமெய்யோன் தேர்ப்பரி குளம்பில்வெட்டி
விள்ளுதிர்ந் திடுமந்நீரு மேனிலை மடவார்தங்கள்
கள்ளறு மலருஞ்சாந்துங் கமழ்பட வனத்திற்சேறு
கொள்ளும்வெண் டாளப்பந்தற் கொடிகதிர்க் காற்றுவீசும்.

இ - ள். அப்படியிருக்கின்ற வீதிகளிலே பின்னுமெப்படியென்னில்? தெளிவாகிய இளநீர்களோடும் இருக்கின்ற உயர்ந்த தென்னங்குலைகளை ஆகாசத்திலே நடத்துகின்ற சூரியனுடைய தேரிற்கட்டிய பச்சைக் குதிரைகளின் குளம்புகள் வெட்டிக் காயின் மூடிகள் பக்கங்களிலே விழுந்து கிடப்பதும் அந்த இளநீரும் மேன்மாடிகளில் இருக்கின்ற மாதர்கள் அணிந்திருக்கின்ற புஷ்பங்கள் பன்னீர்கள் சிந்தியொழுகுவதும் அதிலே சார்ந்த சந்தனங்கள் சேர்ந்து வீதிகளெங்குஞ் சேறுகொள்ளுவதும் அதின் பக்கங்களிலே வெண்மையாகிய முத்துப்பந்தல்கள் பிரகாசிப்பதும் அதிலே கட்டிய கொடிச்சீலைகள் உயர்ந்தாடியது சூரியனுக்கு இளைப்பாறும்படி விசிறிகளை வீசுவதுபோலும் உள்ளன. எ - று. (எ)

மின்னிடை மடவார்செல்லு மேனிலை வாகைகண்டும்
பொன்மணிக் குன்றுயருக்கள் போலவெண் ணிடுங்கஞ்சங்க
ளன்னவண் முகத்தைத்திங்க ளாமெனக் குவளைமற்றும்
பன்மயி ரிருளென்முல்லை பரிமளங் கக்குமின்டு.

இ - ள். பின்னும் அந்த வீதிகளிலே மேலரங்கங்களி லிருக்கின்ற மாதர்களின் பெருமை எப்படியென்னில்? மேன்மாடங்களின் சாளர வாயில்களிலே அவர்கள் நடக்கும்போது, அந்தப் பட்டணத்தின் பக்கங் களிலே இருக்கின்ற புஷ்ப வனங்களானது அவர்களுடைய இடைகளைக் கண்டு மின்னலென்று தாழைகளின் மொக்குகளும் இரத்தினங்க ளிழைத்திருக்கின்ற காதினணிகளைக் கண்டு சூரியனென்று தாமரைகளின் மொக்குகளும் பிரகாசம்பொருந்திய முகத்தைக் கண்டு பூர்ண சந்திரனென்று செங்கழுநீர் மொக்குகளும் கற்றையாகிய தலையின் மயிர்

களைக்கண்டு அர்க்கிரோத்திருட்டு வருவதென்ற முல்லைகளின் மொக்கு களும் வாசனைகளை கக்கிக்கொண்டு வாய்விட்டலறும். எ - று. (௮)

உயர்நெடு சாளரத்தி னூற்றவள் கேள்வன்றன்னின்
புயமலி கலவியாலே பொற்குடத் துகிலைநீவ
மயலவ ளணிமெள்ள மதிக்கலை கலையெண்றெண்ணி
அயல்கர நீவிச்சேர்ப்ப ரதுவில தவனைச்சேர்ப்பர்.

இ - ள். பின்னும் அந்த மாதர்களுடைய மையல்களெப்படியென்னில்? உயர்ந்த நெடிதாகிய மேன்மாடிகளின் சாளரவாயிலிலே குளிர்ந்த சந்திர கிரணங்கள் வீசும்படி தன்னுடைய ஆசைப் புருஷர்களுடனே கூடியிருந்துகொண்டு இருபுஜங்களும் நெருங்கிட மதன லீலைகள் செய்யும்போது சுவர்ணகலசம்போன்ற ஸ்தனபாரங்களின் வஸ்திரங்களைப் புருஷர்கள் நீக்கி விடுவதும், மாதர்கள் நாணிவிகாரத்தினாலே வெண்மையாகிய சந்திரகலையைத் தனது வஸ்திரமென்று பக்கங்களிலே கைகளை விட்டிழுப்பதும் அதற்கும் அஃதுவாராது கண்டு அந்த காந்திபடர்ந்திருக்கின்ற புருஷர்களைத் தானே வஸ்திரம்போலத் தோற்றிக் கட்டிச் சேர்வதும். எ - று. (௯)

குருமணி யிலகும்வாயிற் கோட்டுமைக் கரிகள்கட்டுந்
தருவினிற் போர்செய்தற்ற தந்தம்வைத் ததுபோலெங்கும்
புருடரோ டிமாதர் புணர்ந்தபோ ரதனிலற்ற
பெருமுலை யென்மார்ச்சாந்திற் பேணுவ தினைஞர்கொங்கை.

இ - ள். பின்னும் எப்படியென்னில்? புருஷர்களுடனே மாதர்கள் பிணைந்து மதன யுத்தங்கள் செய்யும்போது அவர்களுடைய முலைகளானது புருஷர்களுடைய மார்பிலே யிற்றுமுறிந்ததுபோலவும் புருஷர்கள் மார்பிற் பூசிய சாந்துகளிலே ஸ்தன்னியங்கள் படிந்திருப்பதுவும் அப்படிப்போல நவரத்தினங்களும் பிரகாசிக்கின்ற வாசலின் முன்னே நின்ற தந்தங்களோடுங் கூடிய நீலநிறம்போன்ற யானைகளைக் கட்டியிருக்கின்ற மரங்களிலே தந்தங்களற்றிடும்படி மல்லுகள் செய்வதும் அம்மரங்கள்தோறும் தந்தங்களை வைத்திழைத் திருப்பதுபோலவு முள்ளன. எ - று. (௧௦)

மாதவ முனியளித்த மறையவர் காருகபத்திய
வேதவோ தைகளோடுற்ற விண்ணெழு மாடவீதி
நாதனே டொருநா னூறு நறுமலர்க் கயநாலாறோ
டேதமின் முறைகள்செய்வோ ரிருக்குமென் மாடவீதி,

இ - ள். மாதவமுனியாகிய வசிஷ்ட மகாரிஷியினாலே சிருஷ்டிக்கின்ற பிராமணர்கள் வேள்விகள் செய்யும் வேதகோஷ்டங்களோடும் பரமசிவனுடனே கூடிய நானூறு திருமாளிகைகள் விளங்குகின்ற ஆகாசத்தில் உயர்ந்தெழும்பிய மாடவீதிகளும், அதைச் சூழ்ந்திருக்கின்ற

குவளைகளுந் தாமரைகளும் நெருங்கிய வாசனைகளுடனே மலர்ந்திருக்கின்ற இருபத்துநான்கு தீர்த்த புஷ்கரணிகளும் அளவற்ற பத்தியுடனே யாகம் முறைப்படியே பரமசிவனைப் பூசிக்கின்ற ஓசைகளோடு முழங்கிய சைவமறையோர்களின் மாட வீதிகளும். எ - று. (௬௧)

மூவழ லகலார்வேத முறையொலி மறையோர்மாட
மாவலர் முரசொலிக்கு மறம்வளர்ச் சாலைமாடங்
காவல்சூழ் பரிமுழக்குங் கனகன்றன் சித்திரமாட
மேவலர் களைச்செயித்த வெல்லொலி யமைச்சர்மாடம்.

இ - ள். ஆகவனீயங் காருகபத்தியந் தட்சிணாக்கினியம் என்னு மூலழலையும் நீங்காத நான்கு வேதங்களின் இரைச்சல்களோடு மிருக்கின்ற வேதப்பிராமணர்களின் மாடவீதிகளும், ஆவலாகிய அன்புடையவர்கள் அன்னம்பாலிக்கிற முரசடி யோசையோடும் இருக்கின்ற தரும சத்திர சாலைகளின் மாடவீதிகளும் காவல்கட்டுகளோடுங்கூடிய. குதிரைக் கூட்டங்கள் அநுமானிக்கிற சத்தங்களோடுமிருக்கின்ற இராசாக்களுடைய விசித்திர மாடவீதிகளுஞ் சத்துருக்களைச் செயித்த சந்தோஷங்களின் இரைச்சல்களோடு மிருக்கின்ற மந்திரிமார்களின் மாடவீதிகளும். எ - று. (௬௨)

நவமணித் தரளம்பொன்னு நறுமலாங் கனியுங்காயுஞ்
சுவடுமிக தலைதொன்மூலந் துய்யபட் டாடைமற்றும்
பவமிகத் தருமாடங்கள் பரவுமேற் கொடிகள்கட்டிப்
புவனியி லறம்வளர்க்கும் புந்கலப் பிணையோர்மாடம்.

இ - ள். வச்சிரம், பச்சை, மரகதம், மாணிக்கம், வயிடூரியம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், இரத்தினம், சுவர்ணரசிதங்களுடனேயும், முத்துப் பவளங்களும், பின்னும் நவவர்ணப்பட்டாடைகள் முதலான சுகந்த களப கஸ்தூரிகளும், மற்று மதுரசபலாதி வித்து, காய், பூ, இலை, கொடி, கட்டை, கிழங்குகளுடனே நவரசமாகிய இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, சமைத்த வஸ்துக்களும், பின்னும் பலபல சரக்குகளைத் தருகிற வைசியர்கள் பரவிய மாடவீதிகளும் செல்வம்பொருந்திய மேழிக்கொடிகள் கட்டி பூலோகத்திலே முப்பத்திரண்டு தருமங்களுஞ் செய்கின்ற ஆயர்த்த புஷ்கலாதி மேகங்களுக்கு பிணை சொல்லிய கங்கைக் குலத்தோர்களின் மாடவீதிகளும். எ - று. (௬௩)

ஐவகைப் பொன்களாயு மார்பபுகொண் மயன்றன்வீதி
பைவனம் பட்டோடாடை பதுவுசெய் மோகாவீதி
மைவிழி யிளைசயேழோதை வார்மிகு மாடவீதி
கைவலி யுடையவீரா கமபலை கொள்ளுமவீதி.

இ - ள். ஐவகைப் பொன்களாகிய இரும்பு, ஈயம், தாமிரம், வெள்ளி, தங்கம் இவைகளினாலே பலவித உருக்கள் செய்யும் ஓசைகளுடனே

இருக்கின்ற தச்சர்களின் வீதிகளும் பசுமைபொருந்திய வர்ணங்களினாலே பட்டாடைகளிற் சித்திரங்கள் எழுதுகிறவர்களின் வீதிகளும், மைவிழியாராகிய மாதர்கள் பரதநாட்டியச் சத்த சுரங்களின் இசையோடு இசைக்கின்ற விலைமாதர்களின் உயர்ந்த நீண்ட மாடவீதிகளும் புஜபலம்பொருந்திய வீர சேவகர்கள் மல்பொருதும் ஓசைகளொழும்பிய வீதிகளும். எ - று. (கச)

உருவிலா தவர்கள்வேட்குக் குறைந்தன ரில்லையியார்
தருவவர்க் குயர்ந்ததில்லை தரித்திரர்க்குத் தனமென்வில்லை
தெருளிலார்க் கிணையிலாதி சேடனே தவறுநெஞ்சர்க்
கருளரிச் சந்திரனில்லை யவனியில் லவர்சமைக்கே.

இ - ள். அப்படியிருக்கின்ற பட்டணத்துச் சனங்களின் பெருமையெப்படியென்னில்? அழகிலாதவர்கள் மன்மத வடிவுக்குக் குறைந்தவர்களில்லை. லோபிகள் பொன்னுட்டுக் கற்பகத்தருவுக்குத் தாழ்ந்தவர்களில்லை. தரித்திரர்கள் நவநிதியுடைய குபேரனுக்குக் குறைந்தவர்களில்லை. தேர்வு தெளிவிலாதவர்கள் ஆதிசேடனுக்குத் தாழ்ந்தோரில்லை. பின்னும் பொய்யிலாதவர்களுக்கு அரிச்சந்திர னிணையில்லை. பொறுமையுடையவர்களுக்கு பூமிதேவி இணையில்லை. எ - று. (கரு)

காரண மின்றிச்சீறிக் கவுதைபோர் செய்யுமோதை
வாரணஞ் சினைத்துச்செய் செம்மறியன லெழவேதாக்கும்
வீரமைக் கரிகள்தந்தம் விழுந்திடப் பொருதுந்திண்மா
வாரவங் கொண்டுதாண்டு மமலையை யழுத்துமொன்றே.

இ - ள். பின்னும் அந்தப் பட்டணத்தில் எப்படியென்னில்? யாதொரு காரணங்களும் இல்லாமல் சிறிக்கொண்டு ஒன்றோடொன்று காட கவுதாரிகள் சண்டைசெய்கிற இரைச்சல்களும், கோழிகள் கோபித்துக் கொத்திய இரைச்சல்களும், செம்மறிக் கடாக்கள் நெருப்பெழ முட்டிச் சண்டைசெய்கிற இரைச்சல்களும், பலம் பொருந்திய தந்தக்கையுடைய யானைக் கூட்டங்கள் தந்தங்களொடிந்து விழுந்திடப் போர்செய் இரைச்சல்களும், திடம்பொருந்திய அதிக வேகத்தோடு எழும்பி வட்டஞ்செய்கிற குதிரைகளின் இரைச்சல்களும், இவ்விரைச்சல்கள் ஒன்றையொன்றமுத்தும் வீதிகளில். எ - று. (கசு)

மாதவ வசிஷ்டனாகிட்ட மலர்முகம் புவிமடந்தைக்
காதவ னுதலின்மைப்பொட் டாகுமந்நகர் சிதம்போலச்
சீதவெண் பிறையோர்க்கில்லந் திருவுக்கு மாலின்மார்பே
வேதமிற் றனனுக்கென்ப திருநிதி மறைக்குச்சோதி.

இ - ள். பின்னும் எப்படியென்னில்? மகா தபசுபெற்ற வசிஷ்டமாமுனியுடைய நாடுதானே பூமிதேவிக்குத் தாமரைமலர் முகம்போலவும்

அந்த மலரின் மீதிலே வண்டு மொய்த்ததுபோல் அந்தப் பட்டணமே பிரகாசம் பொருந்திய நுதலின்மேல் திலகம் வைத்ததுபோலவும், குளிர்ச்சிபொருந்திய வெண்பிறையைச் சடாபாரத்திலே தரிக்கின்ற பரமசிவனுக்கு அந்தப் பட்டணமே கைலாசமாகும். பின்னும் மகாலக்ஷுமிக்கு மகாவிஷ்ணுவுடைய மார்பாகவும், அதுவுமல்லாமல் தாழ்வில்லாத குபேரனுக்கு நவநிதி சேமமாகவும் உரைக்கின்ற வேதங்களுக்கு வேதாந்த சோதியாகவும் உள்ளது அந்தப் பட்டணம். எ - று. (கஎ)

நகரச் சிறப்பு முற்றிற்று.

---

# தலமுரைத்த சருக்கம்.

ஆதவன் புங்கவன்ரோமசனத் திரிபிருகு கார்க்கியன்
வேதவ்யாச னொடுசுகன் றாலப்பியன் கோதமன்விசுவ
நாதனொடு தமிழ்ப்பொதியன் புலத்தியனா ரதன்கசிபன்
சூதமுனியொடு கங்கைத் தடத்து முனிபலர்சூழ்ந்த.

இ - ள். தவரிஷிகளாகிய ஆதவன், புங்கவன், ரோமசன், அத்திரி, பிருகு, கார்க்கியன், வேதவியாசன், சுகன், தாலப்பியன், கௌதமன், விசுவம்பரன், நாதன், தமிழ் மலையனாகிய அகத்தியன், புலத்தியன், நாரதன், காசிபன், இவர் சமானமுனியுஞ் சூதனும் இந்தத் தவரிஷிகளுடனே கங்காதீரத்தில் வாசஞ்செய்கின்ற ரிஷிகளும், பின்னும் அநேக மகாரிஷிகளும் சூழ்ந்தார்கள். எ - று. (க)

மதுக்கனியுஞ் சுவைக்கிழங்கு மலிநைமி சாரணியர்
பதித்தலைச் சூதனைநோக்கி யிறைவிமண மண்டபத்திற்
றுதித்தசிவத் தலமெண்ணேழ் துய்யகங்கை யமுனைநெடு
வறுத்திணைத்தென் யமுனைகங்கை யத்தலங்க ளருளுமென்றார்.

இ - ள். அப்படிச் சூழ்ந்த மகாரிஷிகளெல்லாம், மதுரசங்களோடும் இருக்கின்ற கனிவகைகளும், அறுசுவையுடனேயு மிருக்கின்ற கிழங்கு வகைகளும், மிகுதியாகிய நைமிசாரணியத்து ரிஷிகளுடனே இருக்கும் போது ரிஷிகளுக்கெல்லாந் தலைமையாகிய சூதமாமுனியைப் பார்த்து உமையவள் கலியாணமண்டபத்திலே நடந்த வரலாறுகளான சத்தமாகிய, கங்காநதிதீரத்துக்கும் யமுனாநதிதீரத்துக்கும் இருபக்கங்களிலேயும் விளங்குகின்ற ஐம்பத்தாறு சிவத்தலத்துக்குச் சமானமாகிய தீர்த்தத் தலங்களான தென்யமுனை, தென்கங்கை அதின் தலங்களையும் அருளிச்செய்யவேணுமென்றார் நைமிசாரணியத்து ரிஷிகள். எ - று. (உ)

என்றவர்க்கு முனிபுங்கவ னுரைப்ப தென்யமுனை வெள்ளாறே
பன்றதென் மந்தாகினியும் பரவுமணி முத்தாறே

கொன்றைமலர் முடியான்றன் குரைகழலைப் போற்றிசெய்யத்
தொன்றிருபாற் றலங்கள்பல சுருதிமொழி யெண்ணேழே.

இ - ள். அப்படிக் கேட்ட நைமிசாரணியத்து ரிஷிகளுக்குச் சொல்கிறது எப்படியென்னில்? தென்யமுனைநதி வெள்ளாறென்றும், தென்கங்காநதி மணிமுத்தாறென்றும், அந்த நதியின் இருபக்கங்களிலே கொன்றைமலரைச் சடையிலே தரிக்கின்ற பரமசிவனுடைய ஒலிக்கின்ற கழலணிந்த பாதாரவிந்தங்களைப் பூசிக்கும்படி அநேக தலங்களுண்டு. அவைகளிலே வேதவாக்கியங்களினாலே சொல்லப்பட்ட மேன்மையாகிய சிவஸ்தலங்கள் ஐம்பத்தாறு இருக்கின்றதென்று சொன்னார் சூதமாமுனி. எ - று. (௩)

சொல்லிய சூதமாமுனியைத் துறவரெலாந் தொழுதேத்தி
தொல்லைபெருந் தலங்களையுஞ் சொற்றல மேன்மைகளும்
வல்லிமணா மண்டபத்தி லறைந்திடு மாண்பதனைச்
சொல்லவென சூதமுனி சுருதியுறைத் துரைப்பான்.

இ - ள். அப்படிச் சொல்லிய சூதமாமுனியை மற்ற ரிஷிகளெல்லாம் வணங்கி உமையவளுடைய கலியாண மண்டபத்திலேயறிந்த பழமையாய முக்கியமாகிய ஐம்பத்தாறு தலங்களின் பெயர்களையும், அதின் பெருமைகளையும் அருளிச்செய்யவேண்டுமென்றார். அதற்கு வேதவாக்கியங்களினாலே சொல்லத் தொடங்கினார் சூதமாமுனி. எ - று. (௪)

திருச்சைலங் காலகண்டஞ் சேஷகிரி கிசடசௌ
பிருக்கார் மழுகாசலங்கேள் கௌமம பூதரமு
மருட்க்ஷேத்திரஞ் சலற்கிரி நாதேயம் வல்லிரசமுந்
தருக்காவு மேன்கிரி தண்டுல பூதரத்தொடும்.

இ - ள். அப்படிச் சொல்கின்ற சிவத்தலங்களின் பெயர்கள் எப்படியென்னில்? திருச்சைலம், காலகண்டம், சேஷகிரி, கிசடசௌபிருதுவில்லைப்போன்ற கர்மமுகாசலம், கௌமமூங்கில் சூழ்ந்த வேணுமலை, அருட்க்ஷேத்திரம் அசைகின்ற சலற்கிரிநாதேயம், பர்வதிரசம், தாருகாவனம், வராகபருவதம், நதிமலை, இத்துடனே பின்னுஞ் சொல்வான் சூதமுனி. எ - று. (௫)

முதல்வருரு வாமரசு வனத்தொடு கிருணிச்சைலந்
கதம்பவனம வேத்திரவனங் கதலிவனந் திருச்சைலம்
பதந்தரும் பிருந்தாவன நீபாரணிய மொடுபர
மதவம்பர ஞாரணிய மதுவனமூள் வனத்தொடும்.

இ - ள். மும்மூர்த்திகளி னுருவமாகிய அரசுவனம், கிருணிபருவதம், கதம்பவனம், வேத்திரவனம், வாழைவனம், திருச்சைலம், சுத்தமாகிய துளசிவனம், நீபாரணியம், பரமஸ்தவம், கிளை, இலைகளோடிருக்கின்ற பர்ணாரணியம், மதுவனம். முள்ளுச்சூழ்ந்தவனம், இத்துடனே பின்னுஞ் சொல்வாம். எ - று. (௬)

மூண்டகத் திலேச்சுரத் திரியம்பகங் கல்யாண
மண்டர்தொழு மிரணிய க்ஷேத்திரத்தா டாரிவனமுக்
தொண்டர்பெறும் வாலவல்லபம் மதுசோஷ ணகத்தோ
டுண்டகடுக் கண்டனுறைந் திடபிரமந் தவவனமும்,

இ - ள். கமலபுரம், திலேச்சுரம், திரியம்பகம், கலியாணசுரம், தேவர்கள் பூசிக்கின்ற இரணிய க்ஷேத்திரம், ஆரணிவனம், அடியார்கள் முத்திபெற்ற வாலவல்லபம், தேன் ஊறிவருகிற மதுசோஷணகம், நீலகண்டம், வேம்புவனம் இத்துடனே பின்னுஞ் சொல்வான். எ - று. (எ)

பவமறுக்கும் பல்வருவி பரவுஞ்சுரனை வனதக்குந்
தவம்பலிக்கும் வாலீசன் றியாகவல்லி நல்லூரு
மூவணைபுனை விருத்தகிரி விடத்துறையு மெனைநியூரும்
நவசைட்டம் வேதாக்கிய நகருமும் ரீக்கும்பதியும்.

இ - ள். கொடிதாகிய பாவங்களை யறுத்திடும்படி அருவிகள் பெருகுகின்ற வாரீசசிர்வற்கம், கலிசாத்திரவம், ரிகஷாத்துமச் ஆத்திரவம், தவஞ் சித்திக்கின்ற வாலீச்சரம், தியாகவல்லி, நல்லூர் தேவலோகத்துக் கிணையாகிய விருத்தகிரி, திருவிடத்துறை, எனைநியூர்; விசித்திராலங்காரமாகிய சைஷ்டம வேதாக்கியநகர் பிராயங் காத்த பெண்ணுகடம் இந்தத் தலங்களுடனே பின்னுஞ் சொல்லுவான். எ - று. (அ)

ஐயெழுத்துப் பெறும்வசிஷ்டாத் துவாபாண்ட வாத்துவாமும்
பையரவந் தொழுஞ் சிதம்பரபுரி புன்னைக்காவு
மையுறையு மெயில்சூழ் வெள்ளெருக்கத் தம்புலியூருங்
மையமறும் பருத்திவனம் புல்வனமும் மங்களமே.

இ - ள். பஞ்சாக்ஷர மந்திரவுபதேசம்பெற்ற வாசிஷ்டபுரி, பாண்டவர்கள் வாசம் செய்கின்ற திருச்சேற்றுறையும், பதஞ்சலி வியாக்கிர பாதர் பூசிக்கின்ற சிதம்பரபுரி, புன்னைவனம், மேகங்கள் சூழ்கிருக்கின்ற உயர்ந்த மதில்களோடுங்கூடிய வெள்ளெருக்கத்தம்புலியூரும், காலனுடைய பயத்தை யொதுக்கின்ற பருத்திக்காடும், புல்வனம் மகா மங்கலபுரம் இப்படிக்காகிய தலங்கள். எ - று. (௯)

அத்தலமெ லாம்முத்தி வனுத்தனக்கோர் படியாகு
மத்தனுக்கே யுவந்ததனை யாமவ்வோர் காரணமே
பத்தபரா தீனமதே பகர்மறையின் சுடர்க்கொழுந்தாம்
பத்ததனின் மேன்றலங்கள் பகர்ந்திட்டார் வுன்னிகுண்டர்.

இ - ள். இப்படி வந்த ஐம்பத்தாறு தலங்களு முத்திவீடாகிய உயர்ந்தமலையி னுச்சிக்குப் படிகளாகும். அதல்லாமலும் பரமசிவனுக்கு ஒவ்வொரு காரணங்களினாலே தமையுடனே இருக்கின்ற முக்கிய ஸ்தலங்களாகும். பின்னும் பக்த பராதீனமாகிய அடியார்களுக்குச்

சொல்லப்பட்ட வேதாந்த சோதிசொருபமாகும். அப்படியிருக்கின்ற தலங்களிலே விசேஷமாயிருக்கின்ற தலங்கள் பத்து தலமுண்டென்றார் சூதமுனி. எ - று. (கப)

காசியென்னு முதுகுன்றம் நல்லூர் வியாக்கிரபுரியு
மாசிலாச் சிபபுரமும் வாலீச மெறையூருஞ்
தேசுதிரு வறத்துறை சுவேதார்க்கம் புன்னைவனம்
பாசுதோ ளசனவல்லி பதியுமிவை பெரிதாமே

இ - ள். அப்படிச்சொன்ன பத்து ஸ்தலங்களாகிய காசி என்னும் விருத்தாசலம், திருநல்லூர், சிவசிதம்பரம், குற்றமில்லாத வாச்சியபுரம், வாலீசுரம், எறையூர், பிரகாசம்பொருந்திய திருவறத்துறை, வெள்ளெருக்க வனமாகிய ராஜேந்திரபட்டணம், புன்னைவனம், பச்சை மூங்கிலையொத்த தோளுடைய அசனாம்பிகையுடைய பதியும், விசேஷ ஸ்தலங்களென்று பின்னும் சொல்லுவார் சூதமுனி. எ - று. (கச)

அதிலுமைந்து முகனார்க் கதுவலது வைந்தே
பதிமக தன்னார்த்த வல்லபந் தீர்த்தபுரமு
மதிதரிக்கும் பழமலைபுஞ் சிதம்பரமும் வசிஷ்ட
பதிதலந்தோ டிதின்மூன்று வசிஷ்டமுது வானும்.

இ - ள். இந்தப் பத்து ஸ்தலங்களிலேயும் ஐந்துமுகமுடைய பரம சிவனுக்கு மிகவும் விசேஷமாகிய தலங்கள் ஐந்துண்டு. அதேதென்னில்? பெண்ணாகடம், திருவறத்துறை, சந்திரனை சடையிலே தரித்திருக்கின்ற விருத்தகிரி, சிவசிதம்பரம், வசிஷ்டபுரம், இப்படியாகிய ஐந்து தலத்திலும் மிகவும் முக்கிய தலங்களானது விருத்தாசலம், சிதம்பரபுரி, வசிஷ்டபுரி மூன்றுமென்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (கஉ)

பின்னுமதுட் புலிக்கயிலைப் பேரொளியம் பலமரு
மன்னதுவும் பிஷற்பதிபு மப்பதிக்கெலாம்பெரிதே
சொன்னவதுட் கரிமுகனுஞ் சூர்குல மறுத்தோனும்
பன்னகத்திற் படுத்தோனும் பயிரவியு மிருப்பதனால்.

இ - ள். அப்படி மூன்று தலம் பெரிதென்று சொன்னதிலும் பூலோக கைலையாகிய சோதிப்பிரகாசமாகிய சிதம்பரபுரியும், அதற்குச் சமானமாகிய வசித்தியாத ஸ்தலமும், மற்ற ஸ்தலங்களுக்கெல்லாம் பெரிதாகும். அதெப்படியென்னில்? அந்த ஸ்தலத்திலே விக்கினேசுவர ஸ்தலமும், அசுரரை ஜெயித்த சுப்பிரமணிய ஸ்தலமும், பன்னகமாகிய ஆதிசேஷன் மீதிலே சயனித்திருக்கின்ற மகாவிஷ்ணு ஸ்தலமும், பயிரவியாகிய துர்க்கையம்மன் ஸ்தலமும், காளியின் ஸ்தலமும், வேதப் பிரமண் ரிஷிகள் வாசமாகிய பிரமஸ்தலமும் இருப்பதனால். எ - று. ()

என்னுயிர்க்கு முயிரீச னிருந்திடுமத் தலந்தனையே
மன்னுயிர்க ளினைக்கினுமற் றடிக்கினு நோக்கினுமே

அவ்வுபுரை பவக்கடனீந் தெறியவர் நலமாகி
சுவ்வுபத மடைவரெனச் சுடர்சுரு தியுநவிலும்.

இ - ள். இந்த ஸ்தலங்களுடனே எவ்வுயிர்க்குமுயிராய் விளங்குகின்ற பரமசிவன் தலமும் இருப்பதனால் அந்த ஸ்தலத்தஃது அவ்வுயிர்களான நடப்பன, தவழ்வன, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பனவாகிய சீவசெந்துக்களிலே யாதாவது அறிவுடையவதாகி வந்து வாசமானாலும் பூசித்தாலும் நினைத்தாலும் பவமாகிய பிறவிக்கடலை நீந்துவதற்கு ஒரு கப்பலேறிக் கடந்ததுபோலக் கரையேறி அப்ரகாசமாகிய சுவர்க்க லோகத்தை அடைபுமென்று தேவர்களினாலும் நான்மறைகளாலுஞ் சொல்லியதென்றார். எ - று. (கஎ)

பவமறுக்கு மப்பதிபொற் பதியிலொரு மூன்றுலகிற்
றவம்பெருகுங் காமைமருந் தத்துசிமெய்ந் ஞானவொளிந்
துவமுனாருங் கங்கைநீரின்பாற் றுய்யசிவன்மேனுழ் தீரத்தே
ருவணமென வதின்மாண்மையுரைத்திடுவர் போற்றிடுவர்.

இ - ள். அதல்லாமலுங் கொடிதாகிய பாவங்களை யறுத்திடுவதற்கு அந்த ஸ்தலத்தைப்போல் வேறு தலங்கள் சுவர்க்க மத்திய பாதாளமென்னும் இந்த மூன்று லோகத்திலுமில்லை. பின்னுந் தெய்வரிஷிகளுக்கெல்லாந் தவமேன்மையாகிய வசிஷ்டமுனிக்கு தவசித்தியாகியதுபோல மற்ற அறிவுடையவர்களுக்கெல்லாந் தவம் பெருகுவதற்கு வேறு தலமுமில்லை. அதல்லாமலும், விஷய இந்திரியாதி கருவி கரணங்களைமாற்றி தத்துவப் பிரகாச ஞானங்களை அசையா நிலைநிறுத்தும். இப்படிக்காகிய தலமென்று கங்காதீரத்திலே வாசமாகிய அனேக ரிஷிகளும், அதின் பக்கத்திலே இருக்கின்ற ஐம்பத்தாறு ஸ்தலத்தோர்களும் பெரிது பெரிதென்று வசிஷ்டபுரி தலத்தை உரைத்திடுவதும் போற்றிடுவதுமென்றார் சூதமுனி. எ - று. (கஅ)

துய்யபல சிவதலத்திற் சொல்லியவென் மேனுழ்தலங்க
ளைய்யமற வதிற்பத்தே வதிற்பெரிதா மொருமூன்றட்
பைய்யரவுப் பணியோன்றன் பதியிரண்டே யதிற்பெரிது
மெய்யமற வரன்மொழியா லறுமுகன்சோன் மாற்றினான்

இ - ள். அப்படி கங்காதீரத்திற் சொல்லிய ஐம்பத்தாறு சிவதலங்களுக்குச் சரியாகிய தட்சிண கங்கா யமுனாதீரத்திலும் இருக்கின்ற சிவதலங்கள் ஐம்பத்தாறு சொல்லியதில் விசேஷமாகிய ஸ்தலங்கள் பத்தாகும். அதிலும் விசேஷமாகிய தலம் ஐந்துண்டு. அதிலும் மிக விசேஷம் மூன்று. அதிலும் மிகப்பெரிதாகிய ஸ்தலம் இரண்டு. இப்படிச் சொல்லிய ஸ்தலத்தை முக்கியமாய் அறியவேண்டி பரமசிவன் ஆக்கினையினாலே சுப்ரமணியசுவாமி இத்தலங்கள் முதலான மற்றெல்லாம் தராசிலே வைத்து நிறுக்கலானார். எ - று. (ககூ)

வேறு.

காசினு மந்தர கைலா சத்தொடு கனகக் கிரிபுரைப்
பேசில் லேமுழ் திடமதில் ரெட்டிட மதையொன் றென்றுய்
பாசிமை மைந்தன் றாக்கிய தீனப்பன் முனிகுழுவு தன்னில்
மாசின் மறையுழல் வந்திடு முனிபதி வளமை யுரைத்தனுல்.

இ - ள். அப்படி சிறக்கத் தொடங்கிய தெப்படியென்னில்? காசிபுரி, கைலாசகிரி, சுவர்ணமயமாகிய மகாமேருகிரி, மந்தரகிரி இந்த நான்கு ஸ்தலங்களுக்குஞ் சமானமாகிய பெருமை பெற்ற சிவத்தலங்கள் முப்பத்தைந்து. இந்த முப்பத்தைந்திலும் மகிமைபெற்ற ஸ்தலங்கள் பதினுறு இப்படியிருக்கின்ற ஸ்தலங்கள் முதலான பூலோகத்து மற்ற தலங்களெல்லாம் எடுத்து ஒவ்வொரு தலமாக உமையவள் பெற்ற பாலனுகிய சுப்பிரமணியசுவாமி தாரசிலே தூக்கியதை பல முனிதன் சூழ்ந்த சபையிலே சுத்தமாகிய வேள்வியக்கினி குண்டத்திலே உதித்தெழும் பியகுதமமுனி தலங்களின் வளமை உரைக்கின்றுர். எ - று. (கஎ)

கனகவரை மந்தரமு மிமவானுங் கயிலேயுமோ
டனலருணே காளத்தி யானேக்கா வாரூரும்
புனல்பெருகுங் கங்கைநகர் புண்ணியபுரி சவவரைதேன்
வனம்வைத்திய நாதநல்லூர் வாலீச னுநகாற்ருன்.

இ - ள். மகமேருகிரி, மந்தரகிரி, இமவகிரி, கைலாசகிரி, அக்னிமயமாகிய அருணகிரி, திருக்காளத்தி, திருவானேக்கா, திருவாரூர் மிகுந்தவெள்ளம் பெருகுகின்ற கங்காநதி தீரமாகிய காசிபுரி, புண்ணிய நகரம் பிரேதபருவதம், மதுவனம், ஸ்ரீவைத்தியநாத திருநல்லூர், வாலீசுவரம், பெண்ணுகடம், இந்த ஸ்தலங்களுடனே பின்னும். எ - று. (கஅ)

முத்தி யருளேயா றுந் தியாகவல்லி முதுகுன்றமு
பத்திதனஞ் செய்நகரும் பாற்குன்று கேதாரஞ்சண்டி
சித்திதிரு வறத்துறையுந் திருக்கோடிகந் திருக்குடந்தை
யுத்திசுப்ர மணியமோ டம்பக மம்பரமே.

இ - ள். முத்தி கொடுக்கின்ற திருவையாறு, தியாகவல்லி, பழமையாகிய நஞ்சுண்டபுரம், தனஞ்செய்நகர், பால்குன்றம், திருக்கேதாரம், சண்டிசாலே, தானம், சருவசித்தியாகிய திருவறத்துறை, திருக்கோடிகம், கும்பகோணம், பொறியொடுங் கூடிய படத்தையுடைய சுப்பிரமணியம் திருவம்பகம், சிதம்பரபுரி, இந்தத் தலங்களுடனே பின்னும். எ - று. (கக)

பூதலங்க ளிகரில்லாப் பிரயாகை பொன்வனமு
மாதவன் பூசித்த ராமீச்சுரவா மல்லூரு
நாதபுரஞ்ச வ்ரபின்னற் பதியெலா மிறுத்த
போதுவைகற்பத் திற்பொருந்த வெள்ளிவரை யாவும்.

இ - ள். பூலோகத்திலே இருக்கின்ற தலங்கள் சரியில்லாத பிரயாகை, சுவர்ணாரணியம், மகாவிஷ்ணு பூசித்த இராமேச்சுரம், வாமனாச்சிரமம், வசிஷ்டபுரம், இந்த ஸ்தலங்களெல்லாம் சிறந்தபோது அந்தத்திலே சமானமாயிருந்த ஸ்தலமாகிய கைலாசகிரியும், வசிஷ்டபுரியும். எ - று. (உ0)

ஆனபதிக்கே யிணைபதி வெள்ளாற்றினுக்கே யிணைநதியுங்
கானபுலிக்கே வேங்கைக்கிணை வனம் பூங்கயஞ்சந்திக் கிணை தீர்த்தம்
நான்முகன் றந்தவனருந்ததிக் கிணை தவப்பெண் ஞானமுனிச்சங்
கோன்பதமே யருள்ஞானங் கொடுக்குமிடம் வேறுண்டோ.

இ - ள். அப்படி கைலாசகிரிக்கு சமானமாக இருக்கின்ற காமதேனுவாசமாகிய வசிஷ்டபுரியென்னுந் தலத்துக்குச் சமானமான தலங்களுந் தூய்மையாகிய சுவேத நதிக்கு சமானமாகிய நதிகளும், வனங்களுக்கெல்லாம் மேன்மையாகிய வேங்கை வனத்துக்கிணையான வனங்களும், புஷ்பங்கள் நெருங்கிய முத்திதீர்த்தத்துக் கிணையான தீர்த்தங்களும், பிரமதேவன் மைந்தனாகிய வசிஷ்டமுனிக் கிணையாகிய ரிஷிகளும், அருந்ததிக்கிணையான கற்புடைய பெண்களும், பின்னும் அந்த ஸ்தலத்தைப்போல சித்திக்கின்ற தருமார்த்த காமிய மோக்ஷ போக்கியாதிகளுங் கொடுக்கிறதற்கு வேறு தலங்களுண்டோ? எ - று. (உக)

இருந்தவ முனிவரெல்லா மிவ்வாறு கேட்டிறைஞ்சி
பெருந்பதியன் றுரைத்தோரும் பெற்றோருங் கேட்டோரும்
வருமபதியின் மாண்பருளி வைம்புலனுமற்றுமென்
சுருதியழற் றனிலுதித்த சூதமுனி யறைகுவனால்.

இ - ள். அப்படி சொல்லக்கேட்ட ரிஷிகளெல்லாம் பணிந்து அந்த வசிஷ்டபுரியென்னுந் தலத்தைப் பெரிதென்றுரைத்தோரையும், கேட்டோரையும், அதிலே பேறுபெற்றோரையும், அந்த ஸ்தலவரலாறு அதின் பெருமைகளை அருளிச்செய்து ஐம்புலனாகிய தீவினைத் தொழில்களை மாற்றி ஞானப்பிரகாசங் கொடுக்கச் செய்யவேண்டுமென்று அந்த ரிஷிகளுக்கு அக்கினி குண்டத்திலே பிரசன்னமாய் எழுந்தருளிய சூதமுனி பின்னுஞ் சொல்லுவார். எ - று. (உஉ)

கனகமய சுபுரமெனுங் கயிலையின்பாற் பொன்னெயில்சூழ்ந்
தனகமணி மேடைகளு சேண்டால் பாடமலி
புனகசெண் பகம்பகுள பூம்பொழில் வாவிகளமைந்த
வனகனறு முகவனவ வணியரங்குள் விரகமுற்றுன்.

இ - ள். பிரகாசம்பொருந்தி சுவர்ணமயமாய் விளங்குகின்ற சுபுரமென்னுங் கைலாசகிரிக்குப் பக்கத்திலே சுவர்ணமதில்களுஞ் சூழ்ந்திட சுத்தமான நவரத்ன மேடைகளும், உயர்ந்தெழும்பிய அட்டாலங்களும், மாடிகளும், அதிலே நெருங்கியிருக்கின்ற புன்னாகம், செண்பகம், பகுள புஷ்ப வனங்களும், ஏல லவங்க சாரத்தோடிக்கூடிய வாவிகளும்

அமைந்திருக்கின்ற பட்டணமென்று லோகத்திலே அனகனென்னுங் கடவுளாகிய ஆறுமுகமுடைய சுப்பிரமணிய சுவாமியானவர் நாதனங்க ளாய் விசித்திரங்கள் செய்திருக்கின்ற அலங்கார பள்ளியறையிலே அதிக ரூபசௌந்தராய் விரகதாபத்துடன் இருக்கின்றார். எ - று. (உக)

சிலைபுருவக் கூர்விழியுஞ் செவ்விதழும் நெடுங்கழுத்தும்
மலைநிகரெனவுயர் தனமும் மழலையின்சொற்பிடிகரங்கார்
கலைமதியின் மலர்முகமுங் கரித்துதிக்கைப் புரைக்காறி
வல்லகுறிக்குந் தடமுடையான் வல்லியின் மஞ்சமுற்றான்.

இ - ள். அப்படியிருக்கின்றவேளையிலே மன்மதனுடைய வில்லைப் போல புருவமும், கூர்மைபொருந்திய வேல்போன்ற நேத்திரமும், முருக்கம்பூ நிறமாகிய சிவந்த உதடுகளும், நீண்ட கழுத்தும், மந்தரகிரி மகமேருகிரிபோல உயர்ந்தெழும்பி பொற்பிரகாசம்போன்ற இரண்டு ஸ்தனபாரங்களும், மழலைச்சொற்பேசி இருளிகளைப் பிடித்திருக்கின்ற இன்பமாகிய கைகளுஞ் சரற்காலத்துப் பூரணச் சந்திரனைப்போல பிர காசம்பொருந்திய அலர்ந்த செந்தாமரை முகமும் கரியாகிய யானையின் துதிக்கையைப்போலக் கால்களும், நிலையாகிய மதன சலத்துளிகள் குதித்திடுகின்ற விசாலம்பொருந்திய அல்குலும், இவைகளையுடைய வள்ளி, தெய்வானையென்னும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி எழுந் தருளியிருக்கின்ற மஞ்சத்தின் அன்னத்தூவிமேலே கூடியிருந்தார்கள். எ - று. (உச)

பரிமளமுந் திமிர்ந்துநறு பாக்கிலையின் சுருளீந்து
புரியொடுகி மெய்தீண்டுநகை எடினரும் சிங்கனமும்
புரியவவ ளொடுவேளும் பூமுலையைச் சேர்ந்தின்புற்
றரியவதை யாற்றும்வ டனைநோக்கி யன்புற்றார்.

இ - ள். அப்படியிருக்கும்போது சந்தனம், பரிமளம், புனுகு, தைலம், பன்னீர், புஷ்பங்களாலே பூசி அலங்கரித்து வாசனைபொருந்திய ஏலம், லவங்கக்காய், பத்திரிகள், பாக்கு, வெற்றிலைகளின் சுருள்களி லீந்து அன்பு மோகத்துடனே மதன லீலைகளாகிய நகக்குறி, தந்தக் குறி, தாடனம், சும்பனம், ஆலிங்கனம், அங்கீகரணங்களுஞ் செய்யத் தொடங்கிய பூமுலையாகிய வள்ளியுடனே மன்மத வடிவாகிய சுப்பிர மணிய சுவாமியும் இன்பமுற்று இளைப்பாகியபோது இளைப்பாற்றி உப சாரஞ்செய்ய, மவளைப்பார்த்து அன்புடனே நோக்கினார் சுப்பிரமணிய சுவாமி. எ - று. (உரு)

மோகமதற் கருமருந்தை மொய்குழலே நின்வேட்கம்
போகவிவை யெட்டெட்டுப் புணர்ச்சியெல்லாம் புரிந்திடுகின்
ரூகமுரைத் திடுவையெனச் சாற்றவள்ளி மனமகிழ்ந்து
லோகத்துரு நாதனையென் னுளம்விளங்க வென்றுரைப்பாள்.

இ - ள். அப்படி நோக்கிய சுப்பிரமணியர் மோகமாகிய காம நோய்க்கு அரிதாகிய மருந்தே! வண்டுகள் மொய்த்திருக்கின்ற வாசனையுடைய கூந்தல்போன்றவளே! உன்னுடைய வட்டமெலாம் விலக்கி அறுபத்துநான்கு லீலைகளினாலே புணர்ச்சி செய்யும்படிக்கான உன்னுடைய தாகமாகிய ஆசைகளைச் சொல்லென் றாத்துக் கேட்டு சகல லோகத்துக்குங் குருநாதனே! என்னுடைய அஞ்ஞானம் போக்கி விளக்கி வைக்கவேண்டுமென்று சொல்லத் தொடங்கினாள் வள்ளியம்மை. எ - று. (உசா)

ஐங்கணையான் புரைவடிவே யானைதிரு வடியகமுந்
திங்களணிச் சடையோனுஞ் சிறந்தவுமை துர்க்கையுடன்
ஐங்கரனு மடியாரு மனையகண நாதர்களும்
பங்கயன் நதிநெடுமால் பத்திரையிருக்கு மென்கின்றாள்.

இ - ள். ஐங்கணையாகிய பஞ்சபாணங்களைத் தொடுக்கின்ற மன்மதனைப்போலிருக்கும் உம்முடைய திருவடி ஆலயமும், சந்திரனைச் சடாபாரத்திலே தரிக்கின்ற பரமசிவாலயமும், மகிமை பொருந்திய உமையவளுடைய ஆலயமும், துர்க்கையுடைய ஆலயமும், மகா கணபதியுடைய தலமும், அடியார்கள், கணநாதர்கள், சித்தவித்தியாதரர்கள், தவரிஷிகள், பங்கயனாகிய பிரமதேவனும், நதியும் நெடிதாகிய மகாவிஷ்ணு ஆலயமும், பத்திரகாளியும், பின்னும் விசேஷமாகிய புண்ணிய தீர்த்தங்களுமிருக்கும் ஸ்தலம் அடியேனுக்கு அருள்செய்யவேண்டுமென்றாள் வள்ளியம்மை. எ - று. (உஎ)

என்றவள் விண்டபோதங் கிருந்தவே ளிசியிற்பெற்று
பன்றவப பதியின்மாண்பு பதறியே சுத்தஞ்செய்து
மன்றுளாடுவன் றனக்கமாலை தரித்துநேசப்பு
மன்றுபோன் முனியுஞ்சுத்த னையவர்க் குரைக்கலுற்றார்.

இ - ள். அப்படி சொல்லக்கேட்ட சுப்பிரமணிய சுவாமியும் அந்த அர்த்தராத்திரி வேளையிலே சரீரசுத்தி செய்து தருப்பாசனத்திலேயிருந்துகொண்டு மன்றுளாகிய கனகசபையிலே நிர்த்தனம் செய்கின்ற பரமசிவனுடைய முத்திரையாகிய விபூதி ருத்திராக்கமுந் தரித்து பழமையாய் மேன்மை பெற்றிருக்கின்ற ஸ்தலமாகிய வசிஷ்டபுரி ஸ்தலத்தினுடைய பெருமைகளையுஞ் சொல்லி அதினுடைய திருமந்திரமும் உபதேசஞ் செய்யலானாரென்று சொல்கின்ற சூதமுனியுஞ் சரீர சுத்தஞ் செய்து இயமநியமத்துடனே நைமிசாரணியத்து ரிஷிக்குச் சொல்லத் தொடங்கினார். எ - று. (உஅ)

ஈசனுக்கினை யான்மின்கோ லெடுத்தடியவன் றலத்தின்மாண்பு
தேசவெண் கைலையாளி சிருஷ்டிமைந் தனுக்கிரகோப
தேசிக்க வன்வாணுவென் சித்திரற் றவமும்பெற்ற
மாசின்மந்திர மோதியாசம் வழுத்தினர் சுரபியென்றே.

இ - ள். அப்படி சொல்கின்றதெப்படியென்னில்? பரமசிவன் ஆக்கினையினாலே சுப்பிரமணிய சுவாமி தாரகசோவ்கொண்டு ஸ்தலங்களெல்லாம் ஒவ்வொன்றாக நிறுத்ததும் கைலாசகிரிக்குச் சமம் பெற்றிருந்த ஸ்தலமாகிய அசுணாண்ய ஸ்தலமும், அந்த ஸ்தலத்திலே பிரமதேவன் குமாரனாகிய வசிஷ்டமுனிக்குப் பரமசிவன் எழுந்தருளி உபதேசித்ததும், அந்தத் திருமந்திரத்தினாலே அஷ்டமாசித்திகளுந் தபசும் தேவலோகத்துக் காமதேனுவும் வரம்பெற்றதும், அப்படியாகிய ப்ரிசுத்தமான திருமந்திரமே பிரசங்களுடனே இருக்கின்றதும், மந்திரம், சுவரபம் என்று வள்ளிக்கு உரைத்தா[illegible] சுப்பிரமணியரென்று பின்னுஞ் சொல்வார். எ - று. (உக)

பின்னுமந்திர ஸ்தலத்திற் பெற்றவேதியர் நானூறும்
பன்னகசயனன் மூன்றெண் பக்கமூவென் மார்த்தங்கள்
கன்னியே யிருபான்மேற்கு காளியு மிம்முயிர்த்த
மின்னலுந் தென்வெள்ளேவழ் வெண்ணதி ராதிபனிலும்.

இ - ள். அப்படியிருக்கின்ற மந்திரப் பெயர்பெற்ற ஸ்தலத்திலே அயோனிசர்களாகிய வேதப்பிராமணர்கள் நானூறு பெயர்களுடனே பின்னும் வெகு வேதியர்களும் பன்னகசயனனாகிய மகாவிஷ்ணு கிழக்குத் திக்கிலுந் தென்திக்கிலும் இமவற்பருவத இராசகுமாரத்தியாகிய பரமேசுவரி அசணம்பிகை இருபுறத்திலேயுந் துர்க்கா கணபதியுடனே வலதுபுறத்திலேயும் அதின் பக்கத்திலே மகா கணபதியுஞ் சுப்பிரமணியரும், பின்னுந் தவரிஷிகளுடைய ஆச்சிரமங்களும், சுவேதநதியும், இருபத்துநான்கு விசேஷ தீர்த்தப் புஷ்கரணிகளுமென்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (௨0)

இவைசேர்ந் திருக்கக் கறைமிடத்தான் என்றவுவன் பேரானந்த, துவையுஞ் கடருங்கண்டு மிகத்தொழு தவ்வனத்துத் துறவரெல்லாம், நவைநீங் கிறைஞ்சி யடிபணிந்து ஞானம்பெருகி நடஞ்செய்ய, சவையிற்றலவன் பரஞ்சோதி தன்னைத் தழுவிப் போற்றுகின்றான்.

இ - ள். இப்படி சேர்ந்திருக்கின்ற அந்த ஸ்தலத்திலே வைத்தியநாத ஈஸ்வரனுடைய பெருமையைச் சொல்லத் தொடங்கியபோது பேரானந்தம் பெருகி அனேக வாத்திய கோஷங்கள்போல முழங்கி சோதிப்பிரகாசமானது கண்டு சூதமுனி தொழுது போற்றிட்டான். அந்த வேளையிலே அங்கிருக்கின்ற ரிஷிகளெல்லாம் ஆனந்தமுண்டாகி அங்கங்கு சௌரபஞ் சௌரபம் என்று கூத்தாடினார்கள். பின்னும் பரஞ்சோதிகண்ட சூதமுனி தோத்திரஞ் செய்வார். எ - று. (உ௩)

காணவேய யனுமாலுங் கற்பங்கள் தேடக்கங்கை
வேணியே வெள்ளாற்றின்பால் வீற்றுமான் மழுவபோல

பாணியே பரனேபாதி பாசிழைக் கிக்தருத்திர
தாணுவே யசஞரண்ணிய செளரபச் சுடர்க்கொழுந்தே.

இ - ள். பிரமதேவனும் மகாவிஷ்ணுவுந் தேடி அடிமுடிபுங் காணாத பாஞ்சோதியே! கங்கையை வைத்திருக்கின்ற சடாமகுடியே! சவேதாதி ரோவாசியே! மான் மழுச் சூல கபாலந் தரிக்கின்ற கைபனே! பரம சிவனே! உமையவளுக்கு அர்த்தபாகம் கொடுத்த அர்த்தநா ரீசுவரனே! ருத்திரனே! அழிவிலா ஸ்தாணுவே! அசஞாண்ணிய ஈசனே! செளரப மென்னு மகாமந்தர உருவனே! சுடர்க்கொழுந்தே என்று ஸ்தோத்திரஞ் செய்தார். எ - று. (௧௨)

தோத்திர மொழிவானேகச் சூதனைத் துறவரெல்லா
மேத்திவேள் வல்லிக்கோது மினையபிந் தொளிபெற்றேம்வென்
னீத்தபூ தரத்துக்கொவ்வு நிலத்தமென் றலத்துமாட்சி
சாற்றுவென் றவர்க்குச்சூதன் சாதித்தான் சருதிபின்னும்.

இ - ள். அப்படி தோத்திரம் செய்யும்போது ஓசையொடுங் கூடிய சோதிப்பிரகாசமானது அந்தரத்தில் மறைந்திடப் பின்பு அவ்வனத்து ரிஷிகளெல்லாம் சூதமாமுனியைத் தொழுது போற்றி சுப்பிரமணிய சுவாமி வள்ளியம்மனுக்கு உபதேசிக்கின்ற திருமந்திரங் கேட்டதினாலே பேரொளிப் பிரகாசம் பெற்றோம். பின்னும் வெண்பிரகாசமாகிய கைலாசகிரிக்குச் சமானமுடைய பூலோகத்தில் மேன்மை பொருந்திய வதிட்டகுடி ஸ்தலமாகிய அதின் பெருமையைச் சொல்லவேண்டுமென்று கேட்க வேதங்களை ஆராய்ந்தறிந்த சூதமாமுனி சொல்லுவார். எ - று.

வாசிஷ்டஞ் சுராபஞ்சிரேஷ்ட மசனவா ரணியஞ்சோதி
தேசுமா சாத்தஞ் சைவந் திக்கலிகம் வேணுசம்
ஸ்ரீசுகி சயனஞன மறைமுகன் பதிநிஷ்காமங்
கீசகங் கூற்றுத்தாப் பங்குசம் லவங்கேள்வைத்தீகம்.

இ - ள். வசிஷ்டம், சுவுரபம், சிரேஷ்டம், அசஞரணியம், சோதிப் பிரகாசம்பொருந்திய மகா சாத்தம், வைத்திகம், கொடிதாகிய பாவ நாசம், மன்மதநாசம், ஸ்ரீவைஷ்ணவம், சுத்தசைவம், வேதப்பிரமபதி, வாஸிஷம், நிஷ்காமம், கீசகம், யம ருவஞ்சம், தருப்பம், குசம், லவம் என்று பின்னுஞ் சொல்லுவான் சூதமாமுனி. எ - று. (௧௩)

அழிவிலாத் தீர்த்தந் தாந்திரகப்மடி முனிவணக்க
மிழிவில்லா வனமும்மண்டர்க் கின்பம் பாவமுமேனாசஞ்
சுழிமுனை பரமஞ்சீதா துஷ்டிநீக் கழுமேமுத்தி
வழியினா டினைச்செயிக்கு மாகாய பிருப்தெட்டே.

இ - ள். அழிவிலாத தீர்த்தம், தாந்திரிக மூலம், முனி வணக்கம், மேன்மையாகிய பாவனம், தெய்வ பூசிதை, பாவநாசம், சுழிமுனை, பரமம், சீதாதுக்க நிவர்த்தி, சீவன் முத்தி புரியாகிய இராமேச்சுரம்.

சிவசிதம்பரம், இப்படி இருபத்தெட்டு நாமமாகிய திருமந்திரமான ஸ்தல மென்றார். எ - று. (௩௫)

இம்மொழி நினைந்தோர்க்கெல்லா மிருளறுந் துன்பநீங்குஞ்
செம்மையி லறமுண்டாகுந் தீர்த்தங்க ளனையமாடுந்
தம்பல னனையவேள்வி தவவிர தங்கள்தானஞ்
சம்புனற் பதிதியானந் தடஞ்செய்யும் பலன்களாமே.

இ - ள். அப்படியிருக்கின்ற திருநாமங்களை நினைத்த பேர்களுக்குக் குற்றமாகிய துன்பங்களை நீக்கிவிடும். அனேக புண்ணியபலன் உண்டாகும். அனேக தீர்த்தங்களிலே விசேஷ காலத்தில் ஸ்நானம் செய்யும் பலனுகும். பின்னும் அனேக யாகாதி வேள்விகள் அரிதாகிய தபசுகள், முக்கியமாகிய விரதங்கள், மகா தானங்கள், தடாக வாபிகள், சிவப்பிரதிஷ்டைகள் பண்ணிய பலன்களுமுண்டு. எ - று. (௩௬)

பின்னுமத் தலத்தின்பேரே பேசிடு மனையகோடி
யன்னதில் வசிஷ்டமென்றே யன்புட னினைந்தோர்சொன்னோர்
தொன்மையம் பலத்திட்புக்குஞ் சுரநதிதனிலிறக்கு
மின்மையா ரூரில்வந்த வியப்பல னடைவர்தாமே.

இ - ள். பின்னும் அப்படிச் சொல்லிய திருநாமங்களு மில்லாமல் அனேக கோடி நாமங்கள் உள்ளன. அதில் முதன்மையாகிய பெயர் வசிஷ்டம் என்றுரைக்கப்படும். அந்தமந்திரத்தை மனசினுலே நினைத்தாலும் வாயினுலே உரைத்தோதிப் பாராயணஞ் செய்தாலும், பழமையாகிய தீவினைகளையெல்லாம் போக்கிவிடும். பின்னும் அவர்களுக்கு சிதம்பரபுரியிலே தரிசிக்கின்ற பலனும் காசி, கங்காநதியிலே இறக்கின்ற பலனும் திருவாரூரிலே பிறக்கின்ற பலனும் அடைவார்களென்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (௩௭)

தொந்தவெம் பிறவி நூற்றின் முன்பங்க ளகற்றும்பாச
பந்தங்க ணீக்சோதிப் பதந்தனை யளிக்குமேயென்
றிந்தவா றுரைத்தசூத னிருடிக டனக்குப்பின்னும்
வந்திடு மத்தலத்து வசிஷ்டன்மான் புரைக்கலுற்றான்.

இ - ள். கொடிதாகிய பாவங்கள் அனேக ஜன்மங்களினுலே வந்தவைகளை அகற்றும். காமக்குரோதாதிகளை லயம்பண்ணி சோதிப்பிரகாசம் விளங்கச்செய்யும் என்று இப்படிக்கு வந்த பெயராகிய வசிஷ்டமென்றுரைத்த அதின் பெருமையை ரிஷிகளுக்கெல்லாம் சொல்லத் தொடங்கினர் சூதமுனி. எ - று. (௩௮)

தலமுரைத்த சருக்கம் முற்றிற்று.

# பிரமதேவனுக்கு அசரீரியாகி பிரசன்னமான சருக்கம்.

உந்திக்கமலத் துதித்தோனுக் குபதேசித்த வியாகிருதியைச்
சிந்தித்தனனும் பூர்ப்புவமுமே சிறந்தசுவர்க்க மெனுமூன்று
மைந்துற்றனைய சராசரமு மளித்தான் மைந்த வசிஷ்டனுமே
புந்தித்துணர்ந்து அவனும்பின் புவியோர்முத்தி பெறநினைந்தான்.

இ-ள். அந்த ஸ்தலத்துக்கு அப்படி அனேகந் திருநாமங்க ளிருக்கக்கண்டு அதிலே இருபத்தெட்டு நாமம் முக்கியமென்றும், அதிலேயும் பிரசித்தமாகிய ஒருநாமம் வசிஷ்டமென்றும் பெயர் விளங்கியதெப்படியென்னில்? சகல லோகங்களையும் காக்கின்ற கருத்தனாகிய மகாவிஷ்ணுவின் திருவுந்திக்கமலத்திலே உதித்த பிரமதேவனுக்கு உபதேசஞ்செய்த வியாகிருதியென்னும் மகா மந்திரத்தை அவன் நினைத்தமாத்திரத்திலே பூலோகம், புவலோகஞ் சிறப்பாகிய சுவர்க்கலோகமென்னும் இந்த மூன்றுலோகமும் அதில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் இந்த ஐந்தும் நிரம்பிய சராசர சீவாத்துமாக்களுஞ் சிருஷ்டிக்கலானான். அப்படி சிருஷ்டிக்கலாகிய பிரமதேவன் மைந்தனாகிய வசிஷ்டமுனியென்பவன் ஆத்தமஞானமுண்டாகித் தானும் பின்னுஞ் சகல லோகத்து சீவாத்துமாக்களும் முத்திபெறும்படி ஒன்று நினைத்தான். எ-று. (க)

ஆதிகற்பந் திரேதயுகத்தி லயனைப்பணிந்தே யருள்ஞானச்
சோதியுரு மந்திரமெனக்குச் சொல்லீரென்னப் பிதாமகன்
விபூதியக்க மணிந்தெங்கும் பொருளாய்நிற்குங் கயிலாயன்
ஓதிலையக் கரமருளக் குறையில்குழந்தைக் கெனநினைந்தான்.

இ-ள். அப்படி நினைத்த வசிஷ்டமுனியானவன் ஆதிகற்பத்திலே திரேதாயுகத்தில் பிரமதேவனைக் கண்டு அடிபணிந்து சோதிப்பிரகாசமாகிய திருவுருவடிவு காட்டுகின்ற திருமந்திரம் அடியேனுக்கு அருள்செய்யவேண்டுமென்று கேட்க, அப்போது விபூதிருத்திராக்ஷமணிந்து எங்குந் தானேதானாய் நிரம்பியிருக்கின்ற பரமசிவனுடைய திருநாமமாகிய குற்றமற்ற பஞ்சாட்சரத்தை உபதேசித்தால் நமது குழந்தையாகிய வசிஷ்டனுக்கு தவப்பெருந்தேவரீரது தத்துவமும் உண்டாகுமென்று திருவுளத்திலே நினைந்தான் பிரமதேவன். எ-று. (உ)

பெற்றதாதை யுடன்பலத்தைப் பேணியன்ன வடிவாகி
யுற்றவானே ழுலகப்பா லோடிக்கடந்துங் காணும
லிற்றவன்னேன் றனைத்தேடி நீடோயஞ்சூழ் புவிதன்னின்
மற்றநதியுந் தடந்தோய்ந்து வுரைகாண்பதிமென் றலம்புக்கான்.

இ - ள். அப்படி நினைத்த பிரமதேவன் பெற்ற தாதையாகிய மகாவிஷ்ணுவுடனே தன்னுடைய பெருமைகளைப்பேசி அன்னப்பட்சி வடிவு கொண்டு ஆகாயத்தில் உண்டாகிய எழுலோகத்துக்கப்பாலுஞ் சென்றேறியுங் காணாமல் நின்ற பரமசிவனைத்தேடி மிகுந்த சல்முள்ள சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்திலே காண்பது சீக்கிரமென்று அங்கிருக்கின்ற விசேஷமாகிய நதிகளிலேயுந் தீர்த்தங்களிலேயும் ஸ்நானம் செய்து பருவதங்களிலும் வனங்களிலும் பட்டணங்களிலுமிருக்கின்ற மேன்மையாகிய சிவஸ்தலங்களிலே பிரவேசித்தான். எ - று. (ங)

ஆங்குப்பணிந்து பலதான மருளியரனைக் கண்டிலன்வெய்
யாங்கர்க்கரிமா றனைநோக்கி யரியதவமும் றிடச்சென்று
மாங்கிளைநெடுமா றிசைமுகன்முன் னேர்ப்பணிந்த பிரமனுக்கு
வேங்கைவனத்துப் பிறப்பறுமின் மேன்மையறைவா ரருள்சுரந்தே.

இ - ள். விசேஷமாகிய ஸ்தலங்களிலே சென்று அங்கங்கும் பூசித்து அடிப்பணிந்தும் பின்னும் அனேக தானதருமங்கள் செய்தும், பரமசிவனைக் காணாமல் பின்பு கொடிய தீயர்களாகிய அசுரகுலத்தார்களை நாசஞ்செய்கின்ற மகாவிஷ்ணுவை நோக்கி சிலகால் மரிதாகிய தவசுகளைச் செய்தான். அப்போது நீங்கென்னும் விசாரங்களை அகற்றி இரட்சிக்கு மகாவிஷ்ணு பிரசன்னமாயெழுந்தருளி அதுகண்டு பணிந்து போற்றிய பிரமதேவனுக்கு வேங்கைவனத்தினுள்ளே விளங்குகின்ற பிறப்பறியென்னும் வைத்தியநாதசுவாமியின் பெருமையை மிகவும் அருள்சுரந்து சொல்லத்தொடங்கினர் மகாவிஷ்ணு. எ - று. (ச)

கலி.

ஒவ்வொரு பொழுதிலொன் றுயர்ந்திடுவ மீனு
மிவ்வனமிப் பொழுதிறைவ னின்புறப் புவிக்கே
சுவ்வுலகு வாயெனச் சுருதிகளே சொல்லு
மவ்வதிற் செயுந்தவ மொன்றுருகும் வெகுகோடி.

இ - ள். ஒவ்வொரு காலங்களிலே ஒவ்வொன்றுயர்ந்திடுவதுபோல் இறைவனாகிய ஈசுவரனுக்கு இப்போது அந்த வனத்தில் அந்த ஸ்தலம் விசேஷமாகிய முக்கியமென்றும் பின்னும் பூலோகத்திலே இருக்கின்ற சகல ஜீவாத்துமாக்களுக்குஞ் சிவன்முத்தியாகிய சுவர்க்கலோகத்துக்கு வாசற்படியென்றும், அதுவுமல்லாமல் அதிலே செய்கின்ற தபசுகள் ஒன்று அனேககோடியாகுமென்றும் வேதங்களினாலே சொல்லுகிறதென்று பின்னுஞ் சொல்லுவார் மகாவிஷ்ணு. எ - று. (ரு)

சம்பகம் பதரிதண்ட காவனங் கதம்ப
மும்பர் தொழுந்தில்லை வில்லுவம் புரசெருக்கு
தும்பைவிந்த விருட்சமட்டுத் துய்யதெய்வா ரண்யமுஞ்
சம்புபுந்து தவ்வனந் தானதுக் கிணையில்.

இ-ள். சண்பகாரண்யம், பதரிகாரண்யம், தண்டகாரண்யம், கதம்பவனம், தேவர்கள் பூசிக்கின்ற தில்லைவனம், வில்வவனம், பலாச வனம், எருக்கவனம், சிவன் சடையிலே தரிக்கின்ற தும்பைவனம், இப்படியாகிய விந்தியாரணியம், தேவதாரணிய வனங்களெல்லாம் பரம சிவனுக்கு கந்தபந்து காரணியத்துக்குச் சமானம் வாராதென்று சொல்லுகின்றார் மகாவிஷ்ணு. எ-று. (௬)

என்றுரை நவின்ற போதிரு முகத்தனக்
கன்றுடன் வெகுவனங் கடந்துதென் யமுனைப்பா
லன்றுசெல் லவ்நதி யலையெறி கனிமது
மன்றுளாடு பதியென மறித்தது மானவந்ததே.

இ-ள். அப்படிச் சொல்லக்கேட்ட பிரமதேவனும் பந்துகாரணிய மென்ற வனத்தைத் தேடி கன்றாகிய வசிஷ்டனுடனே அநேக வனங்க ளெல்லாங் கடந்து தென்யமுனையாகிய சுவேதாநதியின் பக்கலிலே வந் தான். அப்படி வரும்போது அந்த நதியானது மறித்துச் சலம்பெருந் மதுக்களையும் பழவகைகளையும் எதிர்த்து வருகின்ற தெப்படியிருந்த தென்னில்? பிரமதேவனுக்கு கைகளினாலே கனிகள் கொடுத்துக் கண்டு கொண்டு மன்றுளாகிய கனகசபையிலே நிர்த்தனஞ் செய்கின்ற பரம சிவனிருக்கும் தலம் இதுவேயென்று காட்டி மறித்ததுபோலவு மிருந் தது. எ-று. (௭)

உலகுயிர்த்த விதிவந்தா னெனவசன் வனத்திலுள்ளே
யிலகுமுருக்கும் புரசுந்தாடி மங்காத தன்னுஞ்சாதி
யலங்கின்று வொடுவலரத் தேமாவின் றளிரலங்கட
போலவனல் செவ்வரையென் றஞ்சினன் பிறப்பிப்போன்.

இ-ள். அதுவுமல்லாமல் சகல லோகத்தையுஞ் சிருஷ்டிக்கின்ற பிரமதேவன் வந்தானென்று அசஞாரணியத்தன்லே இருக்கின்ற விருட் சங்களாகிய முருக்கு, புரசு, மாதுளை, சோதி, காந்தள் இவைகளெல்லாம் சிவந்த வருணங்களுடனே அநேக புஷ்பங்கள் புஷ்பித்து நெருங்கி யிருப்பதும், மாமரங்களானது சிவந்த தளிர்களுடனே உயர்ந்தெழும்பி பிரகாசித்திருப்பதும் எப்படியிருந்ததென்னில்? ஆதிகாலத்திலே தேடிக்காணாது உயர்ந்து சிவந்தெழும்பிய அக்கினிமலையைப்போலவும் இருக்கிறதென்று அஞ்சினன் பிரமதேவன். எ-று. (௮)

நெடுங்குருந்து மிதழியும்வெண் முல்லைபுஞ்சேர் நீள்வனத்தில்
பிடிமயிர வால்லிசிட்டவு முரகம்மணி யொளிபேண
முடிகடுக்கை நீறணிந்து வீற்றகுருந் தின்முதல்வர்க்
கடிதொழு தீபநிரைத்து வாற்றிவம்பாற கண்களித்தான்.

இ-ள். பின்னுமெப்படியென்னில்? நெடிதாகிய குருந்தின் விரு ஷங்களிருப்பினும் அதின் கீழ் இதழியென்னுங் கொன்றை புஷ்பித்து சரங்களுடனே தொங்குவதும், அதின் அடியிலே முல்லைகளின் புஷ்

பங்கள் இடம்விடாமல் சுத்த வெண்மைநிறம்போன்று பிரகாசிப்பதும், அப்படியாகிய வனங்களிலே பிடியென்னும் வெண்கவரிமான் குலங்கள் வால்களை வீசுவதும், அதின் பக்கங்களிலே ஜீவரத்தினமாகிய நாகரத்தினங்கள் பிரகாசிப்பதும், இவைகளெல்லாம் எப்படியிருந்ததென்னில்? சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையுஞ் சுத்ததர்வளியமான திருவெண்ணீறு பூசிய திருமேனியும், அதின் இருபக்கங்களிலே பிரகாசிக்கும்படி நிரப்பிய தீபங்களும், பின்னும் இளைப்பாற்ற வீசிய வெண்சாமரையுடனே முன்னாலே மாணிக்கவாசகருக்காக குருந்தமரத்தின் கிழலிலே குருமூர்த்தமாயெழுந்தருளிய பரமசிவனைப்போலவும் இருக்கிறதென்று கண்டு களிகூர்ந்தான் பிரமதேவன். எ - று. (௯)

மான்றமரந் தளிர்துளிப்ப வீனெடுங் கொடி தழலா
வின்றபல கனிப்பிதிர வெங்குஞ்சங் குலமொலிப்ப
வான்றனமுஞ் சிரந்தொழுக் வதிற்சிலைக ளிலிங்கமென
தோன்றவுறு தாயர்கள் சொன்னமற்று மேற்றிடுக.

இ - ள். பின்னும் எப்படியென்னில்? பட்ட மரங்கள் எல்லாந் தழைத்தோங்க புஷ்பிக்காத கொம்புகளெல்லாம் புஷ்பங்கள் நெருங்கிப் பூக்க, காயாத கிளைகளெல்லாங் காய்த்துப் பழுத்துதிர, பின்னு மரங்கள் முதலான மற்றெவ்விடங்களிலும் சங்குலமாகிய வருணப்பட்சிகள் நடமாடித் தொனிக்க, அதல்லாமலும் அந்த வனத்திலேயிருக்கின்ற கல்லுகளெல்லாம் இலிங்கவடிவென்று பசுக்குலங்கள் தன் மடிபெருக பால்சுரந்தொழுகி அபிஷேகம் பண்ணுவதுபோல பசுக்குலங்களின் பால்கள் சிந்திவொழுக, மற்றும் முல்லைநிலமக்களாகிய ஆயர்கள் தங்கள் தெய்வமான மகாவிஷ்ணுவைத் தொழுது வரகு, சோளம், சாமைகளின் பைங்கூழ்களை ஏற்றிடுக. எ - று. (௧௦)

மவவாருந்தும் வரிப்புலியோ டியர்நரி யாளனாளி
மேசனுலவு மிருதலைப்புட் பேரண்ட மெல்காலுங்
கோணனமயிர்ப் பல்லமுடன் கோடுதிரட் கரிபழுகு
மேனிபலக் கறுவகற்றி விளையாடிப் பொலிவுபெற.

இ - ள். பின்னும் அந்த வனத்தில் எப்படியென்னில்? ஊனென்னும் உணவு கொள்ளப்பட்ட மாமிசத்தினாலே வலிமை பெற்றிருக்கின்ற வரிகளோடுங் கூடிய புலிகளும், உயர்ந்தெழும்பிப் பாய்கின்ற சிங்கங்களும், யாளங்களும், காட்டு நாய்களும், பின்னும் ஆகாயத்திலே சஞ்சரிக்கின்ற இருதலைப் பட்சிகளும், எட்டுக்காலுடன் இருக்கின்ற சிம்புள் பட்சிகளும், கண்டபேரண்டப் பட்சிகளுக்கு உணவாகிய மிருகஜாதியான பன்றிகளும், மயிர்கள் நெருங்கிய காடிகளும், கொம்புகளுடனே இருக்கின்ற யானைக்கூட்டங்களும், மற்றும் புழுகுபூனைகளும், மான்குலங்களும், அவற்றின் குட்டி குஞ்சுகளுடனே ஒன்றோடொன்று தங்கள் தங்கள் பகைகளையகற்றி கூடிக்கூடி விளையாடி மிகுந்து விளங்கி வாழ்வதுங் கண்டான் பிரமதேவன். எ - று. (௧௧)

துய்யநதி பாற்சரியை நூல்விடர் களையகற்றி
வெய்யவ னனடுவிருந்தும் விண்கதிர் நோக்குச்சூசி
யையமுனி மேனின்று மட்டாங்கப் படியமர்ந்துங்
குய்யவன லெழுப்புதவர் கோடானு கோடியே.

இ - ள். பின்னுந் துய்யமாகிய சுவேதநதியின் பக்கத்தில் அந்த வனத்திலே இருக்கின்றதெப்படியென்னில்: சரியை, கிரியை, யோகம், ஞானமென்கிற இந்த நால்வகைகளுமறிந்து அஷ்டகர்மகாரணமென்னும் இவைகளாலே வருகின்ற மாயாவுபாதிகளான ஆணவம், மாயை, காமியங்களும் அதின் துர்க்குணமாகிய இராகத்துவேஷங்களையுமகற்றி கடோரமாகிய அக்கினியை மூட்டி அதின் நடுவிலேயிருந்து தபசுகள் செய்வாரும், ஐயமுனியாகிய ஊசிமுனையிலே நின்று ஆகாசத்திலே சூரியனை நோக்கித் தபசுகள் செய்வாரும், அஷ்டாங்கமாகிய இயமம் நியமம், பிராணாயாமம், பிரத்தியாகாரந்தாரணை, தியானம், சமாதி என்னும் இவ்வகைகளிலே வருத்தமுற்று மூலாக்கினியை எழுப்பித் தபசுகள் செய்வாரும், இப்படிக்காகிய அருந்தவஞ் செய்கின்ற பெயர்கள் கோடானுகோடியாம். எ - று. (௧௨)

கண்டயனிவ் வாறெல்லாங் கருத்தளிதம் கிணையின்றிப்
பண்டிறுதி காலத்தும் பாடிலாத் தலமிதெனத்
தொண்டுசெய மிகவுவந்து துய்யநதி புனல்மூழ்கி
யண்டர்பிரான் றனைநோக்கி யருந்தவசு செயகுவனால்.

இ - ள். அந்த வனத்தில் இப்படியிருக்கின்றவெல்லாம் பிரமதேவன் கண்டு இந்தத் தலத்துக்கிணையான தலங்கள் எங்குமில்லையென்றும், பண்டென்னும் பழமையாயிருப்பதென்று புகாந்த காலங்களிலும் அழிவிலாததென்று மனதிலே நினைத்து இந்தத் தலத்திலே தொண்டுசெய்வதென்று மிகவுங் களிகூர்ந்து துய்யமாகிய வெள்ளாற்றிலே ஸ்நானஞ் செய்து சுத்தம்பண்ணிக்கொண்டு அண்டர்பிரானாகிய பரமசிவனை நோக்கி அரிதாகிய தபசுசெய்யத் தொடங்கினான் பிரமதேவன். எ - று.

ஊசிமுனை தனின்மேலோன் றூன்றியொருகாற் பெருவிரலை
நாசிமுனை யகண்டத்தி னோட்டம்வைத் திடமூலத்
தேசுபர வெளிசென்று சீதமதி மட்டுறுத்த
மாசிலெழுத் துணர்ந்துமனு வுந்திரநாட் டவஞ்செய்தான்.

இ - ள். அப்படித் தவசு செய்கின்றதெப்படியென்னில்: ஊசியை நிறுத்தி ஒருகாலை மடித்து மற்றொரு கால்பெருவிரலை ஊசி நுனியிலே யூன்றி நாசிமுனையாகிய சுழுமுனையைத் திறந்து நாட்டமென்கின்ற நயனங்களை மேல்நோக்கி மூலாக்கினியை ஓங்கார கம்பத்தின் வழியி னூடேற்றிச் சீதமதியாகிய சந்திரமண்டல வமிர்ததாரை துளித்திடக் கொண்டு மாசிலாத பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து இப்படி அரிதாகிய தபசு ஒருமன் வந்தரமாய் செய்தான் பிரமதேவன். எ - று. (௧௪)

உற்றவயன் பிறைற்பதிமுன் னைகுண்ட மைந்தமைத்து
கற்றருதிப்படியே கணங்களோ டண்டர்குழாம்
பற்றுமுனிக் கருளும்வாணி பலர்கூட்ட பரிவேள்வி
வெற்றிபெற வொருபொழுதில் வெய்யதச மெய்திட்டான்.

இ - ள். அப்படி பிரமதேவன் ஒரு மனுவந்தரகாலம் அரிதாகிய தபசுகள் செய்தபின்பு வைத்தியநாத ஸ்வாமி சந்நிதி முன்பாக வந்து வேதாகம முறைப்படியே யாகசாலை அமைத்து அதிலே ஐந்து குண்டஞ் செய்து பிராமணர்களுடனே பிரமகணங்கள் தேவகணங்கள் புடைசூழ பற்றெனும் அதிக ஆசையுடனே முனிகள், தபோதனர்கள், மருத்துக்கள் கூடிட்ட பலசெந்தம்மைபால் ஓதாக்கள், இருத்துக்கள், துவாதசாதித்தியர், அஷ்டவசுக்கள், அக்கினிபகவான், வருணமூர்த்தி யவர்களோடு சரஸ்வதியுடனேயுமிருந்து வெற்றி பெறுவதற்காக ஏககாலத்திலே கொடிதாகிய அஸ்வமேதயாகம் பத்து செய்து ஏவிவிட்டார். எ - று. (௧௫)

மூவரி லொருவன்செய்த முக்கியமா வேள்வியினில்
மூவுலகும் வெருவுமோட முடிவுபட வெய்யதுபோல்
மூவழலு மெழும்பிடவே முனிவசிஷ்டன் பிறவியற
மூவொன்று மருள்சுரந்து முன்னின்றான் கைலையைப்போல்.

இ - ள். மும்மூர்த்திகளில் ஒருவரான பிரமதேவன் செய்த முக்கியமான அசுவமேதயாகத்திலே மூவுலகாகிய சுவர்க்க மத்திய பாதாளமென்று மூன்றுலோகமும் பயந்தோடும்படி வடவாக்கினிபோல மூன்றழலாகிய ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினியங்களும் எழும்பிட அங்கன்றே தாங்கமாட்டாது கண்டு வசிஷ்டமுனிவனுக்கு ஜனனமரணங்கள் அறும்படிக்கு மூவரிலொருவராகிய பரமசிவன் அருள்சுரந்து கைலாசகிரியிலே கல்யாணமுகூர்த்தத்தில் எழுந்தருளியதுபோல பிரமதேவன்முன் எழுந்தருளினார் பரமசிவன். எ - று. (௧௬)

## வேறு சந்தம்.

ஆறுதொங்கலுட னாறுயர்ந்ததொரு வாறுநீள மாறகலமு
மாறுமேர்கையோ டாறிருந்தமேர் சாறுதிடமுட னதீதமே
யாறுவார்க்கு மொன்றுறள்பப தாறாருவாறு வாறல்குலோ
டாறுமன்மை யோடாறுகொடியா றாறதத்துவமு மாகியே.

இ - ள். அப்படிப் பரமசிவன் எழுந்தருளிய தெப்படியென்னில்? உயர்ந்த கைலாசகிரியானது ஆறு தொங்கலுடனே யாறுயர்ந்துமாறு நீளமும், ஆறகலமும் அதில் ஆறு மேர்க்களுடனே இருக்கின்ற ஆறு ஆசிருதயம் ஆறு திடமுடன் இருக்கப்பட்ட அதீதமேன்மையும் ஆறு வாசுகமும் ஆறு கொடிப்பதும் ஆறு தொடையும் ஆறு அல்குலும் ஆறு கனிமும் ஆறு கொடியும் ஆறாறிய முப்பத்தாறு தத்துவங்களுடனே யாகி எழும்பியது. எ - று. (௧௭)

ஆறுசாத்திரமு மங்கமாகவரு மறைகள்பாத மறம்வாலென
வாறலங்கிருதமு மாறுதொழில்புரிந் தாரின்னு மறியாதவொ
ராறுமுகவனொ டானைமுகனொடு ஆறுபவன மேலாகியே
யாறுபாய்சடைய னாறுபாலிலேயக் காமருள் வாழியே.

இ - ள். பின்னும் எப்படியென்னில்? ஆறுசாஸ்திரங்களும் அங்டாங்கமாகவும், அரிதாகிய வேதங்களோ நாலு கால்களாகவும், தர்மதேவதையே வாலாகவும், ஆறு அலங்கிருதத்துடனே ஆறு தொழில்களும் நடத்தும்படி ஆறின்னும் அறியாதவன் பக்கலிலே ஆறுமுகனாகிய சுப்பிரமணியனும், விக்கினேசுவரனும், ஆறு பவனமாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞையென்னும் இதின்மேலாகிய சகச்சிராரருபத்தும் அதிலே எழுந்தருளுகின்ற பரமசிவன் செங்கானதியைச் சடையிலே தரித்து அதற்கினையாகிய தென்யமுனையின் பக்கலிலே வசிஷ்ட ரிஷிக்கு பஞ்சாக்ஷரம் அருளும்படிக்காகியதாம். எ - று. (௧௦)

அணிந்தவெண் பொடியயன்கபாலமு மளிப்பமுமயமோ டம
ரர்கள்; வணங்கநித்திலக் குடைநிகழ்த்த வாசவன்மருத்து கோன்
மாறவே, கணங்கள்வெண்மரை யிசைக்கநாரதன் கருடரம்பை
குண்டோதரன், நிணங்கொள்கட்டியம் நந்திமாலருகு நின்றுமட்டு
விடைமிதுமைபுடன்.

இ - ள். அப்படியெழுந்தருளிய பரமசிவன் அணிந்திருக்கின்ற திருவெண்பொடியாகிய விபூதி பூசிய திருமேனியும் கைகளிலே ஆதிகாலத்தில் பிரமதேவன் ஐந்து சிரசிலொன்றைக்கிள்ளிய கபாலமும் அபயவரத சூலமுடனேயும் தேவர்கள் புடைசூழ்ந்து வணங்களும் பிரகாசம்பொருந்திய வெண்முத்தின்குடை தேவேந்திரன் பிடிக்கவும், சத்தமருத்துக்கள் சுவர்ண தண்டுகளெடுத்து நிற்கவும், சிவகணங்கள் வெண்சாமரை வீசவும், தும்புரு நாரதர், கருடகந்தருவர், இரம்பை, மேனகைகள் நாட்டிய சங்கீதங்கள் இசைக்கவும், குண்டோதரன் அதிக பலங்கொண்டு அடப்பம் கட்டவும், நந்திகேசுவரன் பொற்றடிப் பிரம்புகொண்டு கட்டியங்கள் கூறவும், பக்கலிலே மஹாவிஷ்ணு வட்டமிட்டு வதிலாமை பேசவும், வெண்மை நிறம்போன்ற ரிஷபவாகனத்தின் மீதிலே அசனாம்பிகையுடனே எழுந்தருளினார் வைத்தியநாத சுவாமி. எ - று. (௧௧)

கண்டவேதமனைவன் கண்ணுமுளங் களிகூர்ந்து மைந்தனுமமா
ரோ, ரண்டநாதனையு மசனவன்னையையு மடிபணிந்து வலமாகிநன்,
சுண்டுமுப்பதின் மூன்றுகோடி முனிசுரரும் மற்றல குமிர்ந்தவன்,
றெண்டுதொண்டுபோற் றண்டுபோலவே தொழுதுவீழ்ந் ததி
துதித்தனன்.

இ - ள். அப்படி எழுந்தருளக்கண்ட பிரமதேவன் காட்டுக் கண்களுடனே உளங்களிகூர்ந்து ஆனந்த பரவசத்தனாய் மைந்தனாகிய வசிஷ்ட

னுடனேயும், மற்றுமுண்டான தேவர்களுடனேயும், அண்டர்காதனாகிய பரமசிவனான வைத்தியநாத சுவாமியையும், அசனாம்பிகை தாயாரையும் பணிந்து வலம் வந்து திருப்பாற்கடலிலே சகல லோகத்தையும் எரித்திடும்படி எழும்பிய ஆலகாலத்தையுண்டு முப்பத்துமுக்கோடி தேவர்கள் முனிவர்கள் முதலான மற்றவரையுங் காத்து இரட்சிக்கின்ற உன்னுடைய பாதாரவிந்தங்களுக்கு அடியேன் தொண்டு தொண்டென்று, பின்னும் பொன்தடி விழுந்ததுபோல விழுந்து பணிந்து துதித்துப் போற்றினான். எ - று. (௨0)

காலனைக் கடிந்தாய்போற்றி காலபயி ரவனேபோற்றி
மாலயன் றேடிக்காணு வழல்வரை யரனேபோற்றி
சூலகபால மாவெனுஞ் சுடர்மழுக் காத்தாய்போற்றி
பாலும் சனவனத்து வண்ணலே போற்றிபோற்றி.

இ - ள். மார்க்கண்டரிஷிக்காக காலனாகிய இயமதருமராஜனை காலால் உதைத்தவனே போற்றி, காலபயிரவனே போற்றி, மாலாகிய மகாவிஷ்ணுவும், பிரமதேவனும் அடிமுடியுந் தேடிக் காணாத அக்கினி மலையயுடைய உருவனே போற்றி, சூலகபாலமும் மானு மழுவுந் தரிக்கின்ற சதுர்ப்புயத்தனே போற்றி, ஆலமென்னும் விரிந்த புஷ்பங்கள் நெருங்கிய அசனாரண்யத்து அண்ணலாகிய வைத்தியநாதனே போற்றி போற்றியென்று பின்னுந் தொழுவான் பிரமதேவன். எ - று. (௨௧)

ஆயிரம் விழியான்போற்று மடிபுடை யரனேபோற்றி
ஆயிரங் கரத்தான்போற்று மீங்கமு முடையாய்போற்றி
ஆயிரங் கதிரோன்றன்னை யக்கமென் றுனேபோற்றி
ஆயிரஞ் சிரத்தோன்போற்று மசனவா ரணியாபோற்றி.

இ - ள். ஆயிரம் விழியையுடையானாகிய தேவேந்திரன் பூசித்த பாதமுடையானே போற்றி, பின்னும் ஆயிரங் கைகளையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் பூசிக்கின்ற திருமேனி விஸ்தாரமுடையவனே போற்றி, அதுவுமல்லாமல் ஆயிரங் கிரணத்தையுடைய சூரியனை நேத்திரமாகப் படைத்தவனே போற்றி, மற்றும் ஆயிரம் சிரசையுடைய ஆதிசேஷன் ஆயிரம் நாவாலுந் துதிக்கப்பெற்றவனே போற்றி, அசனவாரணியனாகிய வைத்தியநாதனே போற்றியென்று பின்னுந் துதிப்பான் பிரமதேவன். எ - று. (௨௨)

மாரனை யெரித்தாய்போற்றி மதிமுடி தரித்தாய்போற்றி
யாரமந் தாரம்பூண்ட வருமறைச் சுடரேபோற்றி
சாரலா லடிக்கமாறன் றுங்கிய புறத்தாய்போற்றி
தீரம்வெண் ணதியாய்தேவ தேவனே போற்றிபோற்றி.

இ - ள். மாரனாகிய மன்மதனை விழித்தெரித்தவனே போற்றி, சந்திரனைச் சடையிலே தரித்தவனே போற்றி, கற்பகமலராகிய மந்தார

வாரம்பூண்ட மார்புடையவனே போற்றி, அருமறையாகிய வேதாந்தங்களின் முடிவான சோதிப்பிரகாசனே போற்றி, சாரல் என்னும் பிரம்பினாலே மாறனாகிய பாண்டியராசன் அடிக்கத் தாங்கிய முதுகையுடையவனே போற்றி, சுவேதநதிதீரத்தில் எழுந்தருளிய தேவதேவனாகிய வைத்தியநாதீஸ்வரனே போற்றி போற்றியென்று பின்னுந் துதிப்பான் பிரமதேவன். எ - று. (௨௯)

கங்கையைச் சடையிற்றாங்கி கருவம தழித்தாய்போற்றி
கங்கையிற் றாங்கியென்னோர் கழிந்திட சிரித்தாய்போற்றி
கங்கையைங் கொழுந்தாற்கொண்ட பர்ஞாசா ணியமுள்ள
மங்கையை வலத்தில்வைத்த வைத்திய நாதாபோற்றி.

இ - ள். கங்கையை சடாபாரத்திலே விட்டு அதினுடைய ஓட்டமாகிய கருவங்கள் அகலும்படி மயிர்க்கால் வழிக்கெல்லாம் ஓடச் சிறக்கச் செய்தவனே போற்றி, கம்மாகிய சிரசை கையிலே தாங்கி முப்புராதிகளை ஜெயித்தவனே போற்றி, கங்கையும் கைவளையும் அழுந்தும்படி கொண்டெழுந்தருளிய பரமசிவனே போற்றி, பர்ஞாசாணியமங்கையாகிய அசஞ்ஞாம்பாளை வலதுபாகத்திலே வைத்திருக்கின்ற வைத்தியநாதா போற்றி என்று பின்னுஞ் சொல்லுவான் பிரமதேவன். எ - று.

ஐம்புல னழித்துநிந்த மம்புச மருள்வாய்போற்றி
தும்பியை யெழுப்பிவன்னி சுழுமுனை நிறப்பாய்போற்றி
அம்பல வடிவுகாட்டி மகண்டபே ரொளியேபோற்றி.
சம்புவே போற்றிஞானச் சௌரபச் சுடரேபோற்றி.

இ - ள். ஐம்புலனாகிய சத்தாதி விஷயங்களை யழித்து நித்தியமாக அம்புசமென்னும் பாதநாமரையைத் தந்தருள்கின்றவனே போற்றி, தும்பியாகிய ஞானத்தை எழுப்பி அக்கினியாற்றின் வழியாகிய சுழுமுனை திறந்து மயிர்ப்பாலம் சென்று ஆகாச வெளியிலே அகண்டபேரொளியாய் விளங்கக் காட்டியவனே போற்றி, சம்புவே போற்றி, ஞானமயமாகிய சௌரப க்ஷேத்திரமென்னுங் கிட்டகுடியிலே பிரகாசித்து விளங்குகின்ற வைத்தியநாதீஸ்வரனே போற்றி போற்றி என்று துதித்தார் பிரமதேவன். எ - று. (௩௰)

பிரமதேவனுக்கு அசஞ்ஞாணியபதி பிரசன்னமான சருக்கம்

முற்றிற்று.

# வசிஷ்டர்
# உபதேசம்பெற்று பூசித்த சருக்கம்.

மாமணச் சமயமா யெழுந்தருளு மம்புயபத மயன்றொழ
சோமமௌலி திசைமுகனை நோக்கியே சொல்லுவா ரருள்சுரந்து
நீமகத்தவமும் வேள்வியுஞ் செய்திங்ஙன மேதென வதற்கவ [மே
னுமுற்றிடு வசிஷ்டனுக் குணர்ஞான மந்திரமு மோதவே.

இ - ள். மாமணமெனும் திருக்கலியாண சமயத்திலெழுந்தருளியது போல வைத்தியநாத சுவாமி அசனாம்பிகையுடனே சகல பரிவாரங்களுஞ்சூழ அசுவாரணியத்திலே பிரசன்னமாகிய பரமசிவனுடைய பாதாரவிந்தத்தைப் போற்றி செய்த நான்முகனாகிய பிரமதேவனைப் பார்த்து சோமமௌலியாகிய பரமசிவன் அருள்சுரந்து நீ மஹா தபசும் அஸ்வமேதயாகமும் செய்து நம்மைத் தேடிய காரணம் உரைப்பா யென்றார். அதுகேட்டு என்து மைந்தனாகிய வசிஷ்டனுக்கு ஞானப் பிரகாசமாகிய பஞ்சாக்ஷர திருமந்திரம் உபதேசஞ் செய்யவேண்டுமென்றான் பிரமதேவன். எ - று. (க)

என்றுமைந்தனு மகனுடன் றொழுதிறைஞ்சி வாய்புதைத் தெஞ்சிட்
டின்றுவெண் வரையிலால நீழலிலிருந்தவற் கருளுமொழிபுரை
பண்டுமா மறையுமாக மப்படியே பந்துராகாவனந் தன்னுளே
மன்றுளாடுவோன்கன்றினுக்குமே மாசகற்றிடவு மாகினர்.

இ - ள். அப்படிக்கேட்ட பிரமதேவன் தன்னுடைய மைந்தனாகிய வசிஷ்டனுடனே சரஸ்வதி சகிதனாய்ப் பணிந்து போற்றி பின்பு வாய் புதைத்தஞ்சி நின்றான். அப்போது முன்னாலே கைலாசகிரியின் உச்சியிலே வடவால நிழலிற் குருமூர்த்தமாய் எழுந்தருளி சநகாதி ரிஷிகளுக்கு ஞானோபதேசம் செய்ததுபோல பழமையாகிய வேதாகம முறைப்படிக்கு பஞ்சகாரணியத்தினுள்ளே மன்றாகிய தேவசபையில் திருத்தனஞ் செய்கின்ற பரமசிவன் வசிஷ்டனுக்கு ஞானவுபதேசம் செய்யும்படி சீராங்க சுத்தி செய்தான். எ - று. (உ)

ஆசிரியம்.

ஆகம நிரந்தர தந்திர யந்திர மாமந்தி கந்தரமும்
யோகமு மந்தர வந்தரம் நஞ்சை புண்டிடு கந்தரமு
மாகமு நாகமு மமகம னேகமு சோகமு நீகமுமே
தாகமு மேனவ லோகமு மாமக தானமு மானதுவே.

இ - ள். அப்படி சீரசுத்தி செய்து உபதேசிக்கின்ற பஞ்சாக்ஷரத் தின் பெருமை எப்படியென்னில்? எங்கும் நிரந்தரமாயும் சகல தந்திரங்

களுஞ் சகல யந்திரங்களுஞ் சகல மஹா மந்திரங்களுஞ் சகல அலங்காரங்களுஞ் சகல யோகங்களுஞ் சகல ஆசைகளும் நவலோகமாகிய இரும்பு, செம்பு, ஈயம், பித்தளை, வெண்கலம், தரா, நாகம், வெள்ளி, தங்கமென் உருவுகளும், சோடச மஹாதானத்தின் திறங்களும், அனேக வருணமேகங்களும், சப்த சமுத்திரங்களும், பின்னும் சகலத்தையும் தாங்கி இரக்ஷிக்கின்ற ஆதிசேஷ ரூபமும், கங்கையைக் கண்டத்திலே வைத்திருக்கின்ற ஈசுவரத்துவமும் ஒன்றுவதும் பலவாவதும் ஒன்றுமில்லாததும் இப்படி நிராமயமாகியது பின்னும். எ - று. (௨)

ஆனது மேசார் பூசுரர் கின்னரர் ராயிரம் விழியோனுந்
தானது நான்முக மைம்முக மாறுமுகம் வெகுகர முடையானு
வான்மதி யங்கியும் மண்முதல் பஞ்சம விடையமும்மை
யுடன் யவ்வன ஓமமேமமு முதலிய வான்றருவும்.

இ - ள். ஆனதென்னும் பிரபஞ்ச சிருஷ்டியிலடங்கியது மற்ற தேவாதிகளும், மேவரிஷிகளும், கின்னரர்களும், ஆயிரம் நேத்திரத்தையுடைய தேவேந்திரனும், நான்முகனாகிய பிரமதேவனும், ஐந்துமுகமாகிய ஈசானதி சிரத்தேவனும், ஆறு சிரசையுடைய சுப்பிரமணியரும், ஆயிரம் கிரணமுடைய சூரியனும், அமுதக்கலையுடைய சந்திரனும், ஆகாசத்தில் விளங்குகின்ற நக்ஷத்திரங்களும், பூமிமுதல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பஞ்ச பூதங்களும், விடயமென்னுஞ் சத்த பரிச ரூபரச கந்தமும், பிற உருவியாகிய அவஸ்தியாதிகளும், பால்யம், குமாரம் வாமதிகங்களும், அக்கினி அவிர்ப்பாகங்களும், ஓமம் ஐயமாதி யோகாப்பியாசங்களும, சகல பலங்களுங் கொடுக்கின்ற சிந்தாமணி, காமதேனு கற்பகத்தருக்களும் இப்படியெல்லாமாகியது பின்னும். எ - று. (௩)

பாசமும் விந்து வேசமும் தோஷமும் பாவ மகற்றுமது
பூசை புனைச் சரணத் தவஞானமும புண்ணிய தீர்த்தமும்ம
பிசங்கோச மெண்ணு லெண்ணு லஸ்ஸியமும் பெருகிய பேரொளி
மோசையு மாகிய வாசமு மானது ஓநமசி வாயமதே. [யோ

இ - ள். பாசமாகிய அருத்த புத்திர காமியங்களிலே ஆசைகளும், உயுத்திய பேதாபேதங்களும், பாவதோஷங்களும், அவைகளை அகற்றிய புண்ணிய பாவங்களும், பூசை, பக்தி, புனைச்சரணங்களும், புண்ணிய தீர்த்த ஸ்நான பலங்களும், அதின் பெருமைகளும், பசுமாகிய உற்பத்தி விரை இந்திரியங்களும், அறுபத்துநாலு கலைக்கியானங்களும், அறுபது திருவிளையாடல்களும், சுப்ரகாசமாகிய ஞானமும், பிரகண்ட பிரகாசமும், அதின் தொனியும், வாசனையும், இப்படியெல்லாமாய், எல்லையுமாய், எல்லையில்லாததுமாகி விளங்குகின்ற தானது ஓம் நமசிவாயம். எ - று. (௪)

## சந்த பேதம்.

தேசிகனை யக்கரத்தின் கருணைமாரி தேவர்கள் வானோர்தரு வின் மலர்கள்மாரி, பூசுரனும் பொறிநயன மாரியோடு பெய்வி

விசும்பு நற்கந்த மாரிபெய்ய, நேசர்தி கண்டவயன் சுவர்ணமாரி
ரத்திலமும் ரத்தினமு நேரமற்றுற், தாசனவ் வசிஷ்டனுஞ் சற்
குருவைப் போற்றச் சங்கரனு மருள்கரந்து சார்ந்தார்விண்மேன. •

இ-ள். அப்படிக்காகிய திருமர் நிரத்தைத் தேசிகனுன பரமசிவன் கருணைகடாட்சத்தினுலே பெய்த பஞ்சாட்சரமாரியும், அதுகண்ட தேவர்கள் சொரிந்த கற்பகத்தருவின் ஐம்மலர் மாரியும், பூசுரனுகிய விசிஷ்டபிராமணன் ஐம்பொறியாகி யதிலொன்றுன நேத்திரானந்த பாஷ்பமாரியும், அதுகண்ட பிரமதேவன் விசும்பாகிய மேகங்களைக் கொண்டு சுகந்த பரிமள சந்தனமாரியுடனே தானும் சுவர்ண நவரத்தின வஸ்திர முத்துமாரிகளும் பெய்ய அந்த வேளையிலே புதுமைச் சிஷ னுகிய வசிஷ்டனும் சற்குருவைப் பணிந்து போற்றி செய்ய சற்குரு வானவர் சிஷனுக்கு குருப்பிரசாத மருள்சுரந்து பூர்ண வீக்ஷணமருளிப் பின்பு அந்தரத்தில் மறைந்துவிட்டார் பரமசிவன். எ-று. (சு)

ஆவதினு லத்தலம் வாசிஷ்டஞான மானகரென்று மறைவ ரப்பால்பரந்து, காவமதி லானந்தம பொங்கிவேதன் சகலகலை வாணி வசிஷ்ட னேடுஞான, வாவிமுதலனைய தீர்த்தங்க டோய்ந்து வைத் தியனுதன் கழலே வாழ்த்தியந்நா, ளாவலுடன் விரதமுற்று மறு நாட்சத்தி யனைபதடம் புனன்மூழ்கி யருச்சித்தாரே.

இ-ள். அப்படி பிரமதேவன் தபசு யாகஞ்செய்து பரமசிவன் எழுந்தருளி வசிஷ்டமுனிக்கு பஞ்சாட்சரம் உபதேசித்தபடியினுலே அந்த ஸ்தலம் பிரமக்ஷேத்திரமென்றும், வசிஷ்டபுரியென்றும், ஞான நகரென்றும் பெயராயிற்று. அப்பால் அப்படி பிரசன்னமாகிய அந்த ஸ்தலத்திலே பிரமதேவன் பேரானந்தக் களிகூர்ந்து பத்தினியாகிய சரசுவதியுடனே புத்திரன் வசிஷ்டமுனியுந் தானும் ஞானவாவி முத லான அனேக புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து வயித்தியனுத சுவாமியுடைய பாதாரவிந்தங்களைப் பூசித்து வாழ்த்தி வணங்கி பத்தி யுடனே அந்நாள் ஸ்தல உபவாசஞ்செய்து மறுநாள் உதையகாலத்தின் முன்பே சத்தி தீர்த்தமுதலான தடாக புஷ்கரணிநதி தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து பரிசுத்தனுய் பூசித்தான். எ-று. (எ)

பின்னுமவர்க் கீசானத் திசையிலேதன் பிரமலிங்க மென வுமையோ டமைத்தைதந்தங்கம், டன்னுமறை மாநலியாகத்தொடு பூசித்துப் பத்தியுடன் வேதியர்க்க ன்னந்திப்பத்துச், சொன்ன மணி யளித்ததினுட் சிவன்குருவாய் துய்யமகன் றனக்கசன வனத் துச்சோதி, யன்னையையும் பூசிக்கச் சித்திமுத்தி யாமெனவென் றுரைத்துல கடைந்தானன்றே.

இ-ள். அப்படி வயித்தியனுத சுவாமியைப் பூசித்த பிரமதேவன் பின்னும் அந்த ஸ்தலத்திலே ஈசானிய பாகத்தில் தன்பெயராகிய

பிர்மலிங்கமென ஒரு லிங்கமும் பிரதிஷ்டைபண்ணி உமையவன் சகித
மாய் பஞ்சாங்கத்துடனே வைத்து சொல்லப்பட்ட வேதமந்திர மகா
நியாசத்தோடு பூசித்துப் பின்பு வேதியர்களாகிய பிராமணர்களுக்கு
அறுவகை ரசவர்க்கங்களுடனே அன்னதான முதலான அனேக
தானங்களுடனே பத்து பத்து வராகன் சுவர்னதானங்களுங் கொடுத்து
சிலநாள் அந்த ஸ்தலத்திலே பரமசிவனைப் பூசனை செய்துகொண்டு
வாசஞ்செய்து சத்தியனாகிய வசிஷ்டரிஷிக்கு அசரணியபுரியாகிய
வைத்தியநாத சுவாமியையும், அசுரும்பிகையையும், மற்றும் உண்டான
லிங்கங்களையும் யாம் பிரதிஷ்டை செய்த பிர்மலிங்கத்தையும் பூசித்துக்
கொண்டு இந்த ஸ்தலத்திலே தபசு செய்துகொள்ள யோக்கியமென்று
சொல்லிப் பின்னுஞ் சகல சித்தியுமுத்தியும் இல்வாழ்க்கையும் பெறுவா
யென்று வாழ்த்தி அவ்வுலகாகிய சத்தியலோகத்துக்குப் பிரவேசித்தான்
பிரமதேவன். எ - று. (அ)

சத்தியன் பாரதிகணமுஞ் சென்றபின்பு தவவசிஷ்டன் றந்
தைமொழி தப்பாதங்கு, நித்தமுமே சத்திமுதற் றடங்கடோய்ந்து
நேசமுட னிலிங்கமனைத்தும் பூசித்து, பத்தியுடன் பிழைபதிமுன்
பணிந்துபோற்றப் பாகிமையோ டசனபதி புரிந்தஞான, முத்தி
புணர் வசிஷ்டமுனிக் குரைத்தசாரின்னு முனிவர்களே நைமிசத்
துள் ளுரைசெய்வோமே.

இ - ள். சத்தியனாகிய பிரமதேவன் சரசுவதியுடனே தன்னுடைய
பிரமகணங்களோடுஞ் சென்றபின்பு வசிஷ்டமுனியானவன் தகப்பன்
மொழி தப்பாமல் அந்த ஸ்தலத்திலே நித்தியமாய் சக்திதீர்த்த முத
லாகிய மற்ற தீர்த்தங்களிலேயும் ஸ்நானஞ் செய்து பத்தியுடனே மற்ற
இலிங்கங்கள் முதலனை பிர்மலிங்கத்தையும் பூசித்து பிழைபதியாகிய
பழமையாய் இருக்கின்ற வைத்தியநாத சுவாமியை மகாநியாச விதியோடு
அபிஷேகஞ் செய்து பூசித்துப் போற்றிசெய்து அடிபணிந்து தியானிக்
கப் பரமசிவன் உமையோடு பிரசன்னமாகிப் பின்னும் வசிஷ்டமுனிக்கு
உபதேசித்தாரென்று நைமிசாரணியத்துள்ளே பூசித்து தவஞ்செய்கின்ற
ரிஷிகளுக்குச் சொன்னார். எ - று. (கூ)

காசியினிற் கூவிளமுஞ் சிந்துத்தீ வின்னகரிற் காணுந்திபக்
தேசுதிரு வருணையினிற் சேலைத்திபஞ் சுகந்தஞ் சேர்க்கவானில்
மாசகற்றுங் குடக்கோண மாத்திரவமு மாதிர்த்த மருள்குற்றால
முசலிரா மீச்சரத்திற் கங்கைகொள் விரவிமுறை வைத்தியநாதம்.

இ - ள். வசிஷ்டமுனிக்குப் பின்னும் உபதேசிக்கின்றதெப்படி
யென்னில் காசி ஸ்தலத்திலே சிவலிங்கங்களுக்கு வில்வார்ச்சனை செய்
வதும், சிந்துத்தீவின் நகரிலே தீபாராதனை செய்வதும், பிரகாசம்
பொருந்திய திருவண்ணாமலையிலே வஸ்திரத்தினாலே அகண்ட தீபம்
வைப்பதும், சிவசிதம்பரநகரிலே நல்ல பரிமள கந்தங்கள் சாத்துவதும்,
குற்றம் போக்குகின்ற கும்பகோண ஸ்தலத்திலே அமுதாபிஷேகஞ்

செய்வதும், திருக்குற்றாலத்திலே தீர்த்தங் கொடுப்பதும், நான்கு பக்கத்திலும் புடைசூழ்ந்து சமுத்திரமொலிக்கின்ற இராமேச்சுரத்திலே கங்காசலம் அபிஷேகஞ் செய்வதும், வினைதீர்த்த பட்டணத்திலே சூரியபூசை பண்ணுவதும், முக்கியமென்று பின்னுஞ் சொல்வார் பரமசிவன். எ - று. (க0)

உருத்திரத்தான் முத்திபெற்ற திருத்தலையூர் புகபுகத்தோணி தன்னுள்ள, வருத்தமுறுங் கூவலைநயி சாரணியுள் தும்பைமலர் மகிழ்ந்துசாத்த, பெருத்ததிரு வாரூரின் வீதிவர மாயூரம் பிரியாப்பள்ளி, யிருத்தமலி பிழற்பதியே வைதிக மாநியாச மின்பமென்றார்.

இ - ள். வேதத்திலுளதாகிய உருத்திர மந்திரத்தினாலே முத்திபெற்ற தப்சுபதியாரிருக்குந் திருத்தலையூர் ஸ்தலத்துக்குப் போகிறதென்று சொல்வதும், பிரளயகாலத்திலே தோணி மிதிமேல் மிதந்திருக்கும்படி செய்த சீகாழி ஸ்தலத்திலே பயந்து கூவி அழைப்பதும், நைமிசாரணியத்துள்ளே தும்பை புஷ்பங்கள் சாத்துவதும், பெரிதாகிய திருவாரூரிலே வீதிவருவதும், மாயூர க்ஷேத்திரத்திலே பள்ளியறைக்குச் செல்வதுஞ் செல்வமிகுந்த திட்டகுடி ஸ்தலத்திலே வைதிகமான மகாநியாசங்களோடு அபிஷேகஞ் செய்வதும் முக்கியமென்று பின்னுஞ் சொல்வார் பரமசிவன். எ - று. (கக)

எப்பூசை தனக்கதிக மீசனைப் பூசிப்ப தெந்தத் தலத்திலேனுந், தப்பாம லநேகதினஞ் செய்வதிலங் கொன்றுசெயத் தருவதற், கொப்பாது செய்தார்க்குப் பாசவினை யகலும் ஓரானந்தம் ஒழியா வாழ்வும், செப்பாருங் குவிமுலையா ளொடுவினபந் தந்து பின்னுஞ் சிவத்திற் சேர்க்கும்.

இ - ள். எப்பூசையென்னும் அனேககோடி தேவர்களைப் பூசிக்கிறதிலும் பரமசிவனை பூசிக்கின்றது அதிகமாகும். மற்ற ஸ்தலங்களிலே தப்பாமல் அனேககாலம் பூசிக்கின்ற பலன்கள் இந்தத் தலத்தில் ஒருகாலம் பூசிக்கிறதற் கொவ்வாது அப்படி இதில் பூசிக்கிறவர்களுக்குப் பலன்களெப்படியென்னில்? அனேக பாக்கியங்களையும் பொற்கிண்ணம் போன்ற முலையாளுடைய போகபோக்கியங்களையுங் கொடுக்கும். பின்னும் பாசபந்தமாகிய பிறவிப்பிணியையுந் தீவினைகளையு மகற்றிப் பேரானந்தப் பெருக்காகிய சாயுச்சிய பதவியைச் சேர்விக்குமென்று பின்னுஞ் சொல்லுவார் பரமசிவன். எ - று. (கஉ)

அரன்முறையா லயனளிப்பு மரித்திதியு மயராகோ வுழனீர்க் கோன்னல், காமுடைய பானுநிதி பதிரிமென வாகினார் கலைமலர்ப் பெண், வரப்புதல்வி மணகீங்கா வரம்பெற்று ளோரராறு வாழிமன்னர், தரணியெலா மொருகுடைக்கீழ்ச் சாதித்தார் பின்னுமற்றோர் தவசிற்றோரே.

இ - ள். சிவபூசையிற் கொடுக்கின்ற பலன்களுக்கு மிஞ்சிவருகிற பலன்களின் பூசைகளுமில்லை. அப்படிப் பூசித்துப் பெற்றவர்களாரென்னில்? பிரமதேவன் சிருஷ்டிக்கவும், மகாவிஷ்ணு ரட்சிக்கவும், இந்திரன் தேவாதிபத்தியமும், அக்கினிக் காந்தியும், வருணனுக்கு சமுத்திராதிபத்தியமும், வாயுவுக்குப் பலமும், சூரியனுக்கு ஆயிரங் கிரணங்களும், குபேரனுக்கு சவுந்திபுமாக இப்படி மேன்மை பெற்றார்கள். இன்னுங் கலைமகளாகிய சரஸ்வதியும், மகா லட்சுமியும், பார்வதியுந் தங்கள் புருஷரை நீங்காத வரம்பெற்றார்கள். அதுவுமல்லாமல், மற்றோராகிய மானிடர் முதலானவர்களும் தங்கள்கோர்ப்பெற்று மேன்மை அடைந்தார்கள். அதல்லாமலும், ஆறு சக்கரவர்த்தி ராசாக்கள் தரணியாகிய பூலோகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டார்களென்று பின்னுஞ் சொல்லுவார் பரமசிவன். எ - று. (கரு)

காலையுச்சி மாலையோடு திங்கடிர யோகமுங் கார்த்திகையூர்
டாலமுண்ட யோகமும்வில் வைகறையுஞ் சைவவல்லு மாமுவாவுஞ்
சிலமோடு நதிதடத்து மாலயத்தும் தெய்மவில்வஞ் சிறந்தகொன்றை
மாலதியில் வழிமணல்மண் வன்மீக முதகமணி மாசினீற்றால்.

இ - ள். அப்படிக்காகிய சிவபூசை செய்கின்ற காலமும் இடங்களுமெப்படியென்னில்? பிராதக்காலம், மத்தியானம், சாயுங்காலம் இந்த வேளை மூன்றிலும், சோமவாரம், மகாப்பிரதோஷகாலம், கார்த்திகை நட்சத்திரம், சிவனுமயோகம், மகா சங்கிராந்தி, மார்கழிமாச விடியற்காலவேளை, அமாவாசி, பௌர்ணமி, மாசி சிவராத்திரி இந்த விசேஷதின காலங்களிலே முக்கியமென்றறிவார்கள். பின்னும் மிகுந்த ஆசாரத்துடனே நதிக்கரை, தடாகக்கரை, தேவாலயங்கள், சுத்தமாகிய கிரகங்கள், வில்வத்தடி, கொன்றையடி, குருந்தையடி, சண்பகத்தடி இந்தத் தானங்கள் மிகவும் பெரிதென்றும், பத்தியுடனே மணல், புற்றுமண், தீர்த்தம், உருத்திராக்கம், வெண்மையாகிய விபூதி, சந்தனம் இவைகளினாலே லிங்கமாகக் கண்டு பார்த்திவ லிங்கபூசை செய்வார்கள் பெரியோர்களென்று பின்னுஞ் சொல்வார் பரமசிவன். எ - று. (கசு)

வாணலிங்கம் படிகலிங்க மரகதமா லிங்கநரு மதையின்லிங்கஞ்
சோணலிங்கஞ் சுவர்னலிங்கம் பஞ்சலோக கங்காந்தஞ் சூதலிங்கம்
கோணையா ரிடந்தேவந் தைத்யலிங்கஞ் சுயம்புங் குன்றுச்சேணுங்
காணியொடு பிரதிஷ்டை காசிலிங்க மிவைகற்றோர் கருதுவோரே.

இ - ள். உடையவ ரிலிங்கபூசை எப்படியென்னில்? வாணலிங்கம், படிகலிங்கம், மரகதலிங்கம், நருமதலிங்கம், சோணகிரிலிங்கம், சுவர்ணலிங்கம், இரசிதலிங்கம், பஞ்சலோக லிங்கம், ரசலிங்கம், கிறப்பிரமாணலிங்கம் பின்னும் அழிவிலாத ஆரிடலிங்கம், தேவதாலிங்கம், சரலிங்கம், சுயம்புலிங்கம், பருவத சுயம்புலிங்கம், ஸ்தாபிதஞ் செய்திருக்கின்ற வேதப்பிரதிஷ்டாலிங்கம், காசிலிங்கம் இப்படிக்காகிய விசேஷமான லிங்கங்களைப் பூசிக்கிறது விசேஷமென்று பின்னுஞ் சொல்லுவார் பரமசிவன். எ - று. (கஎ)

Office of the
Director of Archaeology
Madras

தேசுபரி திசையப்பணிந்து கணபதியைப் பூசித்துச் சிறந்த
மூல, மாசகல நினைந்துவட முகநோக்கிப் பூதியக்க மணிந்துமலி.
நேசமுட னடித்தொளி தீபநிறைத் திசானிதி நிறுத்திவாமப், பாசி
மையோ டமைத்துமிழற் பதியசனும் பிகைதனையே பணிவா
ரன்றே.

இ-ள். அப்படி சிவலிங்கபூசை செய்கிறவிதி எப்படியென்னில்? சோதிவடிவமாகிய ஆதித்தனை நமஸ்கரித்து மகாகணபதியைப் பூசித்து பெருமை பொருந்திய பஞ்சாட்சர திருமந்திரத்தை உச்சரித்து பரிசுத்தமான சித்தத்துடனே வடக்குமுக நோக்கியிருந்து விபூதிருத்திராக்கந் தரித்துக்கொண்டு பூசாத்திரவியங்களுடனே அன்புபற்றி மணியடித்து அசாரதிகளையகற்றி அபதீப நிறைத்து பின்பு பரமசிவனை ஆசனத்திலே ஈசானதி ஐந்துமுகத்தோடும் இடதுபாகத்திலே உமையையும் நிறுத்தி ஆவாகனஞ்செய்து சகல உபசாரங்களுடனே பார்த்திவ பூசைக்குத் திருநாமமாகிய அசனும்பிகை வைத்தியநாதனேயென்று பணிந்து போற்றுவாரென்று பின்னுஞ் சொல்லுவார் பரமசிவன். எ-று. (௧௬),

தில்லைதலந் தீர்த்தங்க டேனிளநீ ரினிப்புங்கவ ரசத்திநெடு [ம்
குலமாகிநய் பால்தயிர் மயம்பொடிகோ ரோசனைகுங் குமநறுகந்த
டலநாவி சொண்டராற்கு ருத்திரமா நியாசத்தாற் பன்னிருயூற்றி
வலசாரி வந்ததளிர் மலர்தூவிச் சுவையமுது மதூரமேற்ற.

இ-ள். உடையவர் பூசைக்கு எப்படியென்னில்? தில்லைதலமாகிய நல்லெண்ணெய், விசேஷமாகிய தீர்த்தங்கள், தேன், இளநீர், இனிப்பாகிய கருப்பஞ்சாறு, சர்க்கரை, நவரசமென்கிற எலுமிச்சம்பழம், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலான ரசவருக்கபலாதிகள், ஒருகுலக் கூட்டத்தின் பசுவின் நெய், பால், தயிர், கோசலம், கோமயம், விபூதி, கோரோசனைத் திரவியங்கள், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், புழுகு பின்னும் அனேக வாசனைக் கட்டிகளுடனே சந்தனம் இவைகளை உருத்திரமா நியாசத்தின் மந்திரத்தினாலே அபிஷேகஞ் செய்து தளிராகிய வில்வம், புரசு, வன்னி, கிளுவை, தேமா, நாயுருவி, மந்தாரை, கொன்றை, அறுகு, தும்பை, பச்சரிசி இவைகளுடனே வாசனைபொருந்திய புஷ்பங்களுந்தூவி தூபதீப நிறைத்து ஆறுசுவைகளுடனே அன்னமும் நைவேத்தியங் கொடுத்து பிரதட்சண நமஸ்காரஞ் செய்து சிந்தித்தடிதொழுவாரென்று பின்னுஞ் சொல்வார். எ-று. (௧௭)

பெற்றிடு வரிக்கப்பேறும் பரப்பேறும் பிரியமுட னிலிங்கத்தாலே
சுற்றுமகற் கடியுயர மில்லாறும் வெடித்தபின்னஞ் சுராமண்ணொடு
மற்றுமுனி யடியார்திர மாலியமும் கிழமிடி மாநொய்சேரும்
பற்றொழி தீபமுணவில் பனிவரந்தஞ் செவுடுமை பங்கமாவர்.

இ-ள். அப்படி பத்தியுடனே சகல உபசாரங்களுஞ் செய்து பூசிக்கின்றவர்களுக்கு பலன்கள் எவையென்னில்? இகத்திலே போகபாக்யாதி

பாக்கிய அதிகாரங்களும், பரலோகத்திலே சாயுச்சிய பதவிகளு மடை வார்கள். அப்படிக்கில்லாமல் பின்ன லிங்கங்களும், வெடித்த லிங்கங் களும், லட்சண ஈனமானதும், லிங்கத்தின் சுற்றளவு பீடத்தடியளவு உயரத்தினளவு மூன்றுஞ் சரியொத்திலாத லிங்கங்களும், தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள், மானிடர்கள் பூசித்துக் கழித்த நிர்மாலிய லிங்கங்களும், பூசித்தபேர்களுக்கு தரித்திரமும், மகா வியாதிகளும் உண்டாம். அதுவுமல்லாமல் பூசை செய்யும்போது வேறே சிந்தையும் வாத்திய தூபதீப திரவிய நைவேத்தியங்களில்லாமல் செய்கின்றவர்கள் குருடு, செவிடு, ஊமை, நொண்டி இப்படி அங்கவீனமாய்ப் பிறப்பார்க ளென்று இன்னுஞ் சொல்வார் பரமசிவன். எ - று. (கஅ)

செயத்திரு வெண்ணீறு முகநீறு மகநீறுந் தெய்வக்கோயிற்,
றுய்யமறை யவரடியார் மடப்பளி நீறுடன் வனத்துச் சுடரினீறு,
மையகலச் சிரம்பால மார்புதோப்புட் சங்கம்வலப் புயம்பின்னக்க,
மைபமறத் தரித்திடுவோ ரங்குலிமூன்றிற் குழைத்து மன்றிக்
கொள்வார்.

இ - ள். அப்படி சிவபூசை செய்கின்ற பெயர்கள் திருவெண்ணீறு அணிந்து கொள்ளுவது எப்படியென்னில்? தன் கையினலே ஒருவர்க்க பசுவின் மயத்தால் செய்த நீறும் புகார்தகாலத்திலே வடவார்க்கினி யெழும்பி பற்பஞ் செய்த பூமியிலே வெளுத்துக் கிடக்கின்ற திருவெண் ணீறும், வேதப்பிராமணர்கள், தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள், யாகயக்ஞ வேள்விச்சாலைநீறும், தெய்வக் கோவில் மடப்பள்ளிநீறும், வேதப்பிராமணர்கள், பெரியோர்கள் அடுப்பெரியு நீறும், வனங்களிலே அக்கினிபட்டெரிந்து கிடக்கின்ற வெண்ணீறுங் குற்றங்களை அகற்றும் படி சிரசு, நெற்றி, மார்பு, தொப்புள், முழங்கால், வலதிடது புசங்கள், பின்புறம் நேத்திரம் இந்த ஸ்தானங்களிலே காலனுடைய பயங்கரக் கழிந்திடும்படி மூன்று விரல்களினுலுங் குழைத்தும் பின்னுங் குழை யாமல் சுத்ததாவளியமாகவுங் கொள்வார்களென்று பின்னுஞ் சொல்வார் பரமசிவன். எ - று. (கக)

அங்கியருக் கன்மதியே யரனக்கமதின் றுளியேயா முத்திராக்
கந் திங்களிலீ ரெட்டிரவி யீராறு செவ்வழலீ ரைந்துசேருந்,
தங்கம்வெள்ளி தாமிரம் பொற்சாதி நாலொன்று முதன்முகம்
பன்மூன்றே, துங்கமணி யுச்சிகளங் கைமார்கா தொண்ணூறோடாது
தொடர்ந்துகொள்வர்.

இ - ள். அப்படிச்சிவபூசை செய்கின்ற பெயர்கள் ருத்திராட்சமணி தரித்துக்கொள்ளவேண்டும். அதேதென்னில்? சந்திரன், சூரியன், அக்னி மூன்றும் பரமசிவனுக்கு மூன்று நேத்திரமாகும். அந்த நேத்திரத் தினலே விழுந்த சலத்துளிகளே ருத்திராக்கமென்று சொல்லப்படும். அப்படிக்காகியதில் சந்திரனில் பதினறு வெண்மை நிறம்போன்றது

பிரமசாதியாகும். சூரியனில் பன்னிரண்டு சுவர்ணநிறம் போன்றனது, க்ஷத்திரிய சாதியாகும். அக்கினியில் பத்து தாமிர நிறம்போன்றது, வைசிய சாதியாகும். இப்படி மூன்றிலுமுண்டான முப்பத்தெட்டு விங்க ளிலே மூன்றுநிற மணிகளுக்குமுண்டானது ஒன்றுமுதல் பதின்மூன்று முகங்கள் விளங்கும். அப்படி விளங்குகின்ற முகங்களுக்கு வேறு வேறு பலனுமுண்டாகும். அதல்லாமலும் சூத்திரசாதியென்னுங் கருநிறம் போன்று பக்கத்தில் விழுந்த துளிகள் அங்கமாக விளங்கும். இவைக ளெல்லாந் தங்கமென்னு முயர்ச்சி மணியாகும், இவைகளை சிரசு கழுத்து, மார்பு, கை, காது இந்த உறுப்புக்களிலே அழுந்தும்படி ஒவ் வொரு மணியும் ஓடாமல் தங்கம், வெள்ளி, தாமிரம், முத்து, பவளம், ரசம், வில்வவேரொடு, நூல். பட்டு இவைகளை இடையிட்டுத் தொடரச் சேர்த்துக் கொள்வார்களென்று சொன்னார் பரமசிவன். எ - று. (௨௰)

கலிநிலைத்துறை.

பூசைநேயமே புரைத்தான் போந்திட முனிவன்
மாசகன்று பேரானந்த மடைந்து மண்மடிந்து
நேசமொடு வெண்ணதி தடமினைத் தினிற்றோய்ந்து
பாசிழை யிடையம்பிகை பதிதனைத் தொழுதான்.

இ - ள். இப்படி பூசை நியமங்கள் உபதேசஞ்செய்த பரமசிவன் அந்தர்த்தானமாகினர். அதுகண்டு வசிஷ்டமுனி பரிசுத்தனாகி பேரா னந்தத்துடனே கூத்தாடி விழுந்தழுது எழுந்து பின்பு அதிக ஆசை யுடனே சுவேதாநதி தீரத்திலும், மற்ற தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து அசனாம்பிகையையும் வைத்தியநாத சுவாமியையும் அடிதொழுது போற் றினர் வசிஷ்டமுனி. எ - று. (௨௧)

பின்னு மும்மத முகத்தனை யிளையனைப்பேணி
தென்னுதித் திசைதுர்க்கையே முன்னையுஞ் சிந்தித்
தின்னலிக்கும் பத்திரி குடதிசைச் சென்றுகுணக்கே
பன்னகத்துறைந்திடுவனைப் பதுமனைத் தொழுதான்.

இ - ள். அப்படிப் பரமசிவனைத்தொழுது பின்னும் மும்மத கரி முகத்தனாகிய விக்னேஸ்வரனையுஞ் சுப்பிரமணிய சுவாமியையுந் தொழுது இரண்டுபுறமான தெற்கு வடக்கு இந்தத் திக்கிலிருக்கிற துர்க்கா பரமேஸ்வரியையுஞ் சத்த மாதாக்களையும் பூசித்து, இன்னலாகிய துன்பப் பிசாசுகளை ஓட்டிவிடுகின்ற பத்திரகாளியிருக்கும் மேற்குத் திக்கிலே சென்று தரிசித்து அப்பால் கிழக்கே சென்று பன்னகசயன னை பள்ளிகொண்ட பெருமாளைச் சேவித்துப் பின்பு பதுமாசன சுக்கி ரனைப்பெருமாளையுந் தொழுது போற்றினன் வசிஷ்டமுனி. எ - று. ()

பிரமலிங்கமு மற்றிலிங்கமும் பேணியே பூசித்
தானைவேதமா நியாசத்தா லருச்சித்துப் போற்றிக்

கரணந்தன்னு ளிற்றன்பெயர் லிங்கங்கண் வைக்கத்
தருணமென் றஞ்ஞெவென வொலிசாற்றிடும் விண்ணே.

இ-ள். அலைகளைப் போற்றிய பின்பு பிரமலிங்கமாகிய பிரம தேவன் பிரதிஷ்டை செய்த லிங்கமும், மற்ற லிங்கங்களையும் பூசித்துப் பின்பு அரணுகிய வைத்திய லிங்கத்தை வைதிக வேதமாகியாசத் தினுலே அபிஷேகித்துப் பூசித்து தன்னுடைய பெயரால் லிங்கஸ்தா பனஞ் செய்யவேண்டுமென்று அந்தக்கரணத்திலே எப்போது எந்த இடத்தில் வைக்கலாமோவென்று நினைத்தார். அப்போது ஆகாசத்திலே பரமசிவனருளால் அசரீரியாய் ஒரு சத்தம் பிறந்தது. எ-று. (உக)

தேசுறற் பதிக்குத் தரத்தினிற் குடமுகமாய்
யீசனைப் பணிந்திட வெனமறை யவனிதுகேட்
டாசையோ டிலக்கணத் திடலிலிங்கமு வைத்து
மாசினுமமே வசிஷ்டமா லிங்கமென் றறைந்தே.

இ-ள். அப்படிப் பிறந்த சத்தமானது பரமசிவ லிங்கத்துக்கு வடக்கே மேற்குமுகமாகப் பூசிப்பாயென்றது. அதுகேட்டு ஆசையுடனே பஞ்சலட்சணப்படி திடமாகிய ஒரு சிவலிங்கம் மேற்கு முகமாகப் பிர திஷ்டை செய்து வசிஷ்டலிங்கமென்னும் நாமமுரைத்தார் வசிஷ்ட முனி. எ-று. (உஉ)

தேவர்மாதவர் சித்தர் வித்தியா தருமசன்க
காவனந் தனில்விராண னதிதீரத் தினிற்கதித்து
நாவலர்மொழி மறைப்படி நயனமும் விளக்கி
பாவனத்துடன் பணிந்தி விருந்தனர் பலகால்.

இ-ள். அப்படி பிரதிஷ்டை செய்யும்போது தேவர்கள் மகா தவமுனிகள் சித்தவித்தியாதரர்கள் வேதியர்கள் இப்படிக்கு அனேகம் பெயர்கள் அசஞரணிய க்ஷேத்திரத்திலே விராணநதி வாவியினிடமாய் வேதாகம விதிப்படி நயனப்பிரதிஷ்டை, பிராணப் பிரதிஷ்டை செய்து பூசித்து அடிபணிந்து பின்பு அதிலே வசன்பதியைத் தொழுதுகொண் டிருந்தார் வெகுகாலம் வசிஷ்டமுனி. எ-று. (உங)

இருந்தவன் முனிமூல் நாடியை யெழுப்பியே ரே
ழுரும்பதிக்கு மப்புறத்துறு மாயிர மிதழுட்
பொருந்த நோக்கிய பூரணநிஷ்டையிற போந்தான்
பெருந்தலப் புனன்மூழ்கிப் பின்பெற்ற மாண்புரைப்பாம்.

இ-ள். அப்படி வெகுகாலம் பரமசிவனைப் பூசித்துக்கொண்டிருந்த வசிஷ்டமுனியானவர் மூலநாடியை யெழுப்பி ஈரேழுமண்டலங்களுங் கடந்து ஆத்மப் பிரகாசமிருக்கின்ற ஆயிரத்தெட்டிதழுள்ளே பொருந் தும்படி அமுததாரை துளித்திட அகண்டாகாரத்திற் சொக்கி பூரண

ஷிஷ்டையிலிருந்திட்டார். அப்பால் பெரிதாகிய அந்த ஸ்தலத்திலே யிருக்கின்ற தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து பெற்ற பெருமைகளைச் சொல்வாம். எ - று. (உசு)

வசிஷ்டர் உபதேசம்பெற்று பூசித்த சருக்கம் முற்றிற்று.

# தேவர்கள்

# மகிமைபெற்ற தீர்த்தச் சருக்கம்.

அருந்தவம் புரிந்தரி யயனண்ட ராயுதத்தால்
வருந்த மாறிடாவரம் பெற்றே மகமறமனைத்துந்
திருந்தச் செய்திடான் றிரிசிர விருத்திரவஞ்னன்
பிருந்த மீதிற்சக்கிரி பொருதுற் றிளைத்ததற்பின்.

இ - ள். மூன்று சிரசோடுங்கூடிய விருத்திராசுரனென்று ஒரு அசுரன் அனேகநாள் அரிதாகிய தபசுகளைச் செய்து பிர்மா, விஷ்ணு, இந்திராதி முதலான தேவர்களுடைய ஆயுதங்களினாலேயுஞ் சாவிலாத வரம்பெற்று யாகாதி யக்ஞ விரத தான தரும தபசு பூசைகளை நிறை வேறவொட்டாமல் தேவர்களுக்கெல்லாம் இடுக்கண் செய்துகொண் டிருந்தான். அப்படியிருந்த அசுரனுடைய சேனைகளின் மேலே தேவேந் திரன் அனேகந் தடவை சண்டைகள் செய்திளைத்துப் பயந்தோடின பின்பு தேவர்களெல்லாங்கூடி ஆலோசித்தார்கள். எ - று. (க)

அண்டர் மன்றில்வந் தரிபுரந்தரனையே நோக்கிப்
பண்டுசூரருஞ் சுரருந்தன் படைகளை வைத்திட்
டுண்ணச் செருவுற்ற பொழுதி லங்கோர் முனிப்சியாற்
றின்றனன் படை யென்பினிற் சேர்ந்திட வன்றே.

இ - ள். அப்படிக் கூடியிருக்கின்ற தேவசபையிலே மகாவிஷ்ணு வெழுந்தருளி தேவேந்திரனைப் பார்த்துச் சொல்லுவார். பண்டென்னு முன்னுள் ஒரு தேவேந்திரன் காலத்திலே அசுரர்களுந் தேவர்களுங்கூடி தங்கள் தங்கள் ஆயுதங்களை திருப்பாற்கடற்கரையிலே வைத்துப் போட்டு அமுதங் கடைந்துகொள்ளும்போது எனக்கு உனக்கு என்று மல்லுகள் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது ததீசியென்று ஒரு தேவரிஷி தன் பசி பொறுக்கமாட்டாமல் அங்கிருந்த ஆயுதங்களை யெல்லாம் சாப்பிட்டு தன் எலும்புகளிலே தொத்திடக் கொண்டான். எ - று. (உ)

கொடைத் ததீசியம் முனியென்பு படையெனக்கொண்
டடித்தவென்றனர் மாலவ்வுரைக்கு கந்தபொன் னுரையால்

கடற்றிடற் பதியசன வாரணிய முட்கண்ட
தடத்தினும மெண்மூன்றுஞ் சக்கிரி படிந்ததுவும்.

இ - ள். மகாத்தியாகியாகிய ததீசியென்னும் அந்த முனிவினுடைய முதுகெலும்பை வாங்கி விசுவகருமாவினுலே கடைந்து வச்சிராயுதமாகப் பிடித்தடித்தால் அந்த விருத்திராசுரனைச் செயிக்கலாமென்றார். மகாவிஷ்ணு. அதன்பின்பு அதற்குபாயஞ் சொல்லிய குருமொழிபபடி சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்திலே அசனாரணிய க்ஷேத்திரத்திலே யிருக்கின்ற விசேஷமாகிய தீர்த்தங்கள் இருபத்து நான்கின் பெயர்களும் அதிலே ஸ்நானஞ்செய்து இந்திராதிகள் பெற்றபேறுகளுஞ் சொலலு வார். எ - று. (க)

சத்திஞானம் ராமம்பரத னனு சனனீர்
சத்துருக்க னங்குசம் லவனுசா னகமைந்து
மித்துவித சாதவல கெசாநதீ முகமோ
மத்திரீக்குங் கவயஞ் சரபங்கநத மாதனம்.

இ - ள். அந்த ஸ்தலத்திலே யிருக்கின்ற இருபத்து நான்கு தீர்த்தத்தின் பெயர்கள் எப்படியென்னில்; சத்திதீர்த்தம, ஞானவாவி இராம தீர்த்தம், பரததீர்த்தம், இலக்குமணதீர்த்தம, சத்துருக்கனதீர்த்தம, குச தீர்த்தம், லவதீர்த்தம், சீதாகுண்டம், மைதுவித தீர்த்தம், சாதவல தீர்த்தம், கெசாதீர்த்தம், ததிமுகதீர்த்தம், பிரமகத்தி நீக்கிப் கவய தீர்த்தம், சரபதீர்த்தம, கந்தமாதன தீர்த்தம இப்படிக்காகிய தீர்த்தங்க ளுடனே பின்னும். எ - று. (உ)

பின்கவாட சமுங்கயம் பெருஞ்சாம்ப வாங்கதமு
மன்விபீஷணமா சுக்கிரீவ வமமுனி வசிஷ்ட
மென்னனும மேனுடிம்பொன் றடமெண் மூன்றிடத்துந்
தன்பலங்க ளேவருத்தி யாய்மூழ்கி டததருமே.

இ - ள். கவாடசதீர்த்தம், கசதீர்த்தம், சாம்பவதீர்த்தம், அங்கத தீர்த்தம், இராட்சத ராசனுகிய விபீஷணதீர்த்தம், சுக்கிரீவதீர்த்தம், வசிஷ்டதீர்த்தம், அடியேனுக்குதவிய அனுமந்ததீர்த்தம் இப்படிக்கு இருபத்துநான்கு தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்று வேறு வேறு பலன்களைக் கொடுக்கும் ஸ்நானம் செய்த பேர்களுக்கு. எ-று. (௩)

சற்குருமொழியாற் சத்துருக்கனனீர் சுதமகன் றோய்ந்துத் தீசி, விற்குலையென்பு தநதிடப்பெற்றே விருத்திரனற்சுரத்தினை யறுத்தான், நற்குணபரதத் தடத்திலிற்பங்க ணனையகாரணனு பேந்திரனுய்த், தூர்க்குலத்தசுரர் மாண்டிடச்செய்தே தொல்வினை யகற்றினன் மற்றே.

இ - ள். சற்குருவாகிய பிர்க்கலைப்பதியினுடைய உபதேசத்தினுலே அந்த ஸ்தலத்திலிருக்கின்ற சத்துருக்கன் தீர்த்தத்திலே ஸ்நானம் பண்

ணிய தேவேந்திரன் ததீசிரிஷியுடைய விற்குலையம்பொடு மிருக்கின்ற வெலும்பு தந்திடப்பெற்று யாவராலுஞ் செயிக்கப்படாத விருத்திராசுரனுடைய சிரசுகளை யறுக்கலானான். பின்னுமவன் பரதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து ஒருமாதம் பரமசிவனைப் பூசித்துவர நாராயணனே உபேந்திரனாகி அசுரசேனைகளை வதைத்திடச் செயம்பெற்றான். அதுவுமல்லாமல் இருஷிகளுடைய பூர்வசாபங்களையும் போக்கிக் கொண்டான் தேவேந்திரன். எ - று. (௬)

வார்முலைச்சசியோ டிலவமாதீர்த்த மாடிமஞ்சனுஞ் சயந்தனையே, பேர்கொள்ளதிகப் பலம்பெறவடைந்தான் பிழற்பதிமுன்சத்திப் புனலால், சீர்வசித்துவமே தேவர்தென்புறத்துத் தென்யமுனைப் புனன்மூழ்கி, மேயார்பதினோந்தி லயன்றனக்கரிய வுயரணிமாதியை யுவந்தோன்.

இ - ள். வாராகிய கச்சிறுக்கியிருக்கின்ற முலையாளென்னும் இந்திராணியுடனே தேவேந்திரன் லவதீர்த்தத்திலே ஒருமாதம் ஸ்நானம் செய்து தனக்கு அதிகமான பலத்துடனே யிருக்கின்ற சயந்தன் என்னும் பிள்ளையைப் பெற்றான். பின்னும் வைத்தியநாத சுவாமியின் சந்நிதியிலிருக்கின்ற சத்திதீர்த்தத்திலே மூழ்கி, சர்வ சித்திகளுங் கொடுக்கின்ற வசித்துவ சித்தியை அடைந்தான். அதுவுமல்லாமல் அந்த ஸ்தலத்துக்குத் தென்புறத்திலே வருகின்ற தட்சிண யமுனையென்னும் வெள்ளாற்றிலே ஒருபட்சம் படிந்து பிரமதேவனுக்கு மரிதாகிய அணிமா சித்தியை யடைந்தான் பின்னுந் தேவேந்திரன். எ - று.

திங்களொன்றினில் வாசிஷ்டத்தான் மகிமாசெயம்பெறத் திருகிரிமாகால், பங்கயப்புனலா லகிமாசனகியினால் பரமனுக் கங்கினானத்தில், துங்கபிராப்தி சுக்கிரீவம் பிராகாமியந் துல்லபமெவர்க்குமீசத்துவ, மங்கதப்புனலா லதிபனும்க்கசத்தின் மற்றதனால் மிகப் பலமடைந்தான்.

இ - ள். வசிஷ்ட தீர்த்தத்திலே ஒருமாசம்படிந்து மகிமா சித்தியையடைந்து மகிமை பெற்றான். பின்னும் மாருததீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து கிரிமா சித்தியை யடைந்து எங்குஞ் செயம்பெற்றான். அதுவுமல்லாமல் சீதாகுண்ட தீர்த்தத்திலே படிந்து, ஆயிரத்தெட்டு இதழ்களோடு மிருக்கின்ற பரமவீட்டை யளிக்கும் லகிமாசித்தியை யடைந்தான். பின்னும் பரமசிவனுக்கு அக்கினிமூலையிலே இருக்கின்ற ஞானவாவியிற்றோய்ந்து மேன்மையாகிய பிராப்திசித்தியை யடைந்தான். பின்பு சுக்கிரீவதீர்த்தத்திலே மூழ்கி பிராகாம்ய சித்தியை யடைந்தான். அப்பால் அங்கதப் புனலிலே மூழ்கி யாவர்க்கு மரிதாகிய ஈசத்துவ சித்தியை யடைந்தான். அதுவுமல்லாமல் கசதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தேவலோகத்துக்கு அதிபதியானான். மற்றுமிருக்கின்ற தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து அனேக பலன்களைப் பெறும்படிப் பரமசிவனைப் பூசித்துப் போற்றிசெய்து மகிமை பெற்றான் தேவேந்திரன். எ - று. (அ)

தக்கனூர் வேள்விதன்னிற் றன்கர மிழந்தவங்கி
கக்குநோய் கொண்டொங்கி கழிந்தும்பின் சாபமுற்று
துக்கமோ டிருக்கக்கும்பன் சொல்லினாற் சுரபஞ்சென்று
மிக்கவேழ் மாதைப்போற்றி யெழுகரம் பெற்றானன்றே.

இ - ள். அதுவுமல்லாமல் அக்கினிபகவான் தட்சப்பிரம யக்ஞியத்திலே கைகளேழும் அறுபட்டுப் பின்னும் சயரோகமுற்றுத் தன்னுடைய காந்திகளெல்லா மிழந்துஞ் சாபங்களி லகப்பட்டு அதிக வியாகூலத்துடனிருந்தான். அப்போது அகஸ்திய மகாரிஷி உபதேசத்தினாலே சுரபக்ஷேத்திரமாகிய அந்த ஸ்தலத்திலே சென்று பரமசிவனைப் பூசித்து சத்தமாதாவாகிய பிராமியாதி தேவதைகளைப் பணிந்து எழு கைகளும் பெற்றான் பின்னும் அக்கினிதேவன். எ - று. (௯)

சத்திதோ யத்தாற்சருவ பட்சனைச் சாபந்தீர்ந்தான்
சுத்தமா நதியிலாடிச் சோதிசெய் யுருவபெற்றான்
சத்துருக்க னத்தாற்றேவர் தாழிரு சிரமுமுற்றான்
முத்திரா மத்திலாடி முன்வினை யகற்றிவாழ்ந்தான்.

இ - ள். சத்திதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சருவபட்சனாகி சாபங்களைப் போக்கினான். அப்பால் சுத்தமாகிய சுவேதநதியிலாடி சோதிப் பிரகாசமாகிய கொடிய தீக்ஷண ரூபத்தை அடைந்தான். பின்னுஞ் சத்துருக்கன் தீர்த்தத்திற்றோய்ந்து தேவர்களெல்லாந் தாழ்ந்து வணங்கி அவிர்ப்பாகங் கொள்ளப்பெற்றான். பாததீர்த்தத்திலாடி இரண்டு சிரசு பெற்றான். இராமதீர்த்தத்திலாடி பூருவஞ்செய்த தீவினைகளெல்லாம் அகற்றி சுகமடைந்து வாழ்ந்தான் அக்கினிதேவன். எ - று. (௧௦)

பெற்றேம னிருபாகாலு பெரும்புனற் றடங்கண்மூழ்கி
பெற்றவுந் தருமம்பெற்றான் பிழற்பதித் தென்வெள்ளாற்றி
னூற்றமே காதசியா லுயர்பிதி ரூலகுற்றேமன்
பற்றிய புனலாடிக்கோ பாலனென் படிக்கவுற்றான்.

இ - ள். பின்னும் அந்த ஸ்தலத்தின் தீர்த்தங்களினாலே பெற்ற பேறுகளெப்படியென்னில்? எமதருமராசாவானவன் மாதாவின் சாபமுற்று துக்கித்திருந்தபோது சனகரிஷி உபதேசத்தினாலே அந்த ஸ்தலத்திலிருக்கின்ற இருபத்தநாலு தீர்த்தங்களுமாடி பெற்றவென்னுந் தாய் சாபநீங்கித் தருமநெறி நீதி பெற்றான். பின்னும் பரமசிவனுக்குத் தென்புறமாகிய சுவேதநதியிலே ஏகாதசியிற்படிந்து உயர்ந்த பிதிருலகுக்கு அதிபதியானான். அதுவுமல்லாமல் அன்புபற்றி பரமசிவனைப் பணிந்து சித்திரகுப்தனென்னும் நல்ல குணவானாகிய கணக்கனைச் சேர்ந்தான் எமதருமராசன். எ - று. (௧௧)

ஐந்துநா ளனையதீர்த்த மாடிவயித் தியனைப்போற்றி
வந்தோர் வருணனன்றோய மனைத்திறுக் கதிபனானான்

தொந்தமாய் ஞானவாவி தோய்ந்தொரு மூன்றுநாளே
யெந்தையை யுமையைப்போற்றி யெதிரிலாப் பலனுற்றான்கால்.

இ - ள். பின்னும் அந்தத் தீர்த்தங்களின் பெருமை எப்படியென்னில்? வருணதேவன் ஐந்து தினங்களில் அந்த தீர்த்தங்களெல்லாமாடி வைத்தியநாதனைப் போற்றிச் செய்ய சகல தீர்த்தங்களான சமுத்திரம் முதலிய தீர்த்தங்களுக்கெல்லாம் அதிபதியானான். அதுவுமல்லாமல், தொந்தமாய் மூன்றுதினம் ஞானவாவியில் படிந்து வாயுதேவனானவன் எந்தையாகிய பரமசிவனையும் அசனாம்பிகையையும் பூசித்து தனக்கெதிரில்லாத பலன்களையும், எங்கும் வியாப்பியமுமாக வடைந்தான். எ - று.

முந்துவை வச்சுதத்தில் மூழ்கிராக் கதர்கோனானு
னந்தராக் கதரிலங்கைக் கதிபனாய்க் குபோன்முன்னம்
மைந்தகமே யிழந்துயேத முற்றுநற்றூர் மைந்தர்
சிந்தையுங் கலங்கித்தூரு வாசனால் செப்பச்சென்றே.

இ - ள். பின்னும் அந்தத் தீர்த்தங்களின் பெருமை எப்படியென்னில்? முன்னாலே வைவசுத கல்பத்திலே நிருதிபகவான் அந்தத் தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து இராக்கதர்களுக்குக் குருவாகி திக்குப் பதித்துவமுமாயினான். பின்னும் அப்படிக்காகிய இராட்சதர்களிருக்கின்ற லங்காபுரிக்கு முன்னாலே அதிபதியாயிருந்த குபேரனை இராவணனோட்டிவிடத் துயாமுற்றுத் தரித்திரனாய்க் களத்திர புத்திராதிகளுடனே சிந்தை கலங்கினான். அப்போது துருவாசரிஷி உபதேசஞ் செய்ய அந்தத் தலத்திற் சென்றான் கால் நடையாகக் குபேரன். எ - று.

எற்றமு மில்லான்சத்தி தீர்த்தந்தோய்ந் திந்திராதிக்குத்
தோற்றிலா தயையைப்பெற்றே துய்யவா காயவாக்கான்
மாற்றிலா ஞானவாவி யைந்துநா டோய்ந்தெவர்க்கும்
தேற்றிலா மகாகச்ச பந்தினைச் சேர்ந்தான்சிற்றில்.

இ - ள். அப்படி அந்த ஸ்தலத்தில் வந்த குபேரன் சத்தி தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து இந்திராதி தேவர்களுக்கு மரிதாகிய தயாநிதியைப் பெற்றான். அதல்லாமல் பின்பு ஆகாசவாணி வாக்கெழும்பியது கேட்டு மாற்றிலாத ஞானவாவியில் ஐந்துநாள் மூழ்கி யார்க்குங் கிடையாத மகா கச்சபநிதியை இலகுவிலே யடைந்தான் பின்னுங் குபேரன். எ - று. (௩௬)

திசைமுகக் கரியநீலஞ் சேர்ந்தனங் கவாட்சநீரா
னசையர சர்க்குலீலை நவில்குந்தஞ் சரபந்தன்னால்
விசையிலோர் திங்கள்சிதை மேன்றடத் தான்முகுந்தம்
புசையளி வரநீர்ப்பேதம் படைத்தனன் சாம்பவத்தால்.

இ - ள். திசைமுகனை பிர்மதேவனுக்கு மரிதாகிய நீலநிதியை கவாட்ச தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தடைந்தான். பின்னும் இராசாக்களுக்கு ஆசைகளோடுங் கூடிய லீலைகளைக் கொடுக்கின்ற குந்தநிதியை

சரபதீர்த்தத்திலே மூழ்கியடைந்தான். அதுவுமல்லாமல், மேன்மை பொருந்திய சீதாகுண்டத்தில் தோய்ந்து ஒரு மாதத்தில் அனேக பலன் களைக் கொடுக்கின்ற முகுந்த நிதியை யடைந்தான். பின்னுஞ் சாம்பவ தீர்த்தத்தில் ஒருமாதம் மூழ்கிச், சேத்திரத்திலே வர நீர்ப்பேத நிதியை யடைந்தான் பின்னுங் குபேரன். எ - று. (கஙு)

துறவருக் கரியசங்கம் வசிஷ்டந்தோய்ந் தெளிதிற்பெற்றான்
மறையவர்க் கரியபற்ப மடைந்தன னிராமதீரால்
குறையில் சுக்கிரீவனீரைக் கொண்டமோ பத்பமற்று
ளாறுலவப் புனலான்மைந்த னளகூபரன் றன்னைப்பெற்றான்.

இ - ள். துறவராகிய தவரிஷிகளுக்கு மரிதான சங்கநிதியை வசிஷ்ட தீர்த்தத்திலே மூழ்கி வெகு லெகுவிலே பெற்றான். அதல்லாமல் ராமதீர்த்தத்திலே படிந்து வேதியர்களுக்கு மரிதாகிய பதும நிதியை யடைந்தான். அதுவுமல்லாமல் குறைச்சலில்லாத சுக்கிரீவ தீர்த்தத்திலாடி விட்டுணுவுக்கு மரிதாகிய மகா பத்மநிதியை இலகு யத்தினத்திலே யடைந்தான். அதல்லாமலும், வாசனைகளோடுங் கூடிய லவதீர்த்தத்திலே தோய்ந்து நளகூபரனென்னும் மைந்தனைப் பெற்றான் பின்னுங் குபேரன். எ - று. (கச)

துங்களா னத்திற்றோய்ந்து தொல்லள கநிபனானன்
பங்கயத் தடங்கண்மற்றப் பரிபுமண் டலமும்பெற்று
னங்கவ னரனைப்பூசித் தந்தனர் களித்துப்போற்ற
மங்கைபா கனும்வந்துற்று மாசிநே கிதமானானே.

இ - ள். உயர்ச்சியாகிய ஞானவாவியிற் படிந்து பழமையாகிய அளகாபுரிக்கு அதிபதியானான். பின்னும் அங்கிருக்கின்ற தாமரைகள் நெருங்கிய மற்றத் தீர்த்தங்களிலே தோய்ந்து குதிரை வாகனமும், புஷ்ப விமானமும் எறும்படியும் உத்தரமண்டலங்களும் பெற்றான். அப்படி எல்லா தீர்த்தங்களுமாடிய பின்பு அனேக தான தருமங்கள் செய்து அறுசுவைகளுடனே வேதப்பிராமணர்களுக்கு அன்னங் கொடுத்து மங்கைபாகனாகிய பரமசிவனைப் பூசித்துப் போற்றி செய்யப் பரமசிவ னுமையுட னெழுந்தருளக் கண்டு அதிக சினேகிதருமானான் குபேரன். எ - று. (கரு)

பின்னுமத் தடத்திற்றேவர் பெருந்தவர் யட்சர்நாகர்
மன்னர்மன் னுறுவர்த் தியசுர ராக்கதர்மானுன
முன்னிய தேர்வர்தீய நூர்வன விலங்குமற்றுந்
துன்னியே தோய்ந்துபோற்றிச் சுவர்க்கமு மறைந்தாரன்றே.

இ - ள். பின்னும் அந்தத் தீர்த்தங்களினாலே மகிமை பெற்றவர்க ளாரென்னில்? அரிய தபோதனர்கள், யட்சர்கள், கின்னரர்கள், ராச

ராசனுகிய ஆறு சக்கரவர்த்திகள், அசுரர்கள், இராக்கதர்கள், பரிபூர்ண ஞானப்பிரகாசம்போன்று தெளிந்த மகாத்துமாக்கள் கொடிதாகிய தீவினைகள் செய்கின்ற தீயர்கள் இப்படிச்சாகியவர்களுமல்லாமல் ஊர் வன பசு முதலிய மிருகசாதிகள் மற்றுமென்ற சீவராசிச் சராசரங்களும் அந்த ஸ்தலத்திலே தீர்த்தமாடிப் பரமசிவனைப் பணிந்து சுவர்க்க மடைந்தவர்கள் கோடானுகோடியென்று பின்னுஞ் சொல்லுவாம். எ-று.

அத்தடத் தலத்தில்வாச மானவர்க் கமரர்வானுப்
பத்தநா ணீய்ந்த தொக்கும் பலனோடி ரசிபிற்றேய
முத்தியுஞ் சுவர்ணபார மொருபாரோர் ரீய்ந்ததொக்குஞ்
சத்தியே யதுவுமிலக்கந் தந்தியு மளித்ததொக்கும்.

இ-ள். அப்படி விசேஷமாகிய தீர்த்தங்கள் அனேகமிருக்கின்ற அந்த ஸ்தலத்திலே ஐந்துநாள் வாசஞ்செய்கின்றவர்களுக்கு பலன் எப்படியென்னில்? தேவலோகத்துக் காமதேனுவிலே ஆயிரம் மறையோர் களுக்கு தானங் கொடுத்த தொக்கும். அப்பலன்களோடுங்கூடிய சுவேத நதியிலே ஒருதரம் ஸ்நானம் செய்தபேர்களுக்கு சீவன்முத்தியும் ஆயிரஞ் சுவர்ண பாரதானஞ் செய்த பலனுக்கும். அப்பலன்களுடனே கூடி யிருக்கின்ற சத்திதீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய லட்சம் யானை தானங் கொடுத்த பலன்களொக்கும். அப்பலனுகிய தீர்த்தத்தின் பெருமைகளைப் பின்னுஞ் சொல்லுவாம். எ-று. (கக)

மதுமலர்த் தடத்தின்மாசி மகமறு நாள்வைத்தீசன்
வதுவையோ டன்னீராடு வானதற் கயன்கோவேட்டுப்
டதியோடு நெடுமாலுகர் பார்தவ முனிவர்மற்றோர்
கதிபெற வருவாரன்னுட் கண்டிடக் கொடுக்குமுத்தி.

இ-ள். மதுமலராகிய குவளைகளும், தாமரைகளும் நெருங்கியிருக் கின்ற அந்த சத்திதீர்த்தத்திலே மாசிமாச மகநட்சத்திரத்தின் மறுநாளிலே பரமசிவனுகிய வைத்தியநாத சுவாமி திருக்கல்யாண கோலமாய் அசனாம்பிகைத் தாயாருடனே நீர்விளையாடுவார். அதற்கு பிரமதேவனுடனே மகாவிஷ்ணுவும் தேவேந்திரனுடனே அஷ்டதிக்குப் பாலகர்களும் யட்சர கின்னர கெருட காந்தருவர்களுஞ் சித்தவித் தியாதர தேவமுனிகளும், மற்ற பூலோகத்து மகாத்துமாக்கள் பெரி யோர்களுங் கண்டு தரிசித்துக் கதிபெறும்படிக்காக வருவார்கள். அந்நாளிலே அந்தத் தீர்த்தத்திலே பரமசிவனையும் பார்வதியையுங் கண்டு தரிசித்தபேர்களுக்கு இகலோகத்திலே சகல சாம்பிராச்சியாதி பத்தியங்களும், பரலோகத்திலே சூரியர்தாமும் அடைவார்களென்று பின்னுந் தீர்த்தப்பெருமை உரைப்பார். எ-று. (உ௦)

சத்தியின் பலமுனான் தடப்பலன் சுலம்லக்க
முத்தமோ டியுந்தானு முதனிரா கவத்தின்மூழ்க

சத்தியங் கன்னிகோடி தானமே யதுவுங்கைகேசா
புத்திர மடுவிலக்கம் பூசுரரில்செய் புண்ணியம்.

இ-ள். சத்திதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்த பலத்துக்கு சமானமான ஞானவாவியிலே ஒருதரம் மூழ்கினோர்க்கு லட்சங் குதிரை தானஞ் செய்த பலனாகும். அப்பலன்கள் கொடுக்கின்ற இராமதீர்த்தத்தில் மூழ்க கோடி கன்னிகாதானஞ் செய்த பலனாகும். அப்படி சத்தியமாய் வருகின்ற பலனாகிய பாததீர்த்தத்தில் படிந்த பேர்களுக்கு லட்சம் வேதப் பிராமணாலயங்கள் கட்டிக்கொடுத்த பலனென்று பின்னுஞ் சொல்வாம். எ-று. (௨௧)

துட்டசத் துருக்கனத்திற் றோயக்கோ வொருபானூறு
விட்டவப் பலனும்பின்றோ னிப்பல னனையவாவி
வெட்டிய பலன்குசத்தில் விணவர்க் கடுத்தகோயிற்
கட்டுமா யிரமாமலவக் சயப்புனன் மூழ்கச்சொல்வாம்.

இ-ள். பிரமாலயங் கொடுத்த பலன்களாகிய சத்துருக்கன் கயத்திலே மூழ்க, ஆயிரங் கோதானங்கள் பண்ணிய பலனாகும். அப்பலனான லட்சமணதீர்த்தத்தில் படிந்திட அனேகவாவிகூப தடாகங்கள் வெட்டிய பலனாகும். அந்தப் பலன்களைக் கொடுக்கின்ற குசதீர்த்தத்திலே தோய்ந்திட தேவர்களுக்கு ஆலயங்களாயிரங் கட்டிய பலன்களாகும். அப்பலனாகிய லவகுண்டத்திலே படிய பலன் சொல்லுவாம் பின்னும். எ-று. (௨௨)

மூவழ லகலார்புண்ணிய மொடுமா தாதிபூசை
மாவிர தங்களுற்ற விப்பல மொன்றுநூறும்
வாஞ்சிதை யனுட்புக்க வந்நுமங் கங்கைநற்
கோதாவரி கிருஷ்ண நருமதைப்பலன் றுவிதமைந்தம்.

இ-ள். லவகுண்டத்துக்குப் பலன் ஆகவனீயக காருகபத்தியர் தட்சிணாக்கினியம் என்று மூன்றழலுங் கைவிடாதவர்கள் புண்ணியமும், தாய், தந்தை, குரு, பிராமணர்களைப் பூசை செய்கின்ற பலமும், பிரதோஷம், சோமவாரம், ஏகாதசி இப்படிக்காகிய அனேக விரத பலன்கள் ஆகிய இப்பலன்களையெல்லாங் கொடுக்கும். அப்பலன்கள் ஒன்று நூறாய் கிடைக்கின்ற சீதாகுண்டத்தில் மூழ்க, கங்கை, சத்த கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, சோணபத்திரி, காவேரி இந்த மாநதிகளிலே ஸ்நானம்பண்ணிய பலன்களாகும். அப்பலன்களைக் கொடுக்கின்ற மைந்த துவிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யப் பலன் சொல்வாம். எ-று. (௨௩)

ஆடிடப் பலனும் பிர்ம்மாயிரம் பிரதிஷ்டைசெய்த
மேலாடு சாதவலம் மோதமூன்று தானங்கமொக்கும்
நாடுகே சரத்திலாறு சாததிர நவின்றதொக்கும்
நாடுக ளனைத்துமீந்த நற்பலன் தத்முகத்தில.

இ-ள். மைர்ததுவித்தீர்த்தத்தின்பலன் ஆயிரம் பிர்மப்பிரதிஷ்டை செய்த பலனாகும். அப்பலனாகிய சாதவலதீர்த்தத்திலே படிய மூன்று வேதங்களும் படிப்பித்த பலனாகும். ஒருவருக்குப் படிப்பித்த அப்பலன் கொடுக்கின்ற கேசரதீர்த்தத்திலே தோய ஒருவருக்கு ஆறசாஸ்திரங்கள் சொல்லிய பலன்களொக்கும். அப்பலனாகிய திமுக தீர்த்தத்திலே தோய்ந்திட சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தைத் தானஞ்செய்த பலனைக்குமென்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (உ௭)

மாமணி யனேகமீந்த மர்பலன் கவயநீரி
லாமது சரபந்தோய லக்கம்வான் றருவீந்திட்ட
தாமகன் றுறவராவா சாரிவே த்தியர்க்ட்காக
நேமமுற் றதுவேயொக்கு நீள்கந்த மர்தனத்தில்.

இ-ள். பின்னும் அந்தத் தீர்த்தங்களின் பலன் எப்படியென்னில்? மாமணியாகிய சிவரத்தினங்கள் அனேகந் தானம் பண்ணிய பலமொக்கு மொருதரம் கவயநீரிலே தோய்ந்திட. அப்பலன்களுடனே கூடிய சரப தீர்த்தமாடிட லக்ஷம் கற்பக விருக்ஷங்கள் தேவர்களுக்கு தானங் கொடுத்த பலனாகும். அப்பலனாகிய கந்தமாதன தீர்த்தத்திலே தோய தேவர்கள், குருக்கள், பிராமணர்கள், பசுக்கள் இவர்களுக்காக உதவிய பலன்களுண்டாமென்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (உ௮)

அப்பல னொடுக்வாட்சம் அறப்புன லானசாலை
பற்பல மண்டபங்கள் பகுதத்தும் பலன்கசத்தி
லப்பணி யீயுஞ்சாம்ப வத்தட் மெத்தகோடி
விப்பிரக் கமுதளித்த வபபல னடைவீர்தாமே.

இ-ள். அப்படிக்குதவிய பலன்களான கவாட்ச தீர்த்தத்தி லெட்டியசாலைகள் தோப்புகள் வழியிலே அனேகமண்டபங்கள் சாவடிகள் பண்ணிவைத்த பலன்களாகும். அப்பலனாகிய கெசதீர்த்தத்திலே தோய அனேகவித பூஷணங்களை உத்தம ஸ்திர் ஜாதிகளுக்கு தானங்கொடுத்த பலனைக்கும். அப்பலனாகிய சாம்பவ குளத்தில் மூழ்க கோடி பிராமண போசனம் பண்ணிய பலனைக்கும் என்று பின்னுஞ் சொல்லுவார். எ - று. (உ௯)

அங்கதப் புனலிலாட வாடக வரைசிதைத்துப்
பங்கமிலோர் கட்கியும் பலன்வீபீ ஷணத்திற்றோய
துங்கமால் சிலையிலக்கஞ் சொல்பலன சுக்ரீவதநி
லிங்கமோர் கோடிசெய்த விபபல னுகுந்தானே.

இ-ள். அங்கத தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்ய மகமேருகிரியைச் சின்னங்கள் செய்து தானங்கொடுத்த பலனாகும். அப்படி மேலோர்கட்குத் தங்கமலை தானஞ்செய்த பலனாகிய விபீஷண தீர்த்தத்தில் படிய கன்ம்பொருந்திய இலக்கம் மகாவிஷ்ணுவாலயப் பிரதிஷ்டைகள் செய்த பலனைக்கும். அப்பலன்களைக் கொடுக்கின்ற சுக்கிரீவ தீர்த்தத்தில்

படிந்திட அனேக சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த பலனாகு மென்று பின்னுஞ் சொல்வாம். எ - று. (௨௭)

குருமுனி வசிஷ்டந்தோயக் கோடிமால் பிரதிஷ்டையாகும்
பெருகிய மாருதத்தில் பிணியகற் றிட்டதாகும்
வருதட மனைத்துந்தோய்ந்த வப்பல னருஞ்சத்தி
யொருதரந்தோய விப்பிர ருரைக்கவப் பலன்களாமே.

இ - ள். இப்படி வருகின்ற பலன்களையெல்லாங் கொடுக்கின்ற வசிஷ்ட தீர்த்தத்திலே தோய கோடி விஷ்ணு பிரதிஷ்டை பண்ணிய பலமாகும். அப்பலன் கொடுக்கின்ற பெரிதாகிய அனுமதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்ய ஏழைகளுக்கு வந்த பிணிகளைத் தீர்த்த பலனாகும். இப்படிக்கு எல்லாப் பலன்களுங் கொடுக்கின்ற சத்தி தீர்த்தத்திலே படிய இந்தத் தீர்த்தங்களெல்லாம் படிந்து பெற்ற பலமாகும். அப்படிக்காகிய தீர்த்தங்களிருக்கின்ற விசேஷ க்ஷேத்திரமாகிய வாசிஷ்ட ஸ்தலமகாத்மியத்தை ஒருதரம் வேதப்பிராமணர்களாலே எங்கேயிருந்து கேட்டாலும் இந்தப் பலன்களெல்லாங் கொடுக்குமென்று பின்னுஞ் சொல்லுவாம். எ - று. (௨௮)

வண்மைபதன் றலப்பதியில் மயிர்கணிக்கி நதியாடி
யெண்மூன்றிடத்து நதியிடத்து மியன்றபொன் னுடையாடாம்
மண்பெண்ணி ரெள்ளுமளித்திட பிதுருந்தன்னோ டனைவோரும்
விண்ணுடதனிற் சுகமுற்று மேலாம்வீட்டை மேவுவரே.

இ - ள். அப்படி வண்மை பெருகிய அந்த ஸ்தலத்திலே சருவாங்கமும் சுத்தமாகும்படி வபனங்கள் செய்துகொண்டு சுவேத நதியிலே தீர்த்தமாடி அந்த நதியிடத்திலும் மற்ற இருபத்துநான்கு விசேஷமாகிய தீர்த்தக்கரைகளிலேயும் தங்கள் தங்கள் யதாசத்தி இயன்றமாத்திரம் தங்கம், வெள்ளி, வஸ்திரங்கள், பசுக்கள், பூமிகள் கன்னிகாதானங்களுடனே பின்னுந் திலோதக தானங்களுஞ் செய்தாலுமில் அவர்களுக்கு ஒன்றுகோடி பலனாகி தானுந் தன் பிதுருக்களும் மற்றுந் தன் குலத்து வம்சத்துள்ளோரும் நரகம் நீங்கி தேவலோகத்திலே போகபோக்கியாதிகளை யனுபவித்து மோக்ஷப்பதவியான சாயுச்சியத்தை அடைவார்கள். எ - று. (௨௯)

எண்மூன்றிடத்துத் தடங்கடனி லிகழ்ந்துமலங்கள் கழித்திடுவோ
மண்மீறிடுவர் மெய்யன்றி மாசுநீவாடைக ளணைத்துங் [ர்
கண்பார்த்திடு மவர்கட்குக் கணக்கிணரகம் விதிப்பரப்பால்
பெண்பாகத்தர் தனக்கிலலம் பெற்றமனுவின் மாண்புரைப்பாம்.

இ - ள். அப்படிச் சொல்லின்ற இருபத்துநான்கு விசேஷ தீர்த்தங்களிலேயும் இகழ்ச்சியாக நினைந்து மும்மலங்கள் கழித்திட்டோர்களுக்கும், உடுத்தி ஸ்நானம் பண்ணுவதன்றி, மாசுகளைப் போக்குவதற்காக

ஒரு நூல் முதலிய பலவகை வஸ்திரங்களை நனைத்திட்டோர்களுக்கும், மண்ணுகளையும் நூறுகளையுங் கொணர்ந்து தீர்த்தங்களை தூர்த்துப்போட பார்த்திருந்தோர்களுக்கும் கணக்கிலாத நரகவாதனைகளுண்டாக விதிப்பார்கள். அப்பால் பெண்பாகனுகிய வைத்தியநாதசுவாமிக்கு திருக்கோயிற் கட்டிய பெருமைகளான மனுச்சக்கரவர்த்தி கதையைச் சொல்லத் தொடங்குவாம். எ - று. (கூ0)

தேவர்கள் மகிமைபெற்ற தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

# திருக்கோயிற் கட்டிய
# மனுமன்னன் சருக்கம்.

ஆசிரியம்.

தேசுவெய்பரிதிக் குலத்தினி லாதிசெம்மல் யோனியை யன்றிச் செனித்துக், காசினிமுழுது மொருகுடைசெலுத்தி கலக்கமில்பதி யயோத்தியினில், வாசமுமுடைய மனுவென்பா னலவன் றன் மரபுமாசகல வென்றெண்ணி, வாசவன் ருறைசிகன்றனுழைச் சென்று மலரடி வாழ்த்திவாய் விண்டான்.

இ - ள். பிரகாசம்பொருந்திய கடுரமான கதிர்களோடுங் கூடிய சூரிய குலத்திலே, அயோனிசனு புற்பவித்துக் காசினியாகிய பூலோகமெல்லாம் ஒருகுடைக்கீழ் அரசு செலுத்துகின்ற கலக்கமிலாத அயோத்தியாபுரியிலே வாசமாகிய மனுச்சக்கிரவர்த்தி யென்பவன் தன்னுடைய வமிசங்களெல்லாம் ஈடேறும்படி நினைந்து குருவைத் தேடவேண்டுமென்று தேவலோகத்துக்குச் சென்று தேவகுருவாகிய பிரகஸ்பதியைத் தொழுதுபோற்றிச் சொன்னன் மனுவரசன். எ - று. (க)

எந்தனை யடிமைகொள்க வென்றிறையை யிருந்தபொன்னெக் குவன்மாண்பு, தந்திமைக் கரிகடாங்கு பூவுலகு தருபவமன னுனைச் சாரச், சிந்தையி லரங்கோர் சிறந்த விப்பிரனே திசைமுகன் சேய்தவ வசிஷ்டன், விந்தமே போற்றுவிரெனக் கேட்ட விறைவனனம் முனியிடம வரைந்தான்.

இ - ள். அப்படிக்காகிய மனுவரசன் எந்தனை யடிமைகொண்டு உபதேசிக்கவேண்டுமென்று கேட்டான். அப்போ தவனை நோக்கி பிரகஸ்பதி சொல்லுவார். உன்னுடைய பலமும் பெருமையும் தந்தங்களோடு கூடிய நீலகிரிபோன்ற அஷ்டகசங்கள் தாங்கப்படாநின்ற

பாவமிருந்த பூலோகத்துக்கு இராசாவானபடியினாலே உனக்கு வாக்குருவாகப் போகாது ஆகையால் அங்கிருக்கின்ற பிரமதேவன் குமாரனாகிய மிருதவம்பெற்ற பிரமரிஷியென்னும் வசிஷ்டரிஷியினிடத்திற் சென்று அவரைப் போற்றுவீரென்றார். அதுகேட்டு வசிஷ்டரிஷியிடத்தைத் தேடிச் சென்றான் மனுவரசன். எ - று. (௨)

வந்தமன்ன னவனத்தடன் சுவேதமாநதி யாதவமுனியோ, டெந்தையையுங் கண்டிவ்விட மினிதென் றிருவடியைத் தொழுது விண்ணரசா, வுந்தனையடைவா யென்றவனென்ற மிறைவனை முனி மகன்மகந்து, தொந்தவினைப் பிறவிநீக்கிடு ஞானஞ் சொல்லெனு தென்றனன் பின்மன்.

இ - ள். அப்படித் தேடிவந்த மனுவரசன் வசிஷ்டரிஷி யாச்சிரமமாகிய அசனாரணியத்துக்கு வந்து அந்த வனத்தையும் அதிலிருக்கின்ற விசேஷ தீர்த்தங்களையுஞ் சுவேத நதியையும் அநேகந் தவரிஷிகளுடனே வசிஷ்டரிஷியையும் எந்தையாகிய வைத்தியநாத சுவாமியையுங் கண்டு இவ்விடம் மகா முக்திக் க்ஷேத்திரமென்றெண்ணி அங்கிருக்கின்ற வசிஷ்டரிஷியை அடிபணிந்து விண்ணரசாகிய பிரகஸ்பதி பகவான் தேவரீரைக் குருவாகவென்று போற்றென் றுரைத்தாரென்றான். அதுகேட்ட வசிஷ்டரிஷி ஞானதிருஷ்டியாலறிந்து தொந்தமாயிருக்கின்ற பாவவித்தாகிய பிறவித்துன்பங்களை நீக்குகின்ற மருந்தான ஞானமந்திரத்தை பூலோக பாவங்களை யேற்கின்ற இராசாவாகிய உந்தனுக்கு உபதேசிக்கக் கூடாதென்றார். அப்படி சொல்லக்கேட்ட பின்பு இராசா. எ - று. (௩)

தீப்பவெம் பிணியை யறுத்திடும் வைத்தியன் சேவடிவணங்கவம்முனிக்கே, யய்யன் வந்தருளி யம்முனி மனுவை மாசகற்றிட்டு மாஞானத், துய்ய வக்ஷரமே பிரமவேளையினிற் சொல்ல மன்பெற் றுளமகிழ்ந்து, மெய்யனே தேவேயென வலஞ்சுழன்று வீழ்ந்து போற்றியுங் குருமொழியால்.

இ - ள். தீவினைகளினாலே விளைகின்ற கொடிதாகிய பாவங்களுக்கேதுவான பிறவிப்பிணிகளை யறுத்திடுகின்ற வயித்தியனான பரமசிவனைப் பணிந்து போற்றினான். அப்போது அம்முனியாகிய வசிஷ்டரிஷிக்கு பரமசிவன் அனுக்கிரகஞ் செய்யக்கண்டு பின்பு மனுவை யுகந்து சீர சுத்திகள் செய்து மார்க்கியாசங்களுடனே பிரமிய முகூர்த்தத்திலே சுத்தமாகிய ஞானபஞ்சாட்சரத் திருமந்திரத்தை உபதேசித்தார். அப்படிப் பெற்றவன் ஆனந்தக் களிகூர்ந்து மெய்யனே! தேவனே! எனது சற்குருவே! என்று ஸ்தோத்திரம் செய்து பிரதக்ஷணம்பண்ணி வீழ்ந்தடிதொழுது பின்னுங் குருவின்மொழியால் மனுராசன். எ - று. ()

ஈசனுக் கங்கிஞான வாவியின் முன்னிறைவிக் கீசான மித் தலத்திற், றேசுமாலிங்கம் பிரதிஷ்டை செய்து தெய்வமுனித்

தடம்மூழ்கி, மாசின்மற் றிலிங்க மனைத்துமே போற்றி வயித்திய
நாதன் றனேத்திப், பாசிழை யசனவல்லியைப் பணிந்துபஞ்ச திர
வியங்களாற் பணிந்தான்.

இ-ள். ஆதிலிங்கமாகிய பரமசிவனுக்கு அக்கினி மூலையிலே உமை
யவளுக்கு ஈசானியத்திலே ஞானவாவிக்கு முன்பதாகவே மனுலிங்க
மென்று பிரகாசம்பொருந்திய மகாலிங்கம் பிரதிஷ்டை செய்தான்.
அதன்பின்பு தென்யமுனையாகிய சுவேதநதி முதலான மற்ற புண்ணிய
தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து அங்கிருக்கின்ற சுத்தமாகிய லிங்கங்
களையெல்லாம் பணிந்துபோற்றி வயித்தியநாத சுவாமியையும் அசனாம்
பிகையையும் வணங்கும்படி பஞ்சதிரவியங்களாகிய பூசாத்திரவியங்களி
னாலே அபிஷேகித்து புஷ்பங்களினாலே அருச்சித்துப் பின்னும் மனு
ராசன். எ-று. (௫)

தோன்முத லனைய கருவியு முழங்கத் தொன்மறை யோத
கீதமோடா, டானபதி தனக்கறு சுவைமதுவ மமுதுபட்சியங் களு
மளித்து, நான்மறை யவர்கட் கன்ன மாடைகள்பொன் னன்மணி
களிபெறவளித்து கோன்றலந் திங்கண் மூன்றுமே யிருந்து குரு
வினைத் தொழுதடி கொண்டே.

இ-ள். தோல் முதலாகிய தோற்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்
கருவி. மிடற்றுக்கருவியென்னும் பஞ்சவாத்தியங்களுடனே பதினெண்
வாத்தியங்களு முழங்க, பழமையாகிய நான்மறை யொலிகளுடனே
அனேகந் தோத்திரங்கள் செய்து ஆனபதியாகிய வயித்தியநாத சுவா
மிக்கு மதுரசங்களோடுங் கூடிய அறுசுவை பதார்த்தங்களுடனே அன்
னங்கள் பட்சியங்களும் நைவேத்தியங்கள் செய்துபோற்றிப் பின்பு
அநேக கோடி வேதப்பிராமணர்களுக்கு அன்னதானத்தோடு வஸ்திரங்
கள் முதலான சுவர்ண நவரத்தினங்களு முதவி மிகுதியாகவே அந்த
பீடத்திலே மூன்றுமாசம் தலவாசமிருந்து பரிசுத்தனாகி அப்பால் தன்
னுடைய பட்டணஞ் செல்லவேண்டுமென்றெண்ணி குருவாகிய வசிஷ்ட
ரிஷியைத் தொழுது போற்றி செய்தான் மனுராசன். எ-று. (௬)

அடியேன் மரபுக் காசானு யருளவென் றென்னகாப்பும்
படியே யனுப்பென் றன்தன்னைப் பார்த்து வசிஷ்டன் கோசலனே
பிடிகூர்த் தூலஞ் சிங்கமளி பொருகி விஷவிருட் சங்களோடு
செடிசூழ்க் இதுகண் மிகப்பீதி செய்வ திதனைச் சிதையென்றான்.

இ-ள். அப்படி யடிபணிந்து அடியேன் குலத்தார்களெல்லாம்
ஈடேறும்படி குலகுருவா யருள்செய்யவேண்டுமென் றுரைத்துப் பின்பு
யனுப்புவிடை கொடுக்கவேண்டுமென்றான். அப்படிச் சொல்லிய மனு
வைப் பார்த்து பிடியென்னும் காட்டானைக் கூட்டங்களுஞ் சிங்கம் சார்த்
தூலபட்சிகளும் வண்டினங்களும் இப்படிக்காகிய துஷ்டமிருகஜாதிகள்

வாசமாய் மூன் மூதலியானகளுடனே விஷவிருட்சங்கள் சூழ்ந்து பயங்கரங்கள் செய்கின்ற இந்த வனத்தைச் சேதித்து நாடு செய்ய வேண்டுமென் கோசலராஜனே யென்றார் வசிஷ்டரிஷி. எ - று. (எ)

குருவாக்கியத்தைக் கொண்டரசன் கொடுங்கானத்தை யழித்தளகா
புரியொப்பன மாநகர்செய்தும் பிறவும்பதிகள் பலவமைத்தும்
பிரியாவொரு மூன்றாண்டிருந்து பெற்றவரசி னேவலெலாம்
விரியச்செய்ய வொருநாளில் விண்ணவர்க்கிறைவர்க் கில்லமென.

இ - ள். அப்படிச்சொன்ன குருவாக்கியத்தைக் கேட்டு கொடிதாகிய வனங்களையெல்லா மழித்து அளகாபுரி அமராவதி யுவமை தாழ்ந்திடும்படிக்கான குருவின் பெயர் விளங்க வசிஷ்டபுரியென்னுஞ் சிறப்பாகிய பட்டணஞ் செய்து, அதின் பக்கங்களிலே தழைத்தோங்கும்படி அநேக கிராமங்களுஞ் செய்து இந்த ஸ்தலத்தைவிட்டுப் பிரியாமல் மூன்று வருஷம் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கிற ஒரு நாளிலே ஆகாசத்தில் திவ்யப்பிரகாசமுண்டாகிய, அதிலே பரமசிவனுக்குத் திருக்கோயிற் கட்டென்று ஒரு தொனி உண்டாயிற்று எ - று. (அ)

உரைத்தமொழிகேட் டரசனுமே யுள்ளமகிழ்ந்து தொழுதேத்திக்
குரைப்பாதத்தார்க் கொருமூன்று கோபுரத்தோடே நான்குமதில்
நிரைத்தட்டால் மண்டபங்க ளெண்ணிரைத்தங் காலயம்வெண் [தான்
வரைத்தொத் பதிபோன்மாநந்தி வாய்பாலகர்பொற் கதவும்வைத்

இ - ள். அப்படிக்கெழும்பிய சத்தத்தைக் கேட்டு பரிபூரணானந்தமடைந்து தொழுதேத்தி குரைப்பாதத்தாகிய சிலம்பிரைசையோடுங் கூடிய பாததாமரையையுடைய பரமசிவனுக்கு மூன்று சிங்காரமாகிய கோபுரமும், நான்கு மதில்களும், நிரைநிரையாகிய சோடச மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபங்களுடனே உயர்ந்த அட்டாலங்க மேடைகளும், ஆஸ்தான மண்டபம், நிருத்த மண்டபம், வாத்திய மண்டபங்களும் மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அர்த்தகிரகம், கர்ப்பக் கிரகங்களும், பின்னுஞ் சுற்று மண்டபங்களும், இரட்டைப் பஞ்சாங்க வேலைப்படியே சுத்த வெண்பிரகாசம்போன்ற கைலாசகிரி ஸ்தலத்திற்கு உவமையாகச் செய்வித்து அதிலே விசித்திரமான மகா நந்திகேசுவரரும், துவாரபாலகர், அஷ்டபைரவர், நவக்கிரக தேவர்களும் வைத்து சிங்காரமான வீரகண்டாமணிகள் கட்டிய பொன் கதவுகளும் பூட்டினன் மனுச்சக்கரவர்த்தி அரசன். எ - று. (கூ)

பின்னுங்குருவின் மொழிப்படியே பிழகீசகனுக்கு நித்தவிழா
பன்னுமாத விழாவொடு பரிதிகுடஞ்சேரு மகத்திலே
பொன்னித்தில மாடைத்தேரும் புனல்விழாவு மேநடக்க
மன்னனமைத்தா னென்னுளு மாறுமுழக்கும் பாதமுமே.

இ - ள். அப்படிப் பூட்டித் திறக்கின்ற வைத்தியனாத சுவாமிக்கு குருமொழிப்படி நித்திய உற்சவம், மாச உற்சவங்களுடனே மாசிமாசம் மகநட்சத்திரம் பூர்ணமியிலே வர்ச உற்சவமாகிய சுவர்ண முத்து சித்திர வஸ்திராலங்கிருதமாகிய மகா இரத உற்சவங்களும் அடுத்த நாளிலே சுவேத நதியிலே தீர்த்த உற்சவமும் பின்னுஞ் சத்திதீர்த்தத் திலே புனல் விளையாட்டும் அனேக வாத்திய ஓசைகளுடனே பரத நாட்டிய சங்கீதங்களும் எந்நாளுமாறாத இரைச்சல்களுடனே நடக்கும் படி செய்தான். எ - று. (க0)

மகரப்பரிதிப் பூசத்தில் வடிவேற்காத்தான் றன்முருகுந்
தகரிற்சாமுண் டிக்கரியிற் சவுத்கிதந்தி முகனுக்கே
நிகரின்னெடுமாற் கிடபமிதுனம் நிறைந்தவாடிப் பூரத்திற்
சகமுமனைய சராசரங் கடந்தாடனக்குஞ் சாறுசெய்தான்.

இ - ள். பின்னுமெப்படியென்னில்? மகரப் பரிதியாகிய தைமாசத் தில் பூசநட்சத்திரத்திலே வடிவேற்கரசனாகிய சுப்பிரமணிய சுவாமிக் குத் திருநாளும், ஆவணி மாசத்தில் சுக்கிலபட்சஞ் சதுர்த்தசியிலே விக்கினேஸ்வரனுக்கு உற்சவமும், சித்திரை மாசத்திற் பூர்ணமியிலே மேற்கு பத்திரகாளிக்குத் திருவிழாவும், வைகாசிப் பூர்ணமியிலே பள்ளி கொண்ட திருமாலுக்கு உற்சவமும், ஆனிப் பூரணையிலே தென்னிருந்த மகா விஷ்ணுவுக்கு பிர்மோற்சவமும், பின்னும் அண்டசராசரங்களை யெல்லாந் திருவுந்திக்கமலத்திலே வைத்திருந்தீன்ற அசனாம்பிகைக்கு ஆடிப்பூரத்திலே மகோத்சவமும் செய்தான் மனுச்சக்கிரவர்த்தியரசன். எ - று. (கக)

கலி நிலை

அரன்றிருப்பணி யாக்கியோ னனேக பேருடன்றன்
குருவும் பூரண மதியினிற் சத்திகுண்டத்தி
லுருவுநேசங் தெழுந்து தகமோடிருக்கு மப்பொழுதே
பெருமழ விவிடப்பிழற் பதியுட லுமைநோன்றி.

இ - ள். இப்படி பரமசிவன் திருப்பணி உற்சவங்களும் மற்ற தேவ காரியங்களும் நடத்துவித்த மனுவரசன் அனேக கூட்டங்கள் சூழக் குருவுடனே ஒரு பூர்ணமியிலே சந்நிதி முன்பாகிய சத்திதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து பரமசிவன் பாதத்தை நினைந்து ஈரத்துட னெழுந் திருக்கும்போது மழவிடையாகிய பெரிதான ரிஷபவாகனத்தின்மீதில் வைத்தியனாத சுவாமியுடனே அசனாம்பிகையும் எழுந்தருளினன். எ - று. (கஉ)

சிவகற் பனைசிவ னமைப்பென விரண்டு
ணிவகுத்த பொற்கோயி லற்புத மெமக்குன
தாவல்செப்பியி வாமென மனுப்பயந் தஞ்சித்
தேவதேவர்க டொழுதிடுஞ் சேவடி சிறந்தே.

இ - ள். அப்படியெழுந்தருளிய பரமேசுவரி சொல்லுவான். சிவ கற்பனையென்றும் ஈசுவர கற்பனையென்றும் இரண்டுண்டு. அதில் சிவ கற்பனையாகிய நீ செய்த கோவில் மிகவும் அற்புதமாகியது எமக்கு. ஆகை யால் உனக்கு ஆவலாகிய வேண்டிய வரங்கள் கேட்பாயென்றான். அதுகண்டு பயந்து அஞ்சி ஓலங்களிசுடர்ந்து தேவதேவர்களெல்லார் தொழுவரிதாகிய பாதாரவிந்தங்களைப் பணிந்து இரண்டுகைகளுமேந்திக் கேட்கலுற்றான் மனுவரசன். எ - று. (௧௩)

தேவர்மாதவர் கின்னரர் சித்தர் விப்பிரரு
மூவுலகினு மசுரரு மரசரு முவந்து
யாவதாயுசுள் ளளவுமென் னெறிமொழி யமையத்
தாவெனப்பினெங் குலத்தினர் தாழ்விலா தளிப்பீர்.

இ - ள். அப்படிக் கேட்கின்றதெப்படியென்னில்? தேவர்கள், மாதவர்கள், கின்னரர்கள், சித்திவித்தியாதரர், வேதப்பிராமணர்கள், இராசாக்கள் இப்படிக்காகியவர்களிருக்கின்ற சுவர்க்க மத்திய பாதாள லோகங்களுஞ் சந்திர சூரியப்பிரகாசம்போன்ற ஸ்தானங்களிலும் யாவ தாயிசுள்ளளவும் யான் செய்கின்ற தரும நீதிதானே உவந்துகொண்டு நடக் கும்படி கட்டளையிடவேண்டுமென்றும் பின்னும் என்குலத்திலே பிறக் கின்றவர்கள் கீர்த்தி புண்ணிய சீலர்களாயிருக்கும்படி அநுக்கிரகஞ் செய்வாயென்றான் மனுவரசன். எ - று. (௧௪)

என்றமன்னனுக் களித்துமை பின்னுமே யுரைப்பாள்
உன்றன் குலத்தவ ரிடையொருவன் பஞ்சமனு
மென்றுமற் றொருவன் கருப்பத தியனும்மற்
றொன்றுகெட்டன னிடையின் மற்றோர் சுபரெனவே.

இ - ள். அப்படி வரங்கேட்ட மனுராசனுக்கு அசனும்பிகை கடாட்சமருளிப் பின்னுஞ் சொல்லுவாள். உந்தனுடைய குலத்தின் நடுவிலே ஒருவன் குருசாபத்தினாலே சண்டாளனாய்ப்போவான். மற் றொருவன் கருப்பத்தியஞ்செய்து அநாசாரனாய்ப்போவான். பின்னும் மற்றொருவன் நடுவிலே அதோகதியை யடைந்துபோவான். மற்ற செனனமானவர்களெல்லாம் புண்ணியசீல கீர்த்தியுடையவர்களாய் வாழ் வார்களென்று அநுக்கிரகஞ் செய்தாள் பரமேசுவரி. எ - று. (௧௫)

சத்திநற் றடத்தின் குடதிசைபி னின்றளித்த
சத்தியம் பிகைதனக் கணியாடை பொன்மணிபோ
டத்தியம் பதியாறு சேரளித்திட் டந்தணனைச்
சுற்றிவீழ்ந் தடிதொழுது பின்றன் னகர்புக்கான்.

இ - ள். சத்திதீர்த்தத்துக்கு மேலைத்திக்கிலே பிரசன்னமாகி வந்தளித்த உமையவளுக்கு அனேக பூஷண வஸ்திரங்களும் நவரத் தினங்களும், இயற்கைப் பாத்திரங்களும், பின்னும் அனேகமாகிய கிராமபூமிக ளாற்றுப்பாய்ச்சல் வரும்படிசெய்துவிட்டு அப்பால் அந்தண

ளுகிய வசிஷ்டரிஷியைப் பிரதக்ஷிணம்பண்ணி குருபூசைசெய்து அனுப்பி விடைபெற்றுத் தன்னகராகிய அயோத்தியாபுரிப் பட்டணஞ் சென்றுன் மனுவரசன். எ - று. (கசு)

சவ்ரபப்பதி கருணையாற் றரணியோர் குடைக்கீழ்த்
தவறிடாநெறி செலுத்தியே தருமவிஞ் ஞானம்
நுவலுமேழ்வகை நூலென வறம்க மமர்கள்
பவமோடாற்றல் வர்ணுச்சிரமம் பிதிரெனப் பகர்ந்தான்.

இ - ள். அப்படி சென்றிருந்த மனுராசன் சௌரபப்பதியாகிய வயித்தியனுத சுவாமியின் கருணையாலே பூலோகமெல்லாம் ஒரு குடைக்கீழ்ச் செலுத்தி வரப்பிரசாதப்படி தருமவிஞ்ஞானமென்று ஏழுபேதங்களோடு இருக்கின்ற நூலாகிய சத்தகாண்டங்களிலே தருமங்கள், வேள்விகள், வியகாரயுத்தங்கள், பாவங்கள், சமாதானமாகிய தண்டனைகள், சாதிவருணச்சிரமங்கள், பிதிருக்களுக்குத் திருப்தியாகிய சிரார்த்தங்கள் இப்படி ஏழுபேத நூல்களைச் சொல்லத் தொடங்கினுன் மனுவரசன். எ - று. (கஎ)

சுருதி மீதறிவா மனுச்சொல்லிய நெறியுட்
டருமமுப்பதோ டிரண்டு தண்டனை யாருநான்கு
வருணாசிரி னுளமுந்தொழி லண்டத்தம மிரண்டு
மரணர் வானவர்க்கும் மாருமூன்று மையிரண்டே.

இ - ள். அப்படிச் சொல்கின்ற மனுநீதிநூல் பின்னு மெப்படியென்னில்? சுருதியாகிய நாலுவேதங்களுக்கும் அதிக நெறியாகும். அதினுள்ளே தருமங்களென்று சொல்லியது முப்பத்திரண்டு. தண்டனையும், நான்காகியது. பொருள்தண்டனை, உபத்திரவதண்டனை, மரணதண்டனை, இழமதண்டனையென்றும், வருணச்சிரம நாலிலே பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்று மிவர்களொன்றுக்கொன்று தொடர்ச்சி நீங்கியும் இந்தச் சாதியோர்கட்கு ஆறுதொழில் நடத்துவதென்றும், அதில் பிராமணத்தொழிலாகியது யக்கியவிருத்தி; யாசகமளித்தல், தானம் வாங்குதல், தானங் கொடுத்தல், வேதமோதுதல், வேதமோதுவித்தல் இப்படி ஆருகியது. இராசாக்களுக்கு யாசகங் கொடுத்தல், தானங் கொடுத்தல், வேதமோதுதல், ஆயுதப்படைச் சனங்கள் வைத்தல், சண்டைகள் செய்தல், இராச்சியங் காத்தல் இப்படிக்காருகியது. வைசியருக்கு ஓதுதல், தானங் கொடுத்தல், வாணிகஞ் செய்தல்; யாசகங் கொடுத்தல், உழவு செய்தல், மாடுகள் இரட்சித்தல் இப்படிக்காகியது சூத்திரருக்கு தொழில்களாவன இராசாக்களுக்கு இறைபொருளீட்டல், உழவு செய்தல், தருமங்கள் செய்தல், அந்தணர்க் கடிமை செய்தல், பசுக்கள் சவரக்ஷணஞ் செய்தல், காருகத்தின் செய்கையாகிய பருத்தி பஞ்சிநூல் ஆடைகள் இவைகள் செய்வித்தல், இதுவுமல்லாமல் சண்டையில் இரண்டு விதமாகியது நியாய விவகாரம் பலத்தினுலே விவகாரயுத்தம். பின்னும் பிதிர்களுக்குந் தேவர்களுக்கும் மூன்றுவித திருப்தி.

அதாகிய பிருதிமை மூலம், அந்தணர் மூலம், அக்கினிமூலம் அதுவும் பின் பூர்வமென்றது. இந்த அநுபவமல்லது வைவச்சுதத்திலே அநுபவம். இப்படிக்கு இனவிரிவாகியது அனேக கோடி நூல் வகுத்தான். எ - று. (௧௮)

வகுத்தநூன் மனுமாதவச் சங்கிதை யெனவும்
புகழ்த்த பூவுலகத்தி னெடுங்காலம் புண்ணியனுய்த்
திகழ்த்துகா ளிலங்கவுணர் செய்தீமை யாற்றவங்கண்
மிகுத்தமாமுனிக் கடியனே னண்டர்கோன் விரும்ப.

இ - ள். இப்படி வகுத்த நூலானதற்குப் பெயரெப்படியென்னில்? மனுவிஞ்ஞானமென்றும், மாதவச்சங்கிதையெனவும், நீதிநெறியென்றும், தருமசாஸ்திரமென்றும், சகலரும் புகழ்ந்து அந்நெறிப்படியே மூன்று காலத்தினும் யாவரும் நடத்தும்படி அனேககாலம் புண்ணியசீலனாய் இராச்சியபாரம் பண்ணிவருங் காலத்திலே அவுணராகிய அசுரர்களுடைய நலிபொறுக்கமாட்டாமல் அரிதாகிய தபசுகள் செய்கின்ற வசிஷ்டரிஷிக் கடியானென்றறிந்து தனக்குச் சாதகமாகும்படி அண்டர் கோனாகிய தேவேந்திரன் பிரார்த்தித்து அழைத்தான் மனுவை. எ - று.

கலி விருத்தம்

மனுதன்னொடு மாபெரு சேனைகளுந்
தனுக்கொண்டு தயித்திய ரற்றிடவி
யனுக்கெய்தி வலாரியோ டொத்ததனி
வினிப்புண்டரி யாசன முற்றனனே.

இ - ள். அப்படி விரும்பக் கண்டு மனுராசன் பெரிதாகிய சதுரங்க சேனைகளுடனே வில்லைக்கொண்டு தயித்தியராகிய அசுரர்களெல்லாம் அற்றிடும்படி வியனென்னுந் தேவலோகத்துக்குச் சென்று இந்திரனுடனே கூடி அமுதபானம்பண்ணி சிங்காசனத்திலிருந்து வாழ்ந்தான் மனுவரசன். எ - று. (௨0)

அசனப்பதி கருணை வசிஷ்டயதி
வசனத்தலை மகிழ்ந்து மனுப்பதிசெய்
சுசுகத்தை யடைந்த துரைத்தின்மே
லசுசிக்குல மருந்ததி மாண்பறைவாம்.

இ - ள். அசனப்பதியாகிய வசித்தியனுதசுவாமி கருணை பெருகிய வசிஷ்டரிஷி வசனத்தினாலே மனுவரசன் திருக்கோயிற்கட்டிய பெருமையும், அதினாலே மேன்மையடைந்த பெருமையையும் உரைத்து அப்பால் அசுசிக்குலமாகி அதிலுதித்த அருந்ததியினுடைய பெருமையைச் சொல்லத் தொடங்குவாம். எ - று. (௨௧)

திருக்கோயில்கட்டிய மனுமன்னன் சருக்கம் முற்றிற்று.

# இருடிகட்கு சாபமகற்றிய அருந்ததிச் சருக்கம்.

கலி நிலைத்துறை

தவம்புரிந் திடுமுனி சரியைத் தொழில்விரும்பி
நவம்விரிந் திடநறு மலர்க்கால மாறினிலுஞ்
சிவன்றனைத் தொழச்செடி கொடிப்பூம் பொழிற்செய்தே
பவமகன் றிட்ப் பரமனைப் பணிந்திடு நாளில்.

இ - ள். சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் இந்நான்கும் நடத்தி அரிய தபசுகளைச் செய்கின்ற வசிஷ்டரிஷி சரியையாகிய தொழில் விரும்பி இளவேனில் வேனில்கார்கூதிர் முன்பனி பின்பனி யென்கின்ற ஆறுகாலங்களிலும் நவமென்னும் புதிதாகிய விதழ்கள் விரிகின்ற புஷ்பங்களின் மூலமான செடிகள், கொடிகள், விருட்சங்கள் இவ்வகைகளோடுகூடிய பூந்தோட்டம் வைத்து பாவங்களைகளை யகற் றும்படி வைத்தியநாத சுவாமியை பூசிக்கின்றார் வசிஷ்டரிஷி. எ - று.

கேய சேதன னென்றொரு கெந்தருவனுமே
தேயம் வைத்திடச் செம்மல ரெடுக்குநாளொன்றிற்
றாயவம்முனி கண்டன லெழும்படிவ துயர்கொண்
டாய்வுறக் கடிந்தவனையே நோக்கியங் கறைவார்.

இ - ள். அப்படி பூசித்து வருகிற நாளிலே கேகயமென்னும் இசை பாடுகின்ற சேதனனென்றொரு கந்தருவன் அழகுபொருந்திய தன் னுடைய சரீரத்திலே தரித்திட வெண்ணி அந்தப் புட்பங்களை எடுத்துக் கொண்டு போகிறநாளிலே ஒருநாள் அந்த இருடி கண்டு அதிக கோப மும் விசனமுங்கொண்டு வருத்தமுற நெருப்பெழும்படி அவனைப் பார்த்து சபிப்பார் வசிஷ்டமுனி. எ - று. (௨)

அலகையொடு நின்றாடியோ னணியுமென் மலரை
மலஞ்சலம் புழுமலிந் திடுங்குடற் றசையென்பை
வலிந்து கட்டிய நரம்பினை மூடுமத்தோலுக்
குலவல் செய்தநீ யத்தொழிற் கூற்பவியென்றார்.

இ - ள். அப்படிச் சபித்ததெப்படியென்னில்? அலகையாகிய பூத வேதாளங்களுடனே நிருத்தனஞ் செய்த பரமசிவன் தரிக்கின்ற மெது வாகிய புஷ்பங்களை மலங்களுஞ் சலங்களும் புழுக்களும் நெருங்கிய குடல் மாமிசங்களைப்பற்றியிருக்கின்ற எலும்புகளைக் கட்டிய நரம்புகளை

மூடுகின்ற இரத்தத் தோலுக்கு அலங்காரஞ் செய்கின்ற தோல் தொழிற் காரனாய்ச் சனித்திடவென்றார் வசிஷ்டமுனி. எ - று. (௫)

அந்தநாளிற் றொல்வினை செயுமவர்க் கதிப்தியாய்
வந்துருந்தனே வான்கதி கணிதரா லறிந்து
மந்தன் ரோகணி சகடமுமாண்டு முன்னுனதி
ருந்திடுமதி லுயிர்களுக் கேதமென் றெண்ணி

இ - ள். அப்படிக்காகிய வேளையிலே தோல் தொழில் செய்கின்ற சக்கிலிக்கெல்லாம் அதிபதியாய்ச் சனித்து வந்துருந்தனென்றொரு பஞ்சமன் வாழுகிய ஆகாசத்திலே நடக்கின்ற நவக்கிரக கதிகளான கணித சாஸ்திரமறிந்த மந்தனாகிய சனி பன்னிரண்டுவருஷம் ரோகணி சகடமிருக்கலாகிறது. அதிலே சகல பிராணிகளுக்குந் துன்பமான க்ஷாமம் வரப்போகிறதென்றறிந்து அதற்கியற்கையாகிய எண்ணமுற்றான் உருந்தன். எ - று. (௬)

பனித்தட முயிர்த்திடுநதி யாயிரம் பங்கி
ன்னித்திடை யினிற்கேய் நற்பண்டியு நயந்தே
தனத்தினுற் பலதானி யங்களு மிகக்கொண்டு
தனத்துடன் பசுக்குலத்தொடு தாழ்விலா திருந்தான்.

இ - ள். அப்படி இயற்கையாகிய தெப்படியென்னில்? பனித்தடமாகிய இமவற்பருவதத்தி லுற்பத்தியாகிய கங்காநதியானது ஆயிரமுகமாய்ப் பரவி நெருங்கியிருக்கின்ற அதினடுவிலே கெம்பீரமென்று யிருக்கின்ற அதின்பக்கத்தில் இல்லமும் வைத்து நல்ல களஞ்சியங்களுங் கட்டி அனேக தனங்களினாலே பல தானியங்களுங் கைக்கொண்டு, மிகுவாகச். சேங்கன்றுகளுடனே கூடிய பசுக்குலங்களுடனே அங்கிருந்துகொண்டு தாழ்விலாதிருந்தான் உருந்தன். எ - று. (௭)

வான்பொழிந் திடாவெட்டை யுந்தொடர வவன்றனக்கு
மீன்விழிப் பதந்துதிக்கை மின்னிடை வளர்திதம்பக்
தேன்மலர்க்கணை முகத்தினிற் சிறக்கும் விற்புருவம்
பான்மதிக் கலைபருகு கன்னியு மவதரித்தாள்.

இ - ள். அப்படியிருக்கும்போது ஆகாசத்தினால் மழை பொழிந்திடாமல் வெட்டைக் காலங்களுந் தொடர்ந்தது. அப்போதவனுக்குப் பரமசிவன் ஆக்கினையினாலே உற்பவித்த கன்னிகையின் பெருமையெப்படியென்னில்? சேவல் கெண்டைபோல இரண்டு நேத்திரமும், யானைத்துதிக்கைபோல இரண்டு கால்களும் மின்னற்கொடியையொத்த இடையும், வளர்கின்ற நாகத்தின் படத்தையொத்த அல்குலும், மன்மதனுடைய பஞ்சபாணங்களையொத்த நயனக் கறுப்பும் முகமும் அவனுடைய கரும்பு வில்லையொத்த விற்புருவமும் இப்படிக்காகிய பின்னுமிருக்கின்ற சர்வ லட்சணங்களுடனே அதிரூப சுந்தரி

யாய் பால்சிறம்போன்ற சந்திரபிம்பத்தின் அமுததாரைகளை யோக நிஷ்டையிலுலே புசித்து வளர்கின்ற பெண்ணும் பிறந்தது. எ - று. (சு)

மரபுமிக்க வேதன் பெயர்சாற்ற ருந்ததியென்
றிரதியாத்தும ஞான வொளியுறு வான்மடில்
பிரமசாரிகையை யடைவதென்று தன்குலம் பிரிந்து
விரதமுற்றன ளருகில் விருட்சத் தடிவிற்றே.

இ - ள். அப்படிப் பிறந்த பெண் குழந்தைக்கு மரபாகிய தன் குலங்களெல்லாம் பிரகாசிக்கும்படி தன் பெயரால் அருந்ததியென்னுந் திருநாமம் வைத்தான். பின்பு இரதிக்குச் சமானமாகிய அந்த அருந்ததிப் பெண்ணென்பவள் மூன்று வயதிலே ஆத்துமஞானம் பிறந்து சகலகலைபுணர்ந்து பிராமண குலத்திலே பிரமசாரிணியைச் சேருகிறதென்றெண்ணி தாழ்வாகிய தன் குலத்தைவிட்டு சமீபத்தில் ஒரு மரத்தடியிலேயிருந்துகொண்டு மகா விரதமுற்றாள் அருந்ததிப்பெண். எ - று. ()

பஞ்சமக் குலப்பேதை பாக்கியமெலா மகற்றித்
தஞ்சமின் றரிதாமறை யவன்றனைச் சார்ந்து
வஞ்சர மிடுவேனெனக் குயின்மொழி வளர்நா
ளெஞ்சலுற்ற ரோகணிச் சகடங்க ளுற்றதுவே.

இ - ள். பஞ்சமராகிய நீசகுலத்துப் பேதையின் அருந்ததிப் பெண் அனேக பாக்கியங்களெல்லா மகற்றித் தாழ்வாகிய நமது குலத்துக்கு கிடைப்பது வெகு அரிதென்று எக்கத்துடனே பிராமணனுக்கு மாலையிடுவேனென்று குயிலையொத்த மொழியையுடைய பெண்ணவள் வளர்ந்து வருகிற நாளையிலே எஞ்சலாகிய இளைப்பையுடைய ரோகணிச் சகடம் வந்தது. எ - று. (அ)

நாலசைச்சீர் கவி

கொடிய வெட்டைக் காலங்க ளாகியே கூபவாவி தடநதிகளும், வடிய வானவர் செய்மா புனல்களும் வற்றிநற் பூவகோரமாய்ப், பொடிபரந்திரவு பகலிழந்து பலபொழி லுதிர்ந்து தழைவிதையற, முடியெரிந்து றன்படகம் விட்டப்புரை முடியு நாளென வெவ்வுயிர்களும்.

இ - ள். அப்படி ரோகணி சகடம் வந்தபோது கடூரமான வெட்டைக் காலங்களாகிய தெப்படியென்னில்? யுகாந்தகாலத்திலே துவாதசாதித்தியர்களுங்கூடிப் பிரகாசித்து எரித்ததுபோலவும் வாபி கூபதடாக முதலான நகாநதி தேவதீர்த்தங்களும் சோழித்து பசுமை பொருந்திய பூமிகளெல்லாம் அகோரமாய்ப் பொடிபரந்து இரவுபகலற்றுக் கானவாகி பலவித விருக்ஷங்களுள்ள தோப்புகளெல்லாமுதிர்ந்து தழைவிதைகளற்று முடியென்னு மலையினுச்சிகளெல்லாம் அக்கினிச் தவாலைகளெழும்பி கட்டியிருக்கின்ற கூடாரத்திரையைப் பிரித்துவிட்

டதுபோல புசிப்பில்லாமல் எவ்வுயிர்களு முடிவுகாலமா யொழிந்திற்று. எ - று. (க)

பிருதவம் புரிந்தமிகி னித்திய முனிவியாசர் பராசரோ டகமெரித்
தசுவத்தமாபிருகு வத்திரி சாபலி யுருத்திர வீர்ய
கசிபன் பரத்துவாச கோதமனனைய முனிவர் பசியுற்றமே
கனை மீதலைந் தன்னமூல பலகந்த சாகநீர் தேடியே.

இ - ள். அதுவுமல்லாமல் பின்னு மெப்படியென்னில்? அனேக தவங்களைச் செய்து சிரஞ்சீவியாயிருக்கின்ற வியாசரிஷி, பராசரிஷி, அசுவத்தாமா, உருத்திர வீரியரிஷி, பிருகுரிஷி, அத்திரிரிஷி, சாபாலிரிஷி, காசிபரிஷி, பரத்துவாசரிஷி, கௌதமரிஷி இப்படிக்கான மகாரிஷிகளுடனே அனேக ரிஷிகளெல்லாம் பசியுற்றிளைத்து மலை, காடு முதலான மற்றிடங்களும் அன்னம் பலவகைக் கனிகள், கிழங்குகள், காய்கள் தழை சருகுகள் தீர்த்தங்கள் இவைகளைத் தேடித்தேடி அலைந்தார்கள். எ - று. (கo)

ஒருவரில்லு மற்றொருவர் புக்குவங் கொன்றுமின்றிவெகு துயருட, னருகு வெண்ணைதி வசிஷ்ட னாச்சிரம நாடிவந்து பல முனிவரும், பருகவொன் றிலதென்று கண்டனையர் பங்கமாய முனிவசிஷ்டரைச், சருகுமற்று மிட்புவியி லுற்றபசி தணியநின் கடன்சாற்றென.

இ - ள். பின்னு மெப்படியென்னில்? யாதொரு விடங்களிலு முணவில்லாமல் ஒருவருடைய ஆச்சிரமத்திலே மற்றொருவர்கள் புகுந்து அங்கொன்று மில்லாதது கண்டும் அதிக துயரத்துடனே சுவேதநதி தீரத்தில் வசிஷ்டருடைய ஆச்சிரமத்தில் நாடிவந்தார்கள். அங்கும் ஒன்று மில்லாதது கண்டு அனைய ரிஷிகளும் பங்கப்பட்டு வசிஷ்டரை நோக்கி அன்ன முதலிய கந்தமூலபலாதிகளும், மற்றும் இந்த பூமியிலேயிருந்து பசிபுண்டாயிருப்பவைகத் தணிப்பது பிரம் புத்திரரே உமது கடனையாவென்று சொன்னார்கள் அனேக ரிஷிக்கூட்டங்கள். எ - று. ()

என்று மாதவர்கள் விண்டபோதினி லிருந்த நான்முகன் மைந்தனு, மின்று ரோகணி சகடமுற்று வானற்று விக்கதி யடைந்ததற், கொன்றுரைப்பனென் றனவரைத் தொழுது கூறவாயுவை யடைத்தனவு, மென்று சந்திரனி லுண்டு நிஷ்டையில் வீற்றிருந்திடவு மென்றனர்.

இ - ள். அப்படி இருடிகளெல்லாஞ் சொல்லியபோது அங்கு நிஷ்டையிலிருந்த வசிஷ்டரிஷி எழுந்து வந்தனை வழிபாடுகள் செய்து சொல்லுவார். இப்போது ரோகணி சகடம் வந்து ஆகாச மழையற்று இப்படி கோரமான காலமாகியது. ஆனால் அதற்கு ஒரு உபாயஞ் சொல்வோம். அதேதென்னில்? அக்கினிநாடியை ஏிரகித்து பிராணநாடியை

சந்திர கலசத்திலேற்றி பாரிஷ்டையிலிருத்தினல் இக்காலத்தைக் கடி யலாமென்றுரைத்தார். எ - று. (கஉ)

இத்தவா றறிந்தவேய பூசுரரு மேக்கமுற்று மிகமெலிவுடன்
எந்தை முன்றினி னிறைஞ்சி வாய்புதைத் தீசனே பத்தர்நேசனே
சந்திரன் புனற்றரித்த செஞ்சடைச் சங்கரா நிர்ப் யங்கரா
இந்தவேவேடையை யகற்றவெங் களுக்கிரை செொடுத்தருளென்றனர்.

இ - ள். அப்படிச் சொல்லக்கேட்ட அனேக பிரமரிஷிகளெல்லா முன்னிருந்ததற்கதிக இரண்டுபங்கு ஏக்கமுற்று மெலிந்து எந்தையாகிய வைத்தியநாத சுவாமி திருக்கோயிலின் முன்பு வந்திறைஞ்சி வாய் புதைத்து சகதீசுவரனே அடியார்களுக்கு நேசனே சந்திரனையுங் கங்கை யையுந் தரித்துவிளங்குகின்ற பிரம கபாலக்கையனே காலனுடைய பயத்தை நீக்கியவனே இந்த மகா க்ஷாமகாலத்தை அகற்றும்படி எங்க ளுக்குப் புசிப்புக் கொடுத்து ரட்சிப்பது உன் கடாட்சமென்று சொல் கின்றார் தவரிஷிகள். எ - று. (கந)

அஞ்சிநின்ற தவவந்தனர்களின் முன்னசன் வனபதிப் மறைகுவார்
நஞ்சுகொண் டெம்தமைப்பினூற் சகடநா வலத்தில் வானற்றயன்
மஞ்சு வண்ணனும் வலாரி வானவர் மயங்கியேத முற்றுார்கணின்
சஞ்சலம்விடப் பிரான நாடிவீயச் சந்திரன் கலையி லோட்டவே.

இ - ள். அப்படிச் சொல்லி அஞ்சிநின்ற தவரிஷிகளைப் பார்த்து இரங்கிப் பரமசிவனெழுந்தருளி நஞ்சாகிய ஆலகாலவிஷத்தைப் புசிக் கின்ற எமதாக்கினையினலே ரோகணி சகடம் வந்து மழையற்று பூலோ கத்திலும் மற்றுமுண்டான பிரமலோகம் வைகுண்டம் தேவலோக முதலான எவ்விடங்களுங் கரேமுற்று மயங்குகிறார்கள். ஆதலால் நின் சஞ்சலமாகிய பசிகளை யகற்றிட பிராணநாடியை சந்திரகலையிலோட்டி அக்கினிநாடியை தணிக்கவென்றார் பரமசிவன். எ - று. (கச)

ஆவதன்றி சுரநதியி ஞயிரமுகத்திடைக் கடல்களோடு
மாவதாயிரந் தாளமாழ மெழுவாழி வற்றினு மதுவராக்
காவிசூழதிற் கரிக்காரவதை கண்டவப் புனலிடத்தினிற்
றேவிபுத்திரியினெடு பஞ்சமன் செல்வமுற் றிருந்தனுமென.

இ - ள் அப்படி வாசியோகஞ் செய்யத்தகாதாகில் கங்காநதி யானது ஆயிரந்திருமுகமாய்ச் சமுத்திரத்திற் சேருமிடத்தில் அதினு விலே ஆயிரம் பனைமரப் பிரமாணத்தாழமுள்ள கெம்பீரமென்றொரு மடுவுண்டு. அந்த மடுவானது சத்த சமுத்திர சலம் வற்றினும் மது வற்றாநின்றது. அந்த மடுவிலே குவளையுந் தாமரையும் நெருங்கியதனல் முதலையின் கையில் அகப்பட்ட கஜேந்திரனுக்கு மோட்சம் கொடுத்த அந்த தீர்த்தக்கரையிலே பெண்சாதியும் பெண்ணுடனே அநேக பாக்கிய முற்றிருக்கின்றான் உருந்தன் என்று ஒரு நீசன். எ - று. (கரு)

அந்தணர்க் கரிசிசாக மற்றது மளித்திடு மஃதுமுந்தனு
லந்தருந்தனு மினியனைய முனிவரு மடர்ந்தி டஃதென வரனயன்
மைந்தனுக் கருள்மறை யவன்குழா மயங்கிநீதி நூலகல்வதே
லந்தலென்று வோரெட்டு நாளுணவுகண்ட காசிப னுரைத்தனன்.

இ - ள். அப்படிச் சொன்ன பரமசிவன் பின்னும் வசிஷ்டனைப் பார்த்துச் சொல்லுவார். உந்தனுக்காக வந்த பிராமணர்களுக்கு அரிசி, கறி முதலான சாமான்களுங் கொடுத்து வருகிறான். அந்த உருத்ரனிடத்துக்கு மற்ற அனேக இருடிகளெல்லாஞ் செல்லவென்ற பின்பு அயன் மைந்தனாகிய வசிஷ்டருடனே மற்ற மகா ரிஷிகளும் அங்கு தருமநெறி தப்புவது கெடுதலானால் பரமசிவனுக்குச் சகல சீவாத்துமாக்களுஞ் சரியேயல்லாது வேறில்லையென்று இப்படி ஆலோசித்துக் கொண்டு எட்டுநாள் ஆகாரமில்லாமல் அசனாரண்யத்திலிருந்து மிகவு மிளைப்பாகியபோது காசிபரிஷி சொல்லுவார். எ - று. (கக)

வேறு.

சாடராக்கினி யெழும்பியே தசையெலாம் புசிக்க
வாடுமென் பினைக்கட்டிய நரம்பெலா மாறி
மூடுந் தோலினுக் குலங்குண முதவுமோ கங்கை
யாடுவோமென வருந்தவ ரொடும்வன் போந்தான்.

இ - ள். காசிப்ரிஷி சொல்லியதெப்படியென்னில்? சாடராக்கினி யாகிய பசியானது எழும்பி தசையாகிய மாமிசங்களையெல்லாம் புசிக்கவும், அதிலே வாடுகின்ற எலும்புகளைக் கட்டிய நரம்புகளெல்லாங் கலகலத்திடவும், அவைகளையெல்லா மூடியிருக்கின்ற தோலோடுங்கூடிய சடத்துக்கு குலமுங் குணமுஞ் சனமும் உதவுமோ? ஆகையால் கங்கா நதியில் தீர்த்தமாடுவோமென்று வசிஷ்டரிஷிக்குச் சொல்லிக்கொண்டு மற்ற ரிஷிகளுடனே புறப்பட்டார். எ - று. (கஉ)

தழைந்த நற்பொழில் விழுவதுந் தடங்கள் வற்றியது
மெழுந்த மைக்கிரி யெரிவதும் பதியெலா மண்ணே
பொழிந்திடுவது முயிரெலாம் போக்குறு மறங்க
ளழிந்திடுவதுங் கடந்து கம்பிரத்தை யடைந்தார்.

இ - ள். அப்படி அனேக ரிஷிகளெல்லாம் வாயுவேகமாய் கங்கா யாத்திரை செய்யும்போது வழிகளிருந்ததெப்படியென்னில்? சிங்காரங்களாய்த் தழைத்திருக்கின்ற தோப்புகளெல்லாந் தழையுதிர்ந்து விழுவதும் வாபி கூப தடாக நதிகள் முதலான மகா தீர்த்தங்களெல்லாம் பொடிபட்டிருப்பதும், நீருண்ட மேகங்கள் சஞ்சரிக்கும்படி உயர்ந்தெழும்பியிருக்கின்ற பருவதங்களெல்லாம் அக்கினிச் சுவாலையா யெரிவதும், பட்டணம் பதிகளெல்லாம் புழுதிபட்டு மண்மாரி பொழிவதும் தருமதான சத்திர சாவடிகளெல்லா மழிந்திடுவதும், பின்னும் பூமியி

லுண்டாகிய சராசர ஜீவாத்துமாக்களெல்லா மூயிரழியும்படி வற்றுவதா மிஷவகளெல்லாங் கண்டு கடந்து மகா கம்பீர பூமியினிடத்துக்குச் சேர்ந்தார்கள் முனிகள். எ - று. (கஅ)

மாதவ முனிவரெல்லாம் வான்வர நதியிற்றோய்ந்து
ஏதமு மகற்றிக்கங்கை யின்புறப் பருகிருந்தன்
பாதக மனையிற்றூரம் பற்றியே நிற்கக்கண்ட
ஞூதக னஞ்சலித்துச் சொல்கின்றான் றவரைநோக்கி.

இ - ள். அப்படிச் சேருகின்ற மகா தவம்பொருந்திய ரிஷிகளெல்லாம் வானாகிய தேவகங்கையிலே ஸ்நானஞ்செய்து குற்ற மகலும்படி ஆசமனஞ்செய்து வெகு ஆசையுடனே தீர்த்தங்களையுண்டு பின்பு உருந்தனென்கின்ற நீசன் மனையின் தூரத்திற்போய் நிற்கும்போது உருந்தன் அந்த தவரிஷிகளைக் கண்டு வணங்கிப் படிந்து சொல்லுகின்றான். எ - று. (கக)

இரேணியே சகட்முற்று யிப்புவி யுயிரனைத்தும்
நரேந்திரன் முதலோரெல்லா நசித்தனர் தவத்தினோரே
நிராதர மிதனினீங்க ணிலைத்ததாச் சரியமிங்கு
நராசனங் கொள்ளமாட்சி நன்குலத் தவர்க்கேமுத்தி.

இ - ள். உருந்தனானவன் சொல்லிய தெப்படியென்னில்? உரோகணி சகட்ம் வந்து இந்த உலகத்துயிர்கள் முதலாயினவும் ராசராசாக்களெல்லாரும் பசித்திளைத் தொடங்கினார்கள். அப்படி நிராதாரமான காலத்திலே தவரிஷிகளே நீங்கள் நிலைத்து இங்கு வந்தது வெகு ஆச்சரியம். ஆனால் என்னாலே நராசனமாகிய தண்டுலே சாகங்கொண்டால் அடியேன் குலத்தார்களுக்கு முத்தியும் அடியேனுக்குப் பெருமையுமுண்டு. எ - று.

என்றுரைத் தடியில்வீழ் விருடிக ளுகந்துசொல்வார்
தின்றலில் வாதையாலே செகமுழு தனைத்தலைந்து
மொன்றுமி லுன்னைச்சார்ந்தோ முணவுதந் திட்டாயாகில்
மன்றுளா டுவன்பதத்தின் மாறிலா வாழ்வுண்டாமே.

இ - ள். அப்படிச் சொல்லி உருந்தன் கீழே விழுந்தெழுந்து கைகட்டி நின்றான். அவனைப் பார்த்து இருடிகள் சொல்வார்கள். தின்றலாகிய புசிப்புக்களுக்கு யாதொன்று மில்லாததனாலே பசியின் வாதையால் நான்கு திக்குகளிலுமலைந்து எங்குங் கிடையாமல் பரமசிவனுக்கினையினாலே உன்னிடம் வந்தோம். நீயுணவாகிய புசிப்புக் குதவிசெய்தால் மன்றென்னுஞ் சிதம்பரத்திலே நிருத்தஞ் செய்கின்ற பரமசிவன் பாதாரவிந்தத்திலே அழியாப்பதம் உண்டாமென்று பின்னுஞ் சொல்லுவார் தவமுனிகள். எ - று. (உக)

பசித்திடு மவர்கட்கன்னம் பாலிக்கப் பலன்கணீங்கும்
நிசிப்பெருந் தீபம்போல நின்குல மாண்புமிக்குஞ்

சசிக்கவி யதினுர்க்கீந்த சொன்னம்போல் விளக்கமாகுஞ்
சசிதிரட் சுடரைச்சார்ந்த தாம்வெறுப் பகற்றுமென்றார்.

இ - ள். எந்த உயிர்களிலே எந்தச் சாதிகளுக்கும் பசிபசிக்கும்படி புசிப்பிடுவது கொடிய பாதகங்களை நீக்குவதெப்படியென்னில்? கிசியாகிய அர்த்தராத்திரியான இருட்டிலே ரெசிதாகிய சுடர் தீவர்த்திகளைக் காட்டியதுபோலவுஞ் சுத்தமாகிய கவிஞர்களுக்குக் கொடுக்கின்ற பொன் புவியாடைகள் பிரகாசிப்பதுபோலவுஞ் சசித்திரளாகிய கருப்பூரக் கட்டியானது கொஞ்ச தீபத்தைச் சார்ந்ததுபோலவும் இந்த கடூரமாகிய வெறுப்பை யகற்றிட உனது குலமானது அனேகம் பிரகாசமாய் விளங்குமென்று சொன்னார் மகரிஷிகள். எ - று. (௨௨)

அம்மொழி கேட்டருந்த னணங்கினுக் கின்பமென்று
சிம்முயில் பேராநந்தஞ் சிந்தையு ளெண்ணிச்சொலவான்
சம்பியரே யென்றன்கன்னி தந்தைதாய் தனங்கள்விட்டு
விம்மல்கொண் டிழிவுநீங்கி வேதியர்க் கடிமையென்றே.

இ - ள். அப்படி தவமுனிகள் இவ்வாறு சொல்லக் கேட்டபோது உருந்தன் தன்னுடைய அணங்காகிய பெண்ணுக்குநன்மை கிடைத்திருக்கிறதென்று கணக்கில்லாத ஆனந்தங்களைச் சிந்தையிலெண்ணிச் சொல்வான். மகா கோபங்களை க்ஷமிக்கின்ற தவரிஷிகளே என்னுடைய கன்னிகை, தாய்தந்தை தனபாக்கியங்களையெல்லாம் விட்டு விம்மலாகிய விசனங்கொண்டு ஈனகுலத்தைவிட்டு பிராமணருக்கு அடிமையாகிறதென்றிருக்கின்றாளென்று பின்னுஞ் சொல்லுவான் உருந்தன். எ - று.

மூன்றொரு வயதிலெங்கள் மூரலே யருந்தாளைந்து
வாண்டதெட்டாகிரூப வருந்ததி யெனுஞானத்தா
னீண்டகம் விட்டேவிருட்சத் திடையினிற் றவஞ்செய்வாளைப்
பூண்டவர்க் கன்னஞ்சொன்னம் பொருடா லெனப்பணிந்தான்.

இ - ள். அப்படியிருக்கின்ற பெண் மூன்று வயசிலே ஞானமுண்டாகி எங்களுடைய அன்னங்களைப் புசிக்காமல் ஐந்து வருஷமாய் ஈண்டகமாகியதாயிருப்புமனைவிட்டு விருட்சத்தடியிலே தபசு செய்கின்ற எட்டுவயதுள்ள அதிரூபமாகிய அருந்ததியைக் கலியாணஞ் செய்துகொண்ட பிராமணர்களுக்கு அன்னஞ் சுவர்ணம், பொருளாடை காவி இவைகள் கொடுப்பதென்று சொல்லி வணங்கித் தெண்டனிட்டான் உருந்தன். எ - று. (௨௩)

## ஆசிரியம்.

சுருதிநிந்தனை யம்மொழி தனைக்கேட்டு துக்கவெஞ்சினமுடன்
றுறவ, ரொருவரோ டொருவ ருரைத்துருள் சங்கடமுற றுயிரனைத்
தும் வற்றியதாற், றருமமே யகலச் சாதியுந்தவிரச் சாதித்தா

னவனை யற்றிடத்தி, லருமையே படிசி லானதால் வசிஷ்டர்க் கறைந்துமே வெறுப்பை யற்றிடுவோம்.

இ - ள். அப்படி உருந்தன் சொல்லிய வேதநிந்தனையாகிய மொழிகளைக்கேட்ட ரிஷிகளெல்லாம் வெகு துக்கத்துடனே வெஞ்சினமாகிய கரோ கோபங்கொண்டு ஒருவரோடொருவர்கள் சொல்லியது ரோகணிச் சகடமுற்று சகல உயிர்களும் பசித்து வற்றியதினுலே தருமத்துக்கு விரோதமாயுஞ் சாதி முறைநனுமயுந் தவறும்படி யுரைத்தான். பின்பு அவனையல்லாமல் வேறேரிடத்திலும் அன்னம் முதலான மற்ற உணவுகளும் அரிதாயிருக்கிறபடியால் இந்த விருத்தாந்தங்களை வசிஷ்டரிஷிக்குச் சொல்லி வெறுப்பாகிய க்ஷாமகாலத்தைப் போக்குவோமென்று ஆலோசித்தார்கள். எ - று. (உகு)

என்றிடும் பொழுதி லிருடிக் டனக்கே தமற்றிட்ட தென் றிரவி, தோன்றுவெங்கிரணந் தனைகுடக் கடலிற் றேய்த்தபோற் சுளியவர் விடுநீர், குன்றுற வினகுலத்துக் கோதையைச் சுத்தங் கொள்வபோற் கோரமுங் கடிய, மன்றுளான் மதனை யெரித்தகண் விழித்த மானுமே செக்கர் வானங்கள்.

இ - ள். அப்படிக்கிருக்கும்பொழுதில் சூரியபகவான் அஸ்தமானமாகிய தெப்படியிருந்ததென்னில்? இருடிகளுக்கு ஏதமாகிய கடோகாலங் களினி விட்டதென்று தன்னுடைய வெங்கிரணமாகிய உக்கிர காந்திகளை மேல்கடலிற் றேய்த்ததுபோல மறைந்திட்டது. அதுவுமல்லாமல் நீசகுலத்துப் பெண்ணுகிய அருந்ததியை சுத்தமாகும்படி மந்திரசலம் புரோட்சிப்பதுபோல அவர்கள் அருக்கியங்கள் கொடுப்பதும், அதல்லாமலும் கோரமாகிய காப்புகளைப் போக்கும்படி பரமசிவன் மன்மதனை யெரித்த அக்கினிக்கண்ணைத் திறந்ததுபோலவு மிருந்தது. செம்மானமிட்டது. எ - று. (உகூ)

வேதன் மைந்தன் கன்விரைவுடனேக மிகுதவ முனிவர்கள் குழுமி, யோதன மென்றே யம்முனி வசிஷ்டர்க் குதவுழை மரமேபன வுலகிற், றீதுற்றதுபோ லிருள்கவிந்திட வுஞ்சேர்ந்தன ரதனைத் தவர்கண்டு, பாதக மென்றே வெகுளுவாமென வான்பல் வினைக் கெஞ்சுபோ லுடுக்கள்,

இ - ள். அந்த வேளையிலே மிகுந்த தவங்களையுடைய ரிஷிக்கூட்டங்கள் பசியிஞலே ஓதனமாகிய அன்னத்தை இச்சித்து வேதன் மைந்தனுகிய வசிஷ்டரிஷியிடத்துக்கு அதிதுரிதத்துடனே சென்றூர்கள். அப்போது எங்கு மிருண்டுகொண்ட தெப்படியிருந்ததென்னில்? பிரமகுலத்திலே குற்றமுடைய நீசப்பெண் சேரப்போகிறதென்று உலகத்திற் றீதுகள் சேர்ந்ததுபோலவும் அங்கு மகரிஷிகளெல்லாம் வந்து சேர்ந்தார்கள். பின்னுமந்த வேளையிலே நக்ஷத்திரங்கள் பிரகாசித்தது

எப்படியென்னில்? அந்த மகரிஷிகளைக் கண்ட வசிஷ்டமுனி பாதக மென்று நம்மை மழையில்லையென்று கோபிப்பானென்று விளங்கிய ஆகாசமானது தன்னுடைய பல்லுகளை கெஞ்சியதுபோலு மிருந்தது. எ - று. (௨௭)

எஞ்சலுற் றிருடி தன்னையே கண்டங் கிருந்தகற் றவ்முனி யேங்கி, சஞ்சலமுற்றான் றனைத்தவர்கண்டு தண்ணில முதகஞ்சேர் கொதிபோல், நெஞ்சுமாறுட நயனநீர் சொரிய நிலத்தினில் விழுந் தழுதுரைப்பார், நஞ்சுசேர் மிடற்றான் றன்னருளானே நன்னில மழிப்பளிப் புடையாய்.

இ - ள். அந்த வேளையிலே எஞ்சலாகிய இளைப்புகளுடனே வந்த ரிஷிகளையெல்லாம் கண்டு வெகு துன்பமுற்றான் வசிஷ்டரிஷி. அப்படித் துயரமுற்ற வசிஷ்டரிஷியைக்கண்ட மற்ற தவரிஷிகளெல்லாம் அக்கினி யிலே சேருகின்ற ஜலம் கொதிப்பதுபோல தளும்பி நெஞ்சு தமொதி அதிக வியாகூலத்துடனே கண்ணீர் சொரிந்திட பூமியிலே விழுந் தெழுந்து அழுதுகொண்டு சொல்லுவார்கள். நஞ்சாகிய ஆலகாலவிஷத் தைக் கண்டத்திலே வைத்திருக்கின்ற பரமசிவன் கடாட்சம் பெற் றவனே பூலோக மூதலான எவ்வுலகு மழிப்பும், அளிப்பும், ரட்சிப் பும், இம்மூன்றுமாகியவனே என்று பின்னுந் துதிப்பார்கள் முனிகள். எ - று. (௨௮)

மூலமே யனைய வுயிர்களுக் குயிரே மூர்த்தியே முப்பொரு ளானே, காலமூன் றறியுங் காரண கமலக்கண்ணன் செங்கமலவயன் கண்ணே, சீலனே பசியாற் றியத்துய ரந்தீர்ப்பதுன் கடனெனச் செப்பக், கோலமே கண்டம் முனிவரைத் தொழுது கூறினன் வசிஷ்டனுட் கொண்டே.

இ - ள். மூலமென்னும் முக்குண ரகித பராவிஷ்டனே! சகல ஜீவாத்துமாக்களுக்கு முயிரானவனே! திரிமூர்த்தி சொரூபனே! முப் பொருளாகிய சச்சிதானந்தனே! சுத்தமாகிய நிஷ்களங்க சீலனே! கொடி தாகிய பசியினாலே தியர்த்திளைப்புற்றதை யகற்றுகின்ற காரணனே! வருங் காலம், செல்காலம், நிகழ்காலமென்னும் இம்மூன்று காலங்களையுமறிந் தவனே! கமலக்கண்ணனாகிய மகாவிஷ்ணுவின் திருவுந்திக் கமலத்திலே அவதரித்த பிரமதேவனுடைய கண்ணாகியவனே! பசி தீர்ப்பது உன் கடனையாவென்று முறையிட்டார்கள். அதுகண்டு வசிஷ்டமுனி அந்த ரிஷிகளைப் போற்றிசெய்து மிகவும் வணங்கி மனங்கொண்டு சமாதானம் சொல்லுவென்றான் வசிஷ்டரிஷி. எ - று. (௨௯)

இழிகுலத் தருந்தன் றன்னுழை யேசென் றிக்கணமேற் றிம்முனிவ, ரழிவிலா துய்த்த லாக்குவ னென்றே யறைந்தன ரந் தணர்க்குதவு, மொழியினைக் கேட்ட கோரமே தவரை முனிவது போலிருட் கங்குல், கழியவு மாய னேதலர் மயங்கக் கத்தும் சங் கெனப்புள் வைகறையே.

இ - ள். அப்படிச் சமாதானஞ் சொல்லிய தெப்படியென்னில்? ஈனகுலமாகிய உருத்தனிடத்துக்குச் சென்று இந்தட்சணமே யாசகம் வாங்கி அந்தத் தவரிஷிகளெல்லாம் அழிவில்லாமல் சீவனஞ்செய்ய பிழைப்பிப்பேனென்று நிச்சயஞ் சொன்னார் அது சமயத்திலே அர்த்த ராத்திரியாகிய தெப்படியென்னில்? அகோரமாகிய வெறுப்புக் காலமானது அந்த வசனத்தைக் கேட்டு மற்ற ரிஷிகளைக் கோபித்ததுபோல அந்தகாரப்பட்டது. பின்னும் விடியற்காலமாகிய தெப்படியென்னில்? இருளையொத்த சத்துருக்களைத் தொலைத்திடும்படி மகாவிஷ்ணு கரகமலத்திலிருக்கின்ற சங்கை தொனித்ததுபோல பசிகளை யகற்றுவதென பட்சிகளெல்லாம் தொனித்தது. எ - று. (௯௦)

உணவிலி லதிகாத்தா லிரவுதுஞ்சலு மற்றொருவரோ டொரு
வர்கள் பேசித், துணர்வுமாய்ப் பிரமசூனுவோ டேகனூர்தனைக்
கடியபொன் வரையின், குணமது வீசும் புரைபரியருணன் குண
திசைத் தோன்றலே குழுமி, வளர்கிரி மடுமுன் னூறுகோ லாழம்
வற்றிய நதனில்வந் துற்றார்.

இ - ள். பின்னுமெப்படியென்னில்? உணவாகிய புசிப்பில்லாமல் அதிக விளைப்பானதினாலே இராத்திரி முழுதும் நித்திரையில்லாமல் ஒருவரோ டொருவர்கள் சொல்லிக்கொண்டிருந்து விடியற்காலமானவாறே பிர்மசூனுவாகிய வசிஷ்ட ரிஷியுடனே அதிசீக்கிரமாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்படி கங்காதீரத்துக்குச் செல்லும்போது அருண உதயகாலமான தெப்படியென்னில்? அவர்களுடைய தரித்திரங்களையெல்லாம் போக்கும்படி கனகவரையாகிய மகாமேருவின் சாயல் வீசியதுபோல கிழக்குத் திசையிலே சுவர்ணமயமாகப் பிரகாசித்தது. அப்படிக்கான வேளையிலே அதிக விஸ்தாரமாய் ஆயிரம்பனை யாழமுள்ள கங்காதீரத்துக் கம்பீர மானது முன்னூறு கெசப் பிரமாணத் தாழம் வற்றியிருக்கின்றதிலே ரிஷிக்கூட்டங்களெல்லாம் வந்தார்கள். எ - று. (௯௧)

உற்றவத் தவர்களுயர் புனலாடி யோமநேமங்களு முடிக்கப்,
பெற்றவர் மிடியைத் தீர்ப்பதென் றெற்றைப்பே ருருளுநர் தியோ
னுதிக்கக், கற்றைவார் சடையிற்கடிய னென்றுறுகண் விழித்திடும்
புரைகழல், மற்றுமே விரிய மாதவர் மகிழ்ந்து வந்தன ருருந்தன்
மாபதிபால்.

இ - ள். அப்படி வந்த மகரிஷிகளெல்லாரும் உயர் புனலாகிய கங்கா தீர்த்தத்திலே குற்றமற ஸ்நானஞ்செய்து செபநியமங்களு முடிக்கலானார்கள். அந்த வேளையிலே மிடியாகிய தரித்திரங்களைத் தீர்ப்பதென் றதுபோல ஒற்றை வண்டில் தேரோனாகிய சூரியபகவான் உதயமானான். அதுகண்டு தாமரைகள் விரிந்த தெப்படியிருந்ததென்னில்? கற்றையாகிய மிகுந்த நீளம்பொருந்திய சடாபாரத்தையுடைய பரம

சிவனுக் கடியர் வந்தாரென்று சடையிலிருக்கின்ற கங்கையானது தாமரையிதழையொத்த நேத்திரங்களினாலே விழித்துப் பார்த்ததுபோல மற்றக் குவளைகள் முதலிய புஷ்பங்களு மலர்ந்தது. இவைகளெல்லாங் கண்டு மனமகிழ்ந்து அப்பால் மத்தியான காலத்தில் உருந்தனுடைய ஆச்சிரமத்தின் பக்கலிலே வந்தார்கள் தவமுனிகள். எ - று. (கஉ)

உதித்தசெங் கதிரைப்போ லங்குற்றிடும் வசிஷ்டர்தன்னை
மதித்தருந் தனுமேகண்டு வணங்கிநின் றேதூரத்திற்
றுதித்துநெஞ் சினதைத்தீர்ப்ப தாமென வெண்ணவந்த
யதிக்குழாம் வெட்கமுற்று யேங்கின ராங்குப்பின்னே.

இ - ள். உதையகாலத்தி லெழும்புகின்ற சிவந்த நிறம்போன்ற பால சூரியனைப்போல தன்னில்லத்தின் பக்கத்திலே எழுந்தருளியிருக்கின்ற வசிஷ்டரைக் கண்டான் மதிப்பையுடைய உருந்தன். அப்படி கண்ட நிமிஷத்திலே தூரநின்று வணங்கி வாய்புதைத்தஞ்சி நின்று நம்து சிந்தை எண்ணத்தைத் தீர்ப்பதெனவா யிருக்கும்போது தவரிஷிக ளெல்லாங் கண்டு வெட்கமுற்று அஞ்சி ஆலோசித்தார்கள் அந்த வேளையிலே பின்னும். எ - று. (கங)

நம்முன்னின்றிடு மாதுய்யன் ஞானிநற் றெழிலனென்றன்
னும்மையான் றன்னைநோக்கி யுரைத்தனர் முனிவசிஷ்டர்
சம்பிய ரனையரெண்ணில் தவம்புரிந் திட்டோர்சோதி
நம்பிய முடையோர்வேதங் கலைமுன்னூல் கற்றோர்கண்டாய்.

இ - ள். இருடிகளுடைய எண்ணமும் உருந்தனுடைய எண்ணமு மிப்படியிருக்கையில் வசிஷ்டரிஷி அந்த உருந்தனைக் கண்டு எண்ணியது இவனே நமக்கும் சீலனாக இருக்கிறான். பின்னுங் காரியத்தி லெண்ணமுற்றவன் மிகுந்த ஞானியென்று இப்படி ஆலோசித்து அவனைப் பார்த்துச் சொல்லுவார். பிறவிகளெல்லாம் முடிந்தவனே ஒன்று கொள்வாய் சம்பியராகிய இந்த மிகுதவமுனிவர்களெல்லாம் எண்ணிக்கையற்ற தவசுகளைப் பெற்றவர்கள். பின்னுஞ் சோதிச் சுவரூபர்கள் அஷ்டமாசித்திக ளுடையவர்கள் சம்பியமாகிய அனேகம் பேறுபெற்றவர்கள். அதுவுமல்லாமல் நான்கு வேதமும், பதினெண்புராணங்களும், அறுபத்துநான்கு கலைஞானங்களும், மற்றுமுள்ள முன்னூல் களும் அறிந்து கற்றவர்கள் அவர்களுடைய பெருமையைச் சொல்லி முடியாதென்று பின்னுஞ் சொல்லுவார் வசிஷ்டமுனி. எ - று. (கச)

அந்தமா முனிகட்கீயு மறமறைந் திடவொணாது
பந்தபா சங்கணீங்கும் பரகதி யடைவர்தத்தை
யந்தணப்பிர திஷ்டையாலே யகிலமண்ட முந்துதிக்கு
முருந்தனே யென்றார்தன்முன் னுவலுவான் வணங்கிநேசன்.

இ - ள். அப்படிக்காகிய ரிஷிகளுக்குக் கொடுக்கின்ற தருமங்களின் பலன்களைச் சொல்லி முடியாது. ஆகிலும் உன்னுடைய பந்த

பாசங்களான பிறவித் துன்பங்களை யகற்றும். அதுவுமல்லாமல் உன்னுடைய தந்தையாகிய வமிசத்துப் பிதுர்க்களெல்லாம் சரகம் நீங்கிப் பரகதியை யடைவார்கள். பின்னும் பிராமணப் பிரதிஷ்டை செய்வதினாலே அகிலமாகிய பூலோகத்தார்களும், தேவர்களும் புகழும் உருந்தனேயென்று இப்படிச் சொல்லிய வசிஷ்டமுனியைப் பார்த்துச் சொல்லுவான் நீசன், எ - று. (௧௫)

சோதிமா மறையேதேவே தொல்லறி வறிந்தநாதா
வேதியர்க் காகவந்தாய் மிகுதவ முனிகள்சூழ்நின்
பாதமே யடைந்துபற்றிப் பரிவுட னிருக்கலன்றிப்
பாதகம் பெற்றேனென்று பகுத்திடு மிடையிலன்றே.

இ - ள். சோதிப் பிரகாசம் பொருந்திய வேதசுரூபனே! பூர்வ ஞானமறிந்த நாதனே! பிராமணர்களுக்காக உதவும்படி வந்த பரமனே! அனேக தவம்புரிந்த ரிஷிகள் சூழ்ந்திருக்கின்ற உன்னுடைய பாதங்களைப் பற்றி பரிவுட னிருக்கிறதற்கில்லாமல் வெகு பாதகம் பெற்றேனென்று பின்னுஞ் சொல்கிற சமயத்தில். எ - று. (௧௬)

பசியின் வாதையினாற் காசிபன்முனி மூர்ச்சையுற்று
யசலமாய் நிலத்தில்வீழ வதுகண்டம் முனிவசிஷ்டர்
கசிவுகொள் கமண்டலத்து நீரினைக் கையால்வீசி
சுசிமொழி வினைகள்செய்யத் துஞ்சினன் போலெழுந்தான்.

இ - ள். மிகுந்த பசியினுடைய வாதையினாலே அப்போது காசிப முனிவன் மூர்ச்சையாகி அசைவற்று பூமியிலே விழுந்தான், அதுகண்டு வசிஷ்டரிஷி எந்நேரமுங் கசிவுற்றுக்கொள்கிற கமண்டல ஜலத்தினாலே, கையினாற் றெளித்து சுசியாகிய தன்னுடைய பிராண மந்திரத்தை யுச்சரிக்க அப்போது மூர்ச்சை தெளிந்து நித்திரை செய்தவன்போ லெழுந்தான் காசிபமுனிவன். எ - று. (௧௭)

அந்தணன் பிர்மரூனு வஞ்சிருந் தனைப்பின்சொல்வா
ரிந்தவூ றறிந்துஞ்சீவ னீயதனுக் கிணையேமற்று
மெந்தழா தானஞ்செய்து மெங்கிலே பலசெய்திட்டு
மந்தணப் பிரதிஷ்டைக் கானவரிசி யீந்திடல்லவர்க்கே.

இ - ள். அப்படியெழுந்த பின்பு பயந்து பிர்மரூனுவாகிய வசிஷ்டரிஷி உருந்தனைப் பார்த்துப் பின்னுஞ் சொல்லுவார். இப்படி பிராண முனியாகக் கண்டிருந்து ஆனது காரியமே பிடித்திருக்கிறது என்னவோ ஆனால் அனேக மகா தானங்களும், தருமங்களும், பிரதிஷ்டைகளும் இந்த சிவதானஞ் செய்வதற்கிணையாமோ? அதிலும் முக்கியமாகிய பிராமணரிஷிகளுக்கு சிவகிலையான அரிசி மற்றதும் வேறுவேறாய் அவரவர்களுக்கு உதவி செய்வாயென்றார் வசிஷ்டமுனி. எ - று. (௧௮)

வேதிய னுரைக்கக்கேட்ட வினையலங் கேதுசொல்வான்
சாதியரே சருவேசாத் தன்னுயிர் தனக்குமீதே
யாதலாற் கடைக்கண்ணாலே பார்ப்பதுன் கடனென்றின்ன
மாதிறன் மூர்ச்சையுற்றே மண்ணினிற் படிந்தான்காண,

இ - ள். அப்படிச் சொல்லக் கேட்டவனாகிய காரியக் கொன்கின்ற உருந்தன் சொல்வான். சாதியராகிய ப்ராமர்ஷியே! சர்வேசுவரனே! தேவர்கள் முதலான மற்ற உயிர் பொருந்திய ஜீவாத்துமாக்களுக்கும் உயிர்க்கு மிஞ்சியது வேறுண்டோ? ஆகையினாலே அடியேனைக் கிருபா கடாட்சம் செய்து காத்து இரட்சிப்பதுன் கடனையாவென்று மாது என்னும் அருந்ததிப்பெண் கினைவினாலே மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான் மகா ரிஷிகளெல்லாம் காணும்படி உருந்தன். எ - று. (கக)

அக்கணம் பிருகருக்க னக்கினி புருத்திரவீரியன்
சுட்கசு தரன்மறறேருஞ் சுண்டியே மூர்ச்சையுற்று
வொக்கவு நிலத்தில்வீழ வோதிம மூர்திருனு
துக்கமுற் றுதகமுண்போல் சொரிநதெழுந திடவுங்காணான்.

இ - ள். அப்படி உருந்தன் மூர்ச்சையாகி விழுந்த வேளையிலே பின்னும் மெப்படியென்னில் மிகுந்த பசியினாலே இளைப்புற்று பிருகுரிஷி மார்த்தாண்டரிஷி, சமதக்கினிரிஷி, உருத்திரவீரியரிஷி, சுஷ்கசண்ட ரிஷி இப்படிக்காகிய அனேகம் தவரிஷிகளெல்லாம் சுழித்து மூர்ச்சை யாகி கீழே விழுந்திட்டார்கள். அதுகண்டு வசிஷ்டரிஷி வெகு துயர முற்று முன்போலே கமண்டல சலத்தினாலே, புரோக்ஷித்துஞ் சமித்தும் அவர்களுக்கு மூர்ச்சை தீராது கண்டு ரொம்பவும் விசனத்தை யடைந் தான் வசிஷ்டமுனி. எ - று. (௪0)

அந்தவேளையி லுருந்த னந்தண னடிதொழுதிட்
டிந்துயிர் தனக்குத தவம்பவமக மெல்லாமும
தொந்தம் விட்டிடும் போதெனச் சொல்லுவதன்றி
யந்தணன் பசுவுக்காகச் செய்வது தொன்னூல்றையும்.

இ - ள். அந்தவேளையிலே, உருந்தன் தெளிந்தெழுந்து அந்தண னாகிய வசிஷ்டரிஷியை யடிபணிந்து பின்னும் சொல்லுவான். இந்த ஞால ஜடத்திலே சுழல்கின்ற உயிருக்குத்தான் இத்தனை இப்படிக்கான வருணாச்சிரமம் புண்ணிய பாவங்கள் தானதருமங்கள் முதலிய மகா தவங்களுமேயல்லாது வேறில்லையே. அப்படிக்காகிய உயிரானது தொந்தம் விட்டுப் போகும்போது பின்னுமே எது காரண நடக்கை யாகிறது. அதுவுமல்லாமல் அந்தணனாகிய பிராமணர்களுக்கும் பசுக் குலங்களுக்கு முதவியாகிய காரியங்களிலே என்ன செய்தும்செய்யினது எந்தத் தாழ்வாவது செய்யினும் தோஷமில்லையென்று முன்னூலாகிய திருடி சாஸ்திரங்களிலே சொல்லத்தெரிந்த உள்ளமுடையவனேயென்று சொன்னான் உருந்தன். எ - று. (௪௧)

என்றுரைத்திட வங்கிருடி மற்றவரை நோக்கி
யின்றுருந்த னிவ்வுழி யெக்காரணத்தி னுற்றது
ரென்றுவிப்பிர ரெழுந்திட வெண்ணியுன் வினைக்கே
நன்றுதண் டுலம்வின் டிடுவாயென நவின்றார்.

இ - ள். அப்படி உருந்தன் சொல்லக்கேட்ட வசிஷ்டரிஷி அங்கு மூர்ச்சையாகி விழுந்து கிடக்கின்ற ரிஷிகளையெல்லாம் பார்த்து மிகுந்த விசனத்துடனே எண்ணுவார். இப்போது இந்தருந்த னிருக்கின்ற இவ்விடத்துக்கு எந்தக் காரணத்தினாலே யாம் வந்தது. ஆகையால் இந்த பிர்மரிஷிகளெல்லாரும் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து பசியாற்றுவதே பெரிதென்று உருந்தனைப் பார்த்துச் சொல்வார் உன் வினையாகிய எண்ணப்படிக்கே யாம் நடப்பது நிச்சயம். நீ இப்போது அரிசி முதலான மற்றதுகளுங் கொடுக்கும்படி செய்வாயென்று சொன்னார் வசிஷ்டர். எ - று. (சஉ)

அந்தநன் மொழிகேட் டருந்தனும் விரைவுற்று
னந்தவேளையி லானவத் தொழுவி லந்தணரைத்
சிந்தை தெரிந்திடச் செய்தனராக வுருந்தனுமா
சந்தமணி யாடைதன் பெண்டனங் கொணர்ந்து,

இ - ள். அப்படி சொல்லக்கேட்ட உருந்தன் அதிக சந்தோஷத்துடனே துரிதமாய்ச் சென்றான். அந்த வேளையிலே மூர்ச்சையுற்று விழுந்து கிடக்கின்ற ரிஷிகளையெல்லாம் தெளியும்படி அனேக சிரம பரிகாரங்கள் செய்து தெளிந்தெழுந்தார்கள். அப்போது சந்ததம் என்னும் அழகுபொருந்திய பெண்ணுடனே அனேக பூஷணங்களும் ஆடைகளும் தனங்களும் பசுக் குலங்களும் கொணர்ந்தான் உருந்தன். எ - று. (சங)

பிரமசாரியைப் பேணியே பெண்ணைமுன் வைத்து
வுரவரே யுமதுரிமை யீதென் றளித்துருந்தன்
வரரறிந் திடவதுவை புத்திரி யகமகிழப்
பிரமனுணு வுன்புருட னிலலறம் பெறவென்றான்.

இ - ள். அப்படி கொண்டுவந்த உருந்தன் பிரமசாரியாகிய வசிஷ்டரிஷியைக் குறித்து முன்னே வைத்து உரவரென்னும் சகலமுமறிந்த அபிஞ்சியரே சிரேஷ்டரே பெரியோரே உமது உத்தரவுப்படி உரிமையாகிய பத்தினியீதென்று வரர்கிய அருந்தவமுனிகள் சாட்சியாகக் கொடுத்துச் சொன்னான். பின்னும் உருநதன் புத்திரியாகிய தன் பெண்ணைப் பார்த்துச் சொல்லுவான் வதுவையென்னுங் கலியாணி உனது மனமகிழ்ந்திட பிரமதேவ குமாரனாகிய வசிஷ்டரிஷியே உனது புருடன் அவர் தனக்கு சுயதருமமாகிய குடிவாழ்க்கை பெற்றிருப்பாயென்றான் உருந்தன், எ - று. (சச

அருந்ததி யோடுவாட கங்கொண்ட வம்முனிவன்
பிருந்தமா முனி யனையவர் பெரும்பசி யகலவங்
கிருந்த தண்டுலமற்று மீங்தே தமற்றிடச்செய்
தருந்ததியுட னுக்கமுற் றவ்வுழி யகன்றான்.

இ - ள். அப்படி உருந்தன் சொல்லிச் செய்யக்கண்ட வசிஷ்ட முனி அருந்ததியோடு ஆடகமாகிய பசும்பொன் முதலான சகலவற்வுறயு மேற்றுக்கொண்டு அங்கிருக்கின்ற பிருந்தமென்னும் கூட்டங்களாகிய தவரிஷிகளுக்கெல்லாம் பசி தீரும்படி வேட்டைக்கால முழுதினிலும் உணவு கொள்ளும்படி சகல தண்டுல சாமான்களு மிகமிகக்கொடுத்து ஆசீர்வாதங்கள் பெற்று அப்பால் லக்ஷ்மிகரம் பொருந்திய அருந்ததி யுடனே ஆண்மையுற்று அந்தவிடம் விட்டு அகன்றார் வசிஷ்டமுனி. எ - று. (சஆ)

அலர்ந்த தாமரைமுகத் தருந்ததி தனைநோக்கக்
குலம்விளக்கு மக்கன்னிக் குனிந்திட முனிகங்
தலம்புகுங் திடத்தாழ் வுரைப்பமெனத் தயங்கி
யலந்தை யுற்றனன் யாமமேயிரண்டு பின்னறியே.

இ - ள். அப்பாலே சென்றுவந்த வசிஷ்டரிஷி அலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்தைப்போலொத்த முகத்தையுடைய அருந்ததியை நோக்கினார். அதுகண்டு குலங்களையெல்லாம் விளக்குகின்ற கன்னியாகிய அருந்ததி சிரசுகுனிந்து நாணினாள். அதுகண்டு வசிஷ்டரிஷி மிகவுந் துயரமுற்று நமது தலமாகிய அச்சாரணிய க்ஷேத்திரத்திலே கொண்டு போனால் தாழ்வுரைப்பார்களே என்று மயங்கி வெகு துன்பமுற்று இரண்டு சாமமேங்கிப் பின்னும். எ - று. (சஇ)

பிறவியாயி ரம்புக்கினும் பெருந்தவம் பேணி
யறம் வளர்க்கினு மத்தடமூழ் கினுமயன்மா
லிறைவனுயினு மெப்பொழு தெவ்வினை யேனும்
பொறியகற்ற வொண்ணுதெனப் பொலமுனி தேர்ந்தே.

இ - ள். அப்படி யேங்கிப் பின்பு பிறவியாகியது ஆயிரஞ் சென்மங்கள் மேன்மைபுக்கினும் கொடிய தபசுகளைச் செய்தாலும் அனேக தருமங்களைச் செய்தாலும் அனேக புண்ணிய தேவதீர்த்தங்களிலே வெகு ஸ்நானங்கள் செய்தாலும், அதுவுமல்லாமல் அயனுகிய பிரமதேவன் மகாவிஷ்ணு பரமசிவன் இவர்களாயினும் எந்தெந்த பொழுதிலே எந்த விடத்திலே எவர்களாலே என்ன காரணங்கள் முடியுமோ அந்தக் காரணங்களின் மூலமான எழுத்தை யாவராலும் அழிக்கவொண்ணுதே யென்று பொலமென்னும் உயர்ச்சியாகிய வசிஷ்டரிஷி தெளிந்தான். எ - று. (சஎ)

எந்தைபந்துக னமைப்பிதென் றெண்ணியே வசிவுற்
றந்தவடனைச் சுற்றியே தரையினிற் கிறிச்

சிந்தை செய்திடச் செப்பியங் கிருந்திடுவாயென்
றந்தணன் பிரிந்தகன் றனனசனமா பதிக்கே.

இ - ள். அப்படி தெளிவுகொண்ட வசிஷ்டரிஷி பின்னு மெண்ணு வான். எந்தையாகிய தகப்பனை வைத்தியனாத சுவாமியுடைய அமைப் பிதுவென்று ஸ்ரீயமுற்று அந்தவளாகிய அருந்ததிப் பெண்ணைச் சுற்றி தமையை மண்டலமாகக் கீறி நம்மைச் சிந்தை செய்துகொண்டு இங் கிருப்பாயென்று சொல்லி அந்தணனாகிய பிரமரிஷி பிரிந்து தன்னுடைய ஆச்சிரமமாகிய அசனாரணிய க்ஷேத்திரத்துக்குச் சென்றார் வசிஷ்ட முனிவர் - று. (சஅ)

வந்துமா ருதவங்கி நாடியை மறுத்திட்டுப்
புந்தி மிக்கவேயிருந் திடும்போது வெட்டையுமே
யந்தமாயொருப் பன்னிரண் டாண்டுஞ்சென் றதிற்பின்
முந்தைபோற சகமுழுதுமே செழிக்க வான்பொழிந்த.

இ - ள். அப்படி வந்த வசிஷ்டமுனி மாருதமாகிய வாதநாடியையும் அக்கினி நாடியையும் கிரகித்து புந்தியென்கின்ற அறிவு பிரகாசமாக விளங்கும்படி பிரம்நிஷ்டையிலே யிருந்துவிட்டார். அப்படி இருக்கும் போது வெட்டையாகிய க்ஷாமகால முடிவாகி பன்னிரண்டு வருஷமுஞ் சென்று ரோகணி சகடமும் நீங்கி முன்புபோல சகல லோகமும் செழிக்கும்படி வானாகிய ஆகாசங்கள் வருஷித்தது. எ - று. (சக)

வான்சுரபியும் வசிஷ்டன் பால்வர் திடத்தவமுற்
முன்பதியும்ம புரந்தரன பதுமயன த தரணியி
மலன்சனித் துயிர்பலகவு முனைவுமகாண் டின்புற்
முன்னடத்தப் பின்றவாக களித்தக மறைவாம.

இ - ள். பூலோகத்திலே அனேக மழைகள் பெய்து செழுமை யாகும்படி வான்சுரபியாகிய காமதேனு வசிஷ்டமுனி பக்கலிலே வந் தேவல கொள்ளும்படி தவமுற்ற பதியாகிய வசிஷ்டபுரியானது தேவ லோகத்துக்குச் சமானமாய் விளங்கப் பின்னுஞ் சகல பிராணிகளும் மேன்மையன்னும் மிகுதியாகச் செனித்து பல உயிர்களும் புசிப்புக் கொண்டு சுகமுற்று முனனிருந்தறகு நூதனங்கதிகமாய பசு எக்கிய மேதுவ எகசியம பிதா எக்கியங்கள் நடத்தி வரும்படி சவுக்கிய முடைந் தார்கள். அதன்பின்பு தவமுனிகளுக்கு ஆச்சிரமங்கள் கொடுத்த தனதயை யறைவாம். எ - று. (௩௦)

இருடிகட்கு சாபமகற்றிய அருந்ததிச் சருக்கம்

முற்றிற்று.

# இருடிகளுக்கு
## ஆச்சிரமங் காட்டிய சருக்கம்.

சுருதிமுனி வரதுமவ ருளிதோன்று மங்காட னில்வரைப்
பருதிதனை யையும் பிழற்பதியும் பதுமன் வேள்விப் பதியிதெனக்
கருதியவர் கட்குள மகிழ்ந்து கனக னமைத்த பதிசூழத்
திருதி வெவ்வேளாச் சிரமஞ் சேரவொரு யோசனை யிடையே.

இ-ள். சுருதிமுனிவர்களாகிய அனேகமான பிரமரிஷிகளெல்லாம் ரிஷித்தலைமையாயிருக்கிற வசிஷ்டமுனி யாச்சிரமத்துக்கு வந்து போய்க்கொண்டிருக்கிற நாளிலே பருதி தனையையென்கின்ற சூரியகுமாரத்தியான தக்ஷிண யமுனைநதியும், வைத்தியநாத சுவாமியும், பின்னும் பிரமதேவன் பத்து அசுவமேத யாகஞ்செய்யும் பண்ணிய விசேஷமான இந்த ஸ்தலத்திலே வாசம்பண்ண வேண்டுமென்று கேட்க, அந்த ரிஷிகளுக்கு வணங்கி உளமகிழ்ந்து முன்பு மனுச்செய்த க்ஷேத்திர விலாசங்களுக்கும் அதிக யோக்கியமாகத் தன்னுடைய ஆச்சிரமத்தைச் சூழ நாலு திக்கிலும் யோசனை தூரத்துக்குள்ளே வேறுவேறு ஆச்சிரமங்கள் அமைத்து மகா ரிஷிகள் வாசம்பண்ணும்படி கொடுத்தார் வசிஷ்டமுனி. எ-று. (௧)

வைத்தான் றனக்கோர் கடிதூரம் வடபால் வசதி சவுனனுக்கே
சித்தாம் பொழில்சிந் தருணிமூலஞ் செய்தவடக்கிற் பார்க்கவற்கே
துத்தா நிம்பந்த வரசூழச் சொன்ன வடக்கே தும்பைமலி
வித்தாந் தமிழ்க் குறுமுனிவன் வேண்டு மளிக்கும் வீடாமே.

இ-ள். அப்படி கொடுத்த மகா ரிஷிகளிருக்கின்ற ஆச்சிரமங்களின் பெயர்களெப்படியென்னில்? தன்னுடைய ஆச்சிரமத்துக்கு வடதிசையிலே ஒரு நாழிகை தூரவழியில் புளியந்தோப்புகள் சூழ்ந்து சகல சித்திகளுங் கொடுக்கின்றது சவுனகரிஷி ஆச்சிரமம். அதின் வடக்கு சமீபத்தில் வேப்பந்தோப்புகள் நெருங்கியிருக்கின்றது அனேகம் தவரிஷிகள் சூழும் பார்க்கவாச்சிரமம். அதின் வடக்கு கடிதூரத்தில் தும்பைகள் மலர்ந்து நெருங்கிய சருவாபீஷ்டங்களுங் கொடுக்கின்ற செந்தமிழறைக்கும் அகஸ்தியமாமுனி யாச்சிரமமென்று பின்னுஞ் சொல்லுவாம். எ-று. (௨)

அதற்குத் தரமே கிருச்சமதா வாச்சிர மத்தின்று மல்லி
கதிக்கும் வேதமதின் வடக்கே கனக சமதக்கினி வசதி
குதிக்கு மிருமுன் றிருதுவினி லுங்குசும மப்பால் கூவிளஞ்சேர்
யதிக்கு மேலாங் கோதமனுக் களித்தா னமரர் புடைசூழ.

இ - ள். அப்படியிருக்கின்ற தலத்துக்கு வடபாலிலே வாசனைகள் சூழ்ந்திருக்கின்ற மல்லிகாவனத்தில் வேதவோசைகள் எழும்பும்படி யிருக்குங் கிருச்சமதாரிஷி ஆச்சிரமம். அதின் வடக்கே ஆறு இருதுக் களிலும் புஷ்பிக்கின்ற வனங்கள் சூழ்ந்த சுவர்னமயமாகிய சமதக்கினி ரிஷிக்கு ஆச்சிரமம். அதின் வடக்கே ஒரு நாழிகை தூரவழியில் கூவிள மாகிய வில்வவனங்கள் நெருங்கிய ஸ்தானமற்ற ரிஷிகளுக்கெல்லாம் மேலாகித் தேவர்கள் புடைசூழ இருக்குங் கௌதமரிஷிக்கு ஆச்சிரம மளித்தான் வசிஷ்டமுனி. எ - று. (கூ)

அப்பால் சமிழு மந்தணர்சூ ழுந்ததனுட் பரத்துவாச ரர்ச்சிரமஞ்
செப்பார் முலையா ளொடுபிருந்தன் சேதி சிறுமை தீர்க்குமதுக்
கப்பால் கரவீ ரத்தடவி யகில மளித்த காசிபனே
துப்பாஞ் சுவரணத் தடிபிருகு தூர் வசதி சுகமளிக்கும்.

இ - ள். அப்படி தேவர்கள் புடைசூழ்ந்திருக்கின்ற தேவேந்திரனை ஆயிரம் யோனியுடைய சரீரனாக விருக்கும்படி சபித்த கவுதமரிஷி ஆச்சிரமத்துக்கு வடதிசையிலே வன்னித் தோப்புகள்சூழ வேதப்பிரா மணர்கள் நெருங்கிய வீடு பரத்துவாசர்க்குக் கொடுத்தான். அதின் வடக்கு செப்புக் கவிழ்ததுபோலிருக்கின்ற முலையாளுடன் பிருந் ரிஷிக்கு ஆச்சிரமங் கொடுத்து மற்ற ரிஷிகளுக்கெல்லாம் சிறுமைகள் தீரச் செய்தான். அதின் வடக்கு அலரிபுஷ்பங்கள் நெருங்கிய ஆச்சிரமம் சகலப் பிராணிகளையுஞ் சனிப்பித்த காசிபரிஷிக்குக் கொடுத்தார். அதின் வடக்கு தூரமாய் சுவர்ணமய பூமியடியில் ஆச்கிரமம். அனேக சகாய பலிதங்கள் உதவ பிருகுரிஷிக்குக் கொடுத்தார் பரமசுகத்தை யடையும்படிக்கு வசிஷ்டமுனி. எ - று. (ச)

அறைந்த பதிம ராச்சிரம மடைவே யொருவர்க் கிரைந்து
நிறைந்த தவர்க ளிலெபெற்றார் நெடிய வாசான் றனிற்றுய்யர்
சிறந்த வதிற்பின் றென்றிசையே செப்புந் துய்ய நதிக்கப்பாற்
றுறந்தார் வசதி யிரண்டரையே தூரங் கடிகை சொல்குவார்.

இ - ள். அப்படி சொல்கின்ற ஆச்சிரமங்களாகிய பத்து மகரிஷி களுக்குஞ் சிஷவருக்கமாகிய பரிசுத்த மகரிஷிகள் ஒவ்வொருவருக்கும் பத்துப் பேராக, அந்தப் பத்துப்பேர்கட்கும் நூறு மகரிஷிகள் சிறப் புடனே அடைவாக சமீப சமீபத்திலிருக்கின்ற ஆச்சிரமங்கள் வடதிசை யில் நூறும். அப்பால் தென்றிசையிலே கொடுத்திருக்கின்ற ஆச்சிர மங்க ளெப்படியென்னில்? துய்ய நதியாகிய சுவேதநதிக்கப்பால் இரண் டரை நாழிகை வழியிலிருக்கின்ற தவங்களைச் சொல்லுவாம். எ - று. (ரு)

குச்ச வச்ச ரேணுமிரண்டோர் குடக்குங் குணக்கும் பெரும் புனலுற், றுச்ச மதினி னுற்பயனே சொல்லு மதின்றென் சுர நதிபா, லெச்ச மகற்று மிருதலமே யிருக்கு மிமையோ ரிறைஞ் சிட்டு, மிச்ச சண்டயோன் கயிலாயன் வீடு மாடு பதிபலவே.

இ-ள். பெரும்புனலாகிய தடாகஞ்சூழ்ந்து மேன்மைபெறத் தருமார்த்த காமிய மோட்சங்களைக் கொடுக்கின்ற குச்சரிஷியென்னுமவர்க்கு மேற்புறத்திலே ஆச்சிரமமும், வச்சரிஷியென்னுமவர்க்கு அடுத்த கீழ்ப்புறத்திலே ஆச்சிரமமுங் கொடுத்தார். அதின் சமீபத் தெற்கு சாரதியென்னும் தேவர்கள் கங்கைமாநதியொன்று பெருகி விளங்கும். அதின் அடுத்த தென்றிசையிலே யெச்சமாகிய தாழ்வுகளைப் போக்கின்ற இரண்டுதலம் தேவர்கள் போற்றி செய்யும் கைலாயச் சட்டமுனிக்கு மிகுந்த சடையுடைய சடாவல்லபமுனிக்குங் கொடுத்துப் பின்னும் அங்கு பக்கங்களிலேயும் அனேகந் தவரிஷிகளிருக்கும்படி ஆச்சிரமங்களடைவு செய்தார் வசிஷ்டமுனி. எ-று. (கூ)

இரண்டு துவனுத்தென் மாடே யிருதவாறு மலர்மலியும்
புரமே சாண்டிலி யாச்சிரமம் புண்ணியதாத் தென்னறுகுமலி
விரதவதுவை கார்கனே விதிற்றெனமா வச்சாரமுனி
டரவுமுனி மாதட மதிற்றென் பாங்குறைந்த திருவனுவிளங்க.

இ-ள். அப்படிக்காகிய இரண்டு தலத்துக்குத் தெற்கு இரண்டரை நாழிகை வழியிலே ஆறருதுவாகிய பன்னிரண்டு மாசங்களிலும் புஷ்பங்கள் மலர்ந்திருக்கின்ற புண்ணிய க்ஷேத்திர ஆச்சிரமஞ்செய்து சாண்டிலிய மகாரிஷிக்குக் கொடுத்தார். அதின் சமீபத்திலே பரமசிவன் சடையிலே சூடுகின்ற அறுகு சூழ்ந்த வனத்தில் கலியாண கார்க்க ரிஷிக்குக் கொடுத்தார். அதின் தெற்கு ஒன்றேகால் வழியிலே விசாலம்பொருந்திய ஸ்தலமும் புண்ணிய தீர்த்தமுஞ் சேர்ந்த ஸ்தலம் சரபமாமுனிக்குக் கொடுத்தார். அதின் தெற்கு நைத்திருவரிஷிக்கு வாசஞ்செய்யச் செய்தார் வசிஷ்டமுனி. எ-று. (எ)

வானோந்தருவின் விருபனுமே மகிழவதிற் றென்றூர்வாச
ஞானபதியே பத்தினுக்கு மடைவாமொரு நூறங்கங்கு
தானமளித்த வசிஷ்டனுக்கு சாலிசேர குணதிசையி
லூனமின்றி முதனெல்வா யுற்றவன் மீசனுநிலையே.

இ-ள். அந்த ஆச்சிரமத்திற்குந் தெற்கே ஐந்தருவாகிய மந்தாரவாடி முதலான கற்பகத்தருக்கள் சூழ்ந்த ஸ்தலம் விருபரிஷிக்கு அருளி தெற்கு துருவாசமாமுனிக்குச் செய்தார். அப்படிக்காகிய பத்து ஆச்சிரமத்தின் ரிஷிகளுக்கு முக்கியமாகிய சிஷ்யருக்காச்சிரமங்கள் நெருங்க நூறு ஆச்சிரமங்க ளடைவுசெய்தார். அப்படிச் செய்த வசிஷ்டமுனிக்கு சாலியென்கின்ற அருந்ததிப்பெண் குடிவாழ்க்கை சேரும்படி இப்பால் குணதிசையாகிய கிழத்திசையிலே, தானம்கொடுத்த ஆச்சிரமங்களின் பெயர்களெப்படியென்னில்? முதலாச்சிரமமாகிய திருவரத்துறை யென்கின்றது வால்மீகரிஷிக்கு அளித்தார் வசிஷ்டரிஷி. எ-று. (அ)

கொடிய தவமுற் றரசரிஷி கொள்ளும் போத்திர மங்கலமே
நெடியசவுரபனு முன்றுநிலையே தார்த்திகனும் விளங்கப்புடைசூழ்ந்

கடியார் போற்று சங்கன் புரிந்த குணக்கே மன்னிருக்கும்
படியே விட்டுனு வாச்சிரம பரவுந் தீர்த்தம் பொழில்சூழ.

இ - ள். பின்னுங் கொடுத்த தெப்படியென்னில்? கொடிதாகிய தபசுகள் செய்த விசுவாமித்திரராசரிஷிக்கு போத்திரமங்கலமென்னுந் தலங்கொடுத்தார். அதின் கிழக்கு மூன்றாவது சவுப்ரரிஷிக்குச் செய்தார். அதின் கிழக்குப் பிரகாசம்பொருந்திய தார்த்தீகமுனிக்குச் செய்தார். அப்பால் அனேகஞ் சிஷ்யவருக்க மகரிஷிகள் புடைசூழ்ந்திருக்கின்ற சங்கமுனிக்கு ஆச்சிரம மமைத்தார். அதின் கிழக்கு முக்கியமாகிய மனமாரிஷிக்கு இல்லமைத்தார். அதின் கிழக்குவிசாலம்பொருந்திய க்ஷேத்திரத்திலே தீர்த்தபுட்கரணிகளுந் தோப்புகளுஞ் சூழவிருக்கின்ற ஆச்சிரமம் விஷ்ணுமகாரிஷிக்குக் கொடுத்தார் வசிஷ்டமுனி. எ - று. ()

அதின்றன் வடக்கே குசகாசனும் நிகாசனெனு மூன்றோர்
துதிப்பர் பத்தே தொடர்ச்சிநிலே சொன்ன வவர்கட் கொருநூறே
பதியு மளித்தான் றன்குடக்குப் பாதை தனுவொன் றினிலிருக்கும்
யதியா டகத்தூபன் முதலில் மாக் கிருச்சமனு மிரண்டே.

இ - ள். அப்படியிருக்கின்ற மகரிஷிக்கு வடபக்கத்திலே மூன்று சிஷ்யவருக்கம் அதிகமாகிய தவசிகட்கு சனகாசன நிகாசனனென்னு மவர்க் காச்சிரமமமைத்தார். இப்படிச் சொன்ன ஆச்சிரமத்தின் ரிஷிகளுக்கு சிஷ்யவருக்கங்கள் அவரினுந் தூய்ய தபசுகளுற்ற மகரிஷி ஆச்சிரமங்கள் ஒரு நூறு செய்தார். அப்பால் அந்த வசிஷ்டமுனி யிருக்குந் தலத்துக்குமேல் திசையில் சொல்வாம். அதெப்படியென்னில்? ஒன்றேகால் நாழிகைவழியில் சருவசித்து ரிஷியாகிய சுவர்ணஸ்தூபருக்கு ஆச்சிரமங் கொடுத்தார். அதின் மேற்கு இரண்டாவது கிருச்சமரிஷிக்குச் சொன்னார் ஆச்சிரமம் வசிஷ்டமுனி. எ - று. (க0)

அதின் மேலாங் கிரசன் விளங்க வப்பால் மாதீக்ஷணனும்
நதுவரெனுஞ் சார்தாதபரும் நாடு மேற்கே மிருகண்டமுனி
புதுவ ரெனுமே சனகமுனி போந்தான் வாம தேவரெனும்
யதிபே தேவா லசியனொடு வரன்மா ரிஷியு மெனவிருந்தார்.

இ - ள். அப்படியிருக்கின்ற ஆச்சிரமத்தின் மேற்கு ஆங்கிரசமுனிக்குச் செய்தார். அதன்பின்பு சோதிரூபமாகிய தீட்சணரிஷிக்கு இல்லம் செய்தார். அதின் மேற்கு நதுவரென்னும் மூத்தோராகிய சார்தா தபரிஷிக்குக் கொடுத்தார். அதின் மேற்கு மிருகண்டமகாரிஷிக்கு ஆச்சிரமங் கொடுத்தார். அப்பால் புதுவராகிய தினம் புதுமையாய் தோற்றப்பட்ட சனகரிஷிக்குச் செய்தார், அதின் மேற்கு வாமதேவரிஷிக்கு ஆச்சிரமஞ் செய்தார். அதின் மேற்கு தேவாலசிய முனிக்கு இல்லமமைத்தார். அதற்கு மேற்கு சைவமகரிஷிக்கு ஆச்சிரமஞ் செய்தார் வசிஷ்டமுனி. எ - று. (கக)

ஆங்கு மொருவர்க் கிரைந்து வடியா ரவர்க்கு மிகத்துய்ப்பா
தீங்கி லவர்க்கும் வேறில்லஞ் செய்தே யளித்திட் டந்தனன்பின்

பர்க்கு சுரப்ப் பதியோனைப் பலகாலிருந்து பணிந்திடுகோ [ம்.
டீக்கு தவிரத் திசைமுகன்கொண் டேகு மறையோன் றிறமறைவா

இ - ள். அப்படிக்களித்த ஆச்சிரமத்தின் மகரிஷிகளுடைய சேஷ வருக்கங்கள் அவர்களிலும் மிகுந்த பெருமையோர்க ளாச்சிரமங்கள் ஒருநூறு செய்திட்டார். அப்படி நாலுதிக்கிலும் நானூறு ஆச்சிரமங்கள் செய்து வேறு வேறு தலமாக அங்கங்கும் பரமசிவன் பிரகாசிக்கும்படி செய்த வசிஷ்டமுனி பின்பு சுரபப்பதியோனாகிய வைத்தியனாத சுவாமியாரைப் பூசித்துப்போற்றி செய்து கொண்டிருந்தார். அப்படியிருக்கிற நாளிலே வெகுகாலஞ் சென்றவாறே பிரமலோகத்திலே சமுசயம் வந்து வசிஷ்டமுனியை அழைத்துக்கொண்டுபோய்ச் சமுசய நீங்கச்செய்த பிராமணனுடைய கதையைச் சொல்வாம். எ - று. (௧௨)

இருடிகளுக்கு ஆச்சிரமங் காட்டிய சருக்கம் முற்றிற்று.

# பிரமலோகத்தில்
# ஐயந்தீர்ந்த கோழியூர்ச் சருக்கம்.

அருந்தவர்கட் ககமளித்த வயன்மகனீர்க் குண்டியை வைத்
தல் வடக்கா, யிருந்துமல நீர்கழித்திட் டெழுந்தமுனி புனல்கவிழ்த்
தங் கிருக்கக்கண்ட, கரும்பிள்ளை யினியிரவிற் கண்ணிருள வென்
ேற்தனக்குக் கங்கைவேண்டி, வரும்வெள்ளை நதியைவடல வந்திட்
வென் றழைத்துசுத்த மாகினரே.

இ - ள். அரிதாகிய தபசுகளைச் செய்கின்ற ரிஷிகளுக்கெல்லாம் ஆச்சிரமங்கள் கொடுத்த அயன்மகனாகிய வசிஷ்டமுனி நிறைந்திருக்கின்ற நீர்க்கமண்டலத்தை வைத்துப்போட்டு அல்லாகிய இராத்திரியிலே வடக்குமுகமாகவிருந்து மலநீர்க் கழித்தெழுந்திருந்து சலத்தைப் பார்க்கும்போது இராத்திரியிலே வடக்குமுகமாயிருந்து மலசலவிசர்க்கம் பண்ணிய தோஷம் நீங்கும்படி வைத்த எங்கு கமண்டல சலத்தை காகமானது வந்து கொட்டிக் கவிழ்த்துவிட்டது. அதுகண்ட இருடி கோபமுற்று இனி இராத்திரி காலங்களிலே அந்தமா யிருண்டுபோகக் கடவதென்று சாபங்கள் கொடுத்துப் பின்னுந் தனக்கு சுத்தமாகும்படி தீர்த்தம்வேண்டி சுவேதாநதியை வடபக்கத்திலே வரும்படி யழைத்து அதிலே சுத்தம்பண்ணி ஸ்நானஞ்செய்து பரிசுத்தமானார் வசிஷ்டரிஷி. எ - று. (௧)

நாலூறு லயங்களொடு நற்றவரு மிருந்திடுகோ டனிற்காகதைத்
தாமேடை விரவிலதிற் றங்கிடா தெனச்சபித்தா ரதன்குடக்கே

தேனோடு மலர்வனத்துட் டீங்ககற்று பயிரவிமுன் செயவிரும்பி
வானொரு மயனூர்திப் பெடையுமே வந்து தவசுற்றதுவே.

இ - ள். அப்படி பரிசுத்தமா யிருக்கும்போது நானூறு ஆலயங்களிலும் இராத்திரி காலங்களிலே அரிஷ்ட சத்தமாகிய வாயசத்தொனிகள் கேட்காமலிருக்கும்படிக்கு இந்த க்ஷேத்திரங்களிலே இராத்திரியிலே தங்காமலிருப்பாயென்று சபித்தார். அப்படி சபித்த வசிஷ்டமுனி ஆச்சிரமத்துக்கு மேற்கே ஆறுபாய்ந்தோடிய மது துளிக்கின்ற புஷ்பவனத்திலே தீங்காகிய துன்பங்களைப் போக்குகின்ற காளியம்மன் வாசலிலே சேயென்னும் புத்திரரை வேண்டி பிரமதேவனுடைய வாகனமாகிய அன்னத்தின் பத்தினிப் பெண்ணன்னம் வந்து அரிதாகிய தபசுகளைச் செய்தது. எ - று. (௭)

அந்நாளில் யாழிசை நாரதமுனி வனந்தனின்றன் னகத்துட்
செல்ல, முன்னுமினன் றவனடியைத் தொழுதிறைஞ்சி விருந்து
கொண்டு மிகவும்பேசிப், பின்னவனைவிட்டுவிண் போந்திடும்போ தாஞ்
சனேயன் பெருந்தடத்திற் கண்ட, தந்நாடேகிப் பிரமன் மன்றி
லறைந்திட வவர்க டேர்ந்தார் நூலே.

இ - ள். அப்படி நானூறு ஆச்சிரமங்களுடனே தானும் சுயதருமாதிகளை முடித்துக்கொண்டிருக்கிற நாளையிலே முன்னுகிய நாரத மகாமுனி சத்த சுரங்களோடுகூடிய நரம்புக்கருவியுடனே வசிஷ்டமுனி ஆச்சிரமத்துக்கு வந்தார். அதுகண்டு அருக்கிய பாத்திய ஆசனங் கொடுத்து விருந்துசெய்து இருவரும் யோகக்ஷேமாதிகள் விசாரித்திருந்து பின்பு பின்னுகிய வசிஷ்டமுனிக்குச் சொல்லிக்கொண்டு ககனமார்க்கஞ் செல்லும்போது அநுமந்த தீர்த்தத்திலே ஒரு அதிசயங் கண்டு சீக்கிரத்திற் சென்று பிர்ம சபையிலே சொல்ல அப்போது பிர்மாதி தேவர்களெல்லாங் கேட்டு அதிசயித்து தருமநூல்களைத் தேர்ந்தார்கள். எ - று. (௮)

அப்பொழுது பிர்மபதி யந்தணரோ டரன்முன்றி லமர்ந்த
சத்தி, யப்புவினற்றவ வசிஷ்டரா னனீகஞ்செய்ய வாங்கய னனுப்
பால், விப்பிரன் சுந்தர னெனவந் தஞ்சலித் திக்கணம்வருக வேவி
னுனின், றப்படியே யிலதாகி லயன்மன்றிங் கமருமென வறையக்
கேட்டான்.

இ - ள். அந்தவேளையிலே பிரமக்ஷேத்திர மென்கின்ற அந்தப் பட்டணத்து ஆசிரமத்து பிரமரிஷிகளுடனே பரமசிவன் சந்நிதானத்துக்கு முன்பாக இருக்கின்ற சத்தி தீர்த்தத்தின் மேல்கரையிலே வசிஷ்டமுனி ஸ்நானஞ் செய்து செபஞ்செய்து கொண்டிருக்கும்போது அங்கு பிரமதேவன் அனுப்புதலாலே சுந்தரன் என்றொரு பிராமணன் வந்து அஞ்சலித்து இத்தட்சணம் பிரமலோகத்துக்கு உம்மை வரும்படி என்னை ஏவினார். ஆகையால் இப்போது தாமசஞ்செய்தால் பிரமாதி

முதலான தேவர்கள் சபையுடனே இங்கு பிரவேசிக்கிறதாக இருக்கும். ஆதலாலே தெய்வ அபராத மாகுமேயென்று சொல்லக் கேட்டார் வசிஷ்டமுனி. எ - று. (௪)

அக்கணமத் தொழின்முடித்தே வதிவேகத் துடனவனோ டயன் பாலசென்று, மைக்கண் மலர்வாணி மறைமுகன்றனையும் வணங்க வவர் மகனைப்புல்லி, சிக்கமுகந் தருகினில் வைத்தரனருள் பெற்ற வுன்றன்றிறமையாலே, பக்கய்ய பொன்றதனைப் பகுத்துவாயென முனிக்குப் புகர்ந்தான்வேதன்.

இ - ள். அதுகேட்ட வசிஷ்டமுனி அதிசீக்கிரத்திலே தன்னுடைய நித்திய கருமாதிகளை முடித்துக்கொண்டு அதனுடனே மனோவேகமாய் பிரமலோகத்துக்குச் சென்று தேவசபையிலே வணக்கப்பெற்று பிரம தேவனையும், மாதாவாகிய சரசுவதியையும் வணங்கினான். அப்போது அவர்கள் தன்னுடைய குமாரனென்று கட்டித்தழுவி உச்சி மோந்து பக்கத்திலே வைத்து அசனுரணியபதி அனுக்கிரகம்பெற்ற உன்னுடைய திறத்தினாலே பக்கமாகிய இங்கிருக்கின்ற தேவர்களை ஐயமாகிய சந்தேக மொன்றுற்றிருக்கிறார்கள். அதைப் பிரித்துச் சொல்வாயென் றான் பிரமதேவன். எ - று. (௫)

உன்துபதி குணக்கருகி லமரர்பெற்ற வுறும்படையென் பசுர பத்ம னுரம்பிளந்த, கனிகுருதி மிகவகன்ற கோழியூரென்னு மூன் றுகர முடையோன றுசகல்கயத்தில், புனல்பரவு மாருதமா தடத் தினுல்கீழ் பூருவருக் கிட்டிடுமதன புண்ணிய நூல்பாரத, தனல கலா னுருத்திரசர்மா வென்றொருவன் றங்கிமுதனு ளுபவாசந தலம்வந்துற்றான்.

இ - ள். அப்படி பிரமதேவன் சொல்கின்ற தெப்படியென்னில்? உனது பதியாகிய வசிஷ்டபுரிக்குச் சமீபமான கிழக்குத்திக்கிலே தேவர் கள் பெற்ற ஆயுதப்படைகளாகிய எலும்புகளையுடைய சூரபத்மாசுரனை சுப்பிரமணியசுவாமி மார்பு பிளக்கும்போது மிகுந்த இரத்தங்கள் பரவி பூமியெல்லாம் சிவந்திருக்கின்ற கோழியூரென்னும் சுப்பிரமணியருக்கு கோழிக்கொடியாகிய க்ஷேத்திரத்தில் மிகுந்த சலங்களோடுங்கூடிய மாருத தீர்த்தத்தினாலே மரத்தின்கீழே பூருவராகிய பிதுர்களுக்குத் தீர்த்த சிராத்தம் பண்ணவேண்டுமென்று தருமசாஸ்திரத்திலே சொலவிய படிக்கு ஆகிதாக்கினியான உருத்திரசர்மா என்றொரு பிராமணன் அவ்விடத்தில் வந்து முதனாள் தல உபவாசஞ் செய்தான். எ - று. (௬)

தென்புலத்தோர் தனக்குதவுந் தீர்த்தயுத்தஞ் செய்திட்டா னதினிலடயிற புசித்தோர்மாளத், துன்பமுறறே யுருதஙிர வது யவறன் பண்டுந தென்மறையோன் பழுதொடாத தெண்டுற யிங்கு, மின்னம தினையமற வழைத்தோமென் றியம்பிபதாதையை

நோக்கி எளியேன்கண்ட, தென்னவென வதற்கயனு மசனச்
சோதி செய்தருள் ஞானத்தவத்தாற் றேர்ந்தோமென்றார்.

இ-ள். அப்படி விரதமிருந்து மறுநாள், தென்புலத்தோராகிய பிதிர்களுக்கு உதவியாகிய சிராத்தஞ் செய்தான் அப்படிச் செய்யும் போது மத்தியிலே போக்தாவாகிய புசித்தவர்கள் மாய்ந்துவிட்டார்கள். அதைக்கண்ட ருத்திரசர்மாவும் அவர் மனைவியும் அனேக வியாகூலங் கொண்டு பிரம்மஹத்தி வந்ததேயென்று துன்பமடைந்தார்கள். ஆகையா லந்த அதிசயத்தின் சந்தேகந் தீர்ப்பாயென் றழைத்தோமென்று சொன்னான். அதுகேட்ட வசிட்டமுனி தாதையாகிய பிரமதேவனை நோக்கி சிறியேனாகிய வெனக்கு யாது தெரியுமென்றான். அதற்கு பிரமதேவன் அசனச்சோதியாகிய ஸ்வத்தியனாத சுவாமி செய்தருள் ஞானத்தாலாய்ந்து சொல்லென்றார். பின்னும் பிரமதேவன். எ-று. (எ)

அம்மொழிகேட் டருந்தவனு மமரர்மன்றி லறிந்திடவே
யதின்பயனை யறைகவென்ன, விமமுமுருத்திரன் கதையையுரைப்
பான்வேதன் வெண்பிறைச் செஞ்சடையோர்க்கு, தீம்பாலமுதங்
கொளவதும் மதுநீயறிந்திலையோ தனஞ்சூழ் நெல்வாய்த்தலதால
சகடத்திடையன் றகழுறபாலே, சும்மையில் வைத்தவனெங்கும்
விலைகளகூறி சோர்வுகொண் டமமரத்தடியிற் றுஞ்சினனே.

இ-ள். அப்படி சொல்லக்கேட்ட வசிஷ்டரிஷி பின்னும் அமரர் மன்றாகிய தேவசபையிலே சகலரும் அறிந்திடும்படி அதின வரலாறுகளைச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்வான். பிரமதேவன் அதெப்படியென்னில்? விமமலாகிய துக்கத்துடனே யிருக்கின்ற பிராமணன் விலைக்காக வைத்தியனாத சுவாமிக்குக் கொணர்ந்த பாலினாலே வந்த பலன் அப்படி கொண்டுவருகிறது நீ அறிந்திலையோ தனமென்னுஞ் செங்கன்றுகள் சூழ்கின்ற நெல்வாயாகிய திருவறத்துறையிலே யிருக்கின்ற பெரிதாகிய சரீரமுடைய இடையன் ஒரு குடத்திலே பாலை வைத்துச் சிரசிலே யெடுத்துக்கொண்டு எங்கும் விலைகள் கூறி ஆயாசங் கொண்டு அந்த தீர்த்தத்தின் மரத்தடியிலே பாற்குடத்தை இறக்கிக் போட்டு இளைப்பினாலே கீழே படுத்து நித்திரை செய்தான். எ-று. (அ)

நஞ்சுகக்கு நெடுநாகங் கலுழன்கொண்டு நறுக்கியுண்ணி யக்
குமோரதத் துச்சிவைத்து, சஞ்சதன்றுற் றுண்டிட வத்தரையில்
வைத்தசால் முதத்தினிலவ் மூாத ததனைக்காணான், துஞ்சல்விட
வந்தனனப் பாலைவாங்கி துயமனை தனிற்சோக்க மனைவியாளுந,
தஞ்சமுடன் பாலடிசில் செய்தீந்துண்ட சாதிமறை யவராவி யழிந்
தார்தாழ்வ.

இ-ள். அப்படி நித்திரைசெய்த வேளையிலே நஞ்சை கக்குகின்ற நெடிதாகிய சர்ப்பத்தைக் கலுழனாகிய கருடன் கொண்டுவந்து புசிக்க வேண்டுமென்று ஆலமரத்தினுச்சியிலே வைத்து தன் மூக்கினாலே

சுறக்க அந்த சிரத்தண்டமானது உயிர்ப்புடனே அதினடியிலே வைத்திருந்த பால்குடத்திலே விழுந்த விஷங்களை கக்கிற்று. அதை யறியாத இடையன் நித்திரை நீங்கி யெழுந்தவாறே அந்தப் பாலை உருத்திர சர்மா விலைக்கு வாங்கி பரிசுத்தமாகிய தன்னுடைய கிரகத்திலே வைத்தான். அப்போது அவன் பத்தினியானவள் அதிக பயபத்திபடனே அடிசில் செய்கையில் அந்தப் பாலில் பாயசஞ்செய்து பிராமணர்களுக்கு பரிமாறினாள். அதைப் புசித்த பிராமணர்கள் உயிரிழந்தார்க ளந்தவேளையில். எ - று. (௪)

அப்பிதிர்க்க ளின்பலனு மிடையில்வீந்த வவன்கதியு மப்பழியே யடிசில்தந்தாள், விப்பிரன் பன்னகமு வணமாய்னித்துள் விரித்தறிய வெழுகோடி யறநூலொடு, துட்பொரு கொடியிற் னூலுஞ் சோதித்தோர்கள் சொல்லவ்வர் திறமிலா துனக்குரைத்தோ, மிப்பயென விவ்வாறு கேட்டமைந்த னியாமயிரண் டிருக்தெண்ணி யுரைப்பேனென்றான்.

இ - ள். அப்படி சிராத்த மத்தியிலே இறந்துபோன போக்தாவின் கதியும் அந்தப் பிதுர்க்களின் கதியும் அந்தப் பழியாகிய சமையல் பண்ணியவள் அந்தப் பிராமணன் சர்ப்பம் கருடன் இடையன் இவற்றுள் பிரித்தறிய தருமநூல்களெழுகோடி கிரந்தங்களும் அவற்றிலே உயர்ச்சியாகிய கோடி கிரந்த வாக்கியங்களும் பார்த்தவர்கள் பிரித்துச்சொல்ல அவர்கள் திறமில்லாததினாலே இப்போது உனக்குரைத்தோமென்றார். அப்படி இவ்வாறெல்லாங் கேட்ட வசிஷ்டரிஷி இரண்டுசாம மிருந்தெண்ணி யாலோசித்துச் சொல்வேனென்றார் பிரமதேவனுக்கு. எ - று.

என்றவவர் றுதிமதியாற் சேக்கையூரி லிருக்குமறை யவரனையர் யாவுந்தேர்ந்தோ, ரின்றிதெலா மறிந்திட வாங்சேகிச் சொல்வதியல்பென்றான் றனைத்தாதை யிவற்றையாய்ந்து, வொன்றுரைப்பாயெனவென்று னதனைக்கேட்ட வோதிமமாங் குற்றவையே யுரைப்பேன்யாவு, மென்றமர ருருகிருந்தேன் றேவிநீர்முன் மேதினியிற் பரிவேள்விப் பதிமேலன்றே.

இ - ள். அப்படிச் சொல்லிய வசிஷ்டரிஷி பின்னுஞ் சொல்லுவார். சேக்கையென்னுங் கோழியூரிலிருக்கின்ற பிராமணர்களிலே அனேகம் பிராமணர்கள் தருமநூல் முதலான கலை ஞானந் தேர்ந்தோர்கள் இப்போது இவைகளையெல்லாம் அறிந்திட அவ்விடத்திற் சென்று இக்கிரத்திலே வருவது யுத்தமாகுமென்றார். அதற்குத் தாதையாகிய பிரமதேவன் அப்படியே சென்று ஆராய்ந்தறிந்து சொல்லென்றார். அதனைக் கேட்டிருந்த ஓதிமமாகிய அன்னம் அவ்விடத்திலே வந்து அதன் விருத்தாந்தங்கள் யாவும் உரைப்பேனென்று பக்கத்திலேயிருந்துகொண்டு என் பத்தினியாகிய பெண்ணன்னம் பூலோகத்திலே நீர்முன்னே பத்து அசுவமேதம்பண்ணிய க்ஷேத்திரத்தின் மேலைத்

இக்கிலேயென்று பின்னுஞ் சொல்லியது பிர்மதேவனைப் பார்த்து அன்னப்பட்சி. எ - று. (கக)

## கலி நிலைத்துறை

அலகை நீக்கிடு மணங்கின்முன் றவம்பெறு மவள்பா
லுலகு பக்கிருந் திங்கிப் பொழுதுற் றனனுக்கு
மலர்மலிந்திடு மாருதக் கயத்திலோர் மறையோன்
சலஞ்சிராத்தஞ் செய்தத னிடைப்புசித் தனர்சாய.

இ - ள். அப்படிச் சொல்லிய தெப்படியென்னில்? அலகையாகிய பூதப்பிரேத பிசாசு பிரமராட்சசன் இவைகளையெல்லாம் ஓட்டிவிடுகின்ற பத்திரகாளி சந்நிதியிலே தபசு செய்கின்றவளிடத்துக்குப்போய் பூலோகத்திலிருந்து இவ்விடத்துக்கு இப்போது யான் வந்தேன். ஆதலால் அவளிடத்திலே புஷ்பங்கள் நெருங்கியிருக்கின்ற மாருத தீர்த்தத்திலே ஒரு பிராமணன் தீர்த்த சிராத்தஞ் செய்து நடுவிலே புசித்த பிராமணர்கள் இறந்துவிட்டார்களென்று பின்னுஞ் சொல்லியது அன்னப்பட்சி. எ - று. (கஉ)

பிரமஹத்தியே பிடித்ததென் றன்கரம் விரித்து
சிரமடித்தவன் பெண்டோடு தியங்கவே யாங்கு
பிரமக்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் பெருந்தவத்தோ
ருரந்தளர்ந்தனர் யௌவனர் வாலிப ருநந்தே.

இ - ள். அப்படி இறந்துபோன பிறகு அந்தப் பிராமணன் பிரமஹத்தி பிடித்ததேயென்று கைகளை விரித்து நிலந்தடவி சிரசிலே அடித்துக்கொண்டு தன் பத்தினியோடேகூட மயங்கித் தியங்கினான். அப்போது அவ்விடத்திலே கூடிய பேர்கள் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் பின்னும் தபசு செய்வோர்கள், பெரியோர்கள், தளர்ந்தோர்கள், யௌவனர்கள், வாலிபர்கள் இப்படிக்கானவர்களுடனே பின்னும். எ - று. (கங)

மிக்கவேதநூ லறத்தினூ லாய்ந்த விப்பிரரோ
டக்கநீ றணிந்தார்களு மண்ணணிந் தாருஞ்
சிக்க முன்னர்பின்னர் தெலுங்கர்க ளொடுதுலுக்கர்
பக்கஞற்பதி பலகுழாங் கூடியே பகர்வார்.

இ - ள். மிகுந்த வேதங்களை ஆராய்ந்தவர்களும் தருமநூல் ஆராய்ந்தவர்களும் அதுவுமல்லாமல் விபூதி ருத்திராட்சம் பூண்டவர்களும் திருமண் தரித்தார்களும் முன்குடுமி யுடையவர்கள் பின்குடுமி யுடையவர்கள் தெலுங்கர்கள், துலுக்கர்கள், பின்னும் பக்கங்களிலே யிருக்கிற புண்ணிய க்ஷேத்திரவாசிகள், இப்படிப் பலவகைப் பேர்களுங் கூட்டமாயிருந்து கூடிச் சொல்வார்கள். எ - று. (கச)

வியந்து விக்கதி வித்தல விருடியா லுரைத்தே
பயத்த வம்மொழிப் படிநடந் தவதெனப் பலரு
மியத்த வக்கண மேபோங் கவர்தனைக் காணு
வியத்தைப் போக்கியே வெண்ணதிப் புனலில்வீழ்ந் தெழுந்தான்.

இ - ள். அப்படி அவர்கள் சொல்லிய தெப்படியென்னில்? இப்போது இந்த அதிசயங்கள் நடந்ததென்பாரும் அதை இந்த ஸ்தலத்து ரிஷியிடத்திலே யுரைத்து அவர் விதிக்க சொற்படி நடந்ததென்பாரும் இப்படி பலவிதமாக உரைக்கக் கேட்டபோது அந்த நிமிஷத்திலே ஆங்கு தேடிக் காணாமல் பின்பு வியமாகிய பிரேதத்தைப் போக்கி சுவேதநதி தீர்த்தத்திலே விழுந்தெழுந்து அதிக வியாகுலத்துடனே. எ - று. (கயி)

வந்தவந்தணா னுடி பரன்றனைத் தொழுது
சிந்தைநொந் தனவின்று கொள்ளுவ திலமென்றே
வந்துமன்றினில் வணங்கி வாய்திறந் தழுதிட்டா
னந்தவேளையென் செய்குவ தெனச்சில ருரைத்தார்.

இ - ள். பின்னும் அந்த உருத்திரசர்மா அந்த தீர்த்தத்தி னுக்கினேயத்திலிருக்கின்ற ஆலடி ஈஸ்வரனைத் தொழுது போற்றி இன்றையாதொரு ஆகாரங்களுஞ் செய்கிறதில்லையென்று அதிக விசனத்துடனே அந்த கூட்டமாகிய சபையிலே வந்து வணங்கி இதற்கு என் செய்வேனென்று வாய்திறந் தழுதிட்டான். அதுகண்ட சிலர்கள் அழுது துயரமுற்றென்ன செய்வதென்றார்கள் பின்னும். எ - று. (கசு)

பின்னுமே சிலர்பிழற் பதிகனைத் தொழுதிடென
அன்னதிற் சிலரயன் கதியென வுரைத்திலர்கள்
நன்மைசெய்திட நன்மையா நயமிலாத் தின்மை
தின்மையாமெனச் சிலரதைச் செப்பொணா தென்றும்.

இ - ள். அந்த சபையிலேயிருக்கின்ற பின்னுஞ் சிலர்கள் பிழற்பதியாகிய வயித்தியனுத சுவாமியை தெரிசிக்கப் பரிகாரமென்பார்களும், பின்னுஞ் சில பேர்கள் பிரமகட்டளை யென்பாரும், பின்னுஞ் சிலர்கள் நன்மை செய்தபேர்கள் நன்மையராவார்கள், தின்மை செய்தபேர்கள் தின்மையாவார்கள் என்பாரும், பின்னுஞ் சில பேர்கள் யாம் சொல்லப்போகா தென்றவர்களும் இப்படிக்கெல்லாம். எ - று. (கஎ)

நெடிலடி.

என்றிடு மிடையினில் முன்சிதை கொண்டவ னெரிவிழி யுடனுதடு
தின்ற சினமொடு மண்டிஇறந் தவர்திதி யென்றே விடயிட்

டின்று வதைத்ததைமறுத்திட வென்றஃதொன்றறி யாதவன்போ
னின்றிற மென்றனன் முண்டனு மன்னது கொண்டிடு மந்தணனே.

இ - ள். அப்படிக்குச் சொல்கின்ற வேளையிலே போத்திரியங் கலத்திலிருக்கும்முன் குடுமி வைத்திருக்கின்ற ஒரு பிராமணன் கண்கள் சிவந்து நெருப்பெழ உதடு கடித்து அதிக கோபத்துடனே ஆங்காரங்கொண்டு சொல்வான். அடா உருத்திர சர்மாவே! இறந்தவர்க்கிடுவதென்று சொல்லி விஷத்தை வைத்து இப்போது கொன்றுபோட்டது நீயல்லவோ? அந்தப் பழியை மாற்றவேண்டியொன்றும் அறியாதவன்போல அதிக வியாகூலத்தைக் குறித்துப் பேசுகிறது தப்புவித்துக் கொள்ளுகிற உன்னுடைய திறமையல்லவோ? ஆகையால் அவர்களைக் கொன்றவன் நீயே என்றான். அப்படி முண்டனுய்ச் சொல்லிய விசேஷத்தைக் கேட்ட பிராமணனாகிய உருத்திர சர்மா. எ - று. (கஅ)

க லி.

அண்டர்போற்று மசனபதி யறிந்திலையோ வவனுரைத்த
சண்டமிது வெக்காரணத்தால் சாதித்தானென்று ருத்திரன்வாய்
விண்டுகலக்க முற்றான்றெ னைவிரிஞ்சன் முன்னுரைக்க
வண்டரய்ய மகன்றனர்பின் வசிஷ்டர்வதுவை மான்புரைப்பாம்.

இ - ள். அந்தவேளையிலே பிராமணன் அண்டராகிய தேவர்களெல்லாம் போற்றுகின்ற அசனாணியபதியே! பரமசிவனே! நீயறிந்திலையோ? சண்டனாகிய கடூரம் பொருந்திய அவனுரைத்தது என்ன காரணத்தினாலேயோவென்று வாய்விட்டுப் புலம்பி அழுதுகொண்டு வைத்தியனாத சுவாமி திருக்கோயிலின் முன்பு வணங்கிக் கலக்கந் தீர்ந்தான். இப்படி நடந்ததென்று விரிஞ்சனாகிய பிரமதேவன் முன்னே சபையிலிருந்த அன்னப்பட்சி யுரைத்தது. அதுகேட்ட தேவர்களெல்லாம் சமுசயந் தீர்ந்தார்கள். அப்பால் வசிஷ்டமுனிக்கு திருக்கலியாணஞ்செய்த பெருமையைச் சொல்லத் தொடங்குவாம். எ - று. (கக)

பிரமலோகத்தில் ஐயந்தீர்ந்த கோழியூர்ச் சருக்கம்

முற்றிற்று.

# அருந்ததி விவாகச் சருக்கம்.

முன்னிலத்திற் கீறிவைத்த மொய்குழ லுச்சியிலெழும்பு
மின்னல்பெருந் தூமமிருண் மேதினியெ லாம்பரவி
மின்னிடையார் பங்கனடி யார்நீக்கு வீரெனவே
பொன்னுலகு புக்கவவர் போயினர்நான் முகனுலகு.

இ - ள். முன்னாலே நிலத்திலே வட்டமாகக் கீறிவைத்த வசிஷ்ட ரிஷி மொழிப்படியிருந்த மொய்குழலாகிய அருந்ததிப்பெண் கோர தபசினாலே பிரகாசத்தோடுங் கூடிய தபாக்கினியின் புகையானது உச்சியினாலே எழும்பி பூலோகமெல்லாம் பரவியிருண்டு மின்னிடையார் பங்கனாகிய பரமசிவனுடைய அடியார்களை நீக்கி மற்றது புகார்த காலங்கள் போல பொன்னுலகென்னுந் தேவலோகம் புகுந்திட அவர்கள் தாங்க மாட்டாமல் கூட்டங்கூடி ஆலோசித்து சத்தியலோகத்துக்குச் சென்றார்கள். எ - று. (க)

அஞ்சி யமரர்கள் விரிஞ்ச னடிதொழுதிவ் வண்டமெலாம்
விஞ்சி யருந்ததி தவததான் பாறும் மிக்கணமானாற்
றஞ்சமென வுனைச்சார்ந்தோ மெனவவரைச் சாற்றெனவே
கஞ்சனயர் வுற்றுரைக்கக் கண்டவரங் குரைத்தனரால்.

இ - ள். அப்படிக்குச் சென்ற தேவர்களெல்லாம் பயந்து நடுங்கி பிரமதேவனைக் கண்டு வணங்கிச் சொல்வார். இவ்வண்டமாகிய பூலோக முதலான சகல லோகங்களும் பேதித்திடும்படி அருந்ததியென்கிற பெண் தபசு பெறுவதனாலே யிருக்கப் பொறுக்கமாட்டாமல் உம்மையேயல்லாது வேறு கதியில்லையென்று வந்தோம். ஆனால் இன்னும் ஒரு நிமிஷத்திலே இங்கு வரத்தக்கதாகுமென இதனைக் கேட்ட பிரமதேவன் அதிக விசனங்கொண்டு விவரித்துச் சொல்லென்றான். அதற்குச் சொல்வார்கள் தேவர்கள். எ - று. (உ)

முஞ்சனுருட் கொடுஞ்சகட முற்றதனிற் றவரெலா
மெஞ்சனுற வவர்க்குணவு சுகதவருந் தனித்தாதை
செஞ்சொல்வினை கொண்டவுன் சேய்த்திறம் வனைச்சுரநதிபா
விஞ்சியென நிலங்கீறி யிருப்பாயென வைத்தகன்றே.

இ - ள். முன்னாலே கொடிதாகிய ரோகணிச் சகடம் வந்து சகலப் பிராணிகளு முஞ்சலென்னும் முடிவுகாலமாய் அதிலே தவரிஷிகளெல்லாம் இளைப்புற்றிருக்கும்போது அவர்களுக்குப் பசிப்புக்குதவிய உருத்தன் சொற்படிகொண்ட உமது சேயாகிய வசிஷ்டமுனி அருந்ததியை கங்காதீர்த்தக் கரையிலே பூமியிலே கோட்டைபோலக்கீறி இதற்குள்ளே யிருப்பாயென்று வைத்தகன்றுபின். எ - று. (ங)

சேட்டபதித் தலம்புக்குச் செய்தொருநா னூற்றில்ல
மீட்டமுனி வர்கட்கீந்தன் மேலுலகி லின்புறவங்
காட்டியுக மாயிரமே காணவருந் தவமுறுமச்
சூட்டிலெழுந் தூமமெங்குஞ் சுற்றியதாற் றுன்பமென்றார்.

இ - ள். சேஷ்டபதியென்னுந் தலத்திலே சென்று நானூறு ஆச்சிரமம் வேறு வேறாகச் செய்து கூட்டமாகிய முனிவர்களுக்குத் தானங் கொடுத்து மேலுலகாகிய உமதுலகத்துக்கு வந்து இன்பமுற விருந்திட்டார். அப்பால் ஆட்டியாகிய அருந்ததிப்பெண் அங்கிருந்து ஆயிரத்தெட்டு யுகமாகிய நாள் அரிய தவமுற்றாள். அந்த சூட்டினாலே யெழுந்த புகைகளானது சகல லோகங்களுஞ் சூழ்ந்து இருள் பரவியதினாலே துன்பமாயிற்று என்றார் தேவர்கள். எ-று. (௬)

என்றிடும்பொழுதிலங்கே யெழுந்தபுகை வரக்கண்டு
குன்றலெனவே விரிஞ்சன் கொடுஞ்சினங்கொள் தன்சுதனை
நன்றுசெய்தா யெனநடுங்கி நற்றவ ரந்தணர்க்குத்
தின்றுவிடச் செய்ததுயான் செய்வதெனச் செப்பினன்.

இ - ள். அப்படிச் சொல்லுகிறபோது அங்கெழும்பிய தவப்புகையானது வரக்கண்டு கெடுதலென்றெண்ணி பிரமதேவன் கோபங் கொண்டு சுதனாகிய வசிஷ்டமுனியை நோக்கி நன்று செய்தாயென்றான். அதுகேட்ட வசிஷ்டமுனி பயந்து நடுங்கி அந்நாள் அந்தணராகிய தவரிஷிகளுக்கு யாதொன்றும் புசிப்பில்லாததினாலே உதவும்படி செய்ததுவேயல்லாது வேறில்லை யான்செய்தெனச் சொன்னான். எ-று.

வந்தவருந் தவப்புகையே வல்லசுராசுரர் முனியோகி
யந்தணர் விஞ்சையரறத்தோ ரனைவரையுஞ் சூழ்ந்துகொடுங்
கந்தல்செயச் சுரர்சேட்டன் கண்டயர்வுற் றருந்ததிபாற்
சிந்துவிடை சென்றவனைச் செய்தவமேதெனச் செப்பென்றானே.

இ - ள். அப்படி சொல்கிறபோது அங்கு வந்த தவப்புகையானது தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள், யோகிகள், வேதியர்கள், கருட காந்தருவர்கள், தருமதானிகள், இப்படிக்காகிய அனைவரையுஞ் சூழ்ந்து பயங்கரஞ் செய்வது கண்டு, சுரர் சேஷ்டனாகிய பிரமதேவன் வெகு துயரங்கொண்டு சிந்துவாகிய சமுத்திரத்திடலாகிய பூலோகத்திலே அருந்ததியிடத்துக்குச் சென்று நீ செய்கின்ற தவங்கள் என்ன காரணங்களுக்கென்று கேட்டான் அருந்ததியைப் பிரமதேவன். எ - று. (௬)

தந்தைதாய ரெந்தனை முனிதனக் குதவியபோ
தந்த வந்தண னுரையகலா டென்வுறைந்தச்
சிந்தையொடு மம்முனி நிலங்கிழி யன்றென்னை
யிந்தவிடத்தி னிருக்க வெனறே கினென்றாள்.

இ - ள். அப்படி பிரமதேவன் சொல்லக்கேட்ட அருந்ததி சொல்லு வாள். தந்தையாகிய தகப்பனும் தாயாரும் எந்தனை மகா இருடிவீடத் திற் கொடுக்கும்போது அந்த பிராமணனுடைய சொல்லலா திருப்பா யென்றார்கள். அந்த வசனப்படியே இருடியானவர் நிலத்தைக்கீறி இத னுள்ளிருப்பாயென்ற அந்நாள் முதலாக இருக்கையில் இந்நாளிலும் அவர் வரக்காணேனென்றாள் அருந்ததிப்பெண். எ - று. (௭)

பெண்ணுரைத்திடக் கேட்டயன் பின்னுமங் குரைப்பான்
மண்ணுவிண்ணிடை மற்றுமுன் முடிகொடுத் தூமம்
நண்ணியே யழித்திடுவ தானவில் வினையதற்குத்
திண்ணம்யான் செயுஞ்சீயிட மகலெனச் சினந்தான்.

இ - ள். அப்படி அருந்ததி சொல்லக்கேட்ட பிரமதேவன் பின்னும் சொல்லுவான். உனது முடியாகிய பிரமரந்திரத்தினாலே யெழும்பிய த்வப்புகையானது சுவர்க்க மத்ய பாதாளமென்னும் சகல லோகத் திலும் பரவி யிருண்டு அழித்திடுவதினாலே நீ செய்கின்ற தவத் துக்கு யான் கொடுக்கின்ற பலன் சத்தியமாகையால் பெண்ணே! அவ்விடம் விட்டகல்வாயென்று கோபித்துச் சொன்னான் பிரமதேவன். எ - று. (அ)

கொழுநன்றன் மொழிகொன்றிடார்க் களித்தவை கொள்ளும்
பழுதும் பஞ்சமா பாதகம் பண்ணியபவமே
விழுவதென றறம்வினவுமே யென்றவள் விரிஞ்ச
னெழில்கண் டெஞ்சியிருந்தன ளிழிவில் கற்புடையாள்.

இ - ள். அப்படிச் சொல்லக்கேட்ட அருந்ததி சொல்லுவாள். கொழுநனாகிய பர்த்தா வசனத்தைக் கடந்து நடந்தவளுக்கு தத்தாப காரம பண்ணிய பாவமுடனே பஞ்சமகா பாதகங்கள் பண்ணிய பவ நரகத்திலே வீழ்வார்களென்று தரும நூல்களிற் சொல்வார்களே யென்று பிரமதேவனென்றறிந்து நாணிக் குனிந்தங்கு தானே இருந்து விட்டாள் குற்றமிலாத நெஞ்சமுடைய கற்பருந்ததிப்பெண். எ - று. (௯)

இந்தவாறினைக் கண்டயன் பின்னுமே யுரைப்பா
னுந்தனின்பன் யாருரைத்திட வெனறன் ரதற்குகந்த
ருந்ததியுமுன் சுதனென னரியவன் வரைந்த
பந்தம்விட் டகனறில னெனப்புகர்ந்த பின்பதுமன்.

இ - ள். அப்படி யிருந்துவிடக்கண்ட பிரமதேவன் பின்னுஞ் சொல்லுவான். வாராய் பெண்ணே! உனதின்பனாகிய பர்த்தா யாரென் றுரைப்பாயென்றான். அதுகேட்ட அருந்ததி உன் சுதனாகிய வசிஷ்ட ரிஷியே என்து பர்த்தா. அவராலே கீறிவைத்த பந்தமாகிய தடையை விட்டு அகலக்கூடாதென்றாள். அதுகேட்ட பிரமதேவன் பின்னும். எ - று. (௧0)

நற்சுதன்றனை நோக்கியே வுலகெலா நாட்டு
மச்சம்வென்றிட வமரர்கட் காகவடன்னை
யிச்சைகொண் டகற்றிட வெனவென் றதற்கிருடி
மிச்சவெட்க முற்றுங்கு விட்டகலென விண்டான்.

இ - ள். நற்சுதனென்னும் தன் மகனாகிய வசிஷ்டமுனியை நோக்கி லோகாலோகமெல்லாம் அச்சமுண்டாகும்படி எழும்பிய தபாக்கினியை மாற்றும்படிக்குத் தேவர்களிடர்கள் நீங்குவதற்காக அந்த அருந்ததியை நீ இச்சையுடனே அகலெனச் சொல்வாயென்றார். அது கேட்ட வசிஷ்டமுனி மிச்சமாகிய அதிக வெட்கத்துடனே அருந்ததியைப் பார்த்து அவ்விடம் விட்டகல்வாயென்றான் வசிஷ்டமுனி. எ - று.

கொழுநன் வாக்கியங் கொண்டவளாங்கு விட்டகலப்
பழுதில்லாப் பதிவிரதை யென்றமரர் பல்லோர்க்கு
மழல்மாந்திட வற்புத மடைந்தனை யவரும்
பொழில்சிறந்த விண்மலர் மழைபொழிந் தனர்ப்புவியில்.

இ - ள். அப்படிச் சொல்லக்கேட்ட அருந்ததியானவள் பர்த்தா வாக்கியத்தை சிரசாய் வகித்துக்கொண்டு அவ்விடம் விட்டகன்றாள். அப்போது பழுதிலாத பதிவிரதையென்று சொல்லும்படி அனைவர்களுக்கும் தபாக்கினியானது அமர்ந்தது. அதுகண்டு தேவர்களெல்லாம் சந்தோஷமுற்று பெருமை சிறந்த புஷ்பமாரி பொழிந்தார்கள். எ - று.

மற்றுமாங் கயன்மன்றினில் வதுவையே கோரிய
பெற்றறுருந்ததி பிறவியி னிழிவுட லகலக்
கற்றைவார் சடையருள் கமபியனு லழற்றலமே
பற்றலாகவே பதுமனு மேவினர் பாரில்.

இ - ள். பின்னும் அவ்விடமாகிய வந்தப் பிரமசபையிலே அருந்ததிகுத் திருக்கலியாணவ கோரினார்கள். அந்த வேளையில் அவளுடைய பிறவியின் குற்றங்கள் அகலும்படி கற்றைவாரென்னும் மிகுந்த நீண்ட சடாபாரத்தையுடைய பரமசிவன் ஏவலால் விசுவகருமனாகியவனை வரவழைத்து பூமியிலே அக்கினி ஸ்தலமொன்று சிருஷ்டிப்பாயென்றான் பிரமதேவன். எ - று. (௧௧)

வே று.

கொல்லுலை யிரும்புபோலக் கொடுங்கனல் வடவையென்ன
யெல்லஃயா சனேயவிசுவ கருமனு மிமைப்பிற்செய்தா
னில்லதைக் கணட்வேத வினபுறச் சுதனேர்க்கிச்
செல்லவ ளிமையோர்காணத் தங்கிலபின் சொல்வேனென்றான்.

இ - ள். அப்படி பிர்மதேவன் சொல்லக்கேட்ட விசுவகருமாவும் கொல்லுலை மழுப்பீபரில் உக்கிரமாகிய அக்கினி ஸ்தலம் வடவையோ

வென ஒரு யோசனைதூரம் தொடையுயரம் வளர்ந்து பிரகாசிக்கும்படி அமைத்தான். அந்த நிமிஷத்திலே அதுகண்டு, பிரமதேவன் அதிக ஆச்சரியத்துடனே வசிஷ்டரிஷியைப் பார்த்துச் சொல்வான். உன்னை வேண்டித் தவம்பெற்ற அருந்ததிப்பெண்ணை இந்த அக்கினி ஸ்தலத்திலே பிரவேசித்து வரச் சொல்கவென்றான். அதுகேட்டு அவளும் பிரவேசித்துக் குற்றமறக் கடந்து வந்தாள். அதைத் தேவர்களறியப் பின்பு சொல்வோமென்றான் பிரமதேவன். எ - று. (கச)

அயன்மொழி கேட்டோனந்த வணங்கினை யழற்றலத்து
ளயர்விலசென் றகல்வாயென்ன வப்பொழு ததனுட்புக்கி
மியலொடு வுருமுடி வேகியே சிரசிற்கொண்டு
யயலிமை யோர்கள்காண வழற்சென்று தென்பால்வந்தாள்.

இ - ள். அப்படி பிரமதேவன் சொல்லக்கேட்ட வசிஷ்டமுனி அணங்காகிய அருந்ததியைப் பார்த்துச் சொல்வார். நீ பிரமதேவராக் கினைப்படிக்கு அழலாகிய இந்த ஸ்தலத்திலே புகுந்து வருவாயென்றார். அதுகேட்ட அருந்ததியும் அந்த நிமிஷத்திலே பர்த்தா வசனத்தை சிரசாக வகித்து பெருந்தொடை மறைய அக்கினியிலே பிரவேசித்து தேவர்களெல்லா மறியும்படி தென்புறஞ் சென்று யாதொரு குற்றங்களுமில்லாமல் வந்தாள். எ - று. (கரு)

வந்திடக் கண்டவேதன் வானவ ரறியச்சொல்வா
னுந்தனற் றாதைசுற்ற முரைப்பாயென் றதற்கணங்கு
ருந்தகன் னிகையான்சுற்ற நூலணி முனியேயல்லாற்
றெருந்தங்கண் டிலனென்றாளுடன் சொல்லினுக் குரைப்பானயன்.

இ - ள். அருந்ததி அப்படி சுத்தமாக வரக்கண்ட பிரமதேவன் வானவராகிய தேவர்களெல்லாம் அறியச் சொல்லுவான். வாராய் பெண்ணே! நீ அக்கினி ஸ்நானம்பண்ணி வந்தது அதிகமான சந்தோஷமாயிற்று. உன்னுடைய குலமும் உன்னுடைய தந்தை தாயுஞ் சொல்வாயென்றான். அதற்குச் சொல்வாள். என்னுடைய குலமானது உருந்த குலம் எனக்கு உறவின்முறை மற்றுமாகியது அக்கினி சூத்திரமாகிய பூணநூல் தரிக்கின்ற வசிஷ்டமுனியே யல்லாது வேறில்லையென்றாள் அருந்ததி. எ - று. (கசு)

அட்டமங் கலத்திலொன்று மமரர்மங் கலமெழுநாளிற்
றிட்டமுந் தனக்குச்செய்வ தேயென் வதுவைகோரித்
துட்டமில் சுபயோகத்தில் சுருதிவே தங்க யினிற்சொல்லப்
பொட்டலங்கொண் டதனுட்கன்னி பிறைவளர் வதுவைபோலன்றே.

இ - ள். அது சொல்லக்கேட்ட பிரமதேவன் அட்டமங்கலமாகிய எட்டுவித விவாகங்களிலே தேவர்கள் விவாகங்கள் முறைப்படி இன்னும் ஏழுதினத்திலே செய்கிறதென்றெண்ணி தீக்கோள் பார்வையில்லாமல்

சுபயோகத்திலே பிராமிய முகூர்த்தத்தில் நல்ல லக்னவேளையில் உனக்கு விவாகமென்றான். அதுசேட்ட அருந்ததி சீக்கிரத்திலே இளம் பிறையாகியது நாளுக்குநாள் வளர்ந்து பிரகாசிப்பதுபோல வளர்ந்தாள் அருந்ததி. எ - று. (கஎ)

மதன்கரி யிருண்டகூந்தன் மலர்முடி கொங்கைதாங்கும்
கதிரிடைக் கீழ்நிதம்பங் கமலமீ டெனக்கைவில்லீல
மதிகவிழ் நுதல்கண்ணம்பு மனமமைச் சனுமெக்காள
மதுரகன் மொழிகண்டங்கா ளாகினள் வதுவைக்கென்றே.

இ - ள். அப்படி வளர்ந்து வருகின்றதெப்படியிருந்ததென்னில்? மன்மதராசனுக்கு யானைக் கூட்டமென்று சொல்லப்பட்ட இருளைப்போலொத்த கூந்தலும் அவனுடைய இரத்தின மகுடமணிக் குமிழ்போல இரண்டு ஸ்தனபாரங்களும் இவைகளைத் தாங்கமாட்டாத மின்னல் கொடியையொத்த இடையும், அதின் கீழே அந்த மன்மதனுடைய கமலாக்கிரகமென்கின்ற அல்குலும் மதியாகிய சந்திரபிறை கவிழ்ந்திருக்கின்றதுபோல நெற்றியின்கீழ் மன்மதனுடைய கைவில்லொத்த புருவமும், அவனுடைய புஷ்பபாணமாகிய கருங்குவளையொத்த நயனமும், அவன் படைத்தலைவனாகிய வசந்தனையொத்த குளிர்ச்சி பொருந்திய சரீரமும், அவன் தென்றற்றேரையொத்த மனசும், குயிற்றொனியே அவனுக்கு காகள வாத்தியமென்கின்ற சொல்லும் நவரச மதுரங்களுமொத்த செவ்விதழுதடும் இப்படிக்காக கலியாணத்துக்கென்று வளர்ந்தாள் அருந்ததிப்பெண். எ - று. (கஅ)

மாவிட்டதமர்ந்தாள்போல வசிஷ்டன்பால் வரக்கண்டாயன்
மேலுலகொடு மற்றுள்ளோர் விரைந்திட வறைந்தாரன்று
நீலகண்டரும் வந்துற்று நிர்மலப் பெதும்பையையுன்
சீலகன் னடியானன்றிச் சேரொணு தென்பின்சொல்வார்.

இ - ள். அப்படிக்காகிய அருந்ததி மகாவிஷ்ணுவினிடத்தி லிருக்கின்ற மகாலட்சுமியைப்போல் வசிஷ்டமுனி பக்கத்திலே வந்தாள். அப்படி வரக்கண்ட பிரமதேவன் மேலுலகென்னும் இந்திராதி சகல லோகங்கள் முதலான மற்றெங்கும் அருந்ததி விவாகமென்று அறிவித்தார். அந்தவேளையிலே நீலகண்டராகிய வயித்தியனாத சுவாமி அருந்ததி முன் பிரசன்னமாகிச் சொல்லுவார். நிருமலமென்னுங் கற்புடைய பெண்ணே! உனது சீலமாகிய பரிசுத்தத்துக்கு எமது அடியானாகிய வசிஷ்டரிஷியே யல்லாது வேறு கூடாதென்று பின்னுஞ் சொல்லுவார் பரமசிவன். எ - று. (கக)

அசனமா வனமா மெனதகத் துழியுகந்து
சகிநதிப் புனற்றோய்ந்து பூசித் தடிதொழுது
வசல முற்றிட வசிஷ்டனுக் கடிமைநீயென்றே
வசனமான தோர்வயித்திய னுதன்வின் மறைந்தார்.

இ - ள். அதெப்படியென்னில்? அசஹாரண்ணியமாகிய வமதக்ஷேத்திரத்திலே யிருந்துகொண்டு சுசியென்னுஞ் சுவேதநதி தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி பூசித்து அடிபணிந்து அழியாப் பதவியிலிருக்கும்படி வசிஷ்டரிஷிக்கு நீ பாரியாளாவாயென்று சொல்லிப் பின்பு ஆகாசத்தில் மறைந்துவிட்டார் பரமசிவன். எ - று. (உ0)

அண்டநாயக னமரர் சிற்பியை யழைத்தரங்கு
மண்டப மண்வேதிகை மரகதப் பந்தர்
சண்டமா யமைத்திட வெனச் சாற்றியவதனாற்
குண்டமொடு பன்மணி தமனியத்தி னாற்குயித்தான்.

இ - ள். அதின் பின்பு அண்டநாயகனை பிரமதேவன் விசுவகருமாவை அழைப்பித்து கலியாண மண்டபங்கள், அரங்கு, வீதிகள், மண்வேதிகைகள், பச்சை மரகதப்பந்தல்கள் இவை முதலான சிறப்புடைய சித்திர விசித்திராலங்கிர்தஞ் சீக்கிரத்திலே சிருஷ்டிப்பாயென்றான். அதுகேட்ட அவனும் அந்த நிமிஷத்துக்குள்ளே அக்கினிக்குண்ட முதலான திண்ணைகளுடனே சுவர்ன நவரத்தினங்களினாலே சிருஷ்டிப்பித்தான் விசுவகர்மா. எ - று. (உக)

கங்கைமா நதிக்கரையினில் வதுவையை விரும்பி
துங்கவானவர் கின்னரர் சித்தர் வித்தையருங்
கொங்கையார்தர் சூழ்புடைக் குலிசனும் வசுக்களுடன்
தங்கநித்திலச் சரக்கொடித் தேரொடு சார்ந்தார்.

இ - ள். அப்படி கலியாணமண்டபங்கள் சிருஷ்டித்தவுடன் அதை விரும்பி கங்காநதிக்கரையிலே துங்கமாகிய பெருமைபொருந்தி யிருக்கின்ற தேவர்களுங் கந்தருவர்களுஞ் சித்தவித்தியாதரர்களும் சாரணரியர்களும் அசுவனிதேவர்களுங் கொங்கை மாதர்களென்னும் ரம்பை, மேனகை, அப்சர ஊர்வசி ஸ்திரீப்பெண்களுடனே புடைசூழ்ந்து வரும்படி தேவேந்திரன் முதலான திக்குப்பாலகர்களும், அஷ்டவசுக்கள், ஏகாதச உருத்திரர், துவாத சாதித்தியர், சத்தமருத்துக்களும் தங்கள் தங்கள் சுவர்ண நவரத்தினங்களாலேயும், முத்துச்சரிகைகளினாலேயும் இழைப்பித்திருக்கிற திவ்விய விமானங்களில் ஏறிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். ஆகாசமெங்கும் பிரகாசிக்கும்படி அநேகர் தேவாதி தேவர்கள். எ - று. (உஉ)

வந்ததோ ரளகன்சேமம் வழங்கவும் வருணனுடை
தந்திடக் காமதேனு தரவுண வடிகில்வேதன்
றந்தையா யனைத்துஞ்செய்யச் சதமகன் வேட்டுவிக்க
முந்திமை யத்திற்போல் மூவுலகரு முற்றாரே.

இ - ள். அப்படிக்கு வந்த தேவர்களிலே நிதிபதியாகிய குபேரன் சேமங்கள் நிறைந்த செல்வுகளைச் செய்யவும், வருணமூர்த்தி விசித்திர

லக்கிருத வர்ணப்பட்டாடைகள் கொடுக்கவும், காமதேனுவான தேவர்கள் முனிவர்களுக்கு அமுது அன்னங்கள் பாலிக்கவும், வாயுராசன் வட்டமிட்டு விசாரணை செய்யவும் பிரமதேவனே தந்தையாக் கூல அலுவல்கள் செய்யவும், சதமகனுகிய தேவேந்திரன் பெண்ணைக் கன்னிகாதானஞ் செய்விக்கவும் இப்படிக்கெல்லா மமைந்தது எப்படி யிருந்ததென்னில்? முன்னொரு காலத்திலே உமையவளுடைய திருக்கலியாணத்துக்கு இமையகிரியிலே கூடிய கூட்டங்கள்போல சுவர்க்க மத்திய பாதாள மென்கின்ற லோகாலோகத்துப் பிராணிகளெல்லாங் கூடியிருந்தார்கள். எ - று. (உக)

நெட்டிலை யரம்பைபூக நிரைத்துபைங் குலைகள்கட்டி
முட்டவிண் கொடிகணீக்கி முன்னெடுந் தாமம்விட்டு
விட்டதோ ரணங்கடற்ப மேனிலை காட்டத்தூமம்
மட்டறக் கனைத்துஞ்சூழ மணிவிளக் கடரவைத்தார்.

இ - ள். அப்படியிருக்கின்ற கலியாண மண்டபத்திலே நீளம் பொருந்திய பச்சையிலையையுடைய அரம்பையென்னும் வாழைமரங்களும், கமுகமரங்களும் நிரைநிரையாகக் கட்டி அதன் நடுவிலே பைங்குலையாகிய தென்னங்குலை, மாங்குலை, வாழைக்குலை, கமுகங்குலைகள் கட்டி அதின் பக்கங்களிலே ஆகாசத்தில் அளாவும்படி கொடிச்சீலைகள் தூக்கி அதின் கீழே சாளரச் சல்லிகள் மேற்கட்டிகள் கட்டி அதின் முன்னே வாழைமாலைகள் தொங்கவிட்டு மலர்மாலைகளால் அலங்கரித்தார்கள். வீதிகளிலே மகரதோரணம் மாந்தளிர் தோரணம் வாசனையோடுங் கூடிய சாதிமல்லிகா தோரணங்க ளொழுக்கினார்கள். பின்னும் சுவரடிக் காலடிகளிலே நிலைக்கண்ணாடிகள் நிறுத்தி பளிங்கு குப்பிகள் கட்டி பளபளென பிரகாசிப்பித்தார்கள். அந்தப் பிரகாசங்களிலே பிரதிபலித வர்ன ரூபங்கள் மேல்நிலைகளிலே காந்திக்கும்படி ஆடல்கள் விட்டார்கள். அதுவுமல்லாமல் தூமமென்கின்ற அகிற்புகை சாம்பிராணி வர்த்திகளின் வாசனைகள் அஷ்டதிக்குகளிலும் வீசும்படி வைத்தார்கள். பின்னும் மணிவிளக்காகிய தீவர்த்தினங்களும், தீபரத்தினங்களும் அடைவாக நிரைத்து பிரகாசிக்கச் செய்தார்கள் கலியாண மண்டபத்தில். எ - று. (உ௨)

சந்தனம் புழுகுநீரால் தரைமெழு கிட்டார்சங்குச்
சுந்தரக் கோலமிட்டார் துய்யநற் கங்கைகொண்டு
மந்தர கும்பம்வைத்தார் மாந்தளிர் தெங்கும்வைத்தா
ரந்தர முர்கமற்று மடித்தன ரறியவெங்கும்.

இ - ள். பின்னுமெப்படியென்னில்? சந்தனஞ் சவ்வாது புழுகுகள் பக்கங்களிலே பன்னீர்கொண்டு பூமிகளெல்லாம் பரிமளிக்கும்படி மெழுக்கிட்டு வெண்சங்குகளின் தூளிதங்களாலே அழகுபொருந்திய கோலங்களிட்டார்கள். பின்னுஞ் சுத்தமாகிய கங்காதீர்த்தங்கள் முகந்து முப்புரி நூல்கள் சுற்றி மந்திர கும்பங்கள் வைத்து அதின்மீதிலே மாங்

தளிர்களுந் தெங்கின்காயும் வைத்து அலங்காரம்பண்ணி பூரண கும்பங்களூக அஷ்டதிக்குகளுும் வைத்தார்கள். அதல்லாமலும், பேரி, முரசு, தவ்லரி, டமரு, மட்டு, டிண்டி, சர்ச்சரி, காளம், சங்கு, மத்தளதாளம் இப்படிக்கான பதினெண்வாத்திய மென்னப்பட்ட தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவிகள் தொனிக்கச் செய்தார்கள். எ - று. (உ௬)

ஆலகன் னியர்களாட வரம்பையர் கீதம்பாடக்
கோலமங் கையராலாத்தி கொண்டுமங் களங்கள்பாட
வேலையின் முழக்கமென்ன வேதியர் முழக்குஞான
சீலர்தம் முழக்குந்தேவர் செய்முழக் கெங்குங்கொள்ள.

இ - ள். பின்னுமெப்படியென்னில்? ஆலகன்னியர்களாகிய நாக கன்னியர்கள் ஆடவும், அரம்பை அப்சர ஸ்திரீகள் கீதம்பாடவும், கோல மங்கையராகிய தெய்வப் பெண்கள் மங்களங்கள் பாடி ஆலத்தியேர்திடவும், சமுத்திர கோஷட்ம்போல வேதப்பிராமணர்கள் வேதமுறையிடவும், ஞானசிலர்களாகிய தபோதனர்கள் ஆசிர்வாதம் வசனித்திடவும், இத்துடன் தேவாதிகள் ஜெயஜெயவென் றுரைத்திடவும், இந்த சத்தங்களெல்லாம் எங்கும் முழக்கங்கொள்ள. எ - று. (உ௭)

அங்கியை புனலாய்ச்சென்று டனேமணப் புனலுமாட்டித்
திங்கள்வா ணுதன்மென்முத்துச் சிகைமலர் வைத்தார்தாரை
தங்கள்மன் னனச்சார்ந்தாபபோற் றனித்தரி செம்பட்டாடை
மங்கள மாலைசூட்டி மாமறைச் சடங்குசெய்தார்.

இ - ள். இப்படிக்கெல்லாம் அலங்கரித்த பின்பு அங்கியாகிய அக்கினி ஸ்தலத்திலே இறங்கி குளிர்ச்சிபொருந்திய கங்காதீர்த்தம் போலக் கடந்த அருந்ததிப்பெண்ணுக்கு மங்கள ஸ்நானங்கள் செய்வித்து இளம்பிறைபோன்ற பிரகாசம்பொருந்திய நுதலின்மேல் சிகரமலராகிய முத்துகள் சூழ்ந்த நெற்றிச்சுட்டியை வைத்தார்கள். அது எப்படியிருந்ததென்னில் தங்கள் மன்னவனுகிய சந்திரனென்று நட்சத்திரங்கள் சூழ்ந்திருந்ததுபோலவும், பின்னும் அனேக நவரத்தின ஆபரணங்கள் தரித்து சிவந்த பட்டாடை கட்டி மங்களமாலைகள் சூட்டி மாமறைச் சடங்காகிய நாமகரண அன்னப்பிராசனங்களுஞ் செய்தார்கள் அருந்ததிக்கு. எ - று. (உ௮)

தவத்தினின் மிகுந்தோன்றன்னைத் தண்புன லாட்டித்தூய
நவத்தொடை தரித்துக்காதின் நவமணிக் கவசம்பூட்டி
சிவத்தமெங் கதிரைப்போலச் செங்கர மறைநூ லுங்கட்டி
யுவத்தல்கொண் டணங்கின்பக்க மூவந்திடப் பகர்ந்தான்வியாழன்

இ - ள். அப்படிச் செய்யும்போது தவசிலே மிகுந்த பெருமையுடைய வசிஷ்டமுனிக்கு குளிர்ச்சியாகிய புண்ணிய தீர்த்தங்களினுலே

ஸ்நானஞ் செய்வித்து சுத்த தாவளியமான சுவேத வர்ணப் பட்டு வஸ்திரத்தினால் அலங்கரித்து இரண்டு காதிலும் சிவந்த உக்கிர கிரணம் போன்ற சூரியனைப்போல நவரத்தின மகரகுண்டலங்கள் தரித்து இலைக்கோலங்கூடிய செந்தாமரைப் புஷ்பம்போன்ற சிவந்த கரகமலங்களின் கட்டிலே பிருதிசர சூத்திரமாகிய கங்கணங்கள் கட்டி மிகுந்த ஆசையுடனே அருந்ததியின் பக்கத்தில் வைத்து உத்துவாக முறைகள் செய்யத் தொடங்கினான் பிரகஸ்பதி. எ - று. (௨௮)

சுருதியார் சுடர்வளர்த்தார் தூயநெற் பாலிவைத்தார்
பெருகிய கும்பநீராற் புரோட்சித்தார் பெதும்பைமீது
முருகுநீ டாமஞ்சாத்தி பூன்கர கமலம்பற்றி
யிருடிவெவன் பொரியீந்தம்பி யேற்றிமூவலம் வந்தார்கள்.

இ - ள். சுருதியாகிய வேத மந்திரத்தினாலே அக்கினி வளர்த்தார். பின்பு நெற்பயிர்கள் வளர்கின்ற பாலிகைகள் பரப்பினார்கள். பின்னும் பெரிதாகிய மந்திர கும்பங்கள் பூசித்து தம்பதிகளை புரோட்சித்தார். முருகென்னும் வாசனை பொருந்திய கலியாணமாலையை அருந்ததிக்கு வசிஷ்டரிஷியாலே தரிப்பித்தார். பின்னும் பாணிக்கிரகணமென்னும் கரகமலத்திலே கையைப் பிடித்தார். அப்பால் வெண்மைபொருந்திய நெற்பொரி அவிர்ப்பாகங் கொடுத்து அம்மிமேலேறி மூன்றுதரம் அக்கினியை பிரதக்ஷிணம்பண்ணி யேகாசனத்தி லிருந்தார்கள் தம்பதிகள். எ - று. (௨௯)

ஐந்தரு மலரின்மாரி யமரர்க டூவிவாழ்த்த
நந்தாவி யாழிசைத்துநாரதா திகளும்மத்த
மந்திர தணமுலத்தான் மாமறை யோர்கள்போற்ற
சுந்தரப் பெண்ணாலாத்தி சுடருடன் சுற்றிமாற.

இ - ள். அப்படியிருக்கும்போது ஐந்தருவின் மலராகிய கற்பகவிருக்ஷத்தின் மலர்களினாலே தேவர்கள் புஷ்பமாரி பெய்து வாழ்த்தினார்கள். நந்தென்னுஞ் சங்கத்தொனிகளுடனே வீணாகானங்கள் பண்ணிக்கொண்டு தும்புரு நாரதாதிகள் புகழ்ந்தேத்தினார்கள். மந்திராக்ஷதையென்னும் பசுமைபொருந்திய அரிசிகளினாலே வேதப்பிராமணர்கள் ஸ்தோத்திரஞ் செய்து துதித்தார்கள். பின்னும் அந்த வேளையிலே சுந்தரப்பெண்ணாகிய ரிஷிபத்தினிமார்கள் தீபநீராஞ்சனங்கள் சுற்றி மாற்றினார்கள். எ - று. (௩௦)

வதுமைநற் றொழில்களெல்லா மறைப்படி முடிந்தபின்பு
யதுவொடு பெதும்பைவாணி யயன்றனைப் பணிந்துமற்றோர்
துதிசெய்ய வணங்கியன்னஞ் சொர்ணமா லுடையீந்து
மதிநுதன் மடவார்பங்கன் வைத்தியனைச் சிந்தைசெய்தான்.

இ - ள். இப்படி கலியாண முறைகளெல்லாம் வேதவசனப்படி நிறைவேறின பின்பு பதியாகிய வசிஷ்டரிஷியுந் தன்னுடைய பத்தினி

யாகிய அருந்ததியுடனே சரஸ்வதி தேவியையும் பிரமதேவனையும் வணங்கி பின்னும் அங்கிருக்கின்ற சகல தேவர்கள் முனிவர்களுக்கும் வணங்கி ஆசீர்வாதங்கள் பெற்று பூமிதானம், வஸ்திரதானம், பலதான முதலிய அனேக மகாதானங்களுடன் அன்னதானங்களுங் கொடுத்தார். அதன்பின்பு மதிநுதலாகிய அசலாம்பிகையையும், வைத்தியனாத சுவாமியையும் நினைந்து பயபத்தியுடனே சிந்தைசெய்தார் வசிஷ்டமுனி. எ - று. (கக)

அன்றவின் னவரும்மற்றோரு மாடையா பரணம்பூண்டு
மன்றல்செய் தேகும்போது வந்தகன் முனிக்குரைப்பா
னின்றுட னென்றுற்றுன்பம் யாதொன்று மில்லையென்று
மென்றிட வெகினவூர்தி விண்ணவ ரறியச்சொல்வான்.

இ - ள். அப்படி முகூர்த்தமாகிய நாளிலே தேவர்கள் முதலான சகல ரிஷிகளும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு ஆடையாபரணாலங்கிருதங்கள் செய்துகொண்டு தங்கள் பட்டணஞ் செல்லப் பயணமாகும்போது அந்தகனாகிய யமதருமராசன் சொல்லுவான். வாரீர் பிரம புத்திரரே! ரிஷிசிரேஷ்டரே! உமக்கும் உம்முடைய கற்பருந்ததிப்பெண்ணுக்கும் இன்றுமுதலெந்நாளும் என்னாலே யாதொரு துன்பங்களும் இல்லையென்றான். அப்படிச் சொன்ன வார்த்தைக்கு பிரமதேவன் அஸ்துவென்று சொல்லிப்போட்டு பின்பு தானுஞ் சொல்வான். எ - று.

வான்சுரபியே வந்தடி பணிந்திடு மவனே
தானுரைத் திடப்பெற்றநீ யில்லறந் தவிரா
தேன்மொழித் துணையொடு மகவழல் சிறந்திடவே
யான்றலம் புகுந்தீன்ற மற்றிடங்களு மமர்வாய்.

இ - ள். அப்படிச் சொல்லிய தெப்படியென்னில்? வான்சுரபியாகிய காமதேனு பூசிக்கின்ற வைத்தியனாத சுவாமி தானே எழுந்தருளி பிரம உபதேசம்பெற்ற நீ இல்லறமாகிய அருந்ததிப்பெண் துணையுடனேயாகாதி எக்கியங்கள் அக்கினி கோத்திரந் தவறாமல் சிறப்புடனேயிருந்து வாழ்ந்துகொண்டு நான்றலமென்னும் ஆசிரமணிய க்ஷேத்திரத்துக்குச் சென்று மற்ற யான் சிருஷ்டிக்கின்ற எந்த லோகங்களிலும் பிரவேசித்துக்கொண்டு தீர்க்காயுசாய் இருப்பாயென்றான் பிரமதேவன். எ - று. (கஉ)

என்ற நான்முகனு மகளொடு வுலகை
வன்று மற்றவ ரவருலகு சென்றமர்ந்தா
ரின்றுகற் பருந்ததி மணமியற்றின மிப்பாற்
றென்றுசெய் தனம்பெற்ற மாண்புரைத்திடத் தொடர்வாம்.

இ - ள். அப்படியெல்லாங் குமாரனுக்கு ஆசீர்வாத அனுக்கிரகங்கள் செய்து தானுந் தன் பத்தினியாகிய சரசுவதிதேவியுஞ் சத்தியலோகமே

போனார்கள். அப்போது அங்கு வந்திருந்த சகல லோகத்து தேவர்கள் முதலிய முனிவர்களையும் அனுப்பு பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் பதிக்குச் சென்று அமர்ந்தார்கள். இப்படிக்காகிய கற்புடைய அருந்ததி விவாகமுரைத்தனம். இப்பால் ஒரு அன்னம் தொண்டுசெய்து பெற்ற பெருமையைச் சொல்லத் தொடங்குவாம். எ - று. (கஈ)

அருந்ததி விவாகச் சருக்கம் முற்றிற்று.

---

# காளிசந்நிதியில் தபசுபெற்ற அன்னத்தின் சருக்கம்.

சேயைவிரும்பிக் காளியின்முன் செய்தவ தன்னுரிமையிடஞ் சேரவென்றே, தூயவன்மறைக் கடவுடனக் குரைத்துச் சுரபிநகர் துரிதிற்சென்று, நேமமொடு பெடையைக்கண்டந் நதியுந் தடங் களுநீ ராடித்தந்தி, மாயனொடு மாவிடையோன் வல்லியனங் கிலிங்கமற்றும் வணங்கிக்கண்டே.

இ - ள். பிரமலோகத்திலே அயன் வாகனமாகிய அன்னப்பட்சி யானது பிரமதேவனைப் பார்த்து எனதுரிமையாகிய பெண்சாதி புத்திரரைவேண்டி பூலோகத்திலே காளியம்மன் சந்நிதியிலே தபசு செய்வதினாலே யான் போகவேண்டுமென்று கேட்டு விடைபெற்றுக்கொண்டு வசிஷ்டபுரிக்கு அதிசீக்கிரத்திலே வந்து அதிக ஆசையுடனே தன்னுடைய ஸ்திரீயைக் கண்டு மனமகிழ்ந்த பின்பு சுவேதநதியினிலுஞ் சத்திதீர்த்த முதலான மற்ற தீர்த்தங்களிலும் புகுந்து நீராடி பரிசுத்தம் பண்ணிக்கொண்டு தந்திமுகனாகிய விக்கினேஸ்வரனையும், மகாவிஷ்ணுவையும், இடபவாகனனாகிய பரமசிவனையும், அசனாம்பிகையையும், அணங்காகிய துர்க்காபரமேஸ்வரியையும், பின்னும் அநேக பிரதிஷ்டையாகிய மற்ற சிவலிங்கங்களையுங் கண்டு தரிசித்து பத்தியுடனே வணங்கிற்று. எ - று. (க)

கோதகற்றும் யோகினியை குணதிசைத்துஞ் சின்னறனே புங் கண்டுபோற்றி, வேதியர்நா னூற்றிலும் வெவவேறு புக்கு வருந்ததி விவாகங், காதலொடு வசிஷ்டமுனிக் கானதுவு மயனமரர் கமலைதன்பால், பூதியொடு சிறந்ததுவு முரைத்ததுவே முனிவர் கட்குப் புனிதமாக.

இ - ள். பின்னும் அந்த அன்னமானது கோதென்னுங் குற்றங்களை யகற்றுகின்ற யோகினியாகிய காளியம்மன் சந்நிதியுங் கண்டு தரிசித்து

கிழக்கே சென்று சயனித்திருக்கின்ற மகாவிஷ்ணுவையும் அடிவணங்கி அப்பால் வேதியராகிய நானூறு ரிஷிகளுடைய ஆச்சிரமங்களுக்கும் வேறுவேறாகச் சென்று அங்கங்கு அருந்ததிக்கும் வசிஷ்டமுனிக்கும் விவாகம் நடந்த விருத்தாந்தங்களையும் அதற்கு ஆசையுடனே பிரம தேவன் முதலான தேவர்களும் மற்றும் அஷ்ட ஐசுவரியங்களுடனே நவ விசித்திரமாகக் கங்காதீரத்திலே கூடியதும், பெருமை பெற்றதும், அந்த ரிஷிகளுக்கு இன்பமாக உரைத்தது அன்னம். எ - று. (உ)

அன்னமுரை கேட்டுமகிழ்ந் தந்தணர்க ளருந்தவத்தோ ரரு கிற்சென்று, முன்னமெம்மை யுய்த்திட்டா யெனவணங்க லதுகண் டம்முனிவசிஷ்டன், முன்னமொடு வுபசரித்து வறுசுவை போனக மும் பூசுருக்கீந்து, மின்னிடைமங் கலமொழிய மின்வெறுப்பிற் செய்ததுவும் வினவிக்கொண்டார்.

இ - ள். அப்படி அன்னஞ் சொல்லக்கேட்டு அதிக சந்தோஷத் துடனே தவமுனிவர்களெல்லோருங்கூடி யருந்தவனாகிய வசிஷ்டமுனி யிடத்துக்குச் சென்று முன்னாலே, எங்களைப் பிழைத்திடச் செய்தாயென வணங்கினார்கள். அதுகண்ட வசிஷ்டமுனியும் அருந்ததியுடனே வந்த ரிஷிகளுக்கு வணங்கி உபசரித்து அறுசுவை பதார்த்தங்களுடனே அன்னம் பாலித்துப் பின்பு மின்னிடையாகிய அருந்ததி விவாகத்தின் விருத்தாந்தங்களு மின்னாலே வெறுப்பாகிய க்ஷாமகாலத்திலே நடந் ததுவும் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். எ - று. (ங)

மற்றுமற் றென்பதுவு மில்வாழ் பிறர்ப்பழிப்பி லன்புடைத்தாய வரின் வாமேனார்க்குஞ், செற்றருறு வோர்துறந்தோர் தனக்கேயாம் பின்றெய்வப் பதியின்றேயாங், கற்றைச் சடையார்மாட்சி கற்பு டைத்தாய்க் கணவனன்றிக் காணார்வாதும், பெற்றவர்க்கே யொத் தானுன் சொல்லோமக்கட் பேறெனவே பேசிக்கொண்டார்.

இ - ள். பின்னுஞ் சொல்லிக்கொள்வ தெப்படியென்னில்? சகல தருமங்களும் இல்வாழ்க்கையன்றி வேறில்லை. அப்படி இருப்பதற்கு பிறர் பழிப்பில்லாமல் இயற்கையுடனே அன்புபற்றி வருகின்றதே சவர்க்காதி போகங்களுக்கொக்கும். அதுவல்லாமலும் வானோராகிய தேவர்களுக் கும் பிதிர்களுக்குஞ் சுற்றத்தார் துறந்தோர்களுக்கும் உதவி செய்யத் தகும். அதனாலே சேர்க்கையாகிய மிகுந்த அளகபாரம்போன்ற ஸ்திரீ களின் பெருமை கற்புடையவளாய்க் கணவன் சொற்படி நடக்கைபுற்று வேறு தெய்வம் முதலிய மற்றுங் கொள்ளாமையே. பின்னும் பெற்றவர் களுக்குப் பெருமைபெறவும் மிகுந்துங் காண்கின்ற மைந்தர்களே வாழ்க்கையென்று பின்னுஞ் சொல்லிக்கொண்டார்கள் ரிஷிகள். எ - று.

முனிவர்குழா மிருந்திடப்பின் முதல்வனின் சசிமுறை செய் நாளோர்நாண்முன், னிகதிரோன் முறைமறந்தா பேசுவில

ளாளாகி நாமொடு வாசான்கண், மெனியகல வுரைப்பதென வவ
ரறிந்து நாவலத்திற் சுரபந்தன்னுட். டிவிதுடன் வானிரவி மிழற்
றீச னடியிறைஞ்சு வானினை போற்றென்றார்.

இ - ள். அப்படி சித்தாந்தங்களும் வேதாந்தங்களும் பேசிக்கொண்டு சிவிக்கப்பட்டிருக்கிற வேளையிலே அப்பால் விண்சனி யென்னும் பொன்னுலகிலுள்ள இந்திராணி பரமசிவனைப் பூசைசெய்து கொண்டு வருகிற நாளையிலே ஒருநாள் நெருங்கிய கதிர்களையுடைய சூரியனை முன்னாகப் பூசியாமல் மறந்துவிட்டாள். அதனாலே அவளுக்கு தேஜசில்லாமல் குற்றமடைபவளாகி ஆசானாகிய பிரகஸ்பதியினிடத்திற் றனியாகிய துன்பமாகும்படி சொல்லவேண்டுமென்று வணங்கினாள். அதுகண்டு நாவலமாகிய பூலோகத்திலே சம்புத்தீவில் சுபமென்று ஒரு ஸ்தலமுண்டு. அதிலே வயித்தியநாத சுவாமியென்னும் பரமசிவன் விளங்குகிறார். அந்த ஸ்தலத்திலே சூரியபகவான் பூசிக்க வருவான் அங்கு போற்றி செய்யென்றார் பிரகஸ்பதி. எ - று. (௩)

அந்தவுரை கேட்டணங்கு வதனம்சிலிர்த் தானவதற்கா சானனைத்து
மந்திரத்தி லேவிரித்திடுமி சாற்றுரைக்க னத்தலத்தை யறியச்செய்தே
சந்தமுநின் றிட்டான்பின் சதுமறை வாழித்ததலம் புக்குத்தாழ்ந்து
பந்தமிசு வாயிலனென விறையைப் பத்திகொண்டு பாரில்புக்காள்.

இ - ள். அப்படி சொல்லக்கேட்ட இந்திராணி அது தெரியும்படி விவரித் துரைக்கவேண்டுமென்றாள். அதற்குப் பின்னும் பிரகஸ்பதி சொல்வார். சகல சராசரங்களுமொடுங்குங்காலத்திலே அக்கினிச்சுவாலையாய் எரிகின்ற சண்டபானுக்களாகிய துவாதசாதித்தர்கள் அந்த ஸ்தலத்தை எண்ணாமல் செய்து அவர்களுடைய சர்தமாகிய காந்திகளெல்லா மழிந்துவிட்டார்கள். பின்பு பிரமதேவனாலே சொல்லக்கேட்டு அந்த ஸ்தலத்திலே வந்து பணிந்து பிரகாசம்பொருந்திய தேஜசுடையவர்களாயினார்கள் என்று சொன்னார். அதுகேட்டு அதிக பக்தி பயத்துடனே பார் என்னும் பூலோகத்துக்குப் புறப்பட்டாள் தெய்வ இந்திராணி. எ - று. (௪)

நித்திலவெண் குடைநிழற்ற சாமரங்கள் பாமரந்தை நீண்
வாசல்வீச, சித்திகணிகட் டொட்டுக்க திலோத்தமை வெள்ளிலை
யீயச் சிறந்தவூர்வசி, தத்திகமே னவாட மேனகையைப் சரச
மலர்ச் செண்டுதாங்கக், கொற்றமுறுங் களிப்புகொள நிலமடந்தை
குளமடந்தை கோயில்வந்தாள்.

இ - ள். அப்படிப் புறப்படுகிற சிங்காரமெப்படியென்னில்? நித்திலமாகிய வெண்பிரகாசம் பொருந்திய முத்துக்குடை நிழல்தரும்படி தேவகன்னியர்கள் பிடித்து வரவும், நீண்பொருந்திய, வெண்வாலாகிய சாமரைக் கொத்துகள் குவிர்ந்த காற்றடிக்கும்படி சாககன்னியர்கள்

விசி வரவும், ஙீராலாந்தி ஏந்திக்கொண்டு அஷ்டமாசித்திகள் புடைசூழ்ந்து வரவும், திலோத்தமைப்பெண் அடப்பங்கொண்டு வரவும், அழகுபொருந்திய ஊருவசிப்பெண் நதிங்கிணமென்று பரதநாட்டியமாடிக்கொண்டு வரவும், மேனகை யப்சரஸ்திரீகள் புஷ்ப படலங்களும் மயூரப் படலங்களுந் தாங்கி வரவும் இப்படிக்கெல்லாம் வருவது கண்டு நிலமடந்தையாகிய பூமிதேவி அதிக சந்தோஷங்கொள்ளவும், குலமடந்தையாகிய இராசகன்னிகையான இந்திராணி திருக்கோயில் வந்து சேர்ந்தாள். எ - று, (7)

வந்தடிபணிந்து மாடவீ திகள் வலங்கொள மேற்கில்
சந்ததி வேண்டியாங்கு தவசுசெய் யன்னங்கண்டா
டந்திமா காளிகோயி றனேக்கண்டா டாழ்ந்தாண்மேனி
சுந்தரங்கொ ளத்தவத்திற் றொடங்கின ளேந்தினளே.

இ - ள். அப்படி வந்து பரமசிவனைக் கண்டு அடிபணிந்து அப்பால் மாடவீதிகளாகிய நகர்வலங்கொள்ள மேற்கே வரும்போது சந்ததி யென்னும் பிள்ளைை வேண்டி அரிய தவசு செய்கின்ற அன்னப்பட்சியைக் கண்டாள். அந்தவிடத்திலே கூர்மைபொருந்திய சிங்கப் பல்லுகளோடுங் கூடிய பத்திரகாளி கோயிலையுங் கண்டாள். அதுகண்டு வணங்கினள். பின்னும் மேனி யென்னும் தனது சரீரம் அழகு பொருந்தவேண்டி இந்த விடம் தவசுக்கு யோக்கியமென்று யோகதாரணைசெய்து தவசு செய்யத் தொடங்கினள், இந்திராணி. எ - று. (8)

வியன்மடந்தை தனைக்கண்ட வெண்சிறை யன்னமுனி
பால்வி ரைந்துசென்று
யயன்சுதனே டமர்ந்த யதிக்குழாம்புக் கவசன
வனந்தனு ளிந்திராணி
மயம்பெறவந் துற்றளென் றறைந்திடவாங்
கந்தணர்கள் வசிஷ்டரோடு
கயல்விழிக் கற்பருந்ததியுங் கங்கைநகர் விட்டசனக்
காவுவந்தார்.

இ - ள். இந்திராணியைய அப்படிக் கண்ட வெண்மை பொருந்திய சிறகோடுங் கூடிய ஆணன்னமானது அதிக சீக்கிரங் கொண்டோடி வசிஷ்ட ரிஷியுடன் கூடிக்கொண்டிருக்கிற ரிஷிக் கூட்டங்களிலே புகுந்து அசனாரணிய க்ஷேத்திரத்திலே தேசசு பெறவேண்டி இந்திராணி வந்திருக்கிறளென்று சொல்ல அதுகேட்டு ரிஷிகளெல்லாம் வசிஷ்ட முனியோடு

கெண்டை யொத்த நேத்திரத்தையுடைய அருந்ததியுடனே கங்காதிர நகர் விட்டு அசனாணிய க்ஷேத்திரம் வந்தார்கள். எ - று. (9)

மாண்டமரந் தளிர்துளிர்ப்ப வாடுமுயிர் வளர்ந்தோங்க
வீண்டகங்க ளலங்கரிப்ப விருடியின் பத்தினிகளெலாம்
பூண்டவணி யாலாத்தி பொற்குடநெற் பொரிதூவ
சேண்டிருவு மாண்டிருவுஞ் சேரவெங்குஞ் சிறந்ததுவே.

இ - ள். அவர்கள் அப்படி வந்தபோது பட்ட மரங்களெல்லாந் துளிர் தழைப்பதும் வாடுகின்ற உயிர்களெல்லாம் வளர்ந்து செழிப்பதும் ஈண்டென்னும் இவ்விடத்திலே வருகிற சந்தோஷங்களினாலே பட்டணங்களெல்லாம் அலங்கரிப்பதும் ரிஷிபத்தினிகளெல்லாம் ஆடையாபரணங்களைத் தரித்துக் கொண்டு பூரணகும்பங்கள் எடுத்து நெற்பொரிக ளிரைத்து ஆலாத்திக ளேந்துவதுஞ் செந்திருவாகிய இந்திராணியும் அருந்ததியும் அந்தத் தலத்திலே சேர்ந்திட எங்குஞ் சிறப்புள தாயிற்று. எ - று. (10)

அருந்ததியோ டருந்தவனல் லாச்சிரமந் தனிற்புக்குப்
பெருங்குன்றை யரன்கழலைப் பேணிப்பின் வலங்கொண்டே
வருங்குடக்கே தவஞ்செயும் வான்சசியை வணங்கியிங்கு
வருளுவதெம் பொருளென்றே யறைந்தவர்கட் கறிந்துரைப்பாள்

இ - ள். அப்படி அதிக அலங்காரத்துடனே இருக்கின்ற பட்டணத்தின் ஆச்சிரமத்திலே இருக்கும்படி பெருங்குன்றாகிய ரிஷப வாகனத்திலே ஏறுகின்ற பரமசிவன் பாதாரவிந்தத்தை நினைந்து பின்பு பிரதட்சிணம் வரும்போது மேற்கே தபசு செய்யும் இந்திராணியைக் கண்டு அதிக வணக்கத்துடனே இங்கு வர எந்தன் பாக்கியமென்று சொல்லிய வசிஷ்ட முனிக்கு யறிந்து சொல்வாள் இந்திராணி. எ - று. (11)

இரவிபதம் பணிந்தேத்த விங்குநல மென்றுரதனற்
குருவினுரை கொண்டுவந்தெங் தொடிதகல வருள்வதென்றே
வரனுரையே கொண்டமுனி மார்த்தாண்டன் வேனிலிங்குப்
பரிகொடே ரொடுவருவான் பதம்பணிவ தெனமொழிந்தார்.

இ - ள். அப்படிச் சொல்லியது ஏதென்னில்? இரவியாகிய சூரியனை இந்தத் தலத்திலே பூசித்துப் போற்ற விசேஷமென்று பிரகஸ்பதி சொல்லக் கேட்டு பரமசிவனாலே

உபதேசம் பெற்ற வசிஷ்டமுனி வேனிற் காலமாகிய ஆனி ஆடி மாசத்தில் பச்சைக் குதிரைகள் கட்டிய ரதத்தின்மே லேறிக் கொண்டு இந்தத் தலத்திலே பூசிக்க வருகிற சூரியனைப் பூசிப்ப தென்று சொன்னார் வசிஷ்ட முனிவர். எ - று. (12)

புரந்தரன் மங்கையர்க்கு முனிபோதித்த வருகண்டு
பிரமனோற் றம்மெனது பிரியமதற் குறைப்பதெனப்
பிரமரிஷி மிகவமுதும் பலிபலகா ரங்கள்பலத்
திரளுடன் முன்படைக்க முனைச்சிங்கி மகிழ்ந்தருள்புரிவாள்.

இ - ள். அப்படி இந்திராணிக்கு வசிஷ்டமுனி சொல்லக் கேட்ட அமுசமானது எனது பிரியமாகிய பத்தினிக்குச் சொல்லவேண்டு மென்று கேட்கச் சொல்லுவார். மிகுந்த அன்னத்துடனே பலகார பட்சணங்களும் பலிகளுடனேயும் படைத்துத் தொழுக. முனையென்னுங் கூர்மை பொருந்திய சிங்கத்தை யுடைய பத்திரகாளி கடாட்சஞ் செய்வா ளென்று சொன்னார், வசிஷ்டமுனி. எ - று. (13)

என்றுரைத்தே முனிவரில்ல மேகிடப்பின் னயனூர்தி
யன்றுபலி யமுதுபல மறுசுவையும் படைத்தேத்தித்
தொண்டுபடக் கண்டெதிரில் தோன்றியவை முன்னுரைப்ப
ணன்றுபர்ப்ப ரத்திறைவ னற்சுதமா மகஞ்செய்தான்.

இ - ள். அப்படிச் சொல்லிய வசிஷ்ட முனியும் மற்ற ரிஷிகளும் ஆச்சிரமத்துக்குச் செல்லப் பின்பு அயனூர்தியாகிய அன்னம் அப்போதே அன்னம் பலகாரம் அறுசுவை பதார்த்தம் பழவகை பலிகளுடனே படைத்துப் போற்றிசெய்ய அதுகண்டு பத்திரகாளி மனமகிழ்ந்து பிரத்தியட்சமாகிச் சொல்லுவாள். நன்மைபொருந்திய பர்ப்பர தேசத்து ராஜா பிள்ளையில்லாமல் புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்தானென்று சொல்லுவாள் பத்திரகாளி. எ - று. (14)

பூசுரர்முன் னழலளித்த பொற்கிண்ணத் தமுதமதை
மாசில்குல மங்கைபெற்றே வான்கதிர்க்கிட் டருந்தும்போ
தேசுனது மலம்படவே செய்தவைவிட் டிவையதற்கு
மாசுறைந்து மகவையிலா வாழ்க்கையதற் கறைந்தயர்ந்தாள்.

இ - ள். அப்படி ஏக்கிய யாகாதி நடக்கையிலே பூசுரராகிய வேதப்பிராமணர்கள் முன்பாக அக்கினிபகவா னளித்த அவிர்ப்பாகத்தை பொற்கிண்ணத்தில் வாங்கித் தனது பத்தினிக்குக்

கொடுக்க அது வாங்கினவள் சூரியகாந்திபட புசிக்கும்போது உனது குற்றமுடைய மலம் ஆகாசத்திலே விழுந்தது. அந்த அவிர்ப்பாகத்திலே படக்கண்டாள். ஆதலால் இப்படிச் செய்வதற்கு மாசென்னுங் குற்றமுடைததாய புத்திரரில்லா வாழ்க்கையதாக வென்று அதிக விசனத்துடன் சபித்தாள் அந்த ராசபத்தினி யென்று பின்னுஞ் சொல்வாள் பத்திரகாளி. எ - று. (15)

அக்குற்றம் பிரமபதி யந்தணர்கள் வேள்வியினுற்
சொற்குற்ற மகல்விப்ப தென்மறை யவத்தூயவனம்
பக்கத்திற் படிந்தெழுந்து பரிவோடந் தணர்க்குரைத்துத்
துக்கத்தை கடியமிகு தொன்மறை வேள்விகள்செய்தே.

இ - ள். பின்னும் அப்படிக்கு வந்த குற்றங்களை பிரமபதியாகிய இந்த க்ஷேத்திரத்துப் பிராமணர்கள் வேள்வியினுலே சொற்குற்றமாகிய ராஜஸ்திரீ சாபத்தைப் போக்கிக்கொள்வா யென்று மறைந்துவிட்டாள். அப்பால் சுத்தமாகிய அன்னமானது பக்கத்திலே படிந்தெழுந்து இன்பத்துடனே அங்கிருக்கின்ற மறையோர்களுக்குச் சொல்லி (துக்கத்தைப்) போக்கும் படி பழமையாகிய வேதங்களினுலே மிகுந்த யாகாதிகள் செய்தது. எ - று. (16)

நலங்கொண்டு மகவுண்டாய் நான்முகன் கண்ணூட்டமிடப்
பொலங்கொண்டு தலம்புக்கும் போதிரண்டா மிருதுவந்து
வலங்கொண்டு வருமிரவி மாகொடே ரொடுவசனத்
தலங்கொண்டு வந்திறைஞ்சச் சசிகண்டே சுசிகொண்டாள்.

இ - ள். அப்படி யாகாதிகள் செய்ததினுலே அன்னத்துக்கு நலங்கொண்டு புத்திரனுண்டாய் நான்குமுகனுகிய பிர்மதேவன் சத்தியலோகத்துக்கு பொலங்கொண்டு போகலாயிற்று. அப்போது இரண்டா மீனராசி பங்குனி மீ சூரியன் வந்து மகாமேருவை வலங்கொண்டு வருகிற சூரியன் குதிரைகள் கட்டிய தேரோடு அசனுரணிய க்ஷேத்திரத்துக்கு வரலானுன். அதுகண்டு இந்திராணியுஞ் சுத்தமாகும்படி எண்ணமுற்ருள். எ - று. (17)

கொண்டவள்ராங் கருக்கன்முறை கோணமற் செய்தபின்னர்
முண்டகனு யகனுரைப்பான் முனிவசிஷ்டன் றனைக்கொடுபோ
யண்டர்பிரா னருகிருத்த வணிமிகவே யாகுமென
மிண்டரனைக் கணம்பணிந்தே மேவவிந்தி ராணியும்பின்.

இ - ள். அப்படி எண்ணமுற்ற இந்திராணியானவள் சூரியபகவானைக் கண்டு முறைதப்பாமல் பூசித்துப் போற்றி செய்தாள். அப்போது முண்டகநாயகனாகிய சூரியன் சொல்லு வான். அண்டர்பிரான் என்னும் தேவேந்திரனிடத்திலே வசிஷ்ட முனியைக் கொண்டுபோய் வைத்திட உனக்கு அழகு மிகவுண்டாகுமென்று சொல்லிப் பின்பு சீக்கிரத்திலே பரமசிவ னைப் பூசித்து ஓட்டமிட்டான் சூரியன். எ - று. (18)

பெருந்தவத்துச் சுடர்க்கொழுந்தாம் பிழற்பதியி னருளாலே
யருந்ததியோ டருந்தவனை யமரர்பதி கொண்டேகி
யிருந்தனரைந் தருநீழ லினிதிருக்கு மாவேவல்
பொருந்தவறைந் தனமப்பால் பிரமாண்ட கதைபுகல்வாம்.

இ - ள். இந்திராணியினாலே சூரியனைப் பூசித்துப் பெருமை பெற்றமையால் இந்தத் தலம் பாஸ்கர க்ஷேத்திர மென்றுஞ் சொல்லலாயிற்று. அப்பால் அப்படி சூரியன் போன பின்பு பெருந்தவத்துச் சுடர்க்கொழுந்தாகிய வைத்திய நாதசுவாமி அருளினாலே அருந்ததியுடனே அருந்தவனாகிய வசிஷ்ட முனியையும் இந்திராணி பொன்னுலகுக்குக் கொண் டேகினாள். அங்கு ஐந்தருவென்னுங் கற்பக விருட்சத்தடியிலே வாசமா யிருக்கின்ற காமதேனு ஏவல் புரிந்திடப் பொருந்தி யிருந்தார் வசிஷ்ட ரிஷி. இப்பால் அந்த ஸ்தலத்தின் பெரு மையை பிரமாண்டபுராணத்தின் கதையிலுள்ளபடி யுரைக்கத் தொடங்குவாம். எ - று. (19)

காளி சந்நிதியில் தபசுபெற்ற அன்னத்தின் சருக்கம்
முற்றிற்று

# வசிஷ்டபுரியில் பள்ளிகொண்ட சருக்கம்

உலகுமுத லனைத்துயிரு முய்ந்தானை யுய்த்தானை யுரகமீதே,
யலைகடலிற் றுயில்வானைக் குயின்மேனி நிறத்தானை
யரங்கத்தானை,
சலசவிதழ் விழியானைச் சதுமுகனுக் கவதரித்த தடக்கையானை,
மலர்மலிநீ ணெயின்மாட வசிஷ்டபுரிப் பதியானை
வாழ்த்தல்செய்வாம்.

இ-ள். ஈரேழு பதினன்கு லோகமும் அதிலுள்ள சராசர சீவாத்துமாக்களையும் படைப்பித்த பிரமதேவனை திருவுந்திக் கமலத்திலே உதிக்கச் செய்தவனை உரகமாகிய ஆதிசேஷன் மீதிலே பள்ளிகொண்டு அலைகளோடுங் கூடிய திருப்பாற் கடலிலே யோகநித்திரை செய்கின்றவனை, நீருண்ட மேகத்தைப் போல நீல நிறம் போன்ற சரீரத்தையுடையவனை, அரங்கமென் னும் இரண்டாற்றின் நடுவிலே இருக்கின்றவனை, தாமரை மல ரிதழ் போன்ற நேத்திரத்தையுடையவனை பிரமதேவனுக்காக இங்கு பிரசன்னமா யெழுந்தருளி விசாலம்பொருந்திய திருக்கர கமலத்தினலே சரீரசுத்திகள் செய்து உபதேசித்தவனை, அலர்ந்த புஷ்பங்களோடுங் கூடிய தோப்புகள் நெருங்கிய அளவு மதில் மாடஞ் சூழ்ந்திருக்கின்ற வசிஷ்டபுரி யென்னுந் தலத்துக்கதிபனை வாழ்த்தி வணங்குவாம். எ-று (1)

வான்சுரமா நதிக்கரைவைந் தருநீழன் மாதவஞ்செய்
மறையோரீட்டத்
தேன்சுவை நாரதமுனிவன் சேர்வவர் தொழினடத்தின்ற
நிந்தசெய்தி,
வேன்றவனே யுரைக்கவென வதற்கயன் மன்றினிலநிந்த
விண்வலவையத்
தான்பதியி லரியுதித்துச் சதுமுகனுக் கோதியதுஞ் சாற்றினரே.

இ-ள். வானென்னும் ஆகாச கங்கைக் கரையிலே கற்பக விருட்சத்தின் நிழலிலே மகா தபசுகள் செய்கின்ற ரிஷிகளின் திருக்கூட்டத்திலே கானவித்யாதரராகிய நாரத மகாமுனி எழுந்தருளினர். அதுகண்டு அந்த ரிஷிகளெல்லாம் உப

சரித்து இன்றைக்கு நடந்த விருத்தாந்தங்கள் தெரியப்பட உரைக்க வேண்டுமென்று மிகுந்த தவத்தையுடைய தேவ ரிஷியைக் கேட்டார்கள். அதற்கு இன்றைக்கு சத்தியலோகத்திலே பிரம சபையிலே நடந்த விருத்தாந்தங்கள் பூலோகத்திலே ஆன்பதி யென்னும் திட்டகுடி ஸ்தலத்திலே மகாவிஷ்ணு பிரசன்னமாகியதும் பிரமதேவனுக்கு பரமோபதேசஞ் செய்ததுஞ் சொல்லக் கேட்ட கதையை யுரைப்போம் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினர், நாரத மகாமுனி. எ - று. (2)

முன்பெற்ற வியாகிருதியான் மூவுலகும் படைத்தவய
னின்புற்று வொலியலைநீ ணேமியிடை துயில்வோனை
யன்புற்று வடிபணிந்தே யாதிமறைக் கன்னையேனு
மின்பெற்ற வதையருள்வீ ரெனவுரைக்க விண்டிடுவார்.

இ - ள். ஆதிகாலத்திலே வியாகிருதியென்னும் திருமந்திரத்தினாலே சுவர்க்க மத்திய பாதாள மென்னும் மூவுலகுஞ் சிருஷ்டிக்கலாகிய பிரமதேவன் ஆசைகொண்டு ஓசைகளோடுங் கூடிய அலைகள் நெருங்கிய விஸ்தாரமான திருப்பாற் கடலின் நடுவிலே பள்ளிகொண்டிருக்கிற மகாவிஷ்ணுவை அன்பு பத்தியுடன் ஆராதித்து ஆதிமூலமாகிய வேதங்களுக்குத் தாயாகிய சோதிச்சுரூபத்தை அடியேனுக்கு அருள்செய்ய வேண்டுமென்று கேட்க, அதற்குச் சொல்வார் மகாவிஷ்ணு. எ - று. (3)

வானோர்க்கு மாதவர்க்கு மற்றுலகத் தவுணர்க்குந்
தானுரைத்த துயில்கொண்ட தாமிங்கன் னதுவன்றி
தேனூறு மலர்படிந்த திரள்வண்டி னோதையொடு
வூனார்நந் தொலியமுத வோதையிங்கொவ் வாதென்னே.

இ - ள். அவவிடத்திலே சொல்லிய தெப்படியென்னில்? வானோராகிய தேவர்களுக்கும் தவரிஷிகளுக்கும் மற்றுலகத்தாராகிய அசுரர் முதலான யட்ச கின்னர சித்த சாத்தியர்களுக்கும் பரிசுத்த அந்தக்கரணங்களினாலே உபதேசித்துப் பள்ளிகொண்ட உச்சிஷ்ட ஸ்தானமாகியது இவ்விடம். அதுவுமல்லாமல் மதுக்களார்ந்துகொண்டிருக்கிற தாமரை நீலோற்பல முதலிய புஷ்பங்களில் படிந்திருக்கின்ற மிகுந்த வண்டினங்களின் சத்தங்களுடனே ஊனென்னு மாமிசம் ஆர்ந்திருக்கின்ற அனேக சங்கத் தொனிகளும் நெருங்கிய அலைகளின் இரைச்சல்களோடுங் கூடிய சமுத்திரகோஷமும் இவற்றினாலே இங்கு ஒவ்வாதென்று பின்னுஞ் சொல்வார் மகாவிஷ்ணு. எ - று. (4)

எவ்வுலகு மெத்தீவு மெழினின்மேருத் தீவுக்கே
யெரவ்வாது வதுட்கங்கை யுற்றபொன்னி மற்றுமுள
துவ்வுமுனி பலவனத்துட் துய்யவச ணரணியஞ்
செவ்விமுதல் வன்முன்பே செனித்துரைக்கத் திறமென்றார்.

இ-ள். ஈரேழு பதினான்கு உலகத்தினுக்கும் நடுவாகிய பூலோகம் பெரிதாகும். அதிலே யிருக்கின்ற ஏழுத் தீவுகளிலேயும் அனேக கோடி இடர்களிருக்கின்றன. அதிலும் மகமேருவிருக்கின்ற இடராகிய சம்புத் தீவுக்கு மற்றதெல்லாம் சரியல்ல. பின்னும் எமது பாதத்திலிருக்கின்ற கங்கா நதியும் மற்ற அனேக நதிகளுடனே காவேரி நதியு மிருக்கிறதுமல்லாமல் பின்னும் மகா தவசுபெற்ற ரிஷிகள் கூட்டத்துடனே இருக்கின்றது அனேக வனங்களாகும். அதிலே சுத்தமாகிய க்ஷேத்திரம் அசனாரணிய மென்றொரு விசேஷ வனம். அதிலே செவ்வியென்னும் உலக மாதாவாகிய அசனாம்பிகை எமது சகோதரி. பர்த்தாவுடனே யிருப்பாள். அதின் முன்பாக யாம் அவதரித்து உபதேசிப்பது மிருந்த விசேஷ மென்றார் மகா விஷ்ணு. எ-று (5)

ஆதாரம் பதியனைத்து மாரூர்சுவா திஷ்டான
மூதூ ரானைக்காவு முத்திமணி பூரகமாம்
வேதாதே டும்மருணை வெவ்வனுக தம்விசுத்தி
மீதானங் காளத்தி விசும்புநக ராக்கினையே,

இ-ள் பின்னும் அப்படியிருக்கின்ற ஸ்தலத்தின் விசேஷ மெப்படியென்னில்? அனேகமாய் இருக்கின்ற ஸ்லதங்களுக்கு இன்பமாகிய கும்பகோணமே மூலாதாரமாகும். திருவாரூரென்னும் தியாகராஜசுவாமி யிருக்கின்ற தலமே பிருதிவி என்கிற சுவாதிஷ்டானமாகும். மூதூரென்னும் பழமையாகிய சம்புலிங்கமுள்ள திருவானைக்கா மணிபூரகமாகும். பிரமதேவன் தேடிக் காணாத அக்கினி மலையாகிய அருணாசல ஸ்தலமே அனாகதமாகும். மீதானமாகிய அசைந்தாடுகின்ற திருக்காளத்தி ஸ்தலமே விசுத்தியாகும். விசும்பென்னும் ஆகாசமாகிய சிதம்பர ஸ்தலமே ஆக்கினையாகு மென்று பின்னுஞ் சொல்வார் மகாவிஷ்ணு. எ-று. (6)

புருவமத்தி வாரணாசி பூதரமே பிர்மரந்திரந்
துரகமிட்ட தென்மதுரை துவதசாந் தஸ்தலமாங்
கரணமிலா வனைத்தெங்குங் கலந்திடும்ச் சைதன்னியங்
கிரணமுற்றும் பிழற்பதியே கேளென்றங் கரைந்தனனால்.

இ - ள். வாரணாசி யென்னும் காசிபுரி ஸ்தலமே பூருவ மத்தியாகும். பூதரமாகிய கைலாசகிரி ஸ்தலமே உச்சியாகிய பிர்மரந்திரமாகும். பின்னும் பரமசிவன் அடியாருக்காக பாண்டியராஜனிடத்திலே குதிரைவிட்ட ஸ்தலமாகிய தென்மதுரையே துவாதசாந்த ஸ்தலமாகும். இப்படி சொல்லியதற்கெல்லாம் உபகரணமாகிய விஷயேந்திரியாதிகளற்று எங்கெங்குஞ் சகல சீவாத்துமாக்களிலுங் கலந்து வியாப்பியமாகி தானே தானாயிருக்கின்ற சைதன்னிய ஸ்தலமாகியது பிரகாசம் போன்ற பந்தூக வனத்திலே வைத்தியநாத சுவாமி யிருக்கின்ற ஸ்தலமே யாதலால் அதற்குச் சரியான ஸ்தலங்களில்லை யென்று சொன்னார் மகாவிஷ்ணு. எ - று. (7)

ஆங்கது கேட்ட யசாசனவடவிச் செலவந்தணர்கள்
பாங்கொடு வந்தகமிகவே பத்திகொண் டுற்றனன்பலகால்
யாங்கர்குலங் கடிந்தரவன் தாங்கவலே கடற்றுயின்றே
நூங்கர்குல வமுதளித்தா னுதிகொண்டிங் கவதரித்தான்.

இ - ள். அப்படி சொல்லக் கேட்ட பிரமதேவன் அந்தணர்களாகிய பிராமணர்கள் பக்கத்திலே சூழக்கொண்டு மனதிலே அதிக பத்தியுடனே அசனாரணிய க்ஷேத்திரத்துக்கு வந்தான். பின்பு சில நாளானவாறே யாங்கர் குலமாகிய இராட்சத குலங்களை அறுத்து ஆதிசேஷன் பேரிலே பள்ளிகொண்டு அலைகளோடுங்கூடிய திருப்பாற்கடலிலே நித்திரை செய்து பின்னும் அந்த சமுத்திரத்திலே மதனம்பண்ணி தேவர்களுக் கெல்லாம் அமுதங் கொடுத்தருளிய மகாவிஷ்ணு இங்கு அசனாரணியத்துள்ளே அவதரித்தான். எ - று. (8)

மலர்மகளு நிலமகளு மனங்களிப்ப வாசுகியைந்
தலைமலரக் கலுழனடி தாங்கஜெய விஜயோனும்
வலிவயிரப் படைகொள்ள வானவருங் கானவரும்
பொலிவோடு போற்றிசைப்பப் பூசுரர்கள் புடைசூழ.

இ - ள். அப்படி மகாவிஷ்ணு அசனாரணியத்தி லெழுந்தருளிய தெப்படியென்னில்? மலர்மகளாகிய மகாலட்சுமியும் பூமிதேவியும் மனங் களிகூர்ந்திட, வாசுகி யென்னும் ஆதிசேஷனுடைய சிரசு ஐந்தும் விரிந்தலைந்திடக் கருடமூர்த்தி திருவடி தாங்கிட திடம்பொருந்திய ஆயுதம் பிடித்த கரங்களுடனே இருபுறத்திலுஞ் செயவிசய னின்றிட வானவர்களாகிய தேவர்களுங் கின்னரர்களுந் தோத்திரஞ் செய்து கானம் பண்ணிட அதிக நெருக்கங்கொண்டு ரிஷிகள் சூழ்ந்திட அப்ஸர ஸ்திரீகள் உபசரித்திட. எ - று. (9)

பாற்கடலிற் பள்ளிகொண்ட படியசனை வனங்கனிடான்
காற்கனைநான் முகன்றெழுவே கண்டந்த மறையோரு
மேற்படவே பணிந்திடப்பின் வேதன் பிர்மோபதேயம்
நூற்கொளச்செய் தவனிணையை நோக்கிமுறை செய்குவான்.

இ-ள். திருப்பாற்கடலிலே பள்ளிகொண்ட மகாவிஷ்ணுவானவர் அப்படியே பூலோகத்திலே அசனாரண்யத்திலெழுந்தருளக் கண்ட பிரமதேவன் இடம்புரி வலம்புரி வந்து ஆனந்தத்துடனே போற்றி செய்தான். அப்படி செய்யக் கண்ட அந்தப் பிராமணர்களும் பின்னும் அதிக பயபத்தியுடனே போற்றி செய்தார்கள். அதின்பின்பு முன்னாலே திருவாய் மலர்ந்தபடி பிர்மோபதேசம் பெற்றுக்கொள்ளச் செய்தவனாகிய மகாவிஷ்ணுவை ஆராதிக்கலானான், அங்கு பிரமதேவன். எ-று. (10

கலி நிலைத்துறை

செய்யுமா முறைசேவடி விளக்க வங்கண்
டுய்யநீரிலாது வயன்கண் டழைக்கவான் விரசை
வையம்புக்கியே வாரியி னொலிபுரை யலையோ
டுய்யவெவ் வுயிர்க்கத் தலத்துத் தாமுதவ.

இ-ள். அப்படி திருவாராதனை செய்யத் தொடங்கிய போது சேவடியாகிய திருப்பாதம் விளக்குதற்கு அங்கு சுத்தமாகிய நீரில்லாதது கண்டு வைகுண்ட நதியாகிய விரசைத் தீர்த்தத்தை யழைக்கலானான் பிரமதேவன். அப்போது அந்த நதியானது ஆகாசத்திலிருந்து பூமியிலே குதித்து சமுத்திர கோஷங்கள்போல் அலைகளோடும் இரைச்சல் கொண்டு சகல ஜீவாத்துமாக்களும் பிறவியற்று ஈடேறிப் பிழைத்திடும்படி அந்த ஸ்தலத்துக்கு வடபுறத்திலே பிரளயமாய்ப் பொங்கி வந்தது. எ-று (11)

மாமறைப்படி மறையவன் மறைமுடி வதனை
ஏமநேமமோ டிறைஞ்சலு மாயனின் புற்று
நாமதாப் புண்டர நவின்மந்திர மகமைந்
தாமெனும் பொருணடத்தியே யறிவினை விளக்கி.

இ-ள். அப்படி வரக்கண்ட பிரமதேவன் மாமறையாகிய வேதாகமப்படி மறை முடிவாகிய நாராயணமூர்த்தியை இயம நியமத்துடனே திருவாராதனை செய்து பணிந்தான். அப்படி பணியக்கண்டு திருவுள மகிழ்ச்சி பொங்கி பரமகாந்திக்கு ஏதுக்

களான பஞ்ச சமஸ்காரஞ் செய்யலானூர். அதேதென்னில்? தாபம் என்னும் க்ஷேத்திரத்தினுடைய திவினைகளைப் போக்குவ தான சங்கு சக்கராயுதத்தினலே தகிக்கும்படி முத்திரையிட்டு திரிபுண்டரமென்னும் பிரகாசம் பொருந்திய திருமண்திருச் சூர்ணத்தினலே நெற்றி, வயிறு, மார்பு, கழுத்து, வலதுபக்க வயிறு, வலது கை, வலதுபக்கக் கழுத்து, இடதுபக்க வயிறு, இடது கை, இடதுபக்கக் கழுத்து, முதுகு, பின்கழுத்து, உச்சி, இப்படிப் பன்னிரண்டு ஸ்தானங்களிலேயும் பிரகாசிக்கும்படி திருமண் சாதித்து, தன்னுடைய ஆழ்வானென்று பெயர் விளங்கச் சொல்லி திருமந்திரமும் உபதேசித்து திருவாராதனை யுந் தொடங்க அருள்செய்து அப்பால் இருபத்து நான்கு தத்துவங்களையும் அறிவித்து அதின் அருந்தபதமாகிய இரு பத்து நான்கு அட்சரமுள்ள பிரம மந்திரத்தைச் செவியிலோத திருவாய்மலர்ந்தார், வைகுண்டபதி. எ - று. (12)

சோதிதற் பதப்பிரம மந்திர மெனுந்துய்ய
னுதிமை யுபதேசிக்க நான்முகன் பெற்று
னுதிசாம முளவ தரித்திடு மருமறையோர்
கோதிலம்மொழி கூடவே யின்புறக் கொண்டார்.

இ - ள். அப்படிச் சொல்லுகின்ற திருமந்திர மெப்படி யென்னில்? சோதி ஸ்வரூபமாயும், அநுதிபூதமாயும், சுத்த நிர்க்குண நிராமயமாயும், தத்பத லட்சியத்துடனே யிருக்கின்ற பிரம்ம மந்திரத்தை மகாவிஷ்ணுவினலே உபதேசிக்கப்பெற்றுன் பிரமதேவன். அந்த வேளையிலே ஆதிசாமமாகிய மூன்றும் வேதத்திலே உற்பன்னமான பிராமணர்கள் நான்முகனேடு வந்தபடியாலே கூடவே குற்றமற்ற திருமொழியினலே சுத்தம் பெற்று உபதேசங் கொண்டார்கள். எ - று. (13)

பிரமமந் திரம்பெற்ற வந்தணர் தவம்புரிந்தார்க்
கருணை கொண்டயன் கனகமண்டபங் கயமாளி
யரணமோ டமைத்தணி விமானடத்தி யாங்கிருந்து
சரணங்கொண்டு விண்சார்ந் தனனேர்ந்த வேதியனே.

இ - ள். அப்படி மகாவிஷ்ணுவினலே உபதேசிக்கப் பெற்ற சாம வேதியர்கள் அரிதாகிய தவசுகள் செய்யப்பெற் ருர்கள். பின்பு கிருபாகடாட்சங்கொண்ட பிரமதேவன் வைகுண்டபதியாகிய நாராயணமூர்த்திக்கு சுவர்ணமயமாகிய திருமாளிகை மண்டபங்களும் தீர்த்த புஷ்கரணிகளுடனே திரு

மதில்களுஞ் செய்வித்து அலங்காரத்துடன் நாயகிபிராட்டியாருடனே ஆழ்வான்மே லெழுந்தருளி பிரசாதஞ் சாதித்தருள உற்சவங்களும் நடத்தி அப்பால் சிலநாள் அங்கிருந்து அடிபணிந்து விண்ணப்பம் பெற்று தன்னுடைய உலகு சென்றான் பிரமதேவன். எ - று. (14)

வசிஷ்டபுரியில் பள்ளிகொண்ட சருக்கம்

முற்றிற்று

---

# பூமிதேவி அழகுபெற்ற சருக்கம்

அமரர் கின்னர ருரகர் நற்றவரு மசுவனியு
மமரு மமரர்கோன் மன்றினி லரம்பைய ராடுஞ்
சமையம் பாரில் வானற்று நற்றரை யெனுந்தைய
லிமைய விந்திரன் றன்கணே யேகின ளென்றே.

இ - ள். பொன்னுலகத்திலே அமரராகிய தேவர்கள், கந்தருவர்கள், நாகர்கள், தேவரிஷிகள், அசுவனி தேவதைகள் இப்படி அனைவரும் புடைசூழ்ந்திருக்க தேவர்கோனாகிய தேவேந்திரன் கொலுவிருக்கின்ற சபையிலே அரம்பையர்கள் பரதநாட்டியம் பண்ணுகிற வேளையிலே பூலோகத்தில் மழையில்லாமல் பூமிதேவி கோரமுற்று தேவேந்திரனிடத்துக்குச் சென்றாள். எ - று. (1)

நிலமடந்தை விண்மன்றினி னின்றிடக் கண்ட
குலமடந்தையு மிந்திரன் முதலிய குழாமுந்
தலம்படிந் திங்கண் வந்தவாறே தெனச்சாற்ற
நலம்படிந்து புட்கலத்ததி பன்முன் னவில்வாள்.

இ - ள். அந்த பூமிதேவி விண்மன்றாகிய தேவ சபையிலே வந்து நின்றாள். அதுகண்ட குலமடந்தையாகிய இந்திராணியுடனே தேவேந்திரனும் மற்ற சகல தேவர்களுந் தலம்படிந்து நமஸ்கரித்து இங்கு வரக் காரணமேதென்று கேட்டார்கள். அப்போது நலம்பிறந்து மேகநாயகனை தேவேந்திரனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினாள் பூமிதேவி. எ - று. (2)

புட்கரத் திடல்வன்னி யென்றசுர மன்னவனின்
னுட்கி யுண்ணலால் விரிந்திடுமுகி லனைத்துலகுந்
துட்கிச்சூழ்ந் திடாமையின் மழையற்ற தச்சூரன்
மட்கலாகவு மண்ணில் வான்சொரியவு மென்றாள்.

இ - ள். அப்படி பூமிதேவி சொல்லிய தெப்படியென்னில்? விஸ்தாரமாகிய புட்கரத்தீவிலே அதிபதியாயிருக்கின்ற வன்னியென்றொரு பராக்கிரமம் பொருந்திய அசுரராசன் மேகங்கள்

மடிந்திடும்படி நாகத்துக்குப் பிழிந்துகொண்டு விடுவதினாலே எங்கும் பரவிப் பொழிகின்ற மேகங்கள் அச்சங்கொண்டு சகல லோகங்களிலேயும் பிரவேசியாமல் மழை யற்றுப்போயிற்று. ஆதலால் அந்த அசுரன் மடிந்திடச்செய்து மழை சொரிந்திடச் செய்யவேண்டு மென்றாள் பூமிதேவி. எ - று. (3)

மாதவைறந்திட மன்னவன் வான்முகி லணைத்தினுக்கும்
பீதியற்றிடச் செய்துவான் பொழியவும் பிணைத்தான்
பூதியுற்றவக் கோவும்பின் புணர்முலைச் சசியைக்
காதலுற்றனக் கிணையிலை வடிவெனக் கதித்தான்.

இ - ள். அப்படி பூமிதேவி சொல்லக்கேட்ட தேவேந்திரன் வான்முகிலாகிய ஆவிருத்த புட்கலாதிகளான மேகங்களை அச்சமறச் செய்து வருஷிக்கும்படி ஆக்கினை செய்தான். அப்ப டிச் செய்த செல்வமுடைய தேவேந்திரன் பின்பு அந்தச் சபை யிலே யிருக்கின்ற சுவர்க்காதேவியைப் பார்த்து அதிக ஆசை யுடனே உன்னுடைய ரூபலட்சணங்களுக்கு மற்றொருவ ரிணையோ? அப்படி அழகிலே மிகுந்தவள் நீயேயல்லாது வேறில்லை யென்று கனக்க ஆசித்துச் சொன்னான், தேவேந் திரன். எ - று. (4)

சிறந்த மன்றைவிட் டந்தரங்கக் திடைசேர
கிறங்கொண் டிந்திராணியும் புவிமடந்தையை நோக்கி
யிரங்கல் போல்வா யிளநகை செய்தவளேகப்
பிறங்கல்செய்து பெற்றமையா தினலெனப் புவிபேணி.

இ - ள். அப்படிச் சொன்ன தேவேந்திரன் அந்த மகா சபையை விட்டு தன்னுடைய அந்தப்புறமே போனான். அப் போது அழகுள்ள இந்திராணியும் பூமிதேவியைப் பார்த்துப் பழித்ததுபோல உதடு மடித்து புஞ்சிரிப்புக்கொண்டு தானும் அந்தப்புறமே போனாள். அது கண்டு பிறங்கலென்னும் பெருமை பெற்றது இந்திராணி யாரினாலென்று ஞானோபாய மாய் ஆலோசித்தாள் பூமிதேவி. எ - று. (5)

தேசுநற் றவஞ்செய் திடுவசிஷ்ட னிருக்குற்று
நேசம்பெற்றதா லெழின்மிகுந் தெம்மையிவ ளிகழ்ந்தாள்
மாசிலம்முனி மண்ணிடைச் சேர்ப்பதென் றெண்ணி
யாசையுற் றருந்ததிமுனி யவளிட மார்ந்தாள்.

இ - ள். பின்னும் பூமிதேவி ஆலோசித்து அறிந்ததெப் படியென்னில்? பிரகாசம் பொருந்திய பிரமதேசசு வதனாலே

தவஞ்செய்கின்ற வசிஷ்டமுனி இந்த சுவர்க்க லோகத்திலே இருக்கவல்லவோ இந்திராணி நேசம்பெற்று அதினாலே அழகு மிகுந்து நம்மை இகழ்ந்தாள். ஆதலால் மாசிலாத அந்த மகாரிஷியை நம்முடைய உலகுக்குக் கொண்டுபோனால் நன்மையென்றெண்ணி ஆசையுற்று அருந்ததி சகிதனாயிருக்கிற வசிஷ்ட முனியிடம் வந்தாள் பூமிதேவி. எ - று, (6)

பூவிமடந் தையைக்கண்ட மாதவன் புகழ்ந்தேத்தி
யிவண்வர லெனவென் றதற்கிசைந்து மண்ணுலகிற்
றவம்புரிந் திடுவிரெனச் சாற்றிடத் தவனும்
பவனவேதனுக் குரைத்துயான் வரலெனப் பகர்ந்தான்.

இ - ள். அப்படி பூமிதேவி வரக்கண்ட வசிஷ்டமுனி மிகவுந் தோத்திரம்பண்ணி உபசரித்து இங்கு வரவேண்டிய தேதெனக் கேட்டார். அப்போது யானிருக்கும் பூலோகத்திலே நீர் வாசம் பண்ணுகைக்காகப் பிரார்த்தித்து வந்தேனென்றாள் பூமிதேவி. அதுகேட்டு பவனமாகிய மேலுலகு பிரமதேவனுக்கு அறிக்கைசெய்து அனுமதிபண்ணிக்கொண்டு யான் வருகிறேன் பூலோகத்துக்கென்றார் வசிஷ்டமுனி. எ - று. (7)

வசிஷ்டனா ருரைகொண்டு மண்மடந்தை மண்புக்கா
டிசைமுகத்தன் கண்ணணுகி யங்கிறைஞ் சினனிருடி
நசையுற் றயனுமைந் தனையாதென நவில
வசலையேனை யங்குறவெனா வறைந்தனா னென்றான்.

இ - ள். அப்படி வசிஷ்டமுனி சொல்லக்கேட்ட பூமிதேவி பூலோகமே சென்றாள். அப்பால் திசைமுகத்தனாகிய பிரமதேவனிடத்துக்குச் சென்று வணங்கி நின்றான் வசிஷ்டமுனி. பிரமதேவன் அதுகண்டு ஆசையுற்று தனது குமாரனாகிய வசிஷ்டமுனியை நீ வரக் காரணமேதெனக் கேட்டான். அதற்கு அசலையாகிய பூமிதேவியானவள் என்னை அங்கு வரவென்றாளென்று சொன்னான் வசிஷ்டமுனி. எ - று. (8)

என்றதற் கயன்யாவு நற்றவங்கள் மண்ணுலகை
யன்றிபின் னவகண்ட மைம்பத்தா றதனுளௌவ்வொன்
றொன்றுமுயர் தலமதற் குகந்தவெண் ணதிபாற்
றொன்றுவெண் ணெழுதலங்கண் மேன்றலத் திறஞ்சொல்வாம்.

இ - ள். அது சொல்லக் கேட்ட பிரமதேவன் சகல தருமங்களுஞ் சகல தவங்களும் பூலோகத்தையல்லாது வேறு

போகபோக்கியாதி உலகில்லை. ஆதலால் அப்படிக்காகிய பூமியிலே நவகண்டமென்னும் ஒன்பது கண்டம். ஐம்பத்தாறு தேசம். அந்தத் தேசத்தில் ஒவ்வொரு தேசத்துக்கு ஒவ்வொரு தலம் மேன்மையாகியது. அப்படி ஐம்பத்தாறு தேசத்துக்கும் ஐம்பத்தாறு மேன்றலம். அந்த ஐம்பத்தாறு மேன்றலத்துக்குஞ் சிறப்புடைய தெய்வீக ஸ்தலம் ஐம்பத்தாறுண்டு. அது எவ்விடமென்னில்? சுவேத நதி தீர்த்தக் கரையிலாகும். அந்த தீர்த்தக்கரையிலே யிருக்கிற ஐம்பத்தாறு தலங்களுக்கும் விசேஷமாகிய புண்ணிய ஸ்தலம் அசறுரணிய க்ஷேத்திரமாகும். அப்படிக்கான தலத்தின் பெருமையைச் சொல்லுவேனென்று சொல்லத் தொடங்கினார் பிரமதேவன். எ - று. (9)

முந்துய ருலகளிக்குங் கான்முனி நவருதித்தார்
வந்தவருட் புலத்திய னெனுமவன் பயந்தவசுரன்
றந்திமெய்ய னென்றோரு ளமரரைமுனி வரைத்தவரை
நிந்தைகொண் டுயிர்மாய்த்தும் நீள்கடற் புகுந்தொளித்தும்.

இ - ள். ஆதியிலே யான் சகலமுஞ் சிருஷ்டிக்கும்போது முதலிலே காசிபாதி சத்தரிஷிகள் உதித்தார்கள். அந்த ரிஷிகளில் புலத்தியரிஷி யென்பவன் கஜகாயன் என்றொரு பராக்கிரமமுடைய அசுரனைப் பெற்றான். அந்த அசுரனானவன் அமரராகிய தேவர்களையும் தேவரிஷிகளையும் தபோதனர்கள் முதலான அனைவரையும் நிந்தை செய்துகொண்டு தனக்கு இணையில்லையென்று அடித்து உயிர்களை வதைத்தும் விசாலம் பொருந்திய சமுத்திர ஜலத்தி லொளித்து மிருக்கிறான் பின்னுமசுரன். எ - று. (10)

நீனெடுங் கிரிபோல நிணிலத் திடைதிரிந்துங்
கான்புக்கியு மூழிநாட் கடந்தபின் னசனக்
கான்முற்று மெய்ஞானமு மடைந்துயிர் கடந்தே
வானம்புக்க ரம்பைய ரொடுவாழ்ந் திருந்தான்.

இ - ள். கருநிறம் போன்ற நெடிதாகிய நீலகிரி பருவதம் போல அவன் விஸ்தாரமான பூலோகத்தின் சம்புத் தீவிலே சஞ்சரித்துக்கொண்டும் அதிலுள்ள வனங்களிலே புகுந்தும் அனேக கால மிருக்கும்போது சுவேதநதிக்கரையாகிய அசனுரணிய க்ஷேத்திரத்தின் வனத்துக்கு வந்தான். அதிலே வந்த மாத்திரத்திலே அவனுடைய துர்க்குணங்களெல்லாம் அகன்று நல்ல பூர்வக்ஞானம் வந்து பரமசிவனையும் மகா

விஷ்ணுவையும் பணிந்து சிவன்முத்தனுய்ப் பின்பு சுவர்க்காதி போகத்தை அடைந்தானென்று பின்னுஞ் சொல்லுவான் பிரம தேவன். எ - று. (11)

அத்தலந்தை யேதோவென வெண்ணியே யறியா
வெத்தலந்தை யெண்ணியுங் கதிபெற் றவரில்லை
யத்தமாதி யாமுறுப்பு கனற்பதி யனைத்துஞ்
சுத்தமென் றலமொளி விழியென்னவே தோற்றும்.

இ - ள். அப்படிப் பெரிதாகிய அந்த ஸ்தலத்தை ஏதோ வென்று அற்பமாக வெண்ணியும் அந்த ஸ்தல மகிமையையும் அறியாமற்படிக்கு மற்றெந்த ஸ்தலத்தையு மெண்ணி கதி யடைந்தவர்களில்லை. அதல்லாமலும் பூலோகத்திலே யிருக் கின்ற க்ஷேத்திர தலங்களெல்லாம் விசேஷமாகிற ஞானத் துக்குக் கை, கால், மூக்கு, மார்பு என்னும் உறுப்புகளைப் போல வும், பரிசுத்தமாகிய அசுரணிய ஸ்தலமே பிரகாசம் பொருந் திய நேத்திரத்தைப் போலவும் விளங்குமென்று பின்னுஞ் சொல்லுவான் பிரமதேவன். எ - று. (12)

சேட்டமா பதிசென் றிடாதவரை வைதரணிக்
கோட்ட மள்ளலிற் றள்ளுவர் கோயில்காணுரை
வாட்டநீ ளெடுங்கிரி புரைவன் பகடேறி
யீட்டமோ டெமனெறிந் துயிர்நடுங்கிட விழுப்பன்.

இ - ள். சேட்டமென்னும் மேன்மை பொருந்திய அந்த ஸ்தலத்தை மதித்துப் போகாதவரை வைதரணி நதியென்னும் எமலோகத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிற ஆழமாகிய சேற்றிலே தள்ளுவார்கள். அதல்லாமலும் அந்த ஸ்தலத்தின் திருக் கோயிலைக் கண்டு தெரிசிக்காதவர்களைத் துன்பப்படுத்த கரு நிறம் போன்ற நெடிதாகியிருக்கின்ற நீலகிரி பருவதம்போல வலிமைபொருந்திய எருமைக்கடா வேறிக்கொண்டு கோரமுற்ற கிங்கரர்கள் கூட்டத்துடனே எமதருமராசன் வந்து சூலபாச மெறிந்து நடுநடுங்கும்படி உயிரை வதைத்திழுப்பா னென்று பின்னுஞ் சொல்வான் பிரமதேவன். எ - று. (13)

பின்னுமிந்தையே யுரைத்தவர் நாவினைப் பிடுங்கி
சொன்னவாயினி லூற்றியே துருத்திவாய்ச் சீசம்பின்ன
பின்னமாய்ச் சிதைத்தும் பின்சேத் துயிர்வகுத்தும்
வன்னிவாய் நரகிடுவர் வைவச்சுதன் வினையால்.

இ - ள். பின்னும் அந்த ஸ்தலத்தை நிந்தையாகச் சொன்னவர்களுடைய நாவை வலிமை பொருந்திய குறடுகளினாலே பிடுங்கியும் அப்படிச் சொல்லிய வாய்களிலே ஊற்றுவான் காய்ச்சிய சீசங்களை யுருகவிட்டும், அவர்களைச் சின்னபின்னமாகக் கருக்கியும், பின்பு ஒன்றாகச் சேர்த்து உயிருண்டாக்கியும், அக்கினி நரகத்திலே தள்ளியும், வைவச்சுதன் பட்டணத்து அதிபதியாகிய எமன் வினைக்காளானவர்கள் என்று பின்னுஞ் சொல்லுவான். எ - று. (14)

எச்சிலை யெலாம்போலென் றெந்தையை நிந்தித்
தச்சமற்றவர் வாயினிற் புற்றெழுந் தனைய
புச்சமுற் றுதிர்ந்திடும் பின்னும்பொந் துகச்செக்கிற்
வச்சரைத் தரைத்திடுப்பர் கண்மறலி யின்றூதர்.

இ - ள். பின்னும் அந்த ஸ்தலத்திலிருக்கின்ற பரமசிவனை மற்ற கல்லுகளைப்போலவென்று அச்சமற்று நிந்தையை யுரைத்தவர்கள் வாயிலே புற்றெழும்பி வால்களோடுங் கூடியிருக்கின்ற புழுக்கள் உதிர்ந்திடும். பின்னும் மறலி தூதர்களாகிய கிங்கரர்கள் எந்தையாகிய பரமசிவனை நிந்தை சொல்வையோவென்று பொந்தாகிய சுல்லுச் செக்கிலே வைத்தரைத் தரைத்திடுப்பார்கள் என்று பின்னுஞ் சொல்வான். எ - று. (15)

ஈசனார்நிதி யனுவள விச்சித்தார் தலையில்
ஏசிறண்டையே யிடுவர் தொன்வினை யெலாநவில
வாசுகொண்டு வெண்ணறைய வேழாழ நிடிடலிற்
கோசுகொண்டு தூதர்கள் சினத்துயிர் களைக்கொல்வர்.

இ - ள். அப்படியிருக்கின்ற பரமசிவனுடைய சொத்துக்களை அணுமாத்திரமாவது ஆசித்தபேர்களை, குற்றமற்ற தருமராசன், சிரசிலே காலதண்டை நாட்டுவன். அப்போது பழமையாகிய தீவினைகளை யெல்லாம் சொல்லச் செய்யும். அப்படிச் சொல்லிய தினைகளுக்குத் தகுமான தண்டனை சித்திரகுப்தன் சொல்ல விதிப்படி ஏழு ஆழமுள்ள நரகமும், ஏழு திடலாகிய வட்டமுமிருக்கும். அதிலே ஆங்காரங்கொண்டு உயிர்களை வதைப்பார்கள் எமதூதர்களென்று பின்னுஞ் சொல்லுவான் பிரமதேவன். எ - று. (16)

பின்னுமீசன்றன் பொருளினைப் பேணினோ ரெடுத்தோ
ரன்னத்திற் குடன்பட்டன ரழுந்துவர் நாலெழு

மன்னுகோடி ரௌரவத்தி னின்மாய்ந்து மூவகைக்கு
மன்னிதாக வுருசனித் துயிர்விடுத்தும் வந்தடுப்பர்.

இ-ள். பின்னும் அந்த ஸ்தலத்தின் பொருளைக் கடுகளவாவது வேண்டுமென்று இச்சித்தோர்களையும் அபகரித்தோர்களையும், அபகரிக்கப் பார்த்திருந்தோர்களையும், அதற்குடன்பட்டோர்களையும், இருபத்தெட்டுக்கோடி கடூர நரகங்களில் தள்ளுவர்கள். அதல்லாமலும், அப்படி அனுபவித்து அநேக காலஞ் சென்றவாறே மூவகையாகிய தேவ சாதி, மனுஷிய சாதி, பசு மிருக பட்சி சாதிகளுக்கு அன்னியமான புழுப் பூச்சியாய் சனித்துழல்வார்களென்று பின்னுஞ் சொல்வான். ஏ-று. (17)

அரனற மகடன்னையே யாசிக்கு மவரைக்
கரந்தழுவ வெவ்வழற் கம்பங்காட்டுவர் தலத்தில்
இருந்து தீவினை யெண்ணிடுவோர் களைநெய்யின்
பெருங்கலத்தினிற் போட்டுமே காய்ச்சுவர் புரட்டி.

இ-ள். அப்படிக்கல்லாமலும் அந்த ஸ்தலத்தின் அறமகளாகிய அவற்குரிய தாசிப்பெண்களை பக்கத்திலே கொண்டு போக எண்ணியவர்களைக் கைகளினாலே கட்டித் தழுவும்படி அகோர காலாக்கினியாகிய அக்கினிக் கம்பத்தைத் தூதர்கள் காட்டுவார்கள். பின்னும் அந்த ஸ்தலத்திலிருந்துகொண்டு தீவினையாகிய கொடிய பாவங்களைச் செய்தவர்களைப் பெரிதாகிய கொப்பறையிலே நெய்யை வார்த்தெரித்து அதிலே தள்ளிப் புரட்டிப் புரட்டிக் காய்ச்சி யெடுப்பார்கள் எமதூதர்களென்று பின்னுஞ் சொல்வான். ஏ-று. (18)

தந்ததாய் குருபுது ரணஹத்திக ளொடுதார்
மைந்தர்ஹத்தியுஞ் செய்தவர் கிடக்கு பாழ்நரகி
லெந்தைசொத் தெடுத்துவரை யிட்டிட வெகுட்வினை
நந்தவுழலு மதிற்கிடப் பருமக்ன் றிடுவார்.

இ-ள். பின்னு மெப்படியென்னில்? மாதுருஹத்தி, பிதுருஹத்தி, குருஹத்தி, கெர்ப்பஹத்தி, ஸ்திரிஹத்தி, புத்திரஹத்தி இப்படிக்கான கொடிய ஹத்திகள் செய்த பாவிகளை இருண்ட நரகத்திலே தள்ளக் கிடப்பார்கள். அப்படியிருக்கின்ற நரகத்திலே எந்தையாகிய பரமசிவன் சொத்துக்களை அபகரித்த பேர்களைத் தள்ள அந்த நரகமும் இவன் வெகு பாவி. இவனை நம்மாலுபாதித்து முடியாதே யென்று தளர்ச்சி

கொள்ளும். பின்னும் அதிற் கிடக்கின்றவர்களும் இவன் வெகு பாவி யென்று அப்பாலே விலகுவாரென்று அப்படிக்காகிய அந்த ஸ்தலத்தின் மகிமையைப் பின்னுஞ் சொல்லுவான். எ - று. (19)

ஆலமுண்ணலா மத்தையுந் தின்னலா மழலை
மாலை பூணலாம் வாரியை நீந்தலா மரவஞ்
சேலைசுற்றலாந் திண்புலி யேறலாந் தெய்வக்
கோலநூலினை கொள்ளவே கெடுக்குமக் குடியை.

இ - ள். ஆலமென்னும் விஷத்தைப் புசிக்கலாம், இரும்பைத் தின்னலாம், எரிகிற நெருப்பை மாலை போடலாம், சமுத்திர சலத்தை நீந்தலாம், விஷங்களைக் கக்குகின்ற பாம்பை உடையாக உடுத்தலாம், திடம்பொருந்திய புலியை வாகனமாக ஏறலாம், தெய்வமாகிய வயித்தினாத சுவாமியின் அழகுபொருந்திய வஸ்திராதிகளை அபகரிக்கக்கூடாது. அப்படி ஆசை வைத்தவனுடைய வமிசங்களெல்லாம் அறுதியாகக் கெடுக்கும். எ - று. (20)

அத்தலத்தினி யருந்தவஞ் செய்வதென் றருளி
யொத்தலற்றநி லத்தன்முன் னுதிப்பனுங் குதவக்
கைத்தலத்துநீர் கமண்டலந் தனைக்கொடுத் தனுப்பத்
துத்தலுற்ற கோசுரபி யருந்ததியோடு தூயன்

இ - ள். அப்படிக்காகிய மேன்மை பொருந்திய பூலோகத்தின் ஸ்தலத்திலே நீ யரிய தபசுகள் செய்ய மகிமை யென்று இப்படிக்கெல்லாஞ் சொல்லிப் பின்பு இணையில்லாத அந்த ஸ்தலத்திலே பரமசிவன் உனதுமுன் எழுந்தருளுவார். அப்போது திருமஞ்சனத் தொடர்ச்சிக்கு வேண்டுமென்று கைத்தலமாகிய சகல லோகத்தையுஞ் சிருஷ்டிக்கின்ற கையிலே வைத்திருக்கிற கமண்டலத்தை அறுபத்துநான்கு கோடி புண்ணிய தீர்த்தங்களும் இதற்குள் ளிருக்கிறதென்று பிரமதேவன் கொடுத்தனுப்பினான். அப்படிச் சொல்லி அனுப்பக் கண்ட வசிஷ்டமுனி அருந்ததியுடனே சகல பதார்த்தங்களும் அமுதுமளிக்கின்ற காமதேனு வென்னுந் தெய்வப் பசுவுடனே புறப்பட்டான் பூலோகத்துக்கு. எ - று. (21)

மாருதத்தட வாலநீழல் புக்கு மண்மடந்தை
வீரமுற்றிட விண்ணவர் ரேவிட விரசையின்
ஓரமுற்று வாலந்துறை நாதனென் றொளியின்
சாரமுற்று நிர்விகற்ப சாதனையினிற் சார்ந்தான்.

இ-ள். அப்படி பூலோகத்துக் கெழுந்தருளிய வசிஷ்ட முனி மாருதத்தடமாகிய அனுமந்தபுஷ்கரணியின் பக்கலில் விரசை நதிக்கரை யோரத்தில் ஆலந்துறையார் சந்நிதி முன் தேவர்கள் வந்து செல்லும்படி யோகநிஷ்டையடைந்தார். அடைந்தமாத்திரத்திலே பூமிதேவியும் பலமடைந்து அழகு பெற்றாள், அந்தத் தலத்தின் பெருமையினாலே. எ-று. (22)

பூமிதேவி பெருமைபெற்ற சருக்கம்
முற்றும்

# காமதேனுவுக்கு புராதன லிங்கம் பிரசன்னமான சருக்கம்

கோதின்முனி மன்வந்தர நாட்கொண்டு தவம்பின்செறிகானில்
வேதநெறியின் வினைமுடித்தும் விண்ணுட்டாவை யடிபணிந்தும்
பூதியொடு நற்றவர்க் கமுதுபுரிந்து மிருப்பவுழிகங்கை
சோதிவடிவப் பிழறபதியே தோன்றக்கண்ட கதைசொல்வாம்.

இ-ள். குற்றமற்ற முனியாகிய வசிஷ்ட ரிஷி ஒரு மனுவந்தர காலம் தபசு செய்துகொண்டிருந்து பின்பு அந்த அசனுரணியத்திலே வேத நெறியாகிய யாகாதிகன்மங்கள் நடத்தியுங் காமதேனுவைப் பூசித்து மதனுலே தரப்பெற்ற அஷ்ட ஐசுவரியத்தொடுந் தவமுனிகளுக்கு அன்னம் பாலித்து மிருக்கிற காலத்திலே கங்கா நதியும் பிரகாசம்பொருந்திய வயித்தியனுத சுவாமியும் பிரசன்னமான கதையைச் சொல்லுவாம். எ-று (1)

அந்தமா வனந்தன்னில் வானுவை யம்முனிவன்
சிந்தைகூர்ந் தத்தினந்தினந் தொழுதனன் றெழுநா
டந்திடும முதத்தினு லோர்பொழு தாங்கண்
வந்திடா ததைவசிஷ்டனுங் கண்டயர் வுற்றுன்.

இ-ள். அந்த அசனுரணியத்திலே, தேவலோகத்துப் பசுவாகிய காமதேனுவை வசிஷ்டரிஷி மனமகிழ்ந்து நாள்தோறும் பூசித்து மதனுலே தரப்பெற்ற அறுசுவை பதார்த்தங்களுடனே யன்னங்களும் வருகிற ரிஷிகளுக்குக் கொடுத்துவரும் நாளையிலே யொருநா ளவ்விடத்துக்கு அந்தப் பசு வராததுகண்டு வசிஷ்டரிஷி மிகவும் துயரமடைந்தார். எ-று. (2)

அமரர்மாதவர்க் கியாவுமாங் களிக்கு மவ்வாவெஞ்
சமர்தயித்திய ரக்கர் பாதலத்தர் கொண்டனரோ
யிமையர்விஞ்சையா லெய்திடாச் செய்தனரோ மற்றிங்
கமையும்வெஞ்சினக் கரிவரி பாந்தளாற் கரைவோ.

இ-ள். அப்படி துயரமுற்றவ ரெண்ணிய தெப்படியென்னில்? அந்தக் காமதேனு தேவர்களுக்கும் மாதவர்களுக்கும்

சகலமு மாளிக்கின்றதென்று கொடிதாகிய யுத்தங்கள் செய்கின்ற அசுரர்கள், ராட்சதர்கள், உரகராகிய பாதாள லோகத்தார் பிடித்துக்கொண்டார்களோ, அதுவுமல்லாம லிமையோ ரென்னும் தெய்வலோகத்தார்கள் தங்கள் மாயாவித்தையினாலே பூலோகத்துக்கு வராமல் செய்தார்களோ? அல்லாமலு மிந்த வனங்களிலே சஞ்சரிக்கின்ற துஷ்ட மிருகங்களாகிய யானை சிங்கம் புலிகள் முதலிய விஷயங்களினாலு முபத்திரவப்பட்டதோ வென்று ஆலோசித்தார், பின்னும் வசிஷ்டமுனி. எ - று. (3)

யாதறிந்தில மாதியே யென்று வக்கணத்திற்
சோதிநோக்கமாய்த் தோன்றிய யாவையு மறிந்து
பாதமுற்றவோர் பரமனைப் பணிந்திடு தெனுவெங்
காதலுற்ற கற்பருந் ததியோடு கனைத்துரைத்தார்.

இ - ள். அப்படிக் கெண்ணிய முனி, யாதுந் தெரியவில்லையே ஆதிமூலமே யென்று அந்த நிமிஷத்தில் சோதி ப்ரகாசமான ஞான திருஷ்டியிலே யிருந்து தோற்றிய யாவையு மறிந்து, அந்தப் பசுவானது தன்னுடைய குளம்பு பட்ட வோர் லிங்கத்துக்குப் பால் சொரிந்து பணிந்திடுதென்று ஞனக்காசை யுற்ற கற்புடைய வருந்ததியோடு சிக்கிரத்தி லுரைத்தார் வசிஷ்டமுனி. எ - று. (4)

மாபுன்ற கடமீந்த பிதாமகன் மலர்ந்த
நூபுரக்கழ லோன்குடக் குதித்தன னுதித்தான்
மாபதம்பணிந் திடுவமென் றிருவரும் மகிழ்வுற்றே
புராதன விலிங்கமேற் பத்திகொண் டெய்தினர்.

இ - ள். அப்படிச் சொல்லிய பின்னும் மாபுன்றகட மென்னும் அறுபத்துநான்கு திர்த்தங்களு மிருக்கின்ற கமண்டலத்தை யெமது பிதாவாகிய பிரமதேவன் கொடுத்து சிவனுக்குப் பூலோகத்திலே அபிஷேகஞ் செய்வாயென்று இருவாய்மலர்ந்தபடி ஒலிக்கின்ற சிலம்போடுங்கூடிய பாதத்தை யுடைய பரமசிவன் மேற்கே யெழுந்தருளி யிருக்கிறார். அவருடைய பாதாரவிந்தங்களைப் பணிந்திட வாவென்று இருவரு மனமகிழ்ந்து அதிக பத்தியுடனே சிவன் தோன்றிய தலத்துக்குப் பிரவேசிக்கலானார் வசிஷ்டமுனி. எ - று. (5)

மதனனு ணெனும்வண் டொலித்தோடியே
புதுமலர் நறவுண்ணும் பழம்பொழில்
லதுநடக்கும் பொழுதரன் றன்முறைக்
கிதுமலர்க ளெடுப்பதென் றெண்ணினர்.

இ - ள். அப்படிப் புறப்பட்டபோது மன்மதனுடைய வில்லுக்கு நாணென்னும் வண்டினங்களாகியவை கக்திக் கொண்டு ஓடி புதும்லர்களின் மதுக்களை யுண்கின்ற தோப்பு களின்மீது செல்லும்போது சிவன் பூசைக்கு இங்கிருக்கின்ற புஷ்பங்களை யெடுப்பதென் றெண்ணினார், வசிஷ்டமுனி. எ - று. (6)

அன்று வேத னளித்த கமண்டலத்
தின்று கீழ்வைத் தலர்க்கயல் சென்றன
னென்ற கற்றுமென் றெண்ணிய காகம்வந்
தொன்று தொன்மைக் கமண்டலத் துற்றதே.

இ - ள். அப்படி யெண்ணிய வசிஷ்டமுனி அன்று பிரம தேவன் கொடுத்தனுப்பிய கமண்டலத்தை யிப்போது பூமியில் வைத்து புஷ்ப மெடுக்க பக்கத்திலே சென்றான். அந்தவேளை யிலே இந்தக் கொடிதாகிய ஜென்மத்தை யென்று அகற்றுவோ மென்றெண்ணிய காக மொன்று பழமையாகிய கமண்டலத்தில் வந்து குதித்தது. எ - று. (7)

உற்ற வப்புன லுண்டு கவிழ்த்திடப்
பெற்ற வேதியன் பேணிக்க னன்றுயர்
முற்ற வித்தலந் தன்னி லுறைந்திடா
சொற்றி காகத்துக் கிட்டது சாபமே.

இ - ள். அப்படிக் கமண்டலத்திலே யுட்கார்ந்த காகமா னது அந்தத் தீர்த்தத்தை யுள்ளே குடித்து மேலேபடக் கவிழ்த்துவிட்டு மப்பாலிருந்தது. அதுகண்ட வசிஷ்டமுனி பயந்து யான் பெற்ற கமண்டலமெனக் கோபித்து இத்தலமா கிய வெமது ஆச்சிரமத்திலே தரிக்கக்கூடா தென்று சாபங் கொடுத்தார் காகங்களுக்கு. எ - று. (8)

தும்ப நற்புனல் கொண்டவக் காகமே
யும்பர் மாதனு வுற்று நலத்துடன்
சம்பு பூசைத் தவமுனி தாளிணை
நம்பி வேமெனச் சுற்றி நவின்றதே.

இ - ள். அப்படிக் கமண்டல சலத்தைப் புசித்து மேலே படக்கொண்ட காகமானது நல்ல திவ்விய சரீரத்தை யெடுத் துக்கொண்டு நன்மையுடனே சிவ பூசை செய்யப்போகின்ற வசிஷ்டமுனியை நம்பினே னம்பினே னென்று பிரதட்சிணம்

பண்ணிக் காவிலே விழுந்து ஒரு பிராமண னுருவாகத் தோன்றிச் சொல்லத் தொடங்கிற்று. எ - று. (9)

பற்ப ரப்பதி தன்னுறை வேதியன்
செப்பு நற்குரு நிந்தனை செய்தனான்
ஒப்பின் மையுல கையுநா யொங்கு
மெய்ப்பியா தொழியா மலைந்த பின்

இ - ள். அப்படிச் சொல்லிய தெப்படியென்னில்? பற்பரமென்னுமொரு பட்டணத்திலே சகில னென்னுமொரு வேதியன் ஜென்ம மீடேறும்படி யுபதேசஞ் சொல்லிய குருவை நிந்தனை செய்து இணையில்லாத அகோரமான பிர்மராக்ஷதனாகிய தனுவெல் அனேக விருட்சங்களிலே யிருந்து அது வொழியாமல் யெங்கேயு மலைந்தேனென்று பின்னுஞ் சொல்வான் காகமான பிராமணன். எ - று. (10)

செய்ய மால்வரைத் தாவிபே யாவதிற்
றுய்ய கும்ப முனியைத் தொழுதவ
னைய்ய நுங்கமன் றண்டிகை யன்றிட
வெய்ய ஜென்ம மிறந்திடு மென்றனன்.

இ - ள். எங்குஞ் சஞ்சரித்த பின்பு, சையகிரி பருவதத்திற் சென்று அதிலே வாசமாகிய சுத்தமான அகத்திய முனியை வணங்கினேன். அப்போது அவர் பிர்ம கமண்டல் தீர்த்தத்திலே பிரசாதப்பட்டபோது பொல்லாத ஜென்மமாகிய பிசாசத்துவம் நீங்கிவிடுமென்று ரகத்திய முனி. எ - று. (11

அஃது யாங்ஙன மென்றதற் கசவா
ரஃதுள வாசிஷ்ட மாமுனி யாலுவந்
தந்த ருள்பெறு வாயெனக் கண்டியா
னிஃது பெற்றன னின்னரு ளாதலான்.

இ - ள். அப்படி அகத்தியரிஷி சொல்லக்கேட்டு அது எப்போது எந்தவிடத்தில் யாராலே கிடைக்குமென்றதற்கு அசஞ்சாரண்ணியத்திலே வசிஷ்டமுனி தபசுக்கு எழுந்தருளுகிறபோது கமண்டல தீர்த்தம் பிரசாதப்படுவா யென்றார். அப்படியே இந்தவிடத்திலே யும்மாலே அனுக்கிரகம் பெற்றேனென்று பின்னுஞ் சொல்வான் பிராம்ணன். எ - று. (12)

யானி மித்த மிறந்துளர்ந் கிந்திடும்
போனகம் பலிகொள்ள புள்பா வையுமிக்
கான முற்றிடச் செய்யக் கருணைகொள்
ஞான முற்ற முனிவென தாணிறைன்.

இ - ள். அப்படிச் சொல்லிய பிராமணன் என்னுடைய நிமித்தத்தினாலே தென்புலத்தாராகிய பிதிர்களுக்குக் கொடுக்கின்ற பலியன்னத்தை யெடுக்குங் காக்கை பட்சிகளை யிந்த க்ஷேத்திரத்திலே வசிக்கக்கூடாதென்று சபிக்கக்கூடாது. இந்தச் சாபத்தை நீக்கிவிடக் கிருபாகடாட்சம் செய்யவேண்டும், சோதிப்பிரகாசம் போன்ற முனிவே யென்று அஞ்சிப் பயந் துரைத்தான், அந்த வேதியன். எ - று. (13)

அம்முனி யெஞ் சாப மகன்றிடா
தெம்ம றைக்குத வம்பலி தீண்டிட
நும்மா லெம்பகல் நோக்கிட வேயெனச்
செம்மல் சாப மிரவினிற் சேர்ந்ததே.

இ - ள். அப்படிச் சொல்லக்கேட்ட வசிஷ்டமுனி நான் கொடுத்த சாபங்களை நிக்கிரகம் பண்ணவொண்ணாது. ஆனால் ஆதியாகிய வேதங்களில் நடக்கின்ற யாகாதி பிதுரு அவிசுகள் பலிக்கு வாயசம் வராமலிருந்தால் பிராமணர்கள் சாபம் வரும். அதனாலே கருமயாகாதிக ளிந்த ஸ்தலத்துக்கு நட்கமா யிருந்துபோகும். ஆதலால் வேதவாக்கியங்களுக் குதவும்படி பகல் காலத்திலே யெங்கும் நம்முடைய ஆச்சிரமத்திலே வசித்துக்கொண்டிருந்து இராத்திரி காலத்திலே நரிக்குப் போகா தென்று அநுக்கிரகம் பண்ணி யந்த பிராமணனுக்கும் கிருபை செய்தனுப்பினார் வசிஷ்டரிஷி. எ - று. (14)

பூதலத்தி லுதித்தானைப் பூசிக்கக் கமண்டலத்துட் புனலிலாது
வேதனையுற் றந்தணனும் விண்ணோக்காய் சுரநதியை விரும்பினனோ.
நாதனுக்கே யாவதெனா நானிலத்தி லிழிந்தசலா நாடிச்சாடிக்
காதலுற்றங் கெவ்வுயிர்க்குந் துய்யமுறக் கூடிந்தது வே கங்கையாறு.

இ - ள் பூதலமாகிய ஆரணியத்திலே பிரசன்னமா யெழுந்தருளிய சிவனைப் பூசிக்கக் கமண்டலத்திலே கங்கை யிலாது கண்டு வேதனையுற்று வசிஷ்டரிஷி ஆகாசத்தை நோக்கித் தேவகங்கையைத் தியானம்பண்ணி அழைத்தான். அந்தவேளையிலே நாதனாகிய ஈசுவரனுக்கு உதவவேண்டு மென்று பூமியிலே யிறங்கி அந்த ஆச்சிரமம் நாடி கல், மலை, மரம் மேடு பள்ளங்க ளெல்லாம் நிரவிக்கொண்டு ஆசையுடனே பசு, பட்சி, மிருக தாவர முதலிய சகல ஜீவாத்துமாக்களுக்கும்

பரிசுத்தமாகும்படி அதிசீக்கிரத்திலே பொங்கி விரிந்து வந்தது கங்கையாறு. எ - று. (15)

அந்நாளிற் கும்பமுனி யாசமித்துச் சிறுநீர்விட் டாழிதானே
முன்னாளி லம்முனிவன் குண்டிகைநீர் கவிழ்த்தபொன்னி
மூலந்தானே
என்னாளு மொலிக்குமறை போலவுமே பகீரதனுக்
கிரக்கத்தாலே
தன்னாளும் பொழுதிடச்செய் சன்னுமுனிக் கன்னதடக்
கங்கைதானே.

இ - ள். அப்படி நதி பெருகிவந்த தெப்படி யிருந்ததென்னில், ஆதிகாலத்திலே அகஸ்தியரிஷி உள்ளங்கையிலே வாங்கி ஆசமனம்பண்ணி பின்பு விரு தண்டுவழியாய் சிறுநீர் விட்ட சமுத்திர சலம் போலவும், பின்னு முற்காலத்திலே யந்த முனிவன் கமண்டல சலத்தைக் கவிழ்த்துத் தன்னுடைய பத்தினியாகிய லோபாமுத்திரை யென்பவளை சமுத்திர ராசனுக்குப் பாரியாக அனுப்பிய காவேரி நதியைப் போலவும், சருவ காலமும் கோஷித்திருக்கின்ற நான்கு வேதங்களி னொலிபோலவும், அதல்லாமலும் தன்மேலே பெருகியபோது குடித்த சலத்தை பகீரதனுக் கிரங்கி சன்னுமுனி காதினாலே வழிந்திடச் செய்த விசாலமுடைய கங்கா நதியைப் போலவும் பெருகி வந்தது. சுத்தமாகிய வெள்ளாறு. எ - று. (16)

பங்காத பெருநதியாய் வந்தவதில் வளைக்கையொடு மங்கையாகி
மங்காத வனொளிமணி குண்டலத்தம் முனிவனைப்பார்த்
தவளுரைத்தாள்
பொங்காவி லெனையழைத்த புண்ணியமே யிவணிருக்கப்
புரிவாயென்றே
துங்கார்ந்த நிலத்திலுத்தா மத்திலொன் றுதாயமுனிக்கித்
தொளித்துச்சென்றாள்.

இ - ள். அப்படிப் பெருகிவந்த நதி சலத்திலே வளைகளையுடைய கைகளுடனே ஒரு பெண் வடிவாகி கங்காதேவியானவள் ரிஷியைப் பார்த்துச் சூரியனையொத்த கவசகுண்டலத்தோடிய வசிஷ்டரிஷியே, யிந்தப் புஷ்ப வனத்திலே யென்னை வரவழைத்த புண்ணிய மேதென்று பின்னு மிந்த க்ஷேத்திரத்திலே யான் சர்வகாலமும் வசிக்கும்படி யருள்செய்ய வேண்டுமென்று கேட்டாள். அதற்கந்த ரிஷி அப்படியே யிங்கு வசித்துக்கொண்டிருப்பா யென்றார். அப்போது தன்னிடத்திலிருக்கின்ற உயர்ச்சிபொருந்திய வெண்முத்தாரத்திலொன்று ரிஷிக்

னுக் கொடுத்து அந்தச் சலத்திலே மறைந்து அப்பால் கிழக்கு நோக்கிச் சென்றாள் கங்காதேவி. எ - று. (17)

வானாட்டு மாநதிநீர் கமண்டலத்தின் முகந்துமுன்மன்
றுள்பாதந்
தானாட்டு வான்றலமே சென்றிலிங்கமும் வடிவுந்தலை யின்மிசை
மேனாட்ட வகிரமுந்தியவ் வுதிரந்தனிற் றாமபால்விட
வுங்கண்டே
யானாட்டம் பெற்றவொன் றதிசயித்துத் தொழுதுவவ
மையனுற்றனனே.

இ - ள். கங்காதேவி அப்படிக் கண்டபின்பு அந்தத் தெய்வ நதி தீர்த்தத்திலே கமண்டலத்தி லெடுத்துக்கொண்டு மன்று ளாகிய சிதம்பரத்திலே நடனஞ்செய்கின்ற சிவனிருக்குந்தலமே சென்றார். அந்த விடத்திலே யிருக்கின்ற சிவலிங்கமும் வடி வும் சிரசிலே மேனாட்டாவாகிய காமதேனுவின் காற்குளம்பு பட்டு யதிலே இரத்தங்கள் பரவக்கண்டு அது மறையும்படி தன்னுடைய பாலினாலே அபிஷேகஞ் செய்யவுங் கண்டு இந்த காணப்பெற்றே னென்று அதிசயித்துத் தோத்திரம் பண்ணிய பின்பு விசனப்பட்டான் வசிஷ்டரிஷி. எ - று. (18)

முக்காலத் திறைஞ்சிமையோர் முடித்தழும்புந் திருந்தாளு
மக்காலத் தருச்சுனன்வில் லடித்தழும்புத் தடந்தோளுஞ்
சொக்கார்ந்த மதிமுடியிற் சுரபியுகிர் வடுவிளங்க
வெக்கால மழியாதோ னெழுந்தனன்மான் மழுதரித்தே.

இ - ள். அப்படிக் குளம்பு பட்டதென்று விசனமுற் றிருந்தபோது பரமசிவ னெழுந்தருளினார். அதெப்படியென் னில் மூன்று காலத்திலும் அடிபணிகின்ற தேவர்களுடைய கிரீடம் பட்டழுந்திய தழும்பையுடைய திருக்காலும், முன்னாலே அருச்சுன ராசனுடனே யுத்தம் பண்ணும்போது வில்லாலடி பட்ட தழும்புடைய விசாலம்பொருந்திய தோளும், சுத்த தாவளியமான சந்திரனைத் தரித்திருக்கின்ற சடாமுடிச் சிரசிலே பசுவின் குளம்பழுந்திய வடுவுடைய உச்சியுமாகக் கையிலே மான் மழுவுந் தரித்துக்கொண்டு எக்காலமு மழிவிலாதவனாகிய பரமசிவன் எழுந்தருளினார். எ - று. (19)

வானவர்பூ மாரியொடு வந்தரதுந் துமியார்ப்பக்
கானர்கண நாதரொடு கருடர்புடை சூழசனக்
கானிலுதித் தெழுந்தபிரான் கருணையொடு வசிஷ்டனைப்பார்த்
தானமெமக் குன்னைமகிழ் சுரபிமிதித் திட்டதென்றார்.

இ - ள். அப்படி யெழுந்தருளியபோது தேவர்கள் புஷ்ப
மாரி பொழிந்து ஆகாசத்திலே துந்துமி முழக்கஞ் செய்தார்
கள், தும்புருநாரதாதிகள் கானஞ்செய்திட கெருட காந்தரு
வர்கள் போற்றிசெய்திட கணநாதர்கள் புடைசூழ்ந்திட அசரு
ரணியத்தில் பிரசன்னமா யெழுந்தருளிய பரமசிவன் கருணா
கடாட்சத்துடனே வசிஷ்ட ரிஷியைப் பார்த்துச் சுரபியாகிய
தெய்வப் பசுவின் குளம்புபட்ட வூனம் எமக்கு உண்மையென்று
திருவாய்மலர்ந்தா ரீஸ்வரன். எ - று. (20)

அவ்வுரைகேட் டருந்ததியோ டந்தணனுந் தொழுதிறைஞ்சி
யெவ்வுயிர்க்கு முயிரோனே யிங்குவரப் பெற்றனமென்
றவ்வளித்த மணியாரம் ஐயரவர்க்குச் சாத்துதலும்
பவ்வமகன் றிட்டனெனப் பணிவதுங்கை யணிவதுமே.

இ - ள். அப்படிச் சொல்லக்கேட்டபோது அருந்ததி
யுடனே வசிஷ்டரிஷியும் வணங்கி நமஸ்கரித்து எவ்வுயிருக்கு
முயிராகிய ஜெகதீஸ்வரனே யிந்த வனத்திலே வரப்பெற்றே
னென்று கங்காதேவி கொடுத்த முத்து மாலையைச் சாத்தவும்
எனது பவ்வமாகிய பிறவித் துன்பங்களை அகற்றிவிட்டே
னென்று பணிந்திடுவதும் பாதங்களைச் சிரசிலே அங்கீகரித்
ததுபோலத் தன்னுடைய முகத்திலே கைகளை யணிந்திடு
வதும். எ - று. (21)

புராதனலிங் கமும்வடிவும் பூசித்த முனிதன்னை
நிராமயனிங் கிருந்திடுவ தெனநவின்று விண்மறைந்தார்
சராசரமெங் குமமர்ந்தான் றனைப்பின்னும் பணிந்திடவே
சுராவையிவண் கோயில்செயு மெனச்சுருதி யவன்சொன்னான்.

இ - ள். புராதனமாகிய சுயம்பு லிங்காகாரத்தையு மதில்
பிரசன்னமாகிய அழகுபொருந்திய திருவடிவையுங் கண்டு
பூசித்த வசிஷ்டரிஷியைப் பார்த்து இந்தத் தலத்திலே யிருந்
திடுவாயென்று சொல்லிச் சிவன் அந்தரத்தியானமானார்.
அப்பால் அண்டசராசரங்க ளெல்லாம் தானே தானாயிருக்
கின்ற அந்த ஈஸ்வரனைப் பின்னும் எக்காலமும் பூசிக்கும்படி
காமதேனுவைப் பார்த்துத் திருக்கோயில் செய்திடுவாயென்று
சொன்னார் வசிஷ்டமுனி. எ - று. (22)

நிலைவாயும் நெடுமதிலு நிறைந்தமணி மண்டபமுங்
கலையார்ந்த மேடைகளுங் கனக விமானங்களும்
நிலையார்ந்த வாவிகளு நீள்கொடிசேர் கோபுரமு
மலையாரத் துடனணியு மாடைமற்று மமைத்ததுவே.

இ-ள். அப்படி வசிஷ்டமுனி சொல்லக் கேட்ட காமதேனுவானது திருக்கோயில் கட்டிய தெப்படியென்றில்? கருப்பக்கிரக மண்டபங்களுந் திருமிலைவாசல்களும் நிரைநிரையாகிய இரத்தின மணிமண்டபங்களுந், சந்திரகாந்த மேடைகளும், ஆகாசத் துயர்ந்த மதில்களுந், சுவர்ணமயமான விமானங்களும், நெடிய கொடிச்சிலைகள் கட்டிய கோபுரங்களும், பூமியிலார்க்கிருக்கின்ற கூபவாவி தீர்த்தங்களுடனே அலையாரமென்று முத்துமாலை முதலிய சுவர்ண நவரத்தினமிட்ட அனேகவிதத் திருவாபரணங்களுந், சித்திர விசித்திரமாகிய வஸ்திர பரிவட்ட சத்திரம் சாமரங்களும் பின்னும் பஞ்சலோக பாத்திர வாத்தியங்களு மந்தட்சணமே உண்டாக்கினது காமதேனு. எ-று. (23)

அலைபுனன்மா தளித்தணியை யருந்தவனு மரனுக்களிக்கப்
புலங்கொண்ட வாதலினாற் புகல்சுத்தி காதீர்த்த
சலமென்றே யதிற்றவசு சாதிக்கு மறைமுனிமேற்
கலபமுடனா மருற்ற காதிமகன் கதையறைவாம்.

இ-ள். காமதேனு சிருஷ்டிக்கின்ற திருக்கோயிலிலே சிவனுக்குக் கால நியமங்களும் பின் பூசை செய்யத் தொடங்கினார். அந்த ஸ்தலத்திலே கங்காதேவி முத்துமாலை தரப் பெற்ற வசிஷ்டரிஷி சிவனுக்குச் சாத்திய பெருமையினால் அந்த நதிதீர்த்தத்துக்குப் பெயர் சுத்திகா தீர்த்தமென்றாயிற்று. அப்படி விசேஷமாகிய நதிதீரக் கரையிலே தவசு செய்துகொண்டிருந்தார் வசிஷ்டமுனி. பின்பு அந்த ரிஷியின் பேரிலே சதுரங்க பலத்துடனேயுஞ் சண்டை செய்யத் தொடங்கிய விசுவாமித்திரன் கதையைச் சொல்வாம். எ-று. (24)

காமதேனுவுக்குப் புராதன லிங்கம் பிரசன்னமான சருக்கம்
முற்றும்.

# விசுவாமித்திரன் யுத்த சருக்கம்

நீடிரைக்கடல் படிந்த நீலமுகி றன்னை
யேடவிழ் மடறட வெழுந்துயர் கமுகி
னுடுபைங்கு லைக்கனி நழுவவாளை சேல்கள்
கோடுவிள்ள நீர்ததும்பு கோசலநாடு

இ - ள். நீடிரை யென்னும் நெடிய அலைகளோடுங்கூடிய சமுத்திர சலத்தைப் பானம் பண்ணிய மேகங்களை யேடவிழா கிய வுயர்ந்த கமுகின் பூங்கொத்துகள் தடவிக்கொடுப்பதும் அதின் குலைக்கனிகள் அசைந்தாடிக் கீழே விழும்போது சலத்திலே சேல்களும் வாளைகளும் புரளுகிறதும் பல நீர்வளம் பொருந்தியது கோசல நாடு என - று. (1)

வேதமறை யோர்கடவ வேள்விமிகு நாடு
பாதலரு மேதலரும் பாகுகொளு நாடு
பூதிகொளு மேழியர்பொ லிந்தருளு நாடு
கோதையர்ம யல்புரியுங் கோசலநாடே.

இ - ள். பின்னுமந்த நாட்டின் பெருமை யெப்படியென்னில்? வேதப் பிராமணர்கள் யாகாதி அக்கினி கோத்திரங்களு மரிய தவசுகளும் மிகுந்த நாடு. பாதலராகிய நாகலோகத்தார்களுந் தேவலோகத்தார்களும் அவிர்ப்பாகங் கொள்வதற்காகிய நாடு. அதுவுமல்லாமல் நிறைந்த செல்வம் பொருந்திய மேழிக் கொடிஞர் நெருங்கியிருக்கின்ற நாடு. பின்னும் ஸ்திரீஜனங்கள் மன்மதனுடைய யுத்த விநோதங்கள் செய்கின்ற நாடு கோசல நாடே. என - று. (2)

அந்தவள நாட்டரச னைந்துடுவை மாற்றித்
தென்றிசையிடம் வருகச் செய்தவன்பின் மூன்று
நந்தமைத்திரி சங்கரசுக் காகவொரு நாடு
தந்தனரிச் சந்திரன்முடி தாழ்ந்திட வுரைத்ததோர்.

இ - ள். அப்படி வளமைபொருந்திய நாட்டுக் கதிபதியா ராசாவானவன் அனுஷ முதலிய ஐந்து நட்சத்திரத்தைத் தென்றிசையிலே சுபசவ்வியமாக வரும்படி செய்தவன். அதல்

லாமலும் நங்கெதன்னு மூன்று சங்கத்தை முதுகிலே தரிக்கின்ற திரிசங்கு மகாராசாவுக்காக ஒரு வுலகு சிருஷ்டித்தவன். பின்னுமவன் மைந்தனுகிய அரிச்சந்திரனுடைய ரத்தின கிரீடமானது பூமியிலே விழுந்துபோரும்படி காலாலுதைத்தவன். அப்படிக்காகியவன் பின்னும். எ - று. (3)

ஏழிலோ ரிருடியா யிமைவருல குற்ரு
ழுழிபுனைந் தானவனுக் கம்புவிஞ்சை சொற்ரு
னூழிபுரை வெவ்வழல்க ளோங்குதவம் பெற்ருன்
வாழிமத னுகும்விசு வாமித்திர னென்றே.

இ - ள். காசிபாதி யேழு ரிஷிகளிலே தாஞெருவனுகத் தேவலோகம் பெற்றவன். சங்கு சக்கரம் புனைந்த மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீராமனுக்கு தனுர்வேத வித்தை சொல்லிவைத்தவன். ஊழிக் காலத்து வடவாமுகாக்கினியைப்போல அக்கினியெழும்பும்படி அரிய தவங்களைச் செய்தவன். அப்படிக்காகியவன் மன்மதனுக்கிணையான சரீர வழகுடைய விசுவாமித்திரராசன். எ - று. (4)

அன்னவன்ற னேதிலர்க ளாவிதனை யுண்டு
பின்னுமிடும் விற்கணைபி டித்தமணிக் கையான்
மின்னெளி முடியரசர் முன்றிறை யளிக்கச்
சென்னிபடி வெண்டையஞ்சி றந்ததிடக் காலான்.

இ - ள். அப்படிப் பெயருடையவன் தன்னுடைய ஏதிலராகிய சத்துருக்களினுயிர்களை யெல்லாம் புசித்திட்டு பின்னுமிடும்படியான அம்பு வில்லுகளைப் பிடித்திருக்கின்ற வயிரக் கையையுடையவன். மின்னெளி யொத்தநவரத்தின கிரீடங்கள் வைத்திருக்கின்ற ராசராசாக்கள் எதிரே வந்து திறையளிக்கும்படி சென்னியாகிய சிரசுகள் விழுந்து நெருங்கிய தங்கப்பொடி பொலிந்திருக்கின்ற வீரவெண்டயங்களைத் தரித்திருக்கின்ற காலையுடையவன். எ - று. (5)

அந்தமிகு நாடதனி லாதவன்றே ரோட்டு
மந்தமன்புகழ்க் கடலிலாற் ருகலம்போலும்
இந்துகுறைந் துவளர்ந் தேகுவது போலும்
சிந்தைமகிழ் வன்கொடைசெக் கர்பவளம் போலும்.

இ - ள். அப்படி வளமைபொருந்திய நாட்டிலே சூரிய ரதமோட்டுகிறதுதானே அந்த ராசாவின் புகழ்க் கடலிலே

கப்பலோட்டுவது போலும். அதற்கு சாயுங்காலமே பவளக்காடு போலும், குறைந்தும் வளர்ந்தும் வருகிற சந்திர கிரணங்களை அவன் தியாகக் கொடைக்குத் தோற்றிளைத்து வருவது போலும். எ - று. (6)

வெண்மைகலை தூக்குமாக் கன்றலினை வீட்டுக்
கின்புயத்திரா மனுக்குச்செப் பும்வித்தை வென்பார்
தண்புவிக்கர சாமுடிதாழ்த் திடச்செய் வீர
மென்புதுமை யோவென விளைத்தமுனி செப்ப.

இ - ள். வெண்மையாகிய கைலாசகிரியைத் தூக்கிய இராவணனுடைய சிரசுகளை அறுத்துத் தள்ளி மாய்க்கும்படிக் காகிய தனுசு வித்தை மந்திரங்களை இடம்பொருந்திய கைகளையுடைய ஸ்ரீராமனுக்கு உபதேசித்தவனென்று சொல்லுவதை மண்முடியரசராகிய ராசாக்களின் சிரசுகளை வணங்கச் செய்வது மெத்த அருமையோ வென்று பின்னுஞ் சொல்வாராதமா முனி. எ - று. (7)

வையமெங்கும் புகழர சாக்கினன்
வையமெங்கும் புகைய வருந்தவே
வையநுண்ணிடை யாளை வளைபவன்
வையமின்னடி யாரை வணங்கவே.

இ - ள். இப்படிக்கு வையகமெங்கும் புகழையுடைய ராசா வானவன் வையகமெங்கும் புகைந்திடும்படி அரிய தவசுகள் செய்வதற்கேதுவாக மெலிந்த யிடையையுடைய ஸ்திரீ அணைந் திருக்கின்றவனாகிய விசுவாமித்திரன் ஐய னின்னடி யென்னும் பரமசிவனுடைய பாதத்தடியாராகிய வசிஷ்டமுனியை வணங்க. எ - று. (8)

வானமெங்கு முலாவுமை மஞ்சென
வானமெங்கு முலாவுமை வாசிக
டானமெங்கு மண்டாங்கு கரியென
தானமெங்குங் கரித்திரள் தந்தவே.

இ - ள். அப்படி வணங்கும்படி வெளிப்புறப்பட்டது எப்படியென்னில்? ஆகாசங்களிலே யுலாவுகிற நீருண்ட மேகங்களைப்போல ஆகாசங்களி லுலாவிய நீல நிறக் குதிரைகளும் தானமென்னும் பூலோகத்தைத் தாங்கியிருக்கின்ற அஷ்டதிக் குசங்களைப்போல வீதிகளெங்கும் யானைக் கூட்டங்களும். எ - று. (9)

ஆடகத் துலகத் திடை யாற்றிடு
மாடகக் கொடித் தேர்கள சையவே
கேடகத் தொகுங் கேடெனா வீரர்கள்
கோடகத் துணை கொண்டு விளர்ந்தனர்.

இ - ள். மின்று மெப்படியென்னில் ? ஆடகமாகிய பொன்னுலகத்திலே யெழுந்து வீசியாடுகின்ற பொற்கொடிகள் கட்டியிருக்கின்ற ரதங்க ளசைந்திட கெட்டென்றோங் கந்துருவாதிகளை யொளித்துவிடுவே தொன்றும் பரிசங்கள் கேடகம், வில்லு முதலிய பல்வாயுதங்களுடனே சதுரங்க பலங்களுஞ் சூழ. எ - று. (10)

வெஞ்சரப்படை மிஞ்சமன் மைந்தர்கள்
மஞ்சிடைக்கதிர் வானி னுதிப்பபோ
லஞ்சனக்கரி யெனவமைச் சர்கள்
கஞ்சுகத்தொடு கைப்படை கொள்ளவே

இ - ள். வெஞ்சரமாகிய கூர்மைபொருந்திய ஆயுதங்களுடனே சதுரங்க சேனைகளுஞ் சூழும்படி ராசகுமாரர்களானவர் திரண்ட மேகத்திடையிலே யெழும்பிய சூரியப் பிரகாசம்போல நிலகிற யானைகளின்மீ தெழும்பிட, கஞ்சுகமென்னுங் கவசமாகிய ஏறு வயிரச் சீரா பூண்டு மந்திரி தலைகர்த்தமார்கள் கைப்படைகொள்ள வெழும்பிட. எ - று. (11)

வெவ்வளத்துறை யெவ்விலங் காதியு
மவ்வலிச்சாய்ந் திடவன் கரம் பற்றிய
செவ்வில்கூர் கணைவேலுஞ் சிறக்கவே
நவ்விக்கூந் தன்மாவெறி நடத்தினன்.

இ - ள். அப்படி சேனாசமுத்திரம் புடைசூழ்ந்து வெளிப் புறப்படும்போது வெவ்வளமாகிய ஐங்கர வனத்திலுள்ள எவ் விலங்குகளு மடிந்திடும்படி வலிமைபொருந்திய கைகளிலே வில் லம்பு வேல் முதலிய ஆயுதங்களுஞ் சிறந்திட தந்தங்கள் தெரிந்திடும்படி கனைத்து அழகு கூந்தல் நெருங்கிய பிடரிக் கட்டுகளோடுங் கூடிய குதிரையின் மேலேறி வேட்டைக்கு நடத்தினன் விசுவாமித்திரராசன். எ - று. (12)

கொல்லுமுழுவைக் குலங்களுங் கொந்தள
வல்லுகிர்ப்பல் லுகங்களு முண்மலிச்
சல்லகமுங் கண்முக்கோட் டுமாதங்கிய
வல்லுறாங்கடுங் கானி லணுகினன்.

இ - ள். அப்படிப் புறப்பட்ட ராசாவானவன் சேனைகளுடனே கொல்லுதற் கஞ்சாத புலிக் கூட்டங்களும், மயிர்கள் செறிந்த நகங் கூர்மைபொருந்திய கரடிக்குலங்களும், முள்ளுகள் மலிந்திருக்கின்ற முட்பன்றிகளும், சிங்கங்களோடுங்கூடிய காட்டுப் பன்றிகளுங், கொம்பின் கூட்டமாகிய மானினங்களு மிப்படி துஷ்ட மிருகங்கள் வாழ்கின்ற அந்தகாரமான வனத்திலே புகுந்தானரசன். எ - று. (13)

தீவினையர் கருநள்ள நடுங்கக்கெறி
திவிழிப்படர் கள்செறிய பாசம்போல்
வெளிப்பாச வலைக ளெறிவதும்
வேடுவத்த ரறிந்து ரைப்பதும்.

இ - ள். அப்படிப் புகுந்த வேளையிலே அதிலிருக்கின்ற துஷ்ட மிருகங்களின் மேலே வலைகளெறிவ தெப்படியென்னில்: தீவினையராகிய பாவிகள் மேலே அக்கினி யெழும்ப விழித்து யமதூதர்கள் கால பாசங்க ளெறிவது போலும் வேடுவகாரர்கள் அடிகளைப் பிடித்து இன்ன மிருகங்க ளிருப்பதென் றுரைப்பதும். எ - று. (14)

பக்கம் பாய்ந்ததென் றோடிப் படர்வது
மெக்கிற் றெனக் கோல்களை யெய்வதுஞ்
சிக்கிற் றெனத் திண்படை தாக்கலுங்
கக்கிற் றுதிரமெனக் காட்டலும்.

இ - ள். பின்னும் வேட்டை செய்கிறவித மெப்படியென்னில்? இதோ பக்கத்திலே ஓடுகிறதென்று பாய்ச்சலிடுவதும், எக்கித் தாண்டிவிடுகிறதென்று கொடிய பாணங்களை விடுகிறதும், கையிலகப்பட்டதென்று இடம்பொருந்திய ஆயுதங்களினாலே வெட்டுகிறதும், அது உதிரங்களைக் கக்கிக்கொண்டு விழுந்ததென்றுங் காட்டுகிறதும். எ - று. (15)

இந்த வாறு வியைந்த வனத்தினிற்
குந்த மேந்திய கோசல தேசிகன்
தொந்த மாய்விலங் கியாவையுந் துஞ்சிட
வந்துவேட் டைசெய் மாவிலங் கொன்றதே.

இ - ள். இப்படிக்கெல்லாம் வேட்டையாடுகிற நெருங்கிய வனத்திலே பிரகாசம் பொருந்திய வேலாயுதத்தைத் தரித்த விசுவாமித்திரராசன் தொந்தமாகிய ஒரு வம்சத்துக்கூட்டங்

காட்டானை விலங்கினங்களை யெல்லாம் வேட்டையாடுகிற போது ஒரு மிருகமானது. எ - று. (16)

அவ்வனம் விட்டகன் றுமற் றோர்வனம்
வவ்வப் பின்றொ டர்ந்தனா னரசியோ
டெவ்வனத் திறையிய சப்ப டைகளும்
வெவ்வு ரத்தொடு சென்றனர் பின்னரே.

இ - ள். நெடிதாகிய அந்த வனத்தைவிட்டு மற்றொரு வனத்திலே தாவ அப்பொழுது யௌவனமாகிய ராசாவுமவன் சேனைகளும் அதிக கோபங்கொண்டு தங்கள் தங்கள் வாகனத் துடனே பலங்கொண்டு பின்றொடர்ந்தார்கள். எ - று. (17)

அத்தி ரங்கண் டகன்ற தூகரம்
பற்றிச் செல்லும் படையொடு பார்த்திபன்
சுற்றிய நெடுந்தூ ரந்து ரத்தியுங்
குத்தி னன்கொடுங் கோபமுற் றேயரோ.

இ - ள். அப்படி ஆயுதப் படைகளுடனே சேனைகள் சூழக் கண்ட மிருகமானது விலகி மறைந்தோடிடப் பின்பு ராசா யெங்குந் தேடித் திரிந்து நெடுந்தூரத்திற் கண்டு சுற்றிக் கொடிதாகிய கோபத்துடனே குத்தினன் விழுந்திடும்படிக்கு. எ - று. (18)

வனத்திலாடிய வேட்டையால் வருத்தமுற் றரசன்
புனற்கயங்களும் பூமலித் திரள்களும் பொலிந்த
சினைப்பொழில்களுந் தேவர்க ளுட்டமுஞ் சிறந்த
மனுக்குலக்குர வன்பதியுங் கண்டு மகிழ்ந்தான்.

இ - ள். இப்படிக்கெல்லா மந்தவனத்திலே வேட்டையாடி வருத்தமு மாயாசமுங் கொண்ட ராசாவானவன் பின்பு அவ் விடத்திலே தீர்த்தபுஷ்கரணிகளும் மிகுந்த புஷ்ப வனங்களும் நெருங்கிய குளிர்ச்சியுடைய தோப்புகளும் தேவர்கள் வாசங் களுஞ் சிறப்புடைய மனுச்சக்ரவர்த்தி வம்சத்துக்கு குருவாகிய வசிஷ்டமுனி யாச்சிரமமுங் கண்டு உளங்களிகூர்ந்தான் விசுவா மித்திரன். எ - று. (19)

பண்டுதேயத் தோர்பற்றிய வினையெலாமகல் வதுபோல
கண்டவாதலிற் கவகனுற்ற யர்வெலாங் கரைந்தே
தண்டுகுண்டிகை தார்குழ லோடுறும் தவனைத்
தொண்டுதொன் டொளிரும் இணையடி பணிந் துரைப்பான்.

இ-ள். அப்படிக் கண்ட விசுவாமித்திரனுக் கெப்படி யென்னில்? தேசத்தோர்கள் செய்கின்ற பழமை முதலிய பாவங்கள் அரசனைக் கண்டமாத்திரத்திலே யெப்படி விலகுமோ அப்படிப்போல ரிஷியாச்சிரமத்தைக் கண்டு இளைப்பு ஆயாசந் தீர்ந்து தண்டு கமண்டலத்துடனே அருந்தநி சகிதரா யிருக்கிற வசிஷ்டரிஷியை வணங்கி வாய்புதைத்து அடிபணிந்தான் விசுவாமித்திர அரசன். எ-று (20)

சிச்சுரூப மாம்பிர்ம மேதெளிந்த தெள்ளறிவே
சச்சிதானந்த சாரமே தழைத்ததற் பரமே
முச்சுடர்களின் மூலமே முளைத்தெழுங் கொழுந்தே
யெச்சரா சரமெவ்வு யிர்க்குயிர தா மினிதே.

இ-ள். அப்படிப் பணிந்து போற்றிய தெப்படியென்னில்? சித்சுரூபமாகிய பிர்மமே! கரண விஷயங்களற்ற தெளிவான வறிவே! சச்சிதானந்தசாரமே! அதிற் றழைத்தோங்கிய தற்பரானந்தமே! முச்சுடர்கள் என்னுஞ் சந்திர சூரியாக்கினிகளின் மூலமே! அதின் கொழுந்தே! சகல சராசர சீவாத்துமாக்களுக்கு முயிர்க்குயிராகிய வின்பமே! யென்றான் விசுவாமித்திரன். எ-று. (21)

என்றுபோற்றி செய்தான் றனையிருடியு மகிழ்ந்து
நன்றுநன்றி வண்வரத் தகுமோ நரபதியே
யின்றுவேட்டை யாலெய்திய தாத லினினிது
சொன்றியுண்க வென்றுரைத்தருள் புரிந்தனர் தூயர்.

இ-ள். அப்படிப் போற்றிசெய்த விசுவாமித்திரனை டன மகிழ்ந்து நல்லது நல்லது நீர் இங்கு வரத்தகுமோ அரசே ஆனால் இப்போது வேட்டைக்காக வந்தபடியினாலே யல்லவா வரலாயிற்று. ஆகையால் இளைப்பு பரிகாரமாகும்படி அறுசுவையுடனே அன்னமுண்டு போகலா மென்று அருள்செய்தார் வசிஷ்டரிஷி. எ-று. (22)

ஆங்கதுபெறு மரசனு மெமதடர் சேனை
தாங்கொணுத்துய ரந்தாங்கில மருடர வென்றான்
றூங்கரான் புரிவசிஷ்டனு நோக்கி மன்னவனை
யீங்கிருந்தனை யோர்களுமுணவு வுண வென்றார்.

இ-ள். அப்படிக் கட்டளையிடக்கண்ட அரசனுஞ் சொல்வான். விசேஷமாகிய என்னுடைய சேனைகளிங் கிருந்தால்

அவ்வளவுக்கும் தாங்கொணாது. ஆகையால் யான் தரிப்பதில்லை விடைகொடுப்பீரென்றான். அதற்கு நாங்காரணாகிய காமதேனுவைப் பெற்றவர் ஓ அரசே நீரும் உம்முடைய சேனைகளுமிங்கிருந்து சிறுமையாற்றிடும்படி போசனம் பண்ணிப் போகலாமென்றார், பின்னும் வசிஷ்ட ரிஷி. எ-று (23)

அம்மொழித் திறத்தாலயலடர்ந்த பூம்பொழிலுட்
செம்மல் சேனையுஞ் சிறுமையோ டிருந்திடச் சிறுகாற்
பொம்மல் கண்டில ரிதெனப் புதுமை புண்ணியமும்
* வெம்மல் செய்திலை மேவினர் தொழிலென விசைத்தார்

அப்படி சொல்லக் கேட்டு பக்கத்தில் நெருங்கி யிருக்கிற பூந்தோப்பின் நிழலிலே செம்மலாகிய ராசாவும் தன் சேனைகளும் பசியுடனே சில வேளை யிருந்தார்கள் அப்படியிருக்கும் போது நேரமாயிற்றென்று பார்த்துவந்தவரும் சமையல் சட்டங்கள் யாதொன்றுமில்லை. அவரோ நித்திய கருமாதி நியமங்களின் மீதிருக்கிறார். யாதொன்றுங் காணோமென்று சொல்லுகின்றார். எ - று (24)

அத்திறம்தெரிந்த மைச்சரு மருந்தவ முனியின்
கைத்திறமையாதோ வெனக் கண்டிலங்கழறின்
எத்தலங்களு மிருந்திலார்க்கு மிக்கணங்கள்
பத்தி செய்குதும் பதமெனப் பரிவொடு பகர்ந்தான்

இ-ள். அப்படி பரிசனங்கள் சொல்லக்கேட்ட மந்திமோர்கள் சொல்வார்கள். அரிதாகிய தபசுகளைச் செய்கின்ற ரிஷிகளின் கைத் திறமைகள் யாமறிந்திலம். அதை அறியாமல் சொன்னால் இந்த சேனைகளுடனே யாமும் எந்த உலகத்திலுமிருக்க வொண்ணாத் திறமையாகுமானால் அவரைப்பத்தி செய்து வணங்கியிருப்பதுவே மெத்த நலமென்றார்கள் மந்திரிகள் எ - று. (25)

ஏதமுற்றவர்க்கியாவது முதவவே யழைப்பக்
காதலுற்று கைகாட்டு பொற்கவரி வால்விசி
சோதிரூபமுஞ் சொன்னவன்னு கிரொடுங்கோடும்
கோதினீண்கு விக்குட முலையான் குறித்தருவே

இ - ள் அப்படி அரச சமூகத்தில் சேனைகள் சூழ்ந்த மந்திரிகள் சொல்லி ஆலோசித்திருக்கிற வேளையிலே ஏதமாகிய தரித்திரர்களுக்கு சகல பாக்கியங்களுங் கொடுக்கவழைப்பது

---

* கடைசி அடியை
"வெம்மல் செய்திலை வினைஞரென் றேவலர் விண்டார்" என்று மற்றொரு பிரதியில் கண்டிருக்கிறது.

போல அவரி கொத்துக்களைப் போன்ற வாலை வீசிக்கொண்டு சோதி சுரூபமாகவே நிறமுள்ள சரீரங்களும் பொற் பிரகாசம் போன்ற குளம்புகளும் நெடிய கொம்புகளும் குற்ற மற்ற நீண்டு குவிந்த குடமுலைகளு நெருங்கியிருக்கின்ற காமதேனுவென்னுந் தெய்வப்பசு வொன்று ரிஷியருகிலே தோன்றிற்று எ - று (26)

சோதிவேதியன் சுற்றியுஞ் சுரபியைத் தொழுதும்
பாதம் போற்றியே பார்த்திபனொடும் பதாதிகட்குந்
சாதமுற்றிடுவாயெனச் சாற்றியங் கரசும்
பேதமுற்றனைவோர்களும் பெற்றிடுமெனா வுரைத்தார்

இ-ள் அப்படித் தோன்றிய பசுவை சித் ரூபமாகிய ரிஷி யானவர் பிரதட்சிணம் பண்ணி பாத பூசைகள் செய்து நடவி இங்கு வந்திருக்கும் அரசருக்குமவனுடைய பதாதி சேனைகளுக் கும் அன்னம் பாலித்திடுவாயென்று சொல்லி பின்பு அரச னுடைய தந்திரங்களுக்கும் அவரவர்சாதி வண்மைப்படி புசிப்புக் கொள்வீரென்று உத்தரவு செய்தார் வசிஷ்டமுனி எ - று (27)

அக்கண நெடுங்கூடமு மாடமு மரங்கும்
திக்கெலாஞ் சுவைக் கறியனுஞ் சிறந்த பொற்றட்டுங்
கைக்குளேந்திய கயல் விழிக் கன்னியர் கனக்க
வைக்குதும் பரிமாறுதும் பலபல வகைகள்

இ-ள் அப்படி காமதேனுவுக்குச் சொன்ன மாத்திரமே நெடிதாகிய மாடகூட அரங்கங்களும் நாலு திக்கிலும் அறு சுவைப் பதார்த்தங்களுடனே அன்னங்கள் சிறந்த தங்கத் தாம் பாளங்களிலேந்திய கைகளுடனே மீன் போன்ற நேத்திரங்களு டைய பெண்களும் அவர்கள் பரிமாறிடுவதும் இன்னும் வேண் டுமோ வென்று உபசரிப்பதும் பலபல வகைகளாகிய இலிப்பு ரசவர்க்க பட்சண பலாதிகளிடுவதும் எ - று. (28)

ஈது கண்டிறைவனுமவனின் புறுபடையுங்
கோதிலுண்வாமெனக் கொள்வதென்றெண்ணிக்.
காதலுற்றதிசய மொடுகலஞ் சுவையுண்டு
வாதையற்ற வரானிறுவெலா வுளமகிழ்ந்தார்

இ-ள் அப்படிப் பரிமாறக் கண்ட அரசருந் தன்பதாதி களுடனே நல்ல பதார்த்தம் புசிக்கலாமென்றெண்ணி யுரைத்து அதிக ஆச்சரியத்துடனே ஆசையுற்று அறுசுவை யுடனே பரிமாறியிருக்கிற பரிகலங்களின் புசிப்புண்டு இளைப் பாறினார்கள். பின்பு இப்படி நடந்த காரியங்கள் இந்தப் பசு வினாலே தானோ யென்று உளமகிழ்ந்து சந்தோஷங்களுரைக்க லானார்கள் எ - று. (29)

விஞ்சை விண்ணவர்க்கரிய வான்றன்னையே விரும்பிப்
பிஞ்சுவெண் மதிசூடு மோனுளப்பெம்மானையென்
றஞ்சிவேண்டுமான்கன்றொடு அநேகம் யானளிப்பே
னெஞ்ச முற்றிவ் வானீந்திடுமென விறை யிசைந்தான்

இ-ள் அப்படி ஆச்சரியங்களைச் சொல்லிக் கொண் டிருந்து பின்பு விஞ்சையாகிய சகல வித்தைகளுமறிகின்ற தேவர்களுக்கு மரிதான காமதேனுவை யாசித்து மூன்றாம் பிறையைச் சடையிலே தரிக்கின்ற பரமசிவன் பாதத்தை மன சிலே வைத்திருக்கின்ற மகா ரிஷியே தமக்கு அநேகமான பசுக் குலங்கள் கன்றுகளுடனே வேண்டியவை கொடுக்கிறேன் இந்தப் பசுவை, யெனக்கருள் செய்யவேண்டுமென்று அஞ்சிப் பயந்துரைத்தான் அரசன் எ-று. (30)

தவமின் மிக்கவன்முனது கேட்டெம்மாற்றருகப்
பவுசில் விண்ணவர் பாத்திரமஃதெனப் பகர்ந்தான்
துவசந்தாக்கிய வேந்தனிச் சுரபி யாவையுமே
யவசியந்தரலா லதுவரா தென்றறைந்தான்

இ-ள் அப்படிச் சொல்லக் கேட்ட வசிஷ்ட ரிஷி சொல்லு வார். என்னாலே தரப்பாத்தியமல்ல. தேவர்களுடைய பாத் திரமாகுமென்றார். அதற்கிந்தப்பசுவானது கேட்டபதார்த்தங் களைக் கொடுப்பதினாலே இது அரசருடைய பதார்த்தமாகு மென்று வெற்றிக்கொடி பொருந்திய அரசன் உரைத்தான் எ-று (31)

வேதவேதியனம்மொழி கேட்டு வேதியர்க்குமாதி
தேவர்க்கும் வேள்விக்கும் வானுலகர்க்குஞ்சோதி
மாதவர்க்குமெமக்கு முதவுமிச் சுரபி
வேதியன் பொருள் வேண்டிடாதென வெகுண்டுரைத்தார்

இ-ள் அப்படிக்கு ரிஷிதேவபாத்திர மென்றும் அரசன் அரசன் பாத்திரமென்றும் சொல்லிய பின்பு ரிஷி சொல்வார் ஆதிதேவராகிய மும்மூர்த்திகளுக்கும் யாககிரியைகளுக்குந் தேவாதிகளுக்கும் வேதப் பிராமணர்களுக்குந் தபமுனிகளுக் கும் எமக்கும் உதவுகின்ற பசுவானது பிராமணன் பொருளாகு மாதலால் பிராமணன் சொத்துக்கு நீர் ஆசை வைக்கப் போகா தென்று கோபித்துரைத்தார் வசிஷ்ட ரிஷி எ-று (32)

மன்னர் மன்னவன் வணங்கிப் பின்னுமே துரைப்பான்
சொன்ன நன்மணிநித்திலம்புவி நனிதுகிலோ
டின்னம் வேண்டுவ வீந்திடுவேனென விசைக்க
வன்னவ கவையகன்றிடா தென வறைந்தனனால்

இ-ள் அப்படி சொல்லக்கேட்ட அரசன் பின்னுஞ் சொல்வான் அநேகமாயிரந் தங்கம் முத்து நவரத்தினங்களுந் தினை மிகுந்த வாரணச்சேலைகளுங் பூமி கிராமங்களும் இன்னமும் வேண்டிய பதார்த்தங்களும் கொடுக்கிறேன். இந்தப் பசுவைக் கொடுமையா வென்று பயந்து வணங்கினான். அது கேட்ட முனி நீர் என்ன தந்தாலும் பசு வராதென்றுரைத்தார் வசிஷ்டரிஷி எ-று. (33)

எவ்வகைத் திறைதயிந்திடா வகையிறைகண்டு
அவ்வ பொற்கவை தனைப்பிடித்தேகெனச் சொல்ல
வில்வகைப் படைவீரர்களொடுங்கயறு விடுத்து
எவ்வவாறு மேவியவையேனென வறிந்து நோக்கியதே

இ-ள் அப்படிச் சொல்லியபின்பு அநேக விதங்களாலும் பசு வரும்படி பார்த்தும் பின்பு வராததுகண்டு சேனைகளைப் பார்த்து சுவர்க்க லோகத்து காமதேனுவாகிய இதைப் பிடியுங்களென்று அரசன் ஆக்ஞாபித்தான். அவ்வடவியிலே அவர்களோடி நெடிதாகிய கயறுகளெறிந்து கட்டினார்கள். அப்போது இதுவென்ன ஆச்சரியமென்று பார்த்தது காமதேனு எ-று (34)

அய்யனுக்கிதுரைப்ப மென்றக் கணமுதறித்
துய்யன் பாற்சொலச் சொன்னதொன்றிலை யெனத்தூயன்
செய்யிலந்தணன் யாவெனச் செப்பவச் சுரபி
ஐயமின்றிவை யறிவமென்றுந் திருந்ததுவே

இ-ள் அப்படி கட்டுண்ட காமதேனுவானது மகரிஷிக்கு அறிக்கை செய்யவேண்டுமென்று உதறிக்கொண்டு பக்கலிற் செல்ல அது கண்டு ரிஷியும் யானொன்றுஞ் சொல்லவில்லையோ ஆனால் கட்டுகிறார்களே என்ன செய்கிறதென்று பசுச் சொல்ல யான் பிராமணன் என்னாலே செய்யலாவதென்னவோ ஆனால் பிரமதேச பலமும் இராச பலமும் அறிவோமென்று அவ்விடத்திலிருந்தது பசு எ-று (35)

பின்னுமேவலாளிணைப் பிடிப்ப தென்றேக
வன்னது நகைத்தோமெனு மசைக்கவம் முகத்தில்
பன்னகங்களொட்டு மிரெறிப்பதுபோல் புரைப் படை கொண்
டென்ன வென்றிறைவன் படைமீதெதிர்த்ததுவே

இ-ள் அப்படியிருக்கும்போது அரசனின் சேனைகள் பசுவைப் பின்னும் பிடிப்பதென்று போனார்கள். அப்போது பசுவானது கண்டு சிரித்து ஓம் என்று முகத்தை அசைந்தது

அதிலிருந்து சர்ப்பங்கள் சீறி மூச்சு விடுவதுபோல, மைந்த துருக்கர்கள் அநேகம்பேர் சிறிக்கொண்டு பிறந்து என்ன என்ன வென்று அரசனின் சேனைகளின் மீது எதிர்த்து யுத்தம் செய்யத் தொடங்கினர்கள் எ - று (36)

மயித்துருக்கராய்வன் கரம்பற்றிய கணைக
ளெய்யத் தொடங்கின ரிறைவன்றன் படைகளு மெதிரே
புயதிரள் விடுங்கார்கான மாரிபோற் பொலிந்த
கயந்தின் மிநினின்றிணைத்து விற்கொடுங்கணை கதித்தார்

இ - ள் அப்படிமயித்ததுருக்கர்கள் வலிமை பொருந்திய கைகளிலே தரித்திருக்கின்ற வில்லிலம்பு பூட்டி அரசனின் படைமேலெதிர்த்து சண்டை செய்யும்போது அரசனின் சேனைகளும உயர்ந்தெழும்பிய யானைகளின் மேலேறிக்கொண்டு வில்வளைத்து நாணேறிட்டு குணத்தொனிபண்ணி அம்புக் குதைகளைப் பூட்டி காரி காலத்து வருஷம்போல கிட்டைத்திலே அநேகமாயிரங்கணைகள் தொடுத்து விட்டார்கள் அரசன் சேனைகள் எ-று. (37)

ஒருவர் எய்யும் வெஞ்சரத்தை யொருவர் மாறுசெய்யவே
பருதிவின் மூடிடப்பாரத்து திக்கிலாமையா
இருவுகெட்டுயர்ந்த வத்தியுற்றவனைக் முற்றவுந்
சுரபி பெற்றர் வெட்டினர்கடுண்ட முற்று மாயவே

இ - ள் அப்படி ஒருவரின் மேலேவுகிற கொடிய பாணங்களை ஒருவர் தடுக்கிறதும் தடுத்து விடுகிறதும் இவைகளினாலே நான்கு திக்குகளுஞ் சூழ்ந்து சூரிய கிரணங்களை மூடும்படி பரவிய கணைகளினாலே திசைகள் தெரியாமல் சண்டைகள் செய்தார்கள். அப்படிச் செய்யும்போது வலிமை பொருந்திய துதிக்கைகளோடுங் கூடிய யானைத்திரள்களை சின்னபின்னமாக வெட்டி மாய்ந்திடும்படி விடுத்தார்கள் துருக்கர்கள் எ-று (38)

வெங்கரித்திரள்கள் வீழ வீரர் வீழ்ந்தெழும்பியே
யங்கையுற்ற வாளை கீவிபாக்கிரமத்ததம்பியே
வங்கையுற்று வேலோடு மைத்துருக் கருடலெல்லாம்
பங்கமிட்டு வாவியைப் பருக வீசினர்களே

இ - ள் அப்படியானைக் கூட்டங்களடிபட்டு கீழே விரிட்டு விழுந்திடும்போது அதின் மேலேறி இருந்த வீரர்கள் கீழே விழுந்தெழுந்து கைகளிலே இருக்கிற ஆயுதங்களைச் சுழற்றி ஆக்ரமித்து அதம்பிகர்ச்சித்து அதிக வங்கையுடன் கோபங்கொண்டு மைத்துருக்கர் உடலெலா மறுபட்டு அவர்களுயிரை புசித்திடும்படி வெட்டினர் அரசவீரர்கள் எ-று (39)

ஆது கண்டயர்ந்து வானசைத்து விம்மியாவெனப் —
பாத நிலத்தினிற் பறிக்க ரோமமிலேச்சரும்
மூனாறுந் துருக்கர் யோனிமல மிடத்தில் வேடருங்
கோதில் வெள்ளை மனிதருங் குவிதரத்தில் வந்தனர்

இ-ள் மைத் துருக்கர்களெல்லாமப்படி மாய்ந்திடக்கண்ட காமதேனுவானது விசனமுற்று, பின்பு உதறி விம்மி மயிர்க் கூச்செறிந்து கால்களினாலே நிலத்தைப் பறித்து ஆவென்ற நம்பிற்று. அப்போது ரோமத்துவாரத்திலே நின்று துருக்கர்களும் யோனித்துவாரத்திலே நின்று மிலேச்சர் களும் மலத்துவாரங்களிலே நின்று வேடர்களும் ஸ்தனத்துவா ரங்களிலே நின்று வெள்ளைக்காரர்களும் பிறந்தார்கள் எ-று (40)

எரித்த குஞ்சிவிழி சிவக்க விதழகவ்வு மெயிறுடு
பருத்ததோ ணெடுங்கையிற் பதுத்தவாளி கொள்சிலர்
உறுத்தகா லூறுந்தி மண்ணுளிக்கும் வாள்களோங்கியே
சிரத்தை விண்ணெதிர்ந் தெழச்சினக்குவோர்கள் சிலர்களே

இ-ள் அப்படி அவதரித்தவர்களுடைய விசித்திரமெப் படியென்னில்? எரித் தெழும்பிய அக்கினிச் சுவாலையைப் போலிருக்கின்ற செம்பட்டை மயிர்களும், பொறி பறக்கும்படி விழிக்கின்ற நேத்திரங்களோடும், பல்லுகளினாலே உதடு மடித்துக் கவ்வியும், விசாலம் பொருந்திய தோள்களின் கையிற் பற்றிய வில்லம்புகள் பூட்டியும், திடம்பொருந்திய கால்களை மடித்தும் மண்ணிற் புதைந்திடும்படி மட்டி யிட்டும், வாள் களோங்கிய கைகளைப் பாய்ச்சலின் மேலே பின்னிட்டும் ஆகா சத்திலே எதிர்த்தெழும்படியாக ஆக்கிரமித்து மிப்படிக்கெல் லாம் அனேகங்கோடி சேனைகள் புறப்பட்டன எ-று (41)

ச்து கண்டிறையமைச்ச ரிரத மீதிலேக்கியே
யாதுவிற்குனித்து வோசை மாட்டியம்பு பூட்டியே
வாது வுற்றதைத் துருக்கர் வாளெழும்பி மொய்த்திடும்
போது சூரர்மையவருற்று போர் புரிவதுபோலுமே

இ-ள் அப்படிக்குப் பசுவின் சேனைவரக்கண்டு அரசரின் மந்திரிகள் இனியிருக்க லொண்ணாதென்று ஆகாசத்தளாவிய திவ்விய ரதங்களின்மேலேறிக்கொண்டு நெடிய வில்லைக் குனித்து நாணிபூட்டி ஓசையிட்டு பசுவின் சேனைகளின் மேலே அனேகங்கோடி பாணங்களை விட்டு சண்டை செய்தார்கள். அந்த வேளையிலே துருக்கர்களு மாகாசந் தாவி மொய்த் துக் கொண்டு சண்டை செய்யத் தொடங்கினார்கள். அப்படி

யிருதிறத்தார்களும் எதிர்த்து சண்டை செய்கிறபோது ஊழிக் காலத்திலே அசுரர்களுந் தேவர்களுஞ் சண்டை செய்வது போலும் எ - று (42)

இருதிறத்தர் வெஞ்செருக்கு மிறைவன் மைந்தர் கண்டுபோ
துரக முற்றெழும்பியான் சொரிந்த வெம்படைகண் மேற்
றிரை கடற் பொலிந்த போற்சீறி யெங்குஞ் சூழ்ந்து நெருஞ்
சரம் விடுத்தனர் நாலிலத்துங் தையலாவி கொள்ள வென்னவே

இ - ள் அப்படி இரண்டு பக்கத்து சேனைகளுஞ் சூழ்ந் தெதிர்த்து சண்டைகள் செய்யும்போது இறை மைந்தர்களா கிய விசுவாமித்திர குமாரர்கள் கண்டு துரக மென்னுங் குதிரை களின் மேலெழும்பி யுகாந்த காலத்தில் திரைகளோடுங் கூடிய சத்த சமுத்திரங்கள் பொங்கி யெழுந்தது போலவே சீறிச் சூழ்ந்து கூர்மை பொருந்திய பாணங்களை விடுத்தார்கள் காம தேனுவின் சேனைகளின் மீது எ - று (43)

தைக்கு மம்பு கண்டறிந்த தன் முனித்தர் சத்தவா
ரிக்கு மீதெழும்பு மூழியெரி புரைக்கணத்தில் வேவ
வக்குயந்திரங்கள் கொண்டமைச்சர் சேனை யதிரதங்
கொக்கும் வியக்கொட்டினார் கொடுங்கணைக்குலங்களே

இ - ள் ராசகுமாரர்கள் விட்டபாணங்கள் பசுவின் சேனை களின் மேலே தைத்துக் கொள்ள அது கண்டு பிரளய காலங் களிலே சத்த சமுத்திர சலங்களை யெல்லாம் புசித்திடும்படி கோபித்தெழும்பிய வடவா முகாக் கினியைப்போலச் சீறி யெழும்பி அநேகமாயிரங் குதிரைக் கூட்டங்களுடனே பதாதி களுமாய்ந்திடும்படி அதி சீக்கிரத்தில் அக்கினியஸ்திரங்களைக் கொத்துக் கொத்தாக விடுத்தார்கள் காமதேனு சேனைகள் எ - று. (44)

ஆனைசேனையோ டமைச்சரலறி வீழமத்திறந்
சானைகார் பிடித்த காதி தனயன் மைந்தர் நூற்றருந்
தேனுமைந்தர் மீதினிற் சினத்து வாளி விட்டனர்
தானு நாகம் புற்றுளிற்ற வழ்ந்தமானுந் தைத்திடத்

இ - ள் அப்படி விட்ட அக்கினிக் கணைகளினாலே அரச னுடைய ஆனை சேனைகளோடும் மந்திரி தனாகர்த்தர்களும் அலறிக்கொண்டு மண்ணைக் கவ்வி விழுந்தார்கள். அதுகண்ட அரசகுமாரர்கள், நூறு பெயர்களுங் கோபித்து புற்று வாயிலே நுழைந்திடுகின்ற சர்ப்பங்களைப் போல சரீரத்தினுழைந்திடும

படி பாணங்களை எய்துவிட்டார்கள் பசுவின் சேனைகளின் மேல் எ - று (45)

பின்னுமியும் வாளிகள் பிரசண்ட மேகம் வரைகளிற்
றுன்னுமாரி புரையதெறிப்பதுஞ் சிலகணைகள் பட்
டின்னல் கொள்ளவித்திறமிருடியா லென்றெண்ணி
யங்கன்னவன் முன்னேகி விற்கடுங்கணை விடுத்தனர்

இ - ள் அப்படியேவிய அரசகுமாரர்களுடைய பாணங்கள் பின்னுமெப்படி யென்னில்? பிரசண்டமென்னு மூழிக் காற்று கள் ஆவர்த்தபுட்கலாதி நவவருஷங்களைக் கொண்டு பொழிந் திடுவது போலும் பருவதங்களிலே வருஷிக்கின்ற மாரி யின்னு பின்னமாகத் தெறிப்பதுபோல சரீரங்களிற் பட்டுத்தெறித் திடுவதுஞ் சில சரீரத்திற்பட்டு நுழைந்திடுவதுஞ் சில சரீர மெல்லாந் தைத்துக் கொள்வதும் இப்படியாகியபோது பசுச் சேனைகள் மூர்ச்சை யடைந்தார்கள். அந்த வேளைகளிலே யிப்ப படிக் கெல்லாஞ் செய்கின்றது இந்த ரிஷியாலேதானென் றெண்ணி அவரிருக்குந் தலமே சென்று முன்னிட்டுக் கொடி தாகிய கணைகளை யேவினார்கள் அரசகுமாரர்கள் எ - று (46)

எய்யும் வாளியே தலரிருடி கண்டதென்னவென்
றையனன் றெரித்தபோல னைத்தும் நோக்க வனலு று
தொய்யபுன் சமித்தென நூற்றவரும் பொடித்தனர்
துய்யவேத தேசினிற் றுருகுத்தவாறு சொல்லவே

இ - ள் அப்படி சத்துருக்களாகி யெய்யும்போது வசிஷ்ட ரிஷி கண்டு ஈதென்ன வாச்சரிய மென்று ஆதிகாலத்திலே பரமசிவன் மன்மதனை நோக்கியதுபோல அரசகுமாரர்களை நோக்கினார். அப்போது மிகுந்த யாகாக்கினியிலே சிறிய சமித் துக்களைப் போட அந்த நிமிஷமக்கினிச் சுவாலையானதுபோல நூறுபெயர்களும் நீறாகி யெரிந்து போனார்கள். ஆகையால் சுத்தமாகிய பிர்ம தேசசதினால் எ - று (47)

விற்பிடித்தகை வேறுபட்டுதிரவாய் விண்டு
மற்படுத்த கான்மாறியு முரகடுவதனம்
பொற்பழிந்து மண்புரண்டு மீதெழும்பியும் பொறிகள்
வற்படக் குறையாவியும் வருத்தது மாமே

இ - ள் இப்படிக்கெல்லாம் யுத்தம் பண்ணி விழுந்து கிடக்கிற விரணகளத்தி லெப்படி யென்னில்? வில்லுபிடித்த கைகளறுபட்டு வேறு வேறாய்க் கிடப்பதும் இரத்தங்களைக்

கத்தித் கொண்டு வாய்களைத்திறந்து மல்லுத்தங்கள் செய்கின்ற கால்களொடிந்துமார்புகள்பிளந்துமிடுப்பறுந்துமுகமுடைந்தது சரீரங்களிற் காயம்பட்டறுபட்டு மண்ணுகளைக் கைகளினுலே புறண்டியும் உயர்ந்தெழும்பி முண்டங்களாடியு மின்னம் பொறிகளாகிய காதுகண் மூக்குகள் பின்னப்பட்டுங் குத்துயிராயுங் குறையுயிராகியும் உயிர்களிழந்தும் அலறி அழுது வருந்தப் பட்டு மிப்படிக்கெல்லாம் இருந்தது எ-று (48)

சேனை வீரர்கள் சிரத்தெயிறு கடித்துயிர் விடுத்து
மானை வெவ்வெயிற் றுற்றவன் கரத்தொடு படுத்தும்
வானமொக்கு மாதரங்கர மாறியே மடுத்துஞ்
சூனு நூற்றரு மிருடி முன் சாம்பராய்ச் சுடுபட்டும்

இ-ள் அந்த விரணகளத்திலே பின்னுமெப்படி யென்னில்? சேனை வீரர்களாகிய அரச தளங்கள் கோபித்துப் பல்லுகளைக் கடித்துக்கொண்டு உயிர்களை விட்டும், யானைக் கூட்டங்கள் தன்னுடைய வலிமை பொருந்திய நீண்ட தந்தங்களிலே துதிக்கையைச் சுற்றிக்கொண்டு நீலகிரிபோல படுத்து விழுந்தும், வானமாகிய ஆகாசங்களிலே தாவி நடிக்கின்ற குதிரைகள் தலைகளறுபட்டு கால்களொடிந்து விழுந்து மடிந்தும் சூனுவென்னுமரசகுமாரர்கள் நூறு பெயர்களு மிருடிமுன்னே சாம்பலாகிச் சுடுபட்டும் இருந்தது எ-று (49)

குருதிவெள்ளமு மதிற் கொடுங்கானரி குளிப்பும்
பருகு மூன்றனையுற் கைவாய்க் கழுகொடு
பருந்தும் பொருதுடா கினியலகையும் பேய்களும் புரிந்து
மருகிருந்து கண்டயர்வு றுமரசனு மாற்றுன்

இ-ள் அந்த விரணகளத்திலே பின்னுமெப்படி யென்னில்? சதுரங்க சேனைகளுமடிபட்ட ரத்தங்கள் வெள்ளம் பாய்ந்தும் அந்த வெள்ளத்திலே ஓலமிட்டலறிய நரிக்குலங்கள் குளித்து நீந்துவதும், அதல்லாமல் மாமிசங்களைத் தின்கின்று கொள்ளிக் கட்டையைப்போலொத்த வாயை யுடைய கழுகினங்களும் பருந்துகளுமொன்றுக் கொன்று சண்டையிட்டுண்பதும், டாகினி யென்னும் பாலைநிலத் தெய்வமாகிய காளிப் பரிசனங்களும் பிசாசுபேய்களுங் கும்பலாடியு மிப்படிக்கெல்லா மிருப்பதை பக்கத்திலே யிருந்துகண்டு அதிக விசனத்துடனே ஆற்றுமையானன் விசுவாமித்ரவரசன் எ-று (50)

அற்றமன்னவனகத்தொளி விட்டழுந்தியபோ
லொற்றையாழியோன் மேற்றிசைக் கடலொளித்தனனே
பேற்றிலான கப்போந்தரசாட்சி பெரிது
பெற்றதிற் பலனென்ன வென்றுள மறிந்துணர்ந்தே

இ-ள் அப்படி ஆற்றுமையாய் மந்திரிகளுஞ் சேனைகளுந் தமது குமாரர்களும் இரணகளத்திலே விழுந்து கிடப்பதைக் கண்டு வியாகுலப் படுகிற வேளையிலே அரசனுடைய தைரிய காந்தி முழுகியதுபோல ஒற்றைவண்டியோனுகிய ஆதித்த பக வான் மேல் கடலிலாழ்ந்தான். பின்பு பசுவைப் பெருத விசுவா மித்திரனும் தன்னுடைய பட்டணமே சென்று ஆடையாபரண மாடமாளிகை இராச்சிய பிறவிருத்தங்களெல்லாம் மிகப்பெரிது பெற்றிருந்ததிலே யென்ன பலனுயிற்று இதன் மீதிலுமிருந்தே யேது பலனுண்டாவதென்னென்று அநேக விதமாலோசனை பண்ணினனரான் எ-று (51)

மாதவஞ் செய விரும்பித் தன்மைந்தனை யேசிங்
காதனம் பெறக் கண்டிமவற் கிரிக் கழுத்திற்
சீதளந்தனிற் செழும் புனல்தன்னிலுந் தீய்ந்த
வாதபந்த னின்வையழலிடை தவம் வகுத்தான்

இ-ள் அப்படி ஆலோசனை பண்ணிப் பின்பு அரிதாகிய தவத்துக்கு மீறினது யாதுமில்லை யென்றெண்ணி அங்கிருக் கின்ற குமாரனைச் சிங்காதனத்திலே வைத்து, பட்டங்கட்டித் தான் இமவற்கிரி பருவதத்துச்சியிலே சென்று சீதள காலத்தில் குளிர்ச்சி பொருந்திய அதி சீதள நீரிலே யிருந்தும் கொடிய தீமைக் காலத்திலே காற்றிடையிலே பஞ்சாக்கினி மத்தியிலே நின்றும் உக்கிரமாகிய தவசுகள் செய்யலானன்விசுவாமித்திரன் எ-று (52)

அத்திரம் புரிந்தாண்டு நூறுகிய வதற்பின்
பித்தனுற்றிடப் பெற்று வில்வித்தை களனைத்து
மத்திரங்களோ டவன் புக்குமாயிர தந்
தத்திவந்தவன் சதுர் மறைமுனிவன் மேற்சலித்தான்.

இ-ள் அப்படி உக்கிரமாகிய தவசுகள் பரமசிவனை நோக்கி நூறு வருஷம் செய்யும்போது இனி தாங்கமாட்டாதென் றெண்ணி பித்தனுகிய பரமசிவன் தோன்றி தனுசுவித்தைகள் அனைத்தும் அஸ்திரபாச சக்கரங்களுடனே அனுக்கிரகம் பண்ணப்பெற்று பின்பு அரசனும் தன் பட்டணமே சென்று

தன்னுடைய சேனைகள் சூழ இரதத்தின் மேலேறிக்கொண்டு அநேக அஸ்திர வித்தைகளுடனே வசிஷ்ட ரிஷி யாச்சிரமத்து வனத்துக்கு வந்து ரிஷியின் மேலே கோபித்தான் விஸ்வா மித்திரன் எ-று. (53)

முக்கணன்றரு முனையழற் படையினுற்றுக்கப்
புக்கியவ்வனம் பொடிப்பது முயிர்த்திகைப்பதுவு
மிக்க நற்றவர்கண்டு விசுவாமித்திரன் விடுத்த
தொக்குமென் றதைச் சோர்த்திடத்தே தாயம் விட்டவித்தார்

இ-ள் விசுவாமித்திரன் கோபித்து முக்கண்ணனாகிய சிவனாலே தரப்பட்ட கடோமாகிய அக்கினி பாணத்தைத் தொடுத்து விட்டான். அதானது பிரவேசித்து ரிஷியிருக்கிற வனங்களையெல்லாம் பஸ்பம் பண்ணிற்று. அப்போது அதிலி ருந்து வாழ்கின்ற சகல பிராணிகளும் வாடித் திகைக்கலாயிற்று. அந்த வேளையிலே ரிஷி யறிந்து இது விசுவாமித்திரனாலே, செய்யத் தகுந்ததென் றறிந்து தன்னுடைய கமண்டல சலத்தி னாலே சாந்தமாகும்படி அவிக்கப் பரமசிவனடி யாராதலால் சாந்தமாயிற்று. அக்கினிக்கணைகளெல்லாம் வசிஷ்ட ரிஷியால் எ-று (54)

கஞ்சுகக்கு நாகாஸ்திரம் விடுக்க நாவலனுஞ்
செஞ்சிறைக் கலுழாஸ்திரஞ் சபித்தனன் சிறந்தோன்
விஞ்சை பாசுபதாஸ்திரம் விட்டிட இறையோன்
வஞ்சி மோகனுஸ்திரத்தால் தடுத்தனன் மறையோன்

இ-ள் இப்படி அக்னியாஸ்திரத்தை அழித்தது கண்டு ஒருவருக்கொருவர் கோபங்கொண்டு அஸ்திரப் பிரயோகம் பண்ணினார்களதெப்படி யென்னில்? ஆல கால விஷங்களை கொப்பளிக்கின்ற நாகாஸ்திரங்களை விடுத்தான் அரசன். அந்த அஸ்திரத்தைப் புசித்திடும்படி கருடாஸ்திரங்களை விடுத்தார் வசிஷ்ட ரிஷி. பின்பு பாசுபதாஸ்திரத்தை யேவினான். அதற்கு மோகனுஸ்திரத்தினாலே மயக்கினார் மாமுனி. எ-று (55)

காலபாசத்தைக் கனன்றெதிர் விடுத்தனன் கவுசி
சூல கோசத்தாற் றுணித்திடச் செய்தனன் றூய்யன்
நீலகண்டமு நிர்மல வாழியுநிகழ்த்தக்
கோலதண்டு முன் கொடுத்தனன் மனுகுலக் குருவே

இ-ள் பின்னும் போர் செய்கிறதெப்படி யென்னில்? காலமென்னு மேமபாசத்தை ஏவி விட்டான் கவுசிகன்.

அதற்கு சூலாயுதத்தினாலே மாய்த்திடச்செய்தார் சுத்தமாகிய மாமுனி. பின்பு நீலகண்டசக்கரமும் நிருமல விஷ்ணு சக்கரமும் ஏவினான். அதற்கு அழகுபொருந்திய தபோ தண்டத்தை முன்னாடி அதின் முன்னின்றிடும்படி செய்தார் வசிஷ்ட ரிஷி எ-று (56)

பின்னுமெய்தான னையை வெங்கொடுங்கணைப் பிலத்து
மன்னன் விட்டதெலாந் திருத்தண்டின் முன்மாயப்
பின்ன மொன்றிலாமை பேணிப் பிரமாஸ்திரந் தொடுத்தா
னன்னதும் முனியருகு செல்லவவர் புசித்தனரே

இ-ள் அப்படி தண்டுமுன்னே நின்றிடக் கண்ட வரசன் கோபித்து அநேகமாகிய கணைகளை யெல்லாம் தொடுத்திட்டான். அப்படி விட்ட கூர்மையான கணைகளெல்லாம் அந்தத் தண்டுக்கு முன்னதாகவே நின்றிட்டது. ஆதலினால் இருடிக்கு ஒன்றும் உபத்திரவமில்லாதது கண்டு பிர்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அந்தப் பிரமாஸ்திரமானது மூன்று லோகமுந் தகித்திடும்படி போகும்போது இருடிகண்டு ஈதென்ன காரணமென்று கிட்டவரும்போது ஆசமித்து புசித்துவிட்டார் வசிஷ்ட ரிஷி எ-று (57)

தேவதேவருந்தாங் கொணு வஸ்திரந்தா
ளுவிட முறையா நனி ரோமத்தானமுவி
நாவலந்தரு நற்பதி நவகண்டத்திடத்து
மேவித்திய்த்திட வெகுண்டது வெளியுமானதுவே

இ-ள் அப்படிப் புசித்திட்டது தேவதேவர்களுந் தாங்க மாட்டாத அஸ்திரம் தன்னுடைய திறமையினாலே உள்ளே தரியாமல் நெருங்கிய ரோமத்துவாரங்களினாலே புறப்பட்டு நாவலமென்கின்ற சம்புத்தீவிலே யிருக்கின்ற அநேக ஸ்தல முதலிய நவகண்டத்திடத்தும் பரந்து சகல சீவராசிகளையும் மாய்த்திடும்படி கோபித்தது எ-று (58)

அத்திற முணர்ந்தம் முனியனலெழச்சிறி
கைத்தலந் தனிற் கனத்ததண்டெடுத்துவக் கனகன் மேல்
யத்தலத்தினின் விட்டு வீத்திடவென வேந்திச்
சுற்றவாரியு மேருமூவுலகமுஞ் சுழல

இ-ள் அப்படி பிர்மாஸ்திரமானது சகலமுன் எரிக்கும்படி வெளியே புறப்பட்டபோது வசிஷ்டரிஷி கண்டு அக்னிகளெழும்பக் கோபித்து தன்னுடைய கைத்தலத்திலே இருக்கின்ற யோக தண்டத்தை கனகனாகிய விசுவாமித்திரன் மேலே விடுத்து மாய்த்திடுவதென்றெண்ணி ஆகாசமார்க்கத்திலே சுழற்றினார்

வசிஷ்டமுனி. அப்படி சுழற்றும்போது சத்த சமுத்திரங் களுஞ் சத்த குல பருவதங்களும் மகமேருகிரி முதலான சுவர்க்க மத்திய பாதாள லோகங்களும் மற்று முண்டானவைகளும் சுழலலாயின எ-று (59)

வானதானரு முரகர் விஞ்சையரொடு மற்றும்
ஏனதென்ன வென்றிருகர மேந்தியே யிருத்த
லானதை யறிந்தரசனு மஞ்சியே பிராமண
ஞனதுக் கெதிர்யாமில மென்ற வனடந்தான்

இ-ள் அப்படிச் சகல லோகங்களுஞ் சுழலும்போது வான தானராகிய தேவர்களும், மனிதர்களும் முனிவர்களும் யட்ச கின்னரசித்த வித்தியாதரர்களும் என்ன அதென்னவென்று இருகரங்களையு மேந்திக்கொண்டு கையமர்த்தியிருத்தினர்கள். அப்படியமர்த்த விருக்கக் கண்ட விசுவாமித்திரனனவன் அஞ் சிப் பயந்து பிரமதேசுவக்குயாமிணையாகமாட்டோம் என் றெண்ணி வெட்கமுற்றுத் தன் பட்டணம் சென்றன் அங் கட்சணமே எ-று (60)

பிரம தேசுவாய்ப் பெற்றிட யாமெனப் பேணி
யுரசமுற்றவ னுகந்த பத்தினியுடனேடி
யரய வெற்புழியையம் பொறி யகத்தினுளடக்கித்
திரியெரிபாடஞ்சென்று நிருவிகற் பத்திற் சேர்ந்தான்

இ-ள் அப்படி தன்னுடைய பட்டணமே சென்றவன் பிரம தேசுவாய்ப் பெறவேண்டுமென்றெண்ணி, வெகு உரசமுற்று தனது மனைவியுடனே சீக்கிரத்திலே அரச வெற்பாகிய இம வற்கிரி பருவதத்தினடியில் தெற்குத் திக்கிலே நின்றும் ஐம் பொறியாகிய மெய்வாய்கண் மூக்குச் செவித்துவார விடயங்களை யெல்லாம் மனத்திலே யடக்கி மனத்தை அறிவினிடத்திலே சேர்த்து நிருவிகற்பமாகவே யோகசாதனையான தவசுக்கு இன் மானன விசுவாமித்திர அரசன் எ-று (61)

(விசுவாமித்திரன் யுத்த சருக்கம் முற்றிற்று.)

# நானூற்றொருவர் சருக்கம்.

மட்டார் மலர் நீடிரை வாவிமலிவ
திட்டார் பதியிற்றவர் செய்ததுவே
விட்டோருருளூர்தி விடுங்கிரணந்
தொட்டேவிரி கோயிலர் சொல்லியதே

இ-ள் தேன் படிந்திருக்கின்ற குவளைகளுந் தாமரைகளும் அலைகளிலே நெருங்கிய புஷ்கரணிகள் சூழ்ந்திருக்கின்ற திட்ட குடிப் பகுதியிலே வசிஷ்ட ரிஷி செய்த விருத்தாந்தங்களை யுலகமெலாம் பிரகாசிக்கும்படி ஒற்றை வண்டில் தேரையுடைய சூரியபகவான் கிரண குச்சில் கொண்டு திறந்து மூடுகிற கோயிலிலே வாசமாகி யிருக்கின்ற தாமரையில் வீற்றிருக்கிற பிரம தேவன் சனகாதி முனிகளுக்கு அருளிச் செய்வான் எ-று (1)

என்றோதிய நாரத வேதியனை
முன்னின்றே யிருகையு மிணைத்தெனது
அன்றே வினையற்றதினும் பகர்வ
தென்றே முனிவோர்களிறைஞ்சினரே

இ-ள் அப்படி பிரமசபையிலே நடந்த விருத்தாந்தமென்று நாரதப் பிர்ம ரிஷி சொல்லக்கேட்ட ரிஷிகளெல்லாருமிரண்டு கையுங் கூப்பிச் சரண மடைந்து பண்டாகிய பூருவ திவினைகளெல்லா மகன்றோட அப்படிக்காகிய அந்த ஸ்தலத்தின் பெருமையை யின்னுஞ் சொல்லவேண்டுமையாவென்றார்கள் இருடிகள் எ-று (2)

தண்ணார் புவிய சனவ்வனந்தனின் முக்
கண்ணார் முறை செய்பவனுற்ற கதை
விண்ணாடமர் கங்கை நதிக்கரையிற்
பண்ணோடுமாமுனியும் பகர்வான்

இ-ள் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்திலே விசேஷமாயிருக்கின்ற அசனாரணிய மென்னுமந்த ஸ்தலத்தின் பெருமையை இன்னமுஞ் சொல்லவேண்டு மென்று கேட்ட இருடிகளுக்கு வசிஷ்டமுனி செய்து பெற்ற மகிமைகளை விண்ணாடாகிய தேவ

லோகத்து கங்கைக் கரையிலே பண்ணெனும் சத்த சுரங்களு மிசைக்கின்ற நாரதமாமுனி சொல்லுவார் எ-று (3)

தவமுற்றவசிஷ்ட னிருந்திடும்ப
பவனத்தொடு வேழுதுறை பன்றுமதே
புவனத்தொடு வேழ் பிறவிப் புணரிக்கு
தவத்துறை கொண்டு மீதேற்றிடுமே

இ-ள் அதெப்படி யென்னில்? மிக்க தவசையுடைய வசிஷ்ட ரிஷி யிருக்கிற ஆச்சிரமமாகிய அந்த ஸ்தலத்துடனே பின்னும் ஏழுதலமுண்டு. அந்த வேழுதலமுமேழு துறையாகும். அப்படி யிருக்கின்ற துறையோடுங் கூடிய அந்த சுவேத நதித் துறைகள் ஏழு பிறவியாகிய எறும்பு கடையானை முதலிய ஏழு வகைத் தோற்றங்களிலும் புகுந்தவேழு சமுத்திரங்களுக்கு மேழு துறையாகி கரையேறச் செய்விக்கும். அந்த ஏழு ஸ்தலங்களிலேயும் வாசம் பண்ணிய பேர்களுக்கென்று பின்னுஞ் சொல்வாம் எ-று (4)

ஆதி தீர்த்தமு மாலந் தீர்த்தந் திருத்தேமா
சோதி தீர்த்தஞ் சுக்கிரீவ நற்கவி தீர்த்தமுமே
பூதி சுத்திகா தீர்த்தம் புண்ணிய வரதீர்த்தஞ்
சேது சைல தீர்த்தங்களுத்தியிற் சேர்ந்திடுமே

இ-ள் அப்படி கரையேற்றுகின்ற புண்ணிய நதியினேழு தீர்த்தங்களின் பெயர்களெப்படி யென்னில்? ஆதி தீர்த்த மென்னு மாதிநந்துறை, வடதீர்த்த மென்னுந் திருமாலந்துறை பிரம தீர்த்த மென்னுந் திருமாந்துறை, சுக்ரீவ தீர்த்த மென்னுந் திருவாவடுதுறை சுத்திகா தீர்த்தமென்னுமந்த ஸ்தல மாகிய வசிஷ்ட துறை அரதீர்த்தமென்னுந் திருவரத்துறை, சைல தீர்த்தமென்னுந் திருச்சகத்துறை, இப்படிக்கு ஏழு துறையோடுங் கூடிய ஏழு ஸ்தலங்களுள்ளன எ-று (5)

அப்புனல்களுக்கே முக்காற் கடிகை யோர்தல
மொப்பிலாததிலிங்க முண்டதிற் றொழு முனிவர்
தப்பின்றற வஞ்சார்ந்தினி திருப் பசத்தலத்தி
லுற்பவித்தனர் மரித்தனர்க் குதவுமே முத்தி

இ-ள் அப்படிச் சொல்லிய வேழுதலங்களின் விசேஷம் எவ்வளவு தூரமென்னில்? ஒவ்வொரு தலங்களுக்கு மேற்கு ஒன்றே முக்காலரைக்கால் கிழக்குமப்படியாக மூன்றே முக்கால் நாழிகை வழிதூரமாக விருக்கும். அப்படியுடைவே யிந்த ஏழு

தலங்களுமிருக்கும். அந்த ஸ்தலங்களுக்குப் பெருமைகள் சொல்லிமுடியாது. அப்படிக் கானகத்திலே விசேஷமாகிய சுயம்பு லிங்கமாகியது ஏழிருக்கும், பின்னும் பக்கங்களிலேயுமநேக சிவஸ்தலங்களுண்டு. அவைகளிலே தவசு செய்கின்ற ரிஷிக ளனேகம் பெயர்கள் வாசஞ் செய்வார்கள். பின்னுமந்த வேழு ஸ்தலங்களிலேயு முற்பவித்த பேருக்கும் இறந்த பேர்களுக்கும் பரமசிவன் முத்தியருளிச் செய்வாரென்று பின்னுஞ் சொல் வான் எ-று (6)

சுத்திகைத் துறைத்தலம் பணிவசிஷ்ட முனிவோர் நா
ளத்திரித்தவன் மகத்தினுக் கேகவென்றமைத்த
சுத்த வன்னியை முன்றில் வைத்தோதிச் சுடரி
லத்தவே வலாலாகுதி செய்தனன் றருப்பம்

இ-ள் அப்படிக்காகிய வேழுதலங்களுக்கு மேன்மையாகிய சுத்திகைத் துறையென்னும் வசிஷ்டபுரி ஸ்தலத்துக்குப் பிர தானமான வசிஷ்ட ரிஷியானவர் அத்திரி முனி செய்கின்ற வேள்விக்குப் போகவேண்டுமென்று தான் நடத்தி வருகிற சுத்த வன்னியாகிய காரியாக்கினியை பரமசிவன் முன்பாக வைத்துத் திருமந்திரமோதி வைத்திருந்தசுவாமி யாருளினாலே தருப்பை முடிந்து ஆகுதி செய்தானக்கினியிலே வசிஷ்ட முனி எ-று (7)

தேவபாகமே கொண்டவச் செந்தழலெழும்பி
மேலும் போதொரு கரத்திற் பொற்குண்டிகை விதித்த
காவிய மொருகையும் வெண்ணீறு நால்கதிக்க
நாவலத்தினி லுதித்தனன் சைவனுன் மறையோன்

இ-ள் அப்படிச் செய்கின்ற ஆகுதிகளை தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கின்ற அக்கினியானது செவ்வெழும் பும்போது ஒரு கையிலே அபிஷேக குண்டிகையு மொரு கையிலே சைவாகம வேதமந்திரப் புத்தகமும் பூணநூலும் திரு வெண்ணீறும் பிரகாசிக்கின்ற அழகு பொருந்திய திருமேனியு மாக அந்த அக்கினியிலேயின்றும் பிரவேசித்து பூமியிலுதித் தான் சைவ வேதப் பிராமணன் எ-று (8)

தாயவன்னவன் றனைச் சராபிசனார் முறைக்கு
நேயம் வைத்தனனென்று தொட்டென்று நின்றிடவே
பாயமுற்றிரண்டாம் பதம் பகுப்பவந்தனரோ
டேய னுற்றதும் பெற்றமாகதை யுரைத்திடுவாம்

இ-ள் அப்படி அக்கினியிலே உதிக்கின்ற சைவப் பிராமணனை சுரபீசனாகிய பரமசிவனுக்கு அன்று முதலென்றென்றைக்குந் திருமுறையாகிய பூசை செய்திடும்படி நியமித்தார் வசிஷ்டரிஷி. அப்பால் பந்த பாசங்களோடு மிருக்கின்ற விரண்டாம் பதமாகிய கிரகஸ்தாச்சிரமம் புகுந்த வேதப் பிராமணிய ரிஷிகளுடனே பரமசிவ னெழுந்தருளித் தானுமொருவராய் வந்தவதரித்த திருவிளையாட்டின் பெருமையைச் சொல்வாம் எ-று (9)

வேறு

சதமகனுக்காயிரங்கண் சாபமிடுங் கோதமனுஞ் சகங்களுண்ட
துதிபதியை யுருபத்தாய்ச் செனித்திடச் செய்தத் திரியுந்தூய்ய காலன்
விதிவழுவாவடுங்கிடச் செய் மிருகண்ட குமாரனுடன் வியாசன் மற்ற
யதிமன்னுங் கூட வசிட்டனும் வேள்விக்கிசைந்து செய்தா னிமையோர்க்கென்றே

இ-ள் சதமகனாகிய தேவேந்திரனுக்கு ஆயிர நேத்திரமாக விருக்கும்படி சாபமிட்ட கௌதமரிஷியும் உலகங்களையெல்லாந் திருவுந்தியிலே வைத்திருக்கின்ற மகாவிஷ்ணுவைப் பத்து ஜெனனமெடுக்கும்படி சாபமிட்ட அத்திரி ரிஷியும், நீதி செலுத்துகிற எமதர்ம ராசனை நடு நடுங்கும்படி செய்வித்த மார்க்கண்ட ரிஷியும், வியாசபராச சூதசுகர் முதலான மற்ற அநேக ரிஷிக் கூட்டங்களுடனே வசிஷ்டரிஷி தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கள் கொடுத்தருள வேள்விக்கிசைந்து செய்யலானார் வசிஷ்டமுனி எ-று. (10)

புனல்பதியு நிதிபதியும் பவனபதியோடு புரந்தரனுஞ் செவ்வி
யனல் பதியுமமரர்களு முரகருமற்ற சுவனியுமியாழ் பெற்றோரும்
வனசமலரோனும் மதியிரவியும் வந்தவிர்ப் பாகம் வாங்கக்கண்ட
முனிவசிட்டன் முன்னவனைக் காணவத்தியாகத்தான் மோக முற்றான்

இ-ள் அப்படிச் செய்கின்ற வசிஷ்ட ரிஷி யாகத்துக்குப் புனல் பதியாகிய வருணராசனுங் குபேரனும் வாயு பகவானுந் தேவேந்திரனுஞ் சிவந்த சடைகளையுடைய அக்கினி பகவானும் பின்னுமனேகமான தேவர்களும் நாகலோகத்தாரும் அசுவினி தேவதைகளும் தும்புரு நாரதாதி முதலான யட்சகின்னர சித்த வித்தியாதரரும் வனசமென்னுந் தாமரைப் புஷ்பத்திலே வசிக்கின்ற பிர்மதேவனுஞ் சூரிய சந்திராதி கிரகாதிகளும் வந்து

தங்கள் தங்கள் அவிர்ப் பாகங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அப்படி பெற்றுக்கொண்டுவரும்போது முன்னவனாகிய பரம சிவன் தன்னுடைய பாகம் வாங்குவதற்கில்லாதிருப்பது கண் டான். அப்படி வாராததினாலே மிகத்துயரமுற்றான் வசிஷ்ட முனி எ-று. (11)

அம்மகத்தை நடத்தியபி னந்தணாளரா சனத்திலமர்ந்து நோக்க
வெம்மலைப்போக் குவதென்ற மைம்மலையா ளுடன்பிறந்த மின்னாளோடு
மம்மலையி லிருப்பதுபோன் மைம்மலையெனக் களிறுஞ் சூரருற்ற
வெம்மலையைப் பொருவுற்ற வெம்மலைக்கும் வேல்தொடான் மேவினானே

இ-ள் அப்படி சிவன் வராதது கண்டு விசனமுற்ற வசிஷ்ட ரிஷி அந்த யாகத்தை முடிவு செய்து நிஷ்டையிலிருந்தார். அப்படி யிருக்கும்போது வெம்மலாகிய விசனங்களைப் போக்கு வதற்காக மைமலையென்னும் மைநாகபர்வதத்துடன் பிறந்த பரமேஸ்வரியுடனே கைலாசகிரியிலே யெழுந்தருளியது போல நிலகிரி யென்னுஞ் சமதை பொருந்திய யானை முகத்தானாகிய விக்னேஸ்வரருடனும் அசுர சேனைகள் சூழ்ந்த கிரௌஞ்சகிரியை முழுகி மறையச் செய்கின்ற சமுத்திர சலத்தை சுழிக்கும்படி ஏவிய வேலாயுதத்தைத் தரித்து எம்மலை யென்று மூலகத்தி லுள்ள மலைகளுக்கெல்லாம் ராசாவாகிய சுப்பிரமணிய சுவாமி யுடனும் எழுந்தருளினார் பரமசிவன் எ-று. (12)

ஆங்கது கண்டருந்தவனு மரனடியைத் தொழுதிறைஞ்ச வனைநோக்கித்
தேங்குமலி வித்தலத்தின் தென்பால் வெண்ணாதிக்கரையோர் தீர்த்தமேழின்
பாங்குதவஞ் செயுமுனிவரொன்றெழு நானூற்றினர்க்கும் பருவில்லென்ற
வேங்கைவளப் பிழற்பதியு மருள் சுரந்து விளவினரே விண்ணோர் காண

இ-ள் அப்படிப் பிரசன்னமாயெழுந்தருளக் கண்ட வசிஷ்ட ரிஷி பரமசிவனையடி வணங்கிப் போற்றி செய்தான். அப்படிப் போற்றக்கண்ட பரமசிவனருள் செய்வார் தெங்கென்னும் தென்னங் குலைகளாகாசங்களிலே நெருங்கியிருக்கின்ற இந்த ஸ்தலத்துக்குத் தென்புறத்தில் வருகிற சுவேத நதி தீர்த்தக் கரையின் ஏழு துறையிலும் தபசு செய்கின்ற மூந்நூற்றுத்

தொன்னூற்றென்பது தவமுனிகளையும் கிரகஸ்தாச்சிரமஞ் செய்விப்பிரென்று அநுக்கிரகம் பண்ணி மறைந்தார், வின்னோராகிய தேவர்களறியா பரமசிவன் எ-று. (13)

முனிவனது கேட்டு நதிக்கிருபானு முயன்ற தவமுனிகள் முன்னோ
தனிவசிஷ்ட னைகலுமங்கவரையவர் தொழுதிடலுஞ் சாமவேத
நனியதிகளுபன் மகவையிங்கு நலம்பெற்ற தென நவில்விரென்ன
விவிதுமொழிகொண்டு பிறந்கிசனருளேவலில்விங்குற்றிரு
மென்றார்

இ-ள் அப்படிச் சொல்லக்கேட்ட வசிஷ்ட ரிஷி சுவேத நதிக்குத் தென்புறங்களிலும் வடபுறங்களிலுமிருக்கின்ற சாம வேதாற்பன்ன ரிஷிகள், பின்னுமிந்த நதிக்கு வடக்கே கிருஷ்ண நதிக்கரையிலும் இருக்கிற முனிகள் ஆக இவர்கள் முன்னே ஒருவனாகிய வசிஷ்டரிஷி சென்றார். அப்படி வரக் கண்ட ரிஷிகள் அனைவருந் தொழுதிறைஞ்சினார்கள், அப்படி அவர்களைக் கண்டு வசிஷ்டமுனியும் வணங்கி உபசாரணை பண்ணிய பின்பு, சாமவேத முனிகள் பிரம குமாரரே யிங்கு வந்த காரணமென்ன வென்று கேட்டார்கள். அதற்குச் சொல்லுவார் வைத்தியநாத சுவாமி உத்தரவினாலேயே வந்தேனென்றார் வசிஷ்ட ரிஷி எ-று, (14)

வசிஷ்டன்வந்த வுரைசொல்ல மாமுனிகளானந்தித்து வணங்
கிச் சொல்வார்
திசைத் தலையோன் றனக்குபதேசம்பெறவிங் குற்றிடும்போ
தியாமிங்குற்று
சுசிப்புனல் பாற் றவஞ்செய்வோ மத்த விசின்னதிறத்திவணீர்
தொடங்கப்பெற்றோம்
பசுத்தலைவா என்ற வதற்கம்முனியுஞ் செயமுனிக்குப் பகர
லுற்றான்

இ-ள் அப்படிப் பரமசிவன் ஏவலினாலே வந்தேனென்று வசிஷ்ட ரிஷி சொல்லக் கேட்ட சாமவேத முனிகளுள மகிழ்ந்து வணங்கிச் சொல்வார்கள். அதெப்படி யென்றால்? திசைத் தலையோனாகிய பிரமதேவன் தனக்குபதேசம் பெறவேண்டி மகாவிஷ்ணுவாலே சொல்லக்கேட்டு ஆதி காலத்திலே இவ்விடத்திலே எழுந்தருளியபோது யாங்களுங்கூடவே வந்தோம். அப்பால் சுசிப்புனலாகிய விரசை தீர்த்த நதி யென்னும் இந்த ஸ்தலத்துக்கு வடக்கே வருகிறதிலே பிரிந்து கிருஷ்ண நதி யென்னுமொரு நதி அந்தர்வாகினியாயிருக்கிறது. அந்தத் தீர்த்தக் கரையிலும் சுவேத நதி யென்னுமிருக்கிற இந்தத்

தீர்த்தக் கரையிலுமிப்படி சுவேத கிருஷ்ண நதிக் கரையிலே யிருந்து தவசு செய்கின்ற திறமையாலே நீர்வரப் பெற்றோம் என்று சொன்னார்களப்படி சொல்லக்கேட்ட வசிஷ்ட முனி சொல்வார் சயமுனி யென்னுஞ் சாமவேத முனிகட்கு எ-று (15)

நுங்களையில் லறத்திறம்புக் கருள்செய்தார் நுண்ணிடையாட்
கீந்த பாகன்
அங்கதுவா லுற்றனமென் றந்தணர்க்க யோனிசர்க ளறிந்து
சொல்வார்
நங்கையரின் றடவல்கு லுடியுதித் தனர்யாமல் லோமே நாளும்
திங்களணி சடையான்ற னேவலினாற் செய வென்றுஞ்
செப்புவோமே

இ-ள் அதெப்படி யென்னில்? சகல தருமங்களுக்குமேது வான இல்லறத்தில் நுங்களை சேர்க்கும்படி உமையவளுக்கு அர்த்த பாகங்கொடுத்த பரமசிவன் அருள் செய்தார், ஆதலால் யாமிங்குற்றோம் என்றார் வசிஷ்டரிஷி. அதற்கு அயோனிசர்களாகிய சாமமுனிகள் சொல்வார்கள், நங்கையர்களுடைய விசாலம் பொருந்திய யோனிகள் ஒருக்காலுங் கண்டோமில்லை அதிலே யாங்களும் பிறந்தோமில்லை. ஆதலால் பரமசிவனுக்கினை கட்டளையென்றால் அதற்குச் சொல்வோமென்றார்கள் எ-று. (16)

கசிந்தொழுகுங் குருதி வெள்ளந்தனைப் பூத்தாமென்று மதிற்
கலந்து சேர்ந்து
மிசைந்தவதிற் பிண்டமா யிறைச்சிநரம் பீளைதோ லெலும்
புண்டாகி
யசைந்தவுயி ரோடுமீரைந்திங்கட் சென்றதிற்பின் னவனிபுக்குப்
பசித்தயர்வுற் றமுது மறுசுவை யன்னம் பலவுண்டு பருக்கு
நாளில்

இ-ள் அப்படி சாமமுனிகள் சொல்லியதெப்படி யென்னில்? கசிந்தொழுகக் கண்ட ரத்தங்களினாலே புஷ்பவதியானு ளென்று மவளைக்கலந்து போக்கியங்களுற்றதனாலே பிண்டமாகிப் பின்பு மாமிசம் நரம்பு ஈளை யெலும்பு தோல் மயிர் இவைகளோடுறுப்பாகிய மெய்வாய் கண் கரங்காலுடம்புகளும் அதற்கு அசைகின்ற உயிர்ப்புகளுமுண்டாகி பத்து மாதமான வாறே பூமியிலே விழுந்து உடனே பசி தாகமுற்று பால் முதலிய அறுசுவை அன்னம் பலகாரங்களுமுண்டு வளருகிறதும் அப்படி வளருகின்ற நாளிலே எ-று. (17)

நரைதிரைமைக்கிருமியொடு நலிவத்தைதக் கருங் கூந்தலென்றுஞ் ஞானத்
திரை புணரிதனின் விழிக்குமிளை நிர்க்குழியையிலைச் செவ்வேலென்றும்
வரையெனவத் தசையையிள முலையெனா வென்ன வளறுகசி மலமார்கூட்டை
வெவ்வரவல்குலெனப் போர்த்துந் தோலினைத்தும் புனிதமயின் மங்கை யென்றே

இ-ள் பின்னுமெப்படி யென்னில்? பெண்களுடைய வெறுத்துச் சுருண்டு போகின்ற மயிர்களைக் கரிய கூந்தலென்றும், ஞானமாகிய கருமங்களை ஆசையுடனே நோக்குகின்ற சமுசாரக் கடலிலலையும் பார்வையுள்ள நேத்திரங்களை குழியிலே களை நிருண்டையாகியதை கூரிய செவ்வேல் விழியென்றும் பருவதம் போன்ற மாமிசத்தை யிளமுலை யென்றும், அளராகிய ஊற்றை கசியும் மலக் கூட்டைப் படம் பொருந்திய பாம்புக் கிணையான அல்குலென்றும் போர்த்தியிருக்கின்ற தோலினை வெகு புனிதமென்றும் மங்கைமயிலென்றுஞ் சொல்லியதென்று பின்னுஞ் சொல்வார் சாமவேத முனிகள் எ-று (18)

இளமுலையோ டிருகணைத்து மிதழமுது பருகியின் னிமுத்துண்டும்
வளைக்கை புனைந்துதொடையோர் மதனபதி புக்கும் பின் வழியூடாடி
அளர்க்குழியி லிடும்வித்தா மைம்பூத வடிவாகி யனைய யோனித்
துளக்கிழுந் தெழுபிறப்பின் தோற்ற மதாய்ப் பவக்கடலுட் சோர்வர்தாமே.

இ-ள் அப்படிப் புனிதம், மயில், மங்கை யென்று இளமுலையோடிருகியணைத்தும் இதழமுது புசித்தும் இனிய கன்னங்களை முத்துண்டும் வளைகளோடுங்கூடிய நெடிய கைகளைப் புல்லி மதன லீலைகள் தொடுத்தும், அதின் வழியே சென்று மயக்கமுற்றும் அதனாலே சேற்றிலே விடுகின்ற விதைகளைப் போலே முளைக்கா நின்ற பஞ்ச பூதவடிவாகியநேக யோனிகளில் பிறந்துஞ் சுழலிலகப்பட்ட துரும்புபோலே யெழுபிறப்பின் தோற்றமாகிய பாவ சமுத்திரத்திலே மூழ்கி இளைப்பாறென்று சொன்னார் சாமவேதமுனிகள் எ-று (19)

முனிக்குழியுரைத்தவெலா முனியதிந்து முன்னுரைப்பான் மூலயோனி
நனிக்குழியிலுதிய கன்னியாமருவோரம்யோனி சதுர நாவலத்தில்
செனித்திடச் செய் திந்திடுது நுங்கட்கே வருகவெனச் செப்ப வாங்கே
இனிப்புடன்சென் றவர் குழியிருப்பா ளர்க ளெங்கு மிலங்க வென்றே

இ-ள் அப்படி சாமவேதமுனிகள் சொல்லியவெல்லாம் வசிஷ்ட ரிஷி யறிந்து பின்னுஞ் சொல்லுவார். யோனித்துவாரங்களிலே ஜெனித்த பெண்களை அயோனிசர்களா யிருக்கிற வுங்களுக்குக் கொடுத்து இல்லத்திறஞ் செய்விப்பதில்லை. யோனியில் ஜெனியாதிருக்கிற பெண்களைக் கொடுத்துக் கிரகத்தாரக்கி விடுவோம் நீங்கள் வருகவென்று சொல்ல அதுகேட்ட ரிஷிகளுந் கிரகத்தாச்சிரமத்துக்கு உள்புகுந்து வசிஷ்டரிஷியாச்சிரமத்துக்குப் பிரவேசிக்கலானார் சாமமுனிகள் எ-று (20)

வேறு

அப்பொழுதொருகை மற்புலாற்கடமுமலிந்திடு மொருகையு மழைப்ப
வொப்பொருகையு மீனயவாம் பொருளுறுதவிய கரமொரு நான்கொ
டப்புவியதனிலருள் விழிமங்கையாகிய தருமதேவதையாள்
செப்பரிதவத்தான் கண்டிடத்தோன்றி செய்யுமிக் கணமெனச் செப்பும்

இ-ள் அப்படியவர்கள் பிரவேசிக்கும்போது வசிஷ்டரிஷையு மாச்சிரமத்துக்கு வருகையிலே அப்போது சுத்த நீர்த்தக் கெண்டியொரு கையிலும்தானங் கொடுக்கின்றதொரு கையுங் கொடுக்க வழைக்கின்றதொரு கையுஞ் சகல பதார்த்தங்களு முற்பத்தியாகிறதொரு கையுமிப்படி நாலுகையோடு கிருபா கடாட்சம் பொருந்திய நேத்திரங்களுடனே ஸ்திரீ யென்னுந் தரும தேவதையானவள் அந்த இடத்திலே வசிஷ்ட ரிஷி முன் பாகப் பிரசன்னமாகி எண்ணிய தருமத்தை யிப்பொழுதே செய்யுமென்று பின்னுஞ் சொல்லுவாள் தருமதேவதை எ-று (21)

யாவரேனுமறத்தை யெண்ணியக்கணமே யருளுவாரல்லரே லாகில்
பாவமென்னங்கை தனக்குறும் போகப்பற்றுக் கிடரெனத் தவிர்க்கும்
ஈவது புகழே யென்னில் காலமிடமறிந்தளிப்பது வியல்பாம்
ஆவிதேரகமுமாக்கமு நிதியும் நித்திய மென்றவள் மறைந்தாள்.

இ-ள் யாவராகிலும் தருமத்தை யெண்ணிய போதே செய்யவேண்டும். அப்படிச் செய்யாராகில் பாதகி யென்னும் பெண்ணானவள் தன்னுடைய போக போக்கியாதிகளுக்குத் தீங் கென்று பாவம் விருத்தியாகவே தருமத்தைத் தவிர்க்குமாத

லால், கொடுப்பதே பெரிது. அப்படிக் கொடுப்பதற்கு நிலை யுங் காலமு மிடமும் பாத்திரமுமறிந்து செய்யவேண்டுமாதலால் சரீரமும் மனதும் பொருளுமனித்தியஞ் சீக்கிரம் தருமஞ்செய் யென்று மறைந்தார் எ-று (22)

அறக்கொடியணங்கோ டருந்தவ னறத்தை யர்க்க வென் றெண்ணியப்பொழு
திரப்பவித் தாமி ரண்டுநூ றிணைத்துத் திருவுருவாக வென்றி சைக்கக்
குரைக்கழ லான்றனை ருளினுற்றந்தைக் கொப்ப வேசிருட்டி யுற்றனைய
தருப்பையு மரம்பை மேனகை யெனவே தார்குழற் கன்னிய ருதித்தார்

இ-ள் தருமதேவதை சொல்லிப்போன பின்பு அருந்ததி யுடனே வசிஷ்டரிஷி தருமபரிபாலனம் பண்ண வேண்டு மென்று ஆலோசித்துச் சொல்லி திரப்பவித்தரமென்னுந் தருப்பையினாலே நானூறு கூர்ச்ச முடிந்து பூமியிலே போட்டு பெண் ரூபமாகவென்று திருமந்திரத்தை யோதினர். அப் போது வைத்தினுதசுவாமியார் பஞ்சாட்சர வருளினலே தந்தை யாகிய பிரமதேவன் சிருட்டிக்கு ஒப்புதலாகவே அந்த கூர்ச் சங்களெல்லாம் ரம்பை மேனகை ஊர்வசி அப்சரஸ் ஸ்திரீகளைப் போலே நெடிய கூந்தலுடைய பெண்கள் அவதரித்தார்கள் எ-று (23)

வணநுதற்றிலக மதிமுகத் தணங்கும் வள்ர்குழைக் கொவ்வை வாயுற்ற
முணங்கிய மாது செங்கயலென நாட்டம் முல்லை நறுமல ரெனநகைட்
பணங்கும் பாணிசெங்கமல(ம்)வேயனத்தோள் பச்சிளங்குரும்பை மென்றனத்தாள்
கணமுகில் முடியின் வான்கொடி மின்னற் சிற்றிடைக் கன்னியர் சிலரே

இ-ள் அப்படி கூர்ச்சத்திலுதித்த பெண்களுடைய வள மெப்படியென்னில்? பிரகாசம் பொருந்திய நெற்றியிலே திலக மும், சந்திரபிம்பமும் போன்ற முகத்தையுடைய பெண்களும் ஆபரணந்தரிக்கும்படி வளர்ந்திருக்கின்ற காதுஞ் சிவந்த உத டோடுங் கூடிய வாயுமுடைய பெண்களும் சேற்கெண்டைகள் நாணும்படிக்கான நேத்திரமும், வாசனை பொருந்திய முல்லை யிதழ்போன்ற வெண்பல்லுமுடைய பெண்களும், தாமரைக்

கமலமு மஞ்சுகின்ற கைகளும், பச்சை மூங்கிலை யொத்து வளரா நிருக்கின்ற தோள்களையுடைய பெண்களும், இளநீர் போன்ற ஸ்தனங்களுடைய பெண்களும், நிருண்ட மேகம்போல விருக்கிற மயிர்க்கூந்தலோடுங் கூடிய பெண்களிலே மின்னற் கொடியை யொத்த ஐயஇடையை யுடைய பெண்களும் பிரவேசித்தார்கள் எ-று (24)

நள்ளிருணக்குங்குருமணிச் சுடிகை நறுமலர்க் கூந்தன்மேலி லங்க
அள்ளிய வெண்முத்தலங்கல் கொங்கையின்மீ தாடிடக் கந்த ரத்தமருந்
தெள்ளுநீர்ச் சிறந்த செம்மணிப் பதக்கஞ் செந்தழலெஞ்ச செங் கரத்திற்
றுள்ளல் வெண் வயிரத்தொடியுஞ் செம்பவளஞ் சுற்றிடு நங்கையர் சிலரே

இ-ள் பின்னுமந்தப் பெண்களின் பெருமை யெப்படி யென்னில்? அந்தகாரமான விருட்டைப் புசிக்கின்ற சிரோரத்தின சுட்டிகை வாசனை பொருந்திய புஷ்பங்கள் நெருங்குமளக பார நெற்றியிலே விளங்கவும், அள்ளிய வென்றதனால் மிகுந்த வெண்முத்துக்களின் மாலைகள் ஸ்தனபாரங்களின் மீதிலாடிடக் கழுத்திலே பூண்டும், தெளிந்த நிரோட்டமாகிய சிவப்புகள் வைத்தப் பதக்கங்கள் சிவந்த அக்கினிச் சுவாலைபோல மார்பு களிலே பிரகாசிக்கவும், மரகத வளைகளும் வச்சிர வளைகளும் கைகளிலே பிரகாசிக்கவும் எ-று (25)

இன்னிசை நரம்பினோதையு மிளைக்கு மெழின் மடவார்களின் சொல்லும்
மின்னிடையொழியாக் கட்டெனப்பைம்பொன்பட்ட மிட்டிசைந்த கிண்கிணியு
மன்னமு நாணுமணிச்சமும் வருத்துமம்புயப் பதத்திலார்ப் பெழுந்த
பன்னக வடமும் பாடகப் பூணும் பத்திய கோதையர் சிலரே

இ-ள் இப்படிச் சிலபேர்கள் வந்ததும் பின்னுமெப்படி யென்னில்? இன்னிசையாகிய சத்த சுரங்களின் தந்தியோசைகள் இளைக்கும்படி அழகு பொருந்திய பெண்களின் சொல்லுகளும் மின்னற்கொடிபோல மெலிந்த இடுப்பொடிந்து விழுந் திடுவதென்றெண்ணி அதற்குப் பட்டங்கட்டியதுபோல ஒட்டியாணமும் அதிலே தொனிக்கும்படி கிண்கிணிகளும் அன்னப் பட்சி நாணவும் மனிச்சப் புஷ்பம் வருத்தி யுறுத்துமாகிய

மெலிய பாதத்திலே சர்ப்பவெண்டயமும் அதிலார்ப் பெழும்படி பாதசரங்களுங்கட்டியும் இப்படி சிலபேர்கள் எ-று (26)

மதன்முடியொத்த மான்மதக் கொங்கைமாட்டிய விசித்திரக்கச்சு
நதிநனிதிரை போலுடுத்த வெண்டுகிலினறுமலரெனத்தெரி யுடலும்
புதுதுவ ரரும்பும் பொற்கொடி வரம்பும் பூட்டுபுள்ளுத் துகி லொடு
விதம்விதம்வருணத் துகில்களே கட்டும் வேல்விழி மாதர்கள் சிலரே

இ-ள் பின்னுஞ் சிலபேர்களுதித்த தெப்படி யென்னில்? அழகு பொருந்திய மன்மதனுடைய கிரீடமுடியை நகைத்து வந்ததுபோல களபகஸ்தூரி யணிந்த ஸ்தனபாரங்களே யழுத்திய விசித்திரமான கச்சுகளும் நெடிய சலத்திலெ அடுக்காகிய அலைகளைப்போல தரித்திருக்கின்ற வெள்ளை வஸ்திரங்களும், அதினுள்ளே நறுமலரென்னுஞ் செண்பகப் பூவினிறமுடைய சரீரங்களும் பின்னு முல்லை மல்லிகை முதலிய பூவரும்புகளெழுதியதினருகுகளிலே தங்கக்கொடிகள் கட்டிய சேலைகளும் பின்னும் நானுவிதமாகிய பஞ்சவர்ண லட்சண ஆடைகள் தரித்து வேல்போல நேத்திரமுடைய கன்னியர்கள் சிலபேர்கள் பிரவேசித்தார்கள் எ-று (27)

இந்தவாறுதித்த கன்னியர் குலத்தோடிறைவியு மெண்ணியே யினியன்
வந்துபெற்றிடுமில் லறமெனவதற் கிசையவாழிசூழ்ப்புவியடி யார்க்கே
தந்திடமுத்தி வெண்வரைவிட்டுத் தரணியிலிருப்ப போற் குயத்தி
விந்துவெண் முகமு மினிய சிற்றிடையு மிருகரமொடுமவதரித் தாள்

இ-ள் இப்படி அனேகமாயுதிக்கும்போது அந்தக் கன்னியர் குலத்துடனே உமையவள் தனதினியனுகிய பரமசிவன் பூலோகத்திலே இல்லறஞ் செய்வதற் கெண்ணினுரென்று தான் தற்குகந்திருப்பதாகவுஞ் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியிலிருக்கின்ற அடியார்கட்கு முத்திகொடுக்கும்படி கைலாசகிரி விட்டு பூலோகத்திற் குடியிருப்பது போலவும் வசிஷ்ட ரிஷியின் தருப்பையிலே சந்திரவதன முஞ்சிற்றிடையுமிரண்டு புசமும் பிரகாசிக்க அவதரித்தாள் பரமேஸ்வரி எ-று (28)

முந்துதக்க முனியிடத்துங் கிரியிடத்து மெரியிடத்து முவேலைமூன்றுடு
சந்தனப் பொதிகைதருந் தமிழ்மாறன்றன்னிடத்துந் தலைமையாகி
வந்து முல பிரேமமண்ட சராசரங்கள் பகிரண்டமற்று
முந்திமலர்தனின் வைத்தாள் முனிவசிஷ்டன் மகவாகி முன்னுற்றனே

இ-ள் அப்படி உமையவளவதரித்த தெப்படியென்னில்? முன்னாளிலே தட்சப் பிரசாபதியிடத்திலேயு மிமையபருவதராசனிடத்திலேயும், அக்கினிகுண்டத்திலும் மூன்று தலங்களோடு தமிழ்ப்பொதிகைக் கிறைவனான பாண்டியனிடத்திலும் பிறந்தும் அதல்லாமலு மிரேமுபதினுன்குலகமுமண்ட சராசரங்களுமேலண்ட முதலிய மற்ற சராசர சிவாத்துமாக்களும் திருவுந்திக் கமலத்திலே வைத்தின்றவளாகிய பரமேசுவரி வசிஷ்டரிஷியாக தருப்பையிலே அவதரித்து மகளாகி அந்தக் கன்னியர்களுடனே முன்னின்றுள் உமையவள் எ-று. (29)

குவளை விழிக்கன்னியரைப் படைத்தவனவர்கட்கே கொடுப்பக்கொல்
லவரோருவர்க் கொவ்வோரில் படைக்கவென விண்ணுவைக்கோதலாலே
நவநவமாய் நானூறு நாற்றிசையுஞ் சூழ்ந்திடவே நனிநீண்மாட
மவனிதனிலாக்கிய தேவமரர் பதிக்கம்மியனங்கமைப்பபோல

இ-ள் அப்படி உமையவளுடனே குவளையொத்த விழிப்பெண்களை சிருஷ்டித்த வசிஷ்டரிஷியானவர் அந்தந்தப் பெண்களுக்குக் கொடுக்கும்படிக்கு விசாலம் பொருந்திய இவ்விடத்திலே பெருக்கொவ்வொரு வீடு சிருஷ்டிப்பாயென்று காமதேனுவுக்குச் சொல்ல அப்போதே விசித்திர விசித்திர நூதனங்களாகவே நெருங்கிய நீளமாட மாளிகைகள் நான்கு திசையுஞ் சூழ்ந்திடத தேவலோகத்து விசுவகருமன் சிருஷ்டிபோல பூலோகத்திலே நானூறு கிரகங்கள் சிருஷ்டித்தது காமதேனு எ-று. (30)

புனலொழுகுமதிக் காந்தயயக்காந்த மேடைகளும் புனிதநிண
சிலைவயிரப்போதிகை பொற்குமிழ்க்கதவுஞ் சிலைக்கோலத்தேறல்வாயு
மனையதனிலரங்குகளுங் கலங்குமஞ்சமமர்ந்த வுயராட்டாலங்க
டனிவிசும்பிலெழுந்த நெடுங்கொடுகளுமாடுகவிற் றழைக்குஞ்சோலை

இ-ள் அப்படி காமதேநு சிருஷ்டித்த கிரகங்களெப்படி யென்னில்? குளிர்ச்சி பொருந்திய பனி நீர்த்தாரைகளொழுகு கின்ற சந்திரகாந்தப் பச்சைக்கற்களும், அயக்காந்த நீலக்கற் களுமிழைத்த மேடைகளும், அநேக விசித்திரங்களெழுதிய போதிகைகளைத் தாங்குகின்ற நெடிதான வயிரத்தூண்களும், பொற்குமிழ்கள் பதித்த திடம்பொருந்திய கதவுகளும், விசித் திரம் வரைந்தகல் அருகால்களும் மதுரமொழுகின்ற திருவாசற் படிகளும் அதல்லாமல் சிற்றங்கமாகிய உள்ளறைகளுமநேக விஸ்தாரவுள்ளறைகளுந் தொனிக்கின்ற சப்பிரமஞ்சங்களும் உயர்ந்த அட்டாலங்களு மாடிகளுமதிலே சயன சப்பரங்களும் ஆகாசங்களிலே யோங்கிய சிகரங்களுமதில்களு மிப்படிக்காகிய தின் பக்கங்களிலே நெடிய சோலைகள் தழைக்கும்படி தெங்கு கமுகுகளும் எ-று. (31)

நித்தில மூக்கணிந்த நெடுநிலை விழிக்கன்னியரை நிரைமாடத் துள்ளும்
வைத்திடுவதென வெண்ணும் போதங்கோர் மருவல்குல் மங்கையாரு
மெத்த விருந்திடக்கண்டே வினைமுடைத்தந்தணனும் வின்னுறுடிப்பின்
கைத்தலக் குண்டிகையில்லாள் கரத்திந்து வரத்தவர்க்கே களிக்கச் செய்தார்

இ-ள் அப்படி அமைந்திருக்கின்ற திருமாளிகைகளிலே முத்து மூக்குத்திருகணிந்த நில நேத்திரக் கன்னிகைகளை நிரைநிரையாயிருக்கின்ற கிரகத்திலே வைப்பதென்று யெண் ணிப்பார்க்கும்போது விசாலம் பொருந்திய வல்குலையுடைய வொருகன்னிகை அதிகமானது கண்டு இந்த கன்னிகைக்கு ஒரு வரன் எப்படி வருமோவென்று வசிஷ்டரிஷி நிஷ்டையுற்று பரமசிவனைத் தியானித்துப் பின்பு கைத்தலமாகிய தன்கைக் கமண்டலத்தை அருந்ததியிடத்திலே கொடுத்து வரப்பிரே க்ஷணையாகிய சாமமுனிகளை லெமித்துப் பூசித்தலங்கரித்தார் வசிஷ்ட ரிஷி எ-று. (32)

பொன்னாட்டுக் குரவினொடு பொன்னாட்டோர்களும் வருகப் புகன்றே வந்தோர்
மின்னாட்டுத் தலைக்குரவா யதிக்குரவர் வேதியரோ டிறையோராழ்
மன்னாட்டுப்பன்ன கரும்வாறுதன் மங்கையர்களோடு வசிஷ் டன்றன்பால்
சொன்னாட்டு மௌனவந்தே நல்லறத்தின் வழிதொடங்கிச் சொல்லியுற்றார்

இ-ள் அப்படி கன்னிகாதானம் பண்ணிக்கொடுக்க ரிஷிகளை அலங்காரம் பண்ணிய வேளையிலே சகலலோகத்தார்களுக்குஞ் செய்திகளனுப்பி அவர்களும் பொன்னாட்டுக் குரவனாகிய பிரகஸ்பதியுடனே தேவதைகளும் பூலோகத்து ராசாதிராசாக்களும் யதிகளும் ரிஷிகளும் வேதப்பிராமணர்களும் பாதாளலோகத்து ஆதிசேஷன் முதலிய நாகர்களு நாககன்னிகளுமற்று முள்ளோர்களும் வசிஷ்டரிஷி யிடத்துக்கு வந்து சொல்லிய காரியத்தைச் சீக்கிரம் நடப்பித்து இல்லற தருமத்தைச் செய்யவென்று சொல்லி வந்திருந்தார்கள் சகலர்களும் எ-று. (33)

அப்பொழுது விகற்பமறச் சங்கற்பவினைபுரிந்தோ ரந்தணர்க்காய்
செப்புமுலைக்கன்னியருங் கனதனமாளிகையு மீதென்று கூறி
கைப்பிடித்த கமண்டல நீரிறுத்திடுக வருந்ததியுங் கணவனொரு
மிப்படிக்கே யீந்திடும்போ திடையிலுமைக் கரனெழுந்த வெழுவுரைப்பாம்

இ-ள் சுவர்க்க மத்தியபாதாளமென்று மூன்று லோகத்தார்களுடனே அனைவர்களும் வந்துகூடியபோது சாமவேத முனிகளும் விளங்க கன்னிகாதான சங்கற்ப முதலியவேத காரியமெல்லாமருள் செய்து ஒவ்வொரு பிராமணர்களுக்கும் ஒவ்வொரு கன்னிகையுஞ் சுவர்ண முதலிய பாத்திரவஸ்திராபரணங்களுடனே மாளிகையுமொன்றொன்றாகவே யிதுதானென்று வாக்குத்தத்தஞ் சொல்லி தாராதத்தத்துக்கு அருந்ததி கைகமண்டல சலத்தை விட்டுவிட்டு ஸ்திரீ புருஷனாகபாவனை செய்து தானுந்தன் பத்தினியுங் கொடுத்து வந்தார். அப்படிச் சில கன்னிகைகளை தானஞ்செய்தவாறு டைமையவளாகிய கன்னிகையைப் பிடித்துத்தானங் கொடுக்க வசிஷ்டரிஷி யெத்தனஞ்செய்யும்போது அதைவாங்குவதற்காக பரமசிவனெழுந்தருளினார் எ-று (34)

செஞ்சடை மேற்றிரைப்புனலை செந்துகிலாய்த் திங்கள் கதிர் செவிப்பூணாக
நஞ்சுமிழ்வார் நாகமுன்னூலாகவுமே நான்மறை நீறணிந்துக் தண்டா
யெஞ்சியமேனியுங் குனிந்தவிடையோடு வெண்கைகலை யடுத்த சொம்பாய்
வஞ்சியெனக்கெனக் கியுமாமுனியேயென்று வையன்வந்தா னன்னே

இ-ள் அந்த வேளையிலே சிவனெழுந்தருளிய தெப்படியென்னில்? செஞ்சடையாகிய சடாமகுடத்தின் மேலிருக்கின்ற கங்கையை சிவந்த வஸ்திரமாய்த் தரித்துஞ் சந்திரசூரியரை இரண்டு காதிலும் பிரகாசிக்கும்படி கவச குண்டலமாகவும் நஞ்சு களைக் கொப்பளிக்கின்ற நாகத்தை முப்புரி நூலாகவும் நான்கு வேதத்தையும் நீண்ட தண்டமாகவும் எஞ்சலென்னுமிளைத்த சரீரத்துடனே குளிர்ந்த விடையுங் கைலாச கிரியைத்தானே கையிலே யெடுத்திருக்கின்ற வெள்ளிச்சொம்பாகவுமிப்படிக் கான திருக்கோலத்துடனே கன்னிகையெனக் கெனக்கென்றும கொடுக்கவேண்டுமென்று மிருகரகமலங்களை யேந்திக்கொண்டு வசிஷ்டாருந்ததி முன்பாகவோடி வந்தார் பரமசிவன் எ-று (35)

இப்படியேயிருகா பேந்தியவையன் வரக்கண்ட வெழிலுந்தன் பால
கப்பனிக்கன்னியினெ ழிலுங்கற்பி னருந்ததியறிந்து கரங்கா லுங்ன
மப்புவியிற் றரியாம லடுனடுங்கி மாமுனியையமர்த்த வன்னுன்
எப்புவியு மிசைந்தபிரானெழுந்தன னென்றே யீந்தானிமை யோர் காண

இ-ள் அப்படி யிருகரங்களு மேந்திக்கொண்டு பரம சிவன் வந்த கோலமுந்தன் பக்கத்திலே களபகஸ்தூரியணிந்த உமையவளாகிய கன்னிகையின் றிருக்கோலமும் கற்பு மிகுந்த அருந்ததியானவள் கண்டு கைகால் நடுங்கி பூமியிலே தரியாமல் உள்ளத்திலே களிகூர்ந்து மாமுனியாகிய வசிஷ்ட ரிஷியை கையமர்த்தினள். அப்படியமர்த்தியது கண்டறிந்து எப்புவியு மாகிய வெங்கவுலகும் அண்டசராசரங்களிலு மிசையாநின்ற பரமசிவனென்றும் இவ்விடம் வந்தெழுந்தருளினரென்றும தேவர்கள் முதலிய மற்றோரு மறியும்படி கன்னிகையைப் பரம சிவனுக்குத் தானங்கொடுத்தார் வசிஷ்டரிஷி எ-று (36)

அசனவன முனியளித்தவம் மானை வலத்தினின் வைத்தன று தாருகா
வசதிவன முனியளித்தவ மானை யிடத்து வைத்து மழுவு மேந்தி
வசலையுற வழைத்தபிரதன ளித்தவின் மானை சடைமேல்வைத் தெதண்
டிசையா நெடும்புடை சூழ வெழுந்தனரே மழவிடை மேலிறைவ வெம்மான்

இ-ள் அப்படி மூன்று லோகத்தோரு மறிந்திடும்படி கன் னிகையை தானம் வாங்கிய பரமசிவன் அசனவன முனியாகிய

வசிஷ்டரிஷி கொடுத்தமானாகிய கன்னிகையை வலப்பாகத்திலே வைத்து முன்னாளில் தாருகாவனத்து ரிஷிகளனுப்பிய வலிமையாகிய கொம்புடைய மானை யிடது புறத்திலே வைத்து, மழுவும் வைத்து பின்னும் தீவினைகளகற்றும்படி பூமியிலே பகீரதன் கொணர்ந்த விண்மானாகிய கங்கா நதியை சடாபாரத்திலே வைத்து எண்டிசையதிபாரகிய யிந்திராதிதிக்குத் தேவர்களும் புடைசூழ்ந்திடும்படி ரிஷபவாகனத்தின் மேலெழுந்தருளினார் பரமசிவன் (எ-று) (37)

வேறு

சாமவேதமே தந்தவந்தணர்களுக்குதவும்
யேமநேம முற்றந்தணனிங் கதுகண்டே
வாமதக்கணம் வந்தடி பணிந்துவாய் புதைத்து
சோம சேகரர் சோதியே யென்றவன் றுதித்தான்

இ-ள் சாமவேதாற்பன்ன ரிஷிகளாகிய பிராமணர்களுக்கு இயமநியமத்துடனே கன்னிகாதானஞ் செய்கின்ற வசிஷ்டரிஷி யிப்படி பார்வதி பரமேஸ்வரர் ரிஷபாரூடராக வெழுந்தருளக் கண்டவுடனே பிரதட்சணப் பிரதட்சணம் பண்ணி அடிபணிந்து வாய்புதைத்து சோமசேகரர் சோதிப் பிரகாசனே யென்று போற்றி செய்தான் வசிஷ்டமுனி எ-று. (38)

மங்கை பெற்றவன் வசிஷ்டனுக் குளமகிழ்ந் துரைப்பான்
பங்கயன் முதன் மூவருக்குமைவருக்கும் பன்னொன்றுனா
அங்கதற்கு மெட்டினுக்கும் ஐம்பத்தாறுன தற்கும்
நங்கைகொண்ட நானூற்றுக்கு மியாறென்றேயாமே

இ-ள் அப்படிப் போற்றி செய்யும்போது மங்கையைப் பெற்றவனாகிய பரமசிவன் சொல்லுவார் பிரமதேவன் முதலிய திரிமூர்த்திகளுக்கும் பஞ்ச கர்த்தாக்களுக்கும் அஷ்டதிக்குப் பாலர்களுக்கும் ஏகாதசருத்திரர்களுக்கும் ஐம்பத்தாறு தேசத்து இராசாக்களுக்கும் நானூற்றவருக்கும் யாறென்றாக விருந்தோம் வசிஷ்டரிஷியே யென்று பரமசிவனருளிச் செய்தார் எ-று (39)

என்றுரைத்தவ ரெமக்கொருவில்ல மீங்களித்துக்
குன்றெனு முலைமங்கையைப் பிரதிக்கிரகங் கொண்ட
மன்றினுக்கு சது சூசதேகனனெனும் வைத்துத்
தொண்டு செய்திடுவீரெனச் சோதிவிண் மறைந்தார்

இ-ள் அப்படி அருள் செய்தவர்பின்னுமெப்படி என்னில் இந்த நானூறு கிரகங்கொடுப்பதிலே யெமக்கொரு திருமாளி

கைக் கொடுத்து பருவதம் போன்ற ஸ்தன பாரங்களையுடைய கன்னிகையை யாம் பிரதிக்கிரகங் கொண்டபடியினாலே இந்த சபையில் பிரதிக்கிரகேசனென்னுஞ் சதுரூச தேகனென்றும் பெயர்விளங்க தோன்று செய்வாயென்று சோதிப்பிரகாசமான பரமசிவன் சொல்லிமறைந்தார் எ-று (40)

வேதனோடு தண்புவியுறு மற்ற வேதியர்க்கு
மீது வீசனுக்காவின் லெயிலில்ல முதவி
மாதவனுள மகிழவர்ச் சித்திறைஞ்சியுமே
காதலுற்றவம் முனிவர்களொடுங் கலந்திருந்தான்

இ-ள் பிர்மதேவனுடனே பூலோகத்திலே வந்த சாமவேத முனிகளிலே முன்தானங் கொடுத்ததன்றிப் பின்னுமிருக்கின்ற முனிகளுக்குங் கன்னிகை தானங்கள் செய்து பரமசிவனுக்கு காமதேனுவினாலே மதில் கோபுர மாளிகை மண்டபங்களுஞ் சிருஷ்டிக்கச் செய்து மாதவனாகிய வசிஷ்டரிஷி மனங்களி கூரப் பூசித்து ஆசையுடனே அந்த சாமமுனிகள் இல்லறத் தோடுங் கிரகஸ்தாச்சிரமர்களாய்த் தானுந்தன் பத்தினியுடனே நிஷ்டையாகாதி யெக்கியங்கள் செய்துகொண்டிருந்தார் வசிஷ்டரிஷி எ-று (41)

நானூற்றொருவர் சருக்கம் முற்றிற்று.

# வசிஷ்டர் மகிமை சருக்கம்.

நேமிய முதக்கடங்கணிறைந்த சினைக்கற்பகத்தினிழல்
வேந்தன்
காமியவளுலகுக்கு வசிஷ்டன்றனை யழைக்க மன்னனுறும்
பூமியசனாரணிய புனிதமுனி நானூற்றுப் புண்ணியர்க்கும்
நேமியரங்கத் துதித்தவவனருள் நீங்கள் பெறுவீரென்று
சென்றான்

இ-ள் திருப்பாற்கடலிலே கடைந்தெடுத்த அமுத கலசங்களை மிகுத்து வைத்திருக்கின்ற தேவலோகத்துக்கு வேந்தனாகிய தேவேந்திரனுடைய காமியென்னுஞ் சுவர்க்காதேவி தன்னுடைய வுலகுக்கு வரவேண்டி வசிஷ்டரிஷியைப் பிரார்த்திக்க அவரும் அங்கே போகவேண்டி பூலோகத்திலே அசனாரணியத்தில் தானம் வாங்கிய நானூறு ரிஷிகளுக்குஞ் சொல்லிக்கொண்டு உங்களுக்கு நேமியென்னு மகாவிஷ்ணு ஸ்ரீரங்கமென்கிற காவிரி இரண்டாற்று நடுவிலே பிரசன்னமாகி அனுக்கிரகஞ் செய்யப் பெறுவீர்களென்று தேவலோகமே சென்றார் வசிஷ்டமுனி எ-று (1)

விண்ணுலகத் தமரர்குழா மிறையிடத்து மறையிடத்தும்
வேதனுடோ
டெண்ணிடத்து முடுவிடத்து மிழிந்தபடி யிடத்தெங்கு மிருங்
குங்காலை
தண்ணிடத்து மெழுந்தபனிவரையிடத்துஞ் சதுமுகத் தாண்ட
யுக நான்கு
நுண்ணிடத்துந் தவமுறும் விண்கண்ணிடத்து நோக்கும்
விசுவாமித்ர வென்றே

இ-ள் அப்படி தேவலோகத்திலே தேவர்கள் சபையிலும் தேவேந்திரனிடத்திலும் சென்ற வசிஷ்டரிஷி தன்னுடைய தாபோபலத்தினாலே நான்கு வேதத்திறையாகிய பிரமதேவனிடத்துக்கும் பின்னும் உடுவாகிய நட்சத்திரவுலகு முதலான மற்ற நவக்கிரக உலகங்கள் ரிஷியுலகங்களுக்கும், பாதாளவுலகு முதலான ஏழேழுலகங்களுக்கும் இப்படியெங்கும் வியாப்பியமாக விருக்கின்றார். அப்படியிருக்கிற நாளையிலே தண்ணிடமென்

னுஞ் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்திலே உயர்ந்தெழும்பிய இமைய பருவதத்துச்சியிலும் நான்கு திக்குகளிலும் நாற்பதி னுயிர வருஷம் நுண்ணிடமாகிய ஊசிமுனையிலே பஞ்சாக்கினி மத்தியாக இருந்துகொண்டு ஆகாசத்தை நோக்கி விசுவாமித்ரன் அரிய தவசுகளைச் செய்தான் எ-று. (3)

நான்மறையு முணர்வசிஷ்டனென் மறையோனெனக்கவுசி நவிலக்
கொண்டு
வானுலகுற்றமரர் குழாமதிற்பெரிதும் யான்ருனே வசிஷ்டனே
வென
றின முறவெவ்வாது புரிந்திடலு மீது பகுத்துரைக்க விஞ்சைக்
காவரும் வானவருங் கண்டிலமென்றிட முனியைக்கான்கன்
கேட்பான்

இ-ள் அப்படி அரிய தவசுகளைச் செய்து விசுவாமித்ர முனி வசிஷ்டருடைய வாக்கினலே நல்ல பிராமண ரிஷியென்று சொல்லப்பெற்று வானுலகாகிய தேவலோகமே சென்றிருக்கிற நாளையிலே தேவசபையிலே ஒருநாள் யான் பெரியவனே அந்த வசிஷ்டன் பெரியவனேவென்று கிந்தனையாக அனேக தபோவாதுகள் செய்து இதைப் பிரித்துரைப்பீர்களென்றுன், அப்படி விசுவாமித்திரன் சொல்லக்கேட்ட தேவாதிகளும்கின்னர சித்த வித்தியாதரர்களு மெங்களாற் சொல்ல முடியாதென்றார். பின்பு தேவேந்திரன் அறிந்து சொல்லுவான் எ-று (3)

இருதிறத்து மீங்குரைப்பீரென்ற வலாரிக்கிருடியிரங்கிச் சொல்
வான்
றரு நிழலான் பூசிக்கும் சனபதிதனைத் தொழுதுஞ் சகங்க
ளுண்ட
கருமுகில் வண்ணக் கடவுடனைப் பணிந்துங் கங்கைநதி தன்னைக்
கண்டுஞ்
சுருதிமு கன்கடம்பெற்றும் வேள்வியுற்றே யானெழுத்துச்
சொல்லப் பெற்றும்

இ-ள் அப்படி தேவேந்திரனுனவன் உங்களுடைய இருவர் திறமைகளும் இந்த சபையிலே உரைப்பீர்களென்று சொல்லக் கேட்டு வசிஷ்டரிஷி சொல்வார், அதெப்படி யென்னில் கற்பக விருட்சத்து நிழலிலே வாசமாயிருக்கின்ற காமதேனுவாலே பூசிக்கின்ற அசனுரணியபதி பிரசன்னமாகி பஞ்சாட்சரத்திரு மந்திரவுபதேசம் பண்ணப்பெற்றும் மகாவிஷ்ணுவினலே அஷ்டாட்சரம் பண்ணப்பெற்றுங் கங்காநதியைப் பூலோகத்தில் அசனுரணியத்தில் வரவழைக்கப்பெற்றும் பிரம்மதேவனுடைய

கமண்டலத்தைக் கையிலே தரப்பெற்றும் காமதேனுவாலே சகலசாம்பிராச்சியங் கொடுக்கப் பெற்றும் அனேக தபோநிஷ்டைகள் செய்யப்பெற்றும் பின்னும் எ-று (4)

மும்மலமுமகற்றி முனைவழிதிறந்து முச்சுடரின் மூலமுற்று
நிர்ம்மல நிர்க்குணவகண்டபே ரொளியாயொளியில தாய் நிஷ்டையுற்றுந்
தன்மயத்திலுகங்கணமாய்க்கணம்யுகமாய்ச்சாதித்தேதற்பரைக
ளும்மறுபான் விநடியது நாடியதுயோகத்தின் மூவைந்து பட்சம்

இ-ள் வசிஷ்டரிஷி பின்னுஞ் சொல்வதெப்படியென்னில்? மும்மலங்களையகற்றி சுழுமுனை வழிதிறந்து முச்சுடராகிய சந்திர சூரியாக்னி மண்டலத்திலே விளாங்கா நின்ற சித்சுரூப முற்றுமதிலே நிருமல நிர்க்குண நிரஞ்சன நிருவிகற்பமான அகண்டா காரமாயும் பேரொளியாயும் ஒளியிலதாயுந் தன்மயமாகி அந்தமயத்திலே நிற்கின்றபோது அனேகயுகங்களெல்லாமொரு க்ஷணமாயும் அப்படிக்கு வருகிற க்ஷணங்கள் தானே அனேகயுகங்களாயுஞ் சாதித்தோமப்படிக்காகிய காலங்கள் இமைகொட்டுமுதலான அறுபது தற்பரைகள் கொண்டது ஒரு விநாடி. அப்படி அறுபது விநாடி கொண்டது ஒரு கடிகை அப்படி அறுபது கடிகைகொண்டது ஒரு நாள் அப்படிக்கான நாள் பதினைந்து கொண்டது பட்ச மென்றுஞ் சொல்வார் எ-று (5)

பக்கமிரண்டுறத் திங்களிரண்டிருதுப் பகுத்தமூன்று
வொக்கு மயனம் பரிதியூர் திரும்புதலு மிரண்டோராண்டென்னுந்
தக்கவது வமரர்க்கேயோர்தினமாமத்தினத்தாற்சதமாண்டாகத்
திக்குபதி யிந்திரனே னின்வேறு னின்னிரேழ் சேர் நாளோன்றே

இ-ள் அப்படிக்கூடிய பட்சமிரண்டுதானே ஒரு மாதமாகும். அம்மாத மிரண்டுகூடியது இருதுவாகும். அவ்விருது மூன்று கூடில் மகமேருவை வலம் வருகிற சூரியனுடைய ரதந் திரும்புகிற அயனமொன்றாகும். அப்படி வீதிதிரும்புகிற அயனமிரண்டு ஒருவருஷமாகும். அந்த வருஷமே தேவர்களுக்கு ஒரு நாளாகும். அந்நாள்கள் ஒருவருஷமாகி நூறு வருஷங் கொண்டது நினபட்டமும் ஆதிபத்தியமும் புறண்டு வேறுபடும்படி உன்னைப்போலவே பதினான்கு தேவேந்திரபட்டங் கொண்டதே ஒரு பகலாகக்கண்ட பிரம்மதேவனுடைய கற்பம் எ-று (6)

அந்நாள்கொள் சதுர்யுகத்தாயிரத்தினிரட்டிக்கும் மயனுக்கோர் நாள்
தன்னிலுதித்த கலைவாணியெமதா யெனவே சாற்றும் வேதம்
அந்நான்கு முணர்ந்தவையா மஃதறிவீரெனவ மராங்கிற் சாத்த
வென்றனும் சனபதிஇதய முளவதிஷ்டனுரை ஏற்றவேந்தன்

இ-ள் அப்படிக்காகிய பிர்மதேவனுக்கு இரண்டாயிரஞ் சதுரயுகங்கொண்டது ஒருநாள். அந்தநாள் பெற்ற பிர்ம தேவன் தன்னிலே வைத்திருக்கின்ற சரஸ்வதி தேவியே என்னுடைய தாய் என்று சொல்லும் வேதங்கள். அப்படிக் காகிய நான்கு வேதங்களையாம் அறிந்துணர்ந்தனமோ தேவர் கள் சபையிலே வசிஷ்டர் சொல்லக் கேட்டான் தேவேந்திரன் எ-று. (7)

உளநடுங்கி கோதமனலன்று பெற்றதொக்கு மென உணர்ந்தானும்
களம்பணிந்திவ்வாது புரிந்தருளுமென சற்குருவும் கௌசிதன்னை
விளம்புமென வதற்கவனும் வெகுண்டுரைப்பானிரவிகுலத்திரிசங்கென்னும்
வளமரசன்றனக்காக வமரர் முதலிய குருவும் வருத்தேதம் பின்னும்

இ-ள் அப்படி வசிஷ்ட முனி சொல்லக்கேட்ட தேவேந் திரன் உளம் நடு நடுங்கி, முன்னாலே கௌதம ரிஷி சாபத்தாலே பீஜமிழந்து ஆயிரம் யோனி பெறும்படி சாபம்பெற்றதுபோல வாகுமோவென்று எண்ணி நம்மால் தீர்க்கமுடியாது நமது உல கத்திற்கு சிரேஷ்டமாகிய குருவென்னும் பிரகஸ்பதியைச் சொல்லச் செய்வோமென்று அவரைப் போற்றிசெய்து இந்த முனிவர்களுடைய வாதுகளைப் பிரித்திட வேண்டுமென்றான். அப்படி வியாழபகவானும் கௌசிகனும் தடாகதீர்த்தத்திலே தபசு செய்து மகிமைபெற்ற விஸ்வாமித்திரனைப் பார்த்து உம் முடைய திறமையைச் சொல்லுக வென்றார். அந்த வேளை யிலே அவரும் அதிக கோபங்கொண்டு சொல்வார் முன்னாலே யான் இமயகிரி பர்வதத்துத் தென்புறத்திலே தவசுசெய்யும் போது சூரிய குலத்தரசனாகிய அரிச்சந்திரன் தகப்பன் திரி சங்கு என்பவனை ஸ்தூல சரீரத்துடனே ஸ்வர்க்கலோகத்துக்கு அனுப்பியபோது தேவர்கள் பூமியிலே தள்ளிவிட அந்தரத்தில் அவன்வரும்போது எமக்கபயம் என்ற வேளையிலே ஆங்கு தேவலோகமும் தேவர்களும் அதிபனாகிய தேவேந்திரனும் பிர கஸ்பதியும் மற்றுமுள்ள நக்ஷத்திரங்களும் சிருஷ்டித்து உலகு

செய்தோமென்று பின்னுஞ் சொல்வார் விஸ்வாமித்ரமுனி
எ-று (8)

அரிச்சந்திரனெனு மரசுக்காயழலந்த கனேப்பாழாய்ச் செய்தோம்
புரத்திந்திரன் பிஜமிழக்கப் பெற்ற அகலிகைக்கல் பெண்ணாய்ப் புக்கு
வரத்தந்தராகவனுக் கரக்கர்குல மாற்றவிஞ்சை தனேயுரைத்தோம்
உரைத்திடுவீரெனப் பெரிதென்றே தின்னம் முனிக்காசனுக் குரைக்கலானன்

இ-ள் பின்னும் எப்படியென்னில்? அரிச்சந்திரனென்னும் சத்தியமுடையோனுக்காக அக்கினிபகவானேயும், ஏம தருமராஜனேயும், சுக்கிரபகவானேயும் ஏவற்குரித்தாகச் செய்தோம். அதல்லாமல் பீஜமிழக்கும்படி சாபம் பெற்ற தேவேந்திரனிச் சித்த அகலிகைப் பெண்ணே கல்லாக்கி அந்தக் கல்லேப் பெண்ணுருவமாகச் செய்த பாத தூளியுடைய ஸ்ரீராமனுக்கு ராக்ஷஸ குலங்களேச் செமறுக்கும்படி தனுர்வேதவித்தை அனேகமுரைத்தோம். அதல்லாமலும் பூலோகத்திலே அனேக உக்கிரதபசுகளேப் பெற்ளும். ஆதலில் பெரிதறிந்துரைப்பீர் என்ருர். அதற்கு வியாழபகவான் அறிந்துரைப்பான்
எ-று (9)

மூவுலகும் தாங்குகின்ற முடியனந்தனதை விளக்கமுற்றுன் பானு
காவியனற்கனக பொதிக்கயிலேயினுக் குருமுனிவன் கண்டாளிந்த
மூவரும்வந்திட உரைப்பேரமெனவதற்குக் காதிமகன் முனிந்துகூறும்
யாவுமிங்கே வரசெய்வனென வவணிங்கி சென்றான் செங்கிரணலோகம்

இ-ள் வியாழனுரைத்ததெப்படியென்னில்? மூவுலகென்னுஞ் சுவர்க்க மத்தியபாதாளமென்னு மூன்று லோகங்களேயும் அதிலுள்ள சராசரங்களேயுந் தாங்கியிருக்கின்ற அனந்தனுகிய ஆயிரமுடியுடைய ஆதிசேஷனும் அப்படிக்காகிய வுலகங்களேப் பிரகாசிக்கச் செய்கின்ற சூரிய பகவானும் தென்கைலாயமாய் மைத்தருளிய சுவர்ணமயம் போன்ற பொதியமலேக்சேனும் தமிழ் குருமுனி யென்னும் அகஸ்திய மகாரிஷியும் இந்த மூன்று பேரும் இந்த தேவ சபைக்குப் பிரகாசித்தெழுந்தருளச் செய்தால் யாம்பிரித்துரைப்போமென்ருர். அப்போது விசுவா

மித்திரமுனி யிதோ யாமிங்குரைச் செய்விப்போமென்று அந் தட்சணமே சூரியவுலகத்துக்குச் சென்றார் விசுவாமித்திரன் எ-று (10)

நின்றறியாவோராழியூர் தியோஜன நிமிடமமருலகு பெறுநிரே யென்று
னென்றவதற் கையைந்து கோடிநீள்விண் ணிதுட்சநிதா ரகை யையங்கோ ளின்னு மற்றும்
பன்னு பொன்மே ருவைச்சுழலத் துருவப் பாசம் பற்றியதால் கணமொழியா தேகப் பார்த்து
வன்றுதமிழ்ப் பொதியமுனியிடத்துச் செல்லவவனருக்கியங் கண் முதலளிக்கப் பெற்றே

இ-ள் அப்படிச்சென்ற விசுவாமித்ரமுனி யாதொரு காலங் களிலும் நிலைமைபெறுத ஒற்றைவண்டிக் தேரோனுகிய சூரிய னைப் பார்த்துச் சொல்வான். அமருலகாகிய தேவசபைக்கு நீரெழுந்தருள வேண்டுமென்றார். அதற்கு சூரியன் சொல்லு வார் சூரிய மண்டலத்துக்கு மேலே இருபந்தைந்து கோடி யோசனை தூரமாகாசம். அப்பாலண்ட பித்தியதற்குள்ளடங்கிய சந்திரமண்டலம் இலட்சம் யோசனை அப்பால் லக்ஷம் யோச னைக்குமேல் நட்சத்திரமண்டலம். அப்பால் பத்து லட்சம் யோசனை வரையில் பஞ்சக் கிரகங்களின் மண்டலம். அதற்குள் அனேகமாகிய சத்தரிஷி மண்டலம் பதவி பெற்றோர் மண்டலம் அதன்மேல் துருவமண்டலம். அத்துருவராசன் பாச வலை யில் அகப்பட்டு பழமையாகிய மகமேருபருவதத்தைச் சுழன்று சுழன்று வலம் வருகிறதால் க்ஷணமொழியாதென்று சொல்லி நிமிஷத்துக்கு லட்சம் யோசனை தூரஞ்சென்றார். அதுகண்ட ரிஷி அகத்திய முனியிடத்துக்குச் சென்றார். அவ்விடத்திலே அகஸ்திய மகாதவமுனி நமது பால் வந்தாலென்று அருக்கிய பாத்ய உபசாரம் பண்ணினர் எ-று (11)

வியனுலகத் தமரர்குழா முர்மையிங்கு மேவவுரைத்தன ரென் றாதற்க கத்தியன்
கயிலையதிபன் மணத்திலிமவான் சுற்றங்களவரை முதலியா வுங் கலுழுனார்தி
யய்னுேடமரர் களனைத்தாங்கே கலங்கமகண்டயோ சனையவனி நவகண்டத்து
மபல்கவிய வெமைமாலீங்கே வவங்தோ மறுத்து வரலவனி யொருக்களிக்குமென்றார்

இ-ள் அப்படி உபசரணைபெற்ற விசுவாமித்திரன் அகஸ் திய மாமுனியை வியனுலகாகிய தேவசபைக்கு வரும்படிக்குச்

சொன்னார். அதுகேட்டு அகஸ்தியர் சொல்வார். கைலாசகிரி யென்னும் வெள்ளி மலைக்கு அதிபதியாகிய பரமசிவன் திருக் கல்யாணத்திலே இமயவரை யென்னும் பனிமலை மகள் முதல மாகிய சத்தகுல பர்வதங்களும் மகமேரு மந்தரகிரியும் மற்று முண்டான மயினுக பர்வதத்துடனே சகல மலைகளுங் கூடிவரு கிறதுமல்லாமலும் கருடாரூடனும் அமரசாரூடனும் அனேக தவரிஷிகளுந் தேவாதியட்சகின்னர சிந்தவிந்தியா தாரகவனி வரகரும், அந்த திருக்கூட்டம் கூடியபோது லட்சம் யோசனை விசாலம் பொருந்திய விந்தத்திவு நவகண்டங்களுமொருபக்க மாய்ப் பாரம்பெற்று கவிழ்ந்து போவதாகவிருக்கும்போது திரு மாலாகிய மகாவிஷ்ணு ஏவினர். அப்போது இவ்விடத்துக்கு வந்தோம் இப்போது யாம்பிரவேசித்தால் அவனியாகிய பூலோகமொருக்களிக்குமே என்றார் எ-று (12)

அவ்வுரை கேட்டரிய தவனரவுலோக மண்டியவரைத் தொழு
தாங்கேகவென்றுன்
செவ்விமணி முடியனந்தன் திசைமுகத்தோன் செய்திறமிவ்
வண்டத்துட் செனித்தனுால
நவ்வில் வரையிலக்கம் யோசனைசேனுற்ற நற்குலந்தாங்கிய
நாவற்றீவுலக்கம்
பவ்வமதைச் சூழிலக்கமிரண்டு லக்கம்பலட்சத்தீவதைச் சூழு
மிகுதிப்பாலே

இ-ள் அப்படிச் சொல்லக்கேட்ட விசுவாமித்திரன் பாதாள லோகத்துக்குச்சென்று ஆதிசேஷனைத் தொழுது நீர் தேவ சபைக் கெழுந்தருள வேணுமென்றான். அப்போது செவ்வி மணியாகிய சிவந்து அழகுபெற்று பிரகாசம் போன்ற சிரோரத் தினங்கள் விளங்காநின்ற ஆயிரமுடியுடைய ஆதிசேஷன் சொல்வார் திசைமுகத்தோனுகிய பிர்மதேவனாலே சிருஷ்டிக் கின்ற இந்த அண்டத்துக்குள்ளே செனித்திருக்கிற சராசரங் கள் வாசமாகிய பூமியிலே குற்றமற்ற மகமேருகிரி இலட்சம் யோசனை உயர்ந்தெழும்பி யிருக்காநின்ற பருவதத்துடனே சத்தகுல பர்வதங்களுமற்று முண்டாகியதுமிருக்கும். நாவலந் தீவு இலட்சம் யோசனை அதைச் சூழ்ந்து வளைந்திருக்கிற உப்பு சமுத்திரம் லக்ஷம் யோசனை யதைவளைந்திருக்கும் பலட் சத்தீவு இரண்டு லட்சம் யோசனையதைச் சூழ்ந்திருக்கின்ற கருப்பஞ்சாற்றுக் கடலிரண்டு லட்சமியோசனை யென்று பின்னுஞ் சொல்வார் எ-று (13)

நாலிலக்கங் குசத்திவுங்களுச்சாறு நாலிரண்டேயிலக்கம்
தாங்கிருவுஞ் சவட்டம்
சாலவுநெய்கடலி ரெட்டிலக்கங் கிரைதனைச் சுற்றுந்தயிரத்தின்
மேற்சான் மலிக்கிய்
கோலநெடு வெண்ணூன்குவிலக்கம்பாலே கொண்டதன் மேற்புட்
கரதிவதனைச் சூழ்ந்த
சீலசலமெட்டெட் டெயிலக்கந்தீர்ந்தோஞ் செப்பியவத்திரட்
டித்துப் பொன்னே சேரும்

இ-ள் அப்படிச் சொல்லிய கருப்பஞ்சாற்றைச் சுற்றி நான்குலக்கமியோசனை விசாலங்குசத்திவு, அதின்மேல் அவ்வளவு சூழ்ந்திருக்கின்றது களுச் சமுத்திரம். அதைச் சூழ்ந்திருக்கின்றது எட்டு லக்ஷம் யோசனை விசாலம் கிரவுஞ்சத்திவு. அவ்வளவு விசாலம் நெய்சமுத்திரம். அப்பால் அதன்மேல் பதினன்கு லட்சம் யோசனை அகலம் சாகத்திவு. அதைச் சூழ்ந்த தயிர்க்கடலவ்வளவாகும். அதின்மேல் முப்பத்திரண்டு லட்சம் சான்மலித்திவு. அவ்வளவாகும் பாற்கடல். அதின்மேல் புட்கரத்திவு அறுபத்துனன்கு லக்கமியோசனை விசாலமதைச் சூழ்ந்திருக்கின்ற சுத்த ஜலசமுத்திரம் அவ்வளவாகும். அதை இரட்டித்த நூற்றிருபத்தெட்டு யோசனை லட்சந் தூரமுள்ள சுவர்ண பூமியாகும். இப்படியான பூமியினப்பால் பின்னும் எ-று (14)

மற்றவுழிகர்த்துத கமண்டபித்தி வாய்த்தவொரு கோடியா
மந்தா கார
முற்றவைம்பான் கோடியோசனை மிவ்வண்ட முனைத்தமண்ணுக்
கொருபானீரதற்குப்பத்தே
கற்றையழலதற்கொருபான் காலேயாது கண்டவின்னு
மொருபத்தாய்க் கலந்து நிற்கு
மற்றுமுயிரனைய சராசரமுமெந்தன் மணிமுடியிற்றுங்குதும்பா
மகல்பே மென்றுர்

இ-ள் அப்படிச் சொல்லிய பூமிக்கப்பாலே அளர்பூமியாகவிருக்கும் அப்பால் கோடியோசனை அகலமுள்ளது அண்டச்சுவராயிருக்கும். அதினுள்ளே சிலவிட மந்தாகாரமாக சூரியன் பிரவேசியாமலிருக்கும் இப்படிக்கெல்லாஞ் சூழ்ந்திருக்கின்ற விசாலம் ஐம்பதுகோடி யோசனை தூரமுள்ளது. இப்படியுதித்தவிந்த அண்டத்திலே யிருக்கின்றது மண் ஒரு பங்கும் தண்ணீர் பத்து பங்கும் அங்கினி நூறுபங்கும் காற்று ஆயிரம் பங்கும் ஆகாசம் பதினுயிரம் பங்குங் கலந்திருக்கும். அப்படிக்

காரிய வஸ்துவுள்ளே உற்பத்தியாகிய மலை விருட்ச முதலிய சரா
சர சீவாத்துமாக்களும் எந்தனுடைய சரீரா பாரமாயிருப்பதி
னாலேயான் எப்படி வருகிறதென்றானாதி சேஷன் எ-று (15)

அந்தமூவரை கேட்டவ்வமரர் மன்றுற்றே
மைந்தகத்தொடு தூக்குதும் விளக்குது மறுப்ப
துந்தனைக்கொணர்ந்தி டிவ்வுலகனைத்துந் துஞ் சிடுமென்
றந்தகாலமம் மூவரிங் கணைய வென்றறைந்தான்

இ-ள் அப்படிச் சொல்லிய ஆதிசேஷன் முதலிய மூன்று பெயர்களுமுரைக்கக் கேட்ட விசுவாமித்திரமுனி தேவ சபைக்கு வந்து ஆயிரமுடியுடனே பூலோகத்தைத் திடத்தினாலே தாங்குகிறதும் அதை ஆயிரங் கிரணங்களுடனே பிரகாசிக்கச் செயகிறதுமாயிரஞ் சடாபாரத்துடனே மறித்திடுகிறது மிப்படிக் காகியவர்களை யிங்குக் கொணர்ந்தோமாகில் எவ்வுலகங்களு நாசமாய் விடுமாதலால் யுகாந்த காலங்களிலே அந்த மூவர்களு மிங்கு வருக எ-று (16)

காதிமைந்தனுங் கனகமாமன்றினிற் கறந்த
சேதியாவையும் வசிஷ்டனுங் கேட்டுவந் திறந்து
வாதியான் கொணர்வேனெனக் கிளர்ந்தி விண்சென்று
சோதியாதவன் றன்னுழி கண்டு சொற்றனனால்

இ-ள் தேவசபையிலே அப்படி விசுவாமித்திரமுனி சொல்லிய யாவையும் வசிஷ்டரிதை கேட்டு உளங்களிகூர்ந்து அந்தச் சபையிலே யான் கொணர்ந்து விடுகிறேனென்று சொல்லி பிரகாசம் பொருந்திய சூரிய லோகத்துக்குச் சென்று தேவ சபைக் கெழுந்தருள்வீரென்றார் வசிஷ்ட முனி எ-று (17)

தூயவம்மொழி கேட்ட ஞாயிறுசுரர் வினையாற்
பாயல்விண்ணிமைக் கனேகயோசனை யெனப்பரக்குந்
தேயம்விட்ட கன்றிடத் திறஞ்செய் யெனவம்முனி
ஞாயிறே யெனக்காதணி வைத்தனன் ரதத்தில்

இ-ள் வசிஷ்டரிஷி சொல்லக்கேட்ட சூரிய பகவான் சொல்லுவார் தேவ காரியத்தினாலே யிமைகொட்டு நேரத்துக்கு அனேக யோசனை தூரம் பரந்தோடுகின்ற இந்த மண்டலத்தை விட்டுப் போவதற்குபாயஞ் சொல்ல வென்றார். அப்படிச் சொல்லக் கேட்டு வசிஷ்டமுனி தன்னுடைய கவசகுண்டலத்தை சூரியப் பிரகாசமாக விருக்க வென்று இரதத்திலே வைத்திட்டார் எ-று (18)

பானு காந்தியாயிரத்தின் மேற்பறந்திடப்
பானு வோனுட்டந்தண்ன் கும்பமா முனியிடமுற்று
வானுலாவ வென்றழைந்திட வத்திறமதற்குத்
தானுகந்த பொற்கடத்தையே வைத்தனன்றாணி

இ-ள் கவச குண்டலத்தை சூரியனுடைய ரதத்திலே வைக்கும்போது சூரிய காந்தியாக நிமிஷத்துக்கனேக தூரம் பறந்து லோகமெல்லாம் பிரகாசிக்கும்படி நடந்தது அது கண்டு சூரியனுடனே வசிஷ்டமுனியும் அகஸ்தியரிஷி பொதிகை மலையிடத்துக்குச் சென்று தேவசபைக்குச் செல்க வென்றழைக்க அவருமிந்த பூமி பாரங்கவிழ்க்காமல் தட்சிண கைலாசம் போன்றிருப்பதற்குக் கேட்டமையால் தன்னுடைய கைக் கமண்டலத்தை அங்குவைக்க பாரம் ஒத்திருப்பதுகண்டு அவருடனே பின்னும் எ-று (19)

கும்பமுனியோடதரா ரவுலகுக் கிட்டியேவாய்
கும்பர் நாடுறவென்றதற்கத்திற முதவக்
கம்பமீந்து எவ்வுலகமுங் கனக்க வென்றரவோ
டம்ப ரத்திடைச்செல் கவுமூவரோ டையன்

இ-ள் பின்னும் வசிஷ்டரிஷி சூரியனையும் அகஸ்திய முனியையும் அழைத்துக்கொண்டு பாதாள லோகத்துக்குப் போய் ஆதிசேஷனை வரும்படி பிரார்த்திக்க இந்த பூமி பாரம் தாங்குதற்கு விவரம் சொல்க வென்றமையால் அதற்குத் தன்னுடைய கைக்கமண்டலத்தோடுங் கூடிய தண்டைக் கொடுத்தார். அப்போது சகல லோகங்களையுந் தாங்கி நிற்கக் கண்டு மூவர்களுடனே ஆகாச லோகத்துக்குச் சென்றார் வசிஷ்டமுனி எ-று (20)

கிரணபானுவெங் கீழுல கனந்தனுங் கேடில்
சரணம்போற்றுங் கும்பகத்தியனோடு தவவசிஷ்டன்
காணமுற்று விண்மன்றினிற் கவுசிகன் காணத்
தரண மந்தர துந்துமி முழக்கினர் தழைக்க

இ-ள் அப்படி வசிஷ்டமுனி கிரண காந்தியுடைய சூரியனுஞ் சகல லோகத்தையுந் தாங்கிரட்சிக்க ஆதிசேஷனையும் அழியாப் பதவியாகிய பரமசிவனுடைய பாதத்தை மறவாமன்ற வசு செய்கின்ற அகத்திய ரிஷியையும் இந்த மூவர்களுடனே தேவசபைக்கு வசிஷ்ட ரிஷி வருகிறபோது விசுவாமித்திரமுனி காண்கின்ற வேளையிலே அந்தரத்துந்துமியாகிய தேவ வாத்தியங்கள் முழக்கினார்கள் எந்த வுலகங்களுந் தழைத்தோங்கும்படிக்கு எ-று (21)

இத்திறங்களே யசனவனேசணைந் தெழுத்தாற்
சுத்தமாகிய வசிஷ்டரைச் சுரர் பெரிதுற்றுர்
கைத்தலக் கடந்தண்டொடு குண்டலங் கதிக்க
வத்தலங்களே சென்றனர் மூவரு மடவே

இ-ள் அப்படி மூவரும் வரும்படிக்குச் செய்கின்ற திற மையே தென்னில்? அசனவனேசனுகிய வசித்தியனுத சுவாமி யுடைய பஞ்சாட்சர உபதேசத்திஞலேயென்று பரிசுத்தனுகிய வசிஷ்டரைப் பெருமைபெறும் படிக்குச் செய்தார்கள் தேவாதி கள். பின்பு கைத்தலக்கடமாகிய தண்டு கமண்டல குண் டலமும் வசிஷடமுனிபிடத்துக்கு வரும்படிக்குச் சூரியன் அகத்தியன் ஆதிசேஷன் இந்த மூவர்களும் தங்கள் உலகமே சென்றுர்கள் எ-று (22)

வசிஷ்டன் மாண்பினை மலர்ந்த நாரதனையே வணங்கி
சசிப்புனற் சடைசங்கரனுதவிய மற்று
சுசிப்பெற வினஞ் சொல்கவென்றுரைத்திடத் துய்யர்
விசித்திரங்களே விண்ணதிக் கரையினில் வியந்தான்

இ-ள் அப்படிச் சென்ற பின்பு இப்படி வசிஷ்டரிஷி யுடைய பெருமைகளைச் சொல்லிய நாரதமா முனியை மற்ற ரிஷிகளெல்லாம் வணங்கி கங்கையுஞ் சந்திரனையுஞ் சடாபாரத் திலே வைத்திருக்கின்ற பரமசிவன் அந்த ஸ்தலத்திலே பின் னும் பிரசன்னமாகி இஷ்டகாமியங்களைக் கொடுத்த பெருமை களையும் பேறு பெற்றேர்களையும் விவரித்து சுத்தமாகும்படிச் சொல்லவேண்டுமென்றுர். அதற்கு ஆகாச கங்கைக்கரையிலே அந்த ஸ்தலத்தின் பெருமையைப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினுர் நாரதமுனி எ-று (23)

வசிஷ்டர் மகிமை சருக்கம் முற்றிற்று.

# பேறு பெற்றோர்கள் சருக்கம்.

பொன்னிநாட்டுக் குலோத்துங்கப் புரவலனுமேயரமகளை
யுன்னிப்புணரக் கொடுமேவகியுற்ற விழிகளற்றுப் பின்
கன்னி வசிஷ்டத்தலம்புக்குக் கனக முதற்பணி நடத்தி
மன்பதம்பெற்றே மணிவிழிகள் மாலுக்கிணையாய் வாழ்ந்தனனே

இ-ள் பொன்னி நாடாகிய சோழநாட்டுக் கிறைவனான குலோத்துங்க சோழராஜனானவன் பரமசிவன் கோயில் பணிவிடைப் பெண்ணாகிய ஒரு தாசியை போக போக்யாதி லீலைகளுக்கு இச்சித்துக்கொண்டு போம்போது இரண்டு கண்களு மிழந்தான். அவன் பின்பு அனேக தெய்வத்தலங்க ளெல்லாம் பணிந்து தீராமல் கன்னியாகிய வாழைத்தோப்புகள் மிகுந்த வசிஷ்டபுரி ஸ்தலத்துக்கு வந்து அனேக சுவர்ணங்கள் கொடுத்துத் திருப்பணி நடத்தி இரண்டு கண்களும் பெற்று மகா விஷ்ணுவுக்குச் சமானமாக வாழ்ந்திருந்தான் எ-று • (1)

மகதநாட்டு மன்னவனை மடந்தைபற்றிப் பிடித்தவனுஞ்
சகங்களனைத்து மலைந்ததுவுந் தீராமையினாற் றருப்பமெனு
நகரம்புக்கு நானூற்றிலொன் றென்பான்றனைப் பணிந்து
சுகமுற்றவன்றன்றேயத்திற் சென்று துய்யனுகினனே

இ-ள் அதுவுமல்லாமல் மகத தேசத்துக் கதிபனான ராசாவை பெண்கொலை பிடித்து அனேக ஸ்தலங்களெல்லாம சுற்றிப் பின்பு தருப்ப மென்கிற வசிஷ்டத்தலத்துக்கு வந்து நானூற்றிலொன்றாய் வந்த பரமசிவனைப் பணிந்து அந்தப் பெண்கொலை நீங்கி பரம சுகியாய் தன்னுடைய தேசமேபோய் ராசாதிபதியாய் வாழ்ந்திருந்தான் எ-று (2)

தெலுகுதேயக் குறுநிலத்தோன் செப்பார் முலையாள் பாகன்முன்
குலிகமதனை விரும்பித்தன் குலத்தர் மாலைக்கண்ணாகி
மலின முற்றே யயர்ந்ததற்பின் வசிஷ்டபதியிற் புக்குநனி
கலிகமிறைத்து வொளிவிழிகள் கண்டே சென்றான் காதலோடு

இ-ள் பின்னுமெப்படி யென்னில்? தெலுங்கு தேசத்திலே குறுநில மன்னவனாகிய சிற்றரசனானவன் குலிகமென்னும் பரமசிவனுடைய யிருப்பை மரத்துக்காசைப்பட்டுத் தன்னுடைய புத்திர தாராதிகளுக்கெல்லாம் மாலைக் கண்ணாகி அனேக விசன

முற்றுப் பின்பு வசிஷ்டபுரி ஸ்தலத்துக்கு வந்து அநேக புஷ்பங்களினாலே பரமசிவனை ஆயிரத்தெட்டு அர்ச்சனைகள் பல செய்து நல்ல நேத்திரங்களைப்பெற்று வாழ்ந்தார்கள் எ-று (3)

கேதாயுகத்திலரக்கர் முடிகெடுத்திராமன் கிளைஞர் பதி
தாதா வசிஷ்டரொடு சுரபந்தங்கிப் பணிந்தே யென்றூன்று
போதாவவ்வு தீர்த்தங்கள் புகுந்து பெருக்கிப் புண்ணியனாய்
வேதாவினையைக் கடிந்து வியவேந்தன் வணங்க வின்புற்றான்

இ-ள் கிரேதாயுகத்திலே அரக்கருக் கரசனாகிய இராவணனுடைய சிரசுகளை அறுத்த ஸ்ரீராமச்சந்திரருடைய தம்பிமாராகிய லட்சுமண பரத சத்துருக்கனரும் பத்தினியாகிய சீதாதேவியும் முத்திக்குத் தாதாவாகிய வசிஷ்டகுருவும், புத்திராகிய குசலவர்களும், படைத் தலைவர்களாகிய மைந்தத்துவிதன் சாதவலன் கேசரன் ததிமுகன் கவயன் சரபன் கந்தமாதனன் கவாட்சன் குசன் சாம்புவன் அங்கதன் இஷ்டனாகிய சுக்கிரிவன் விபீஷணன் வாகனனாகிய அனுமான் இப்படிக்காய இருபத்திரண்டு பேருடனே மற்றவர்களும் இந்த ஸ்தலத்திலே வந்து அநேக நாள் ஸ்தலவாசஞ்செய்து பரமசிவனைப் பணிந்து இருபத்துநான்கு தீர்த்தங்களிலேயும் படிந்து ஞானப் பிரகாசர்களாகியபடியினாலே இந்த இருபத்திரண்டு பெயர்களும் ஒவ்வொரு தீர்த்தங்களைப் பிரகாசிக்க விளங்கச் செய்தார்களாகையால் இவர்கள் பெயர்களால் தீர்த்தப் பெயராயிற்று. சத்தி பிரகாசத்தினாலே ஞானமுண்டானதால் அதிலே இரண்டு தீர்த்தம் சத்திஞானவாவி யென்றும் ஆக இருபத்து நாலு தீர்த்தமும் பெருகியதினால் புண்ணியனாகி பிறவித்தீவினையைப் போக்கி தேவேந்திரன் தேயர்கள் வணங்க இன்பமுற்று வாழ்ந்திருந்தார்கள் எ-று (4)

ஊண்தேயத் தனகனென்றோர் செட்டியரம் புண்ணா
யாணவங்க ளெல்லாமகன்று யனைத்து முதவியாற்றாமை
வேணிவசிஷ்டத் தலம்புக்கு வெள்ளாறமூந்தி விசனடி
பேணிப்படிந்து வினையகற்றிப் பெற்றான் பின்பு விண்ணுலகே

இ-ள் பின்னுமெப்படி யென்னில்? ஊண் தேயத்திலே இருக்கின்ற தனகனகனென்னொரு செட்டி மிகுந்த ஐசுவரியமுடையவன். அவனுக்கு மார்பிலே ஆணிக்கையராகியரணம் வந்து சரீர பலங்களெல்லாமழிந்து அதினாலே அநேகதான தருமங்கள் பல பொருளுதவிசெய்தும் தீராது கண்டு பின்பு வசிஷ்டரிஷி ஸ்தலத்துக்கு வந்து சுவேத நதியிலே ஸ்நானம் பண்ணிப் பரமசிவனைப் பணிந்தான். அந்தட்சணமே வினை

தீர்ந்து சுகமடைந்து பரலோகத்திலும் போக்கியாதிகளை அடைந்து வாழ்ந்தான் எ-று (5)

தொண்டநாட்டுத் திடவணிகன் சோதிதுகிலுக் காசித்து .
முண்டகக் கருங்குட்டங்களுற்று முதல்வன் பதிகள் பலபுக்கு
பண்டுவினையு மொழியாமற் பதிமுன் சத்திப்புனல் படிந்து
தொண்டுபட்டீட செட்டிமிகத் துய்யனுகிப் பதமடைந்தான்

இ-ள் அதுவுமல்லாமல் தொண்டவள நாட்டென்னுங் காஞ்சிபுரி நாட்டிலே யிருந்த தனத்தையுடைய ஒரு செட்டி பரமசிவனுடைய பரிவட்டங்களிலே பிரகாசம் பொருந்திய ஒரு வஸ்திரம் விலைக்கு வாங்கினன். அதினுலே அவனுடைய பிரகாசம் பொருந்திய சரீர மெல்லாங் கருங்குட்டம் பிடித்துப்பயந்து பின்பு அனேக ஸ்தலங்களெல்லாம் சுற்றித் தீராமையால் வசிஷ்டபுரி ஸ்தலத்துக்கு வந்து சத்திதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி பரமசிவனைத் தெரிசித்தான் அவனுக்கு வினை தீர்ந்து பரிசுத்தனுகி வாழ்ந்திருந்து சுவர்க்க பதவியை அடைந்தான் எ-று (6)

எந்தைவசதிக்கெரி திரிநூலெடுத்த மறையோன் சிலந்தியாய்
வந்துபுக்குத் துலையாமல் வருத்தமுற்றுங் கசனவன
முந்தியவனைக் கக்கிய நூன்முழுது முதவவவனுதனி
யிந்துவிரதமிது லவயெத்தான மரரிரு பிரத்தும்

இ-ள் பின்னுமெப்படி யென்னில்? எந்தையாகிய பரமசிவனுடைய சந்நிதியிலே எரிந்து பிரகாசிக்கின்ற விளக்குத்திரி நூலை பரிசாரகனுன ஒரு பிராமணன் வீட்டுக்கு வரும்போது வெளிச்சத்துக் கெடுத்து வந்த மாத்திரத்தினுலே அவன் சிலந்திப் பூச்சியாய்ப் பிறந்து அனேக ஜென்மம் புத்திர பவுத்திர சுற்றங்களுடனே நூல்களை கக்கிக்கொண்டு வனங்களிலே சஞ்சரிக்கலாகி சனனங் தொலையாமல் பின்பு அசுன வனத்துக்கு வந்து அசனரணிய பதிக்கு வஸ்திரம்போலே நூலாலே தன் சுற்றங்களோடு முதவினுன், அப்போது அங்கு சந்தோஷம் வந்து பிரசன்னமாகி சந்திரகாந்தம் வைத்திழைத்த விமானங் கொடுத்து தேவர்கள் புடைசூழ பரமசிவலோகம் பெற்றுன் எ-று (7)

ஆழிபதிக்குஞ் சாகரராலளிக்கப் பெற்ற மாதான
மேமைமறை யோனரிமருளா எங்குந்திரிந்து நெடுங்கால
மாமை மடந்தை தனைப்பிடித்து வவளைப் பிரியாவலைந்த வன் பின்

பாரிநனிந்த சவுரபத்தைப் பற்றிப் பழமையாகினரே

இ-ள் பின்னுமெதெனில்? ஆழியென்னுஞ் சமுத்திரங்களை ஆழப்பறித்த சாகரமகா ராசாக்களினாலே மஹாதானம் செய்ய வாங்கிய ஒரு ஏழைப் பிராமணன் பின்பு கொள்ளிவாய்ப் பிசாசு பிரமராக்ஷச மாய்ப்பிறந்து மலை வனங்களிலே சஞ்சரித்துக் கொண்டு அநேக விடங்களெல்லாம் மலைந் தலைந்து நெடுங்கால மானவாறே ஒருஅழகுபொருந்தியராஜகன்னிகையைப்பிடித்துக் கொண்டு அவளை விடாமல் அவளலைந்து பயந்து துன்பமுற்று ரிஷியாசிரமங்கள் நெருங்கிய வசிஷ்டபுரி ஸ்தலத்திற்கு வந்து பிரமரக்ஷஸானதும் விட்டு அந்தப் பிரமரக்ஷசுக்குப் பிசாசுத்துவமும் நீங்கி நல்ல பெண்ணாகி வாழ்ந்திருந்தார் எ-று (8)

பெரியோர் வணக்க மிலாதான் பிறந்து கானில் பெருமரமாய்
அரிய சனனம் விதையா லணைந்து மாரா யறிவிலதாய்
மருளுற் றிருந்தம் மரந்தான் மடுக்கும் பற்றியனலதுவாய்
சுரபப் பதிக்கும் புகையாய் சுடராந் சோதி தொடர்ந்ததுவே

இ-ள் அதல்லாமலும் கற்றுணர்ந்த பெரியோர்களைக் கண்டபோது வணக்கமில்லாத ஒருவன் அந்தகாரமான ஒரு வனத்திலே பெரிய விருக்ஷமாய் சனித்து அந்த விதைகளினாலே பல விருக்ஷங்களாய் நெருங்கி நெடுங்காலமாய் யாதொரு அறிவுகளுமில்லாமல் மூட மூர்க்கமாயிருந்து மாண்ட கட்டையாகி மடப்பள்ளிக்கு வந்து தணலாகி வயித்தியநாத ஸ்வாமிக்கு தூபம் பரிமாறும்படி யுதவினான். அப்போது அந்த அரிதாகிய சனனம் நீங்கி சோதிப்ரகாச மடைந்தது எ-று (9)

சிந்துசவுராட்டிரப் புரவி செவிகளிழந்து திரிந்திடக் கானம்
வந்து அசனவனம் புக்குவளர்ந்த செவியான் மற்றொருமன்
தந்திபுரவிக் குழாமுற்றுத்தானே யுச்சச் சிரவசுபோ
லந்தரத்தினிடைப் புகுந்துமவனி நடந்து மாகியதே

இ-ள் பின்னுமெப்படி யென்னில்? சிந்து வென்னுவருண மண்டலத்தைக் கடல் சூழ்ந்தது போலிருக்கின்ற சவுராஷ்டிர தேசத் திறைவனுடைய குதிரை இரண்டு செவிகளுமிழந்து அதினாலே கழுதைபோலே கண்டவிடங்களெல்லாம் திரிந்து நல்ல சுகமிழந்து அலைந்தபின்பு அசனவனம்புக்கு அதிலே வாசமாயிருந்ததினாலே அதற்கிரண்டு காதும் வளர்ந்து லட்சணம் பெற்றமையால் மற்றொரு ராசாவின் ஆனை குதிரை சேனைகள் சூழ்ந்தவிடத்திலே தங்கி அந்த நாட்டிறைவனுக்குப் பட்டக் குதிரையாகி ஆகாசங்களிலே தாவி நடந்துகொண்டு தேவேந்திரனுடைய குதிரையான உச்சசிரவசுபோல வாழ்ந்திருந்தது எ-று (10)

நஞ்சுகக்குமணி நாகமிராவை நக்கிந் திங்களுவாக்
கஞ்சமலர்த்தாடனைச் சுற்றிக்கொண்டே பிறவிப் பிணிநீங்கி
பிஞ்சமுற்றிற யாவுலகும் பெம்மானுறுகி ஈசவுலகும்
தஞ்சமடைய வாழ்ந்தது பின்னாலோகத்திற்றங்கினதே

இ-ள் அதுவுமல்லாமல் நஞ்சுகளைத்தானே கக்குகின்ற பிரகாசம்பொருந்திய ரத்தினங்களை சிரசிலே வைத்திருக்கின்ற ஒரு நாகமானது சோமவாரஞ் சேர்ந்த அமாவாசை திதியன்றைக்கு ராத்திரி அந்தகாரமான இருட்டைப் போக்கும்படி சுயம்பிரகாசமான இரத்தினத்துடனே பரமசிவன் பாதத்தை சுற்றிக்கொண்டு விளக்கு வைத்ததுபோல இருந்தமையால் அதனுடைய சென்ன சபலமெல்லாம் நீங்கி பின்பு நாகலோகத்துக்கு ராசாவாகி சுவர்க்க மத்திய லோகத்துக்கும் பெருமை பெற்றிருந்து பின்பு ஈசுவரனுடைய உலகடைந்தது எ-று (11)

மகவுக்கொடுபோ மதுக்கஞ்சமலரை மற்றோர் நெடுங்கழுத்துப்
பகமே கவரவீழ்குதலும் பதிமிசைலிங்கம் பற்றிடவே
யகமே மகிழ்ந்தவ் விருபுட்கு மணியாடகரதத் தணங்கு
சகமேயறியச் சாமரைகள் சாத்தச் சாயுச்சிய மடைந்தனவே

இ-ள் பின்னுமெப்படியென்னில்? ஒரு தடாகத்திலிருக்கின்ற தாமரைப் புஷ்பத்தைத் தன்னுடைய குஞ்சுகளுக்கு வேண்டி ஒரு கொக்கானது கவ்விக்கொண்டு போம்பொழுது நெடிய கழுத்தோடுங் கூடிய மற்றொரு கொக்கு வந்து அந்தப் புஷ்பத்தைப் பிடுங்கவும், அப்போது அதின்மடலிலே இருந்த சலமுடனே அந்தப் புஷ்பமும் அசனுரணிய ஸ்தலத்திலேயிருக்கின்ற லிங்கத்தின் சிரசிலே விழுந்திட அப்போது பரமசிவனுக்கு அற்புதமாகி உளத்திலன்புடனே அந்த இரண்டு பட்சியும் நவரத்தினங்கள் வைத்திழைத்த சுவர்ணமயத்தேரின் மீது மேனகை நாட்டியமிடச் சாமரைகள் வீசச் சாயுச்சியங் கொடுக்கப்பெற்றன எ-று (12)

சேட்டமாபதித் தலவளஞ் செப்பு நாரதனை
யிட்டமாய்ச் சுரநதிக்கரை முனிவர்களிறைஞ்சிக்
கேட்டுள மகிழ்ந்தகண்டதற் பரவொளி கிரண
நாட்டமாகிவம் பாங்களேயென நவின்றனரே

இ-ள் ஆகாச கங்கைக்கரையிலே நாரதமாமுனி எழுந்தருளி மற்ற முனிவர்களுக்கெல்லாஞ் சேட்டமாபதி என்கின்ற வசிஷ்டபுரி ஸ்தலத்தின் பெருமைகளைச் சொல்லியபோது

அங்கு கூட்டமாகிய ரிஷீஸ்வரரெல்லாம் வணங்கிக் கேட்டு உள மகிழ்ந்து அகண்ட தற்பரானந்த மடைந்தோமென்று சொன் னார்கள் எ-று (13)

வசிஷ்டநற்பதி வயித்தியநாதனூர் மாண்பை
சுசிப்புனல் படிந்துரைத்தனர் கேட்டனர் சுருதி
வசப்படித் தமிழ்வரைந்தனர் வைத்து வைத்தனருஞ்
சசிச் சடையரன் சரணமுற்றிடுவர் சத்தியமே

இ-ள் பின்னுஞ் சொல்வார் அதெப்படியென்னில்? வசிஷ்டநற்பதியாகிய திட்டகுடி ஸ்தலத்தின் வைத்தியநாத சுவாமியுடைய பெருமைகளைச் சுத்தமாகிய கங்கா தீர்த்தத்திலே மூழ்கி இந்தப் புராணத்தைச் சொன்னவர்களும் கேட்டவர் களும் இதின் மூல மாகிய கிரந்தவாக்கியத்தினாலே சொல்லக் கேட்டவர்களும் இந்தத் தமிழ்நூலை எழுதினபேர்களும் எழுதி வைத்து வைத்த பேர்களும் எழுதச்சொன்னபேர்களும் சசி சடையாகிய பரமசிவன் பாதார விந்தத்திலே எந்நாளும் வாழ்ந் திருப்பது சத்தியம் எ-று (14)

ஓதுமைந்தெழுத்தும் வாழியுலகம் வாழியுலகெலாம்
பூதியுற்ற சைவம்வாழி போதம்வாழி பொழியும் வான்
சோதியுற்றருக்கர்வாழி சுரபம்வாழி சுரபியான்
பாதபங்கயங்கள்வாழி பத்தருள்ளம் வாழியே

இ-ள் சகல சிவாத்துமாக்களும் முத்திபெறும்படிக் கோதிய திருமந்திரமான பஞ்சாட்சரங்களும் வாழ்க, ஈரேழு பதினான்கு லோகங்களும் வாழ்க. அப்படிக்காகிய எந்த உல கங்களிலும் விபூதியினாலே விளங்கா நின்ற சைவங்களும் வாழ்க அது தழைத்தோங்கும்படிக்காகிய பரிபூரணானந்த சிவஞான போதஞானமும் வாழ்க. எந்நாளுமோயாமல் வருஷிக்கின்ற ஆகாசமும் வாழ்க. அந்த ஆகாசத்திலே பிரகாசித்து வருகின்ற துவாத சாதித்தர்கள் முதலிய தேவர்களும் வாழ்க. சுரப மென்கின்ற திட்டகுடி ஸ்தலமும் வாழ்க. அந்த ஸ்தலத்துக்கு நாதனாகிய வயித்தியநாத சுவாமியார் பாதபதுமங்களும்மிகமிகத் தழைத்து வாழ்க. அவருடைய பாததாமரையை எந்நாளு மற வாமலிருக்கின்ற அடியார்களுடைய திருவுள்ளமும் வாழ்க வாழ்க எ-று (15)

அசனவல்லியடிகள் வாழியாகம வேதம் வாழியே
கூசியறங்கள் சுரகீதங்கள்வாழி சுருதியோர்கள் வாழியிவ்
வசலைநிதி மன்னர்வாழி வண்டமிழ்க் கவிஞர் நா
விசதிமங்கை வாழியாழி மேகவண்ணன் வாழியே

இ-ள் பின்னுமந்த ஸ்தலத்திருப்பதியாகிய அசனாம்பிகைத் தாயாருடைய பாதங்களும் வாழ்க. வேதாகம சாஸ்திரங்களும் வாழ்க. ஆசார தரும தானங்களும் வாழ்க. சுரங்கள் முதலிய கீத வாத்தியங்களும் வாழ்க. வேதப்பிராமணர்களும் வாழ்க. பூலோகமெல்லாம் நீதிசெலுத்துகின்ற செங்கோல் மன்னர் வாழ்க. வண்மை பொருந்திய தமிழ்க் கவிஞராகிய கற்றுணர்ந்த பெரியோர்களின்நாவுகளும் வாழ்க. விசதியென்னும் வெண்ணிறம் போன்ற சரசுவதியம்மனும் வாழ்க சக்கிராயுதத்தை செங்கையிலே தரிக்கா நின்ற மேக வண்ணனாகிய திருமாலும் வாழ்க வாழ்க எ-று (16)

சருக்கம் முற்றுப் பெற்றது.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF MADRAS, MADRAS-